2939

T.N.L.A Debates

Official Report

Vol 25 No 2

May 3 1986

V211 N81
No 25.2
136484

வெளியீடு 4-11-1986] [Issued 4-11-1986

2939

883/87.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, மே 3, 1986 - தொகுதி ~~5~~ 25 எண் 2

Saturday, 3rd May 1986 - Volume ~~5~~ 25 No. 2


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly, Secretariat, Fort St. George.
Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

V211,31 N86
N86.85.2
136484
600 008

## உள்ளடக்கம்

3—5—1986


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள். | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள். | 273—311 |
| 2. | தகவல் கோரல். | |
| | குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் குறித்து | 311—312 |
| 3. | அறிவிப்பு: | |
| | ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (மே. செ.) | 312 |
| 4. | கவன ஈர்ப்புகள் : | |
| | (அ) தமிழக எல்லையிலுள்ள மங்கள தேவி கண்ணகி கோயிலை கேரள அரசு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது குறித்து. | 312—325 |
| | (ஆ) கோவை சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான இடவசதி, பாடநூல்கள் போன்றவை குறித்து. | 325—328 |
| 5. | வரவு–செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) | |
| | (அ) கோரிக்கை எண். 48 — [illegible]ரகத் தொழில்கள் (ஆ) கோரிக்கை எண். 57 — தொழில்கள் குறித்த மூ செலவு | 328—447 |
| | மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் | 328, 329, 396—445 |
| | * திரு. மா. சுந்தரதாஸ் | 329—335 |
| | * திரு. ப. ந. இராமச்சந்திரன் | 330—344 |
| | திரு. ஆ. பிரேம்குமார் | 344—354 |
| | திரு. ஜி. கே. பிரான்சிஸ் | 364—358 |
| | திரு. க. நரசிம்மபல்லவன் | 358—361 |
| | திரு. த. பழனி | 361—347 |
| | திரு. அ. ரகுமான்கான் | 368—380 |
| | திரு. மா. சின்னராசு | 380—387 |
| | திரு. டி. ஆர். வேங்கடரமணன் | 387—396 |
| 6. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 447 |

2939

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1986, மே 3, சனிக்கிழமை.**

**சித்திரை 20, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்."

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திரையரங்குகளில் இருக்கை, இதர வசதிகள்.

607—(*வினா எண். 1879) — திரு. சைதை. சா. துரைசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் இருக்கை வசதி சுகாதார வசதிகள் இல்லாத திரையரங்குகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) திரையரங்குகளில் துப்புரவு நிலைமைகளையும், இருக்கை வசதிகளையும் பாதிக்கக்கூடிய குறைபாடுகள் ஏதும் காணப்பட்டால், உரிமம் வழங்கும் அதிகாரிகள் கடும் நடவடிக்கைகளை திரையரங்கு உரிமைதாரர் மீது எடுக்கின்றனர்.

தமிழ்நாட்டில் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாளுக்கு முற்பட்ட மூன்று ஆண்டுகளில் 182 திரையரங்குகளின் மீது இட வசதி மற்றும் சுகாதார வசதிகள் சரிவர செய்யாத தற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் சில திரை அரங்குகளில் 'சி' படிவ உரிமம் ஒரு நாள் முதல் 3 மாதங்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மற்றும் சில திரை அரங்கு களில் உரிமம் புதுப்பிக்கப்படாமலும், சிலவற்றில் 'சி' படிவ உரி மத்தை நிறுத்தி வைத்து 'இ' படிவ பர்மிட் வழங்கப்பட்டும் உள்ளன. வேறு சில திரை அரங்குகளுக்கு குற்றங்களுக்காக அபராதம் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை விதிக்கப்பட்டும், சில்வற் றிற்கு கடுமையாக எச்சரிக்கப்பட்டும் உள்ளன.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் குறிப்பாக அண்ணா சாலையி லுள்ள திரையரங்குகள் எல்லாம், குறைந்தது வருடத்தில் ஒன்பது மாதங்களாவது தமிழ்ப் படங்களை திரையிட வேண்டுமென்று விதியிருந்தும், அப்படிப்பட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவ தில்லை. அந்த விதியை நடைமுறைப்படுத்தாத திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, அதற்கு திரைப்பட ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழ் ஒரு அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. அதை எதிர்த்து ஒருசிலர் வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். ஆகவே அதை விதிகளில் சேர்த்து இப்போது புதியதாக இந்தச் சட்டத்தினுடைய ஒரு பகுதியாக அது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர்காலத்தில் இந்த விதிகளுக்கு உட்படாமல் யாராவது இருந்தால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியேட்டர்கள் சம்பந்தப்பட்ட விதிகள் தொடர்பாக நான் இதனைக் கேட்கிறேன். சென்னை மாநகரில் திரையிடப் படுகிற திரைப்படங்கள் குறிப்பாக தமிழ்ப் படங்களுக்கு சென்சார் போர்டு இருப்பதைப்போல வெளி மாநிலங்களிலிருந்து இங்கே திரையிடப்படுகிற திரைப்படங்களுக்கும் தணிக்கை இருக்க



வேண்டும். குறிப்பாக மலையாளப் படங்கள் எல்லாம் ஆபாச சுவரொட்டிகளையும், ஆபாச தலைப்புகளையும் கொண்டு இங்கே திரையிடப்படுகின்றன. ஆகவே எப்படி தமிழ்ப் படங்களை சென்சார் செய்து காட்டுகிறோமோ அதைப்போல இங்கே திரை யிடப்படுகிற எல்லா மாநிலப் படங்களையும் சென்சார் செய்து காட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா? அப்படிப்பட்ட ஆபாச தலைப்புகளும், சுவரொட்டிகளும் தமிழ்ப் படங்களில் வருவதில்லை, வேற்று மொழிப் படங்களில்தான் வருகின்றன. ஆகவே அவைகள் இங்கே சென்சாருக்கு உட்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

அகஸ்தியர் மற்றும் மணிமுத்தாறு அருவி பகுதிகளை

சுற்றுலா மையமாக்கல்.

**608 — (* வினா எண் 5672) திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவி, மணி முத்தாறு அருவி ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவியில் அமைந்துள்ள பாபநாசம் என்ற இடம் மாவட்ட உலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பெற்று மேம்படுத்த 5.86 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு அருவியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாபநாசம் இலக்கை இந்த வருடம் சுற்றுலாத் தலமாக அந்த திட்டப் பணிகள் நடைபெறுகின்றன என்று கூறியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்

அந்தப் பகுதியில் பல மலைவாசஸ்தலங்கள் இருக்கின்ற காரணத்தால், அகஸ்தியர் அருவிக்கு பக்கத்திலே அகஸ்தியர் வாழ்ந்த புனிதமான ஒரு கோவில் இருக்கிறது. இந்த ஸ்தலத்திற்கு அதிகமாக மக்கள் வருகின்ற காரணத்தால், அங்கே குறைந்த பட்சம் ஒரு இளைஞர் விடுதியையாவது கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பாபநாசத்தில் நடைபெறுகின்ற அந்தப் பணிகள் நிறைவுற்றதற்குப் பிறகு அடுத்த ஆண்டு இதைப்பற்றி அரசு பரிசீலிக்க இயலும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தை மாவட்ட அளவிலே சுற்றுலா மையமாக அறிவிக்க, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவிலே புகழ் வாய்ந்த குற்றால நீர்வீழ்ச்சி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதை தேசிய அளவிலே சுற்றுலாத் தலமாக அறிவிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? இப்போது குற்றாலத்திலே இருக்கை வசதிகள் மற்றும் பல வசதிகள் பெருகி உள்ளன. ஆகவே இந்த ஏற்பாடுகளை எல்லாம் கருத்திலே கொண்டு, மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா? அவ்வாறு பரிந்துரை செய்வதற்கு என்ன அடிப்படை வசதிகள் வேண்டும். அவற்றை குற்றாலத்திலே செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே குற்றாலமும், அம்பாசமுத்திரமும் மாவட்ட உலாத் தலமாக அரசு ஏற்றுக்கொண்டு அதற்கான அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு இருக்கிறது. குற்றாலத்தைப் பொறுத்தவரையில் அது மாநில அளவிலே புகழ் பெற்ற ஒரு தலமாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. அதை தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். எந்த இடத்தையும் அப்படி சுற்றுலாத் தலமாக அறிவித்து அதை வளர்ச்சியுறச் செய்வதில்லை, அங்கே இருக்கின்ற இயற்கை சூழ்நிலைகளை மற்ற வசதிகளை வைத்துத்தான் மக்கள் அங்கே



வருவது அதிகரிக்க அதிகரிக்க அதனுடைய முக்கியத்துவமும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த அளவில் இப்போது மாநில அளவிலே அங்கே வருகிற மக்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க நம்மால் முடியவில்லை. ஆகவே முதலிலே இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து, மாநிலத்திற்கு இன்றைக்கு ஒரு அருமையான சுகாதாரத்திற்கு உகந்த ஒரு தலமாக விளங்குகின்ற அந்த குற்றாலத்தை நாம் வைத்து பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறோம். ஆகவே தேசிய அளவில் அதைச் சுற்றுலாத் தலம் என்று அறிவிக்கின்ற முயற்சிகள் ஒன்றும் இப்போது எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. எதிர்காலத்தில் இந்தப் புகழ் பரவி, மக்கள் அங்கே வருகின்றபோது, அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை மக்கள் வருகைக்கு ஏற்பத்தான் செய்வது வழக்கமாக இருக்கிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் நடைபெறுகிறது. அது (All India Festival) என்ற முறையில் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கே இது தெரியும். திருவண்ணாமலை என்று சொன்னால், அங்கு என்ன விசேஷம் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு புகழ் பெற்ற தலமாக இருக்கிற அந்த இடத்தில், அன்றாடம் தமிழகத்திலே இருந்து மக்கள்—சென்னைக்கு அடுத்தபடியாக மேல்நாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிற இடமாக இருக்கிற அந்த திருவண்ணாமலையை சுற்றுலா மையமாக அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

அதேபோன்று அதைச் சுற்றி இருக்கிற, 15 கி.மீ. தூரத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது முதலமைச்சரோடு வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு நாளைக்கு 500 பயணிகள் வருகிறார்கள். எனவே இதையும் சுற்றுலா மையமாக ஆக்குகிற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி இல்லை என்றால், இனி மேலாவது அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

[1986 மே 3

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தியா மாமுனிவர் வாழ்ந்த இடம் அது. அதை மாவட்ட சுற்றுலா மையமாக இருப்பதை மாற்றி, மாநில சுற்றுலா மையமாக ஏற்றுக்கொண்டு, உணவு வசதியையும், பேருந்து வசதியையும், தங்குவதற்கான வசதிகளையும், இதுபோன்ற பாதுகாப்பாக வசதிகளையும் செய்வதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அகத்திய முனிவர் வாழ்ந்ததாக ஒரு தொன்மையான கதைகூட இருந்து வருகிறது என்றாலும் கூட அது தமிழகத்திற்குச் சிறப்பு சேர்க்கின்ற ஒரு மலைப் பகுதியாகும். தென்றல் காற்று என்கின்ற தமிழகத்தின் சிறப்புமிக்க காற்று அந்த பொதிகை மலையிலிருந்து எழுவதாக பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் உலக இலக்கியத்தில் இடம் பெறுகின்ற ஒரு அருமையான பாடலை இயற்றிக் காட்டியிருக் கிறார்கள். ஆகவே அது சிறப்பு வாய்ந்த மலைப் பகுதி என்பதும் அங்கே வரலாற்றுச் சிறப்புகள் இருக்கின்றன என்பதும் அரசு உணர்ந்து இருக்கிறது. ஆகவே முறையாக அதற்கு அடிப்படை வசதிகளைச் செய்து மக்களுடைய வருகையை அதிகரிப்பதற்கு படிப்படியாகத்தான் நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. தி. நா. கோ. அ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயக் குரவர்கள், சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த திருநாவலூரையும், சடையப்ப வள்ளல் வாழ்ந்த திருவெண்ணெய்நல்லூரையும் சுற்றுலா ஸ்தலமாக்க அரசு முன்வருமா என்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. ஆகவே தனிக் கேள்வி போட வேண்டும்.



1986 மே 3]

பொது இடங்களில் சுவரொட்டிகள்.

609 -- (*வினா எண் 6000) திரு. வி. தங்கவேலு மற்றும் திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பொதுமக்கள் பார்வையில் உள்ள பொது இடங்களிலும் சாலை ஓரங்களிலும் அருவருக்கக்கூடியத் திரைப்பட சுவரொட்டிகள், பேனர்கள் போன்றவற்றை வைக்காம லிருப்பது பற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆபாச திரைப்படச் சுவரொட்டிகளை தடுக்கும் நோக்கத்துடன் சட்டம் ஒன்று நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் கோரி மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு முன்னாலேயே எந்த அச்சகங்களில் அல்லது எந்த லித்தோ பிரஸ்களில் அவைகளெல்லாம் அச்சடிக்கப்படுகின்றனவோ அந்த சம்பந்தப்பட்ட அச்சகங்களும், லித்தோ பிரஸ்களும் ஒவ்வொரு நாளும் தாங்கள் அச்சடிக்கின்ற பிரதிகளை காவல்துறைக்கு அனுப்ப வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவலர் அவர்களே, இயற்றப்பட இருக்கின்ற அந்தச் சட்டத்தில் எல்லாவகையான பாதுகாப்புகளும், ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டு விதிகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆரம்ப கட்டத்திலேயே அந்தச் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரச் சாதனங்கள் அனுமதிக்கு உட்படுத்தப்பட வேண்டும்; அனுமதி பெற்றதற்குப் பிறகுதான் அவைகள் வெளியிடப்பட வேண்டும், அச்சடிக்கப்பட வேண்டும் என்கின்ற விதிகளெல்லாம் அதிலே இருக்கின்றன. ஆகவே அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஓரளவிற்கு நம்மாலே தடுத்து நிறுத்தமுடியும் என்று அரசு கருதுகிறது.

[1986 மே 3

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சினிமா போஸ்டர்கள் மட்டும் என்று இல்லாமல் நமது அரசாங்கத்தின் அரசினர் தோட்டம் என்று சொல்லக்கூடிய சட்டமன்ற உணவு விடுதிகளிலேகூட பல்வேறு கட்சிகளுடைய 'வால் போஸ்டர்' சுவரொட்டிகள் ஆங்காங்கு ஒட்டப்படுவதும், பிறகு அதைக் கிழிப்பதற்காக தண்ணீரை இறைத்து அதை ஊறவைத்து எடுக்கக்கூடிய வகையில், 10 பேர்கள் வேலை செய்யக்கூடிய வகையில் 'குருடி தண்ணீருக்கு போனாளாம், கூட 8 ஆள் மெனக்கெட்டார்களாம்' என்று சொல்லக்கூடிய பழமொழியைப்போல நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி ஒட்டக் கூடாது என்று நிலை இருந்தும் ஒட்டுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காத அரசு அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா? இனிமேலாவது, ஒட்டுவதற்குத் தடைசெய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடைச் சட்டம் என்பது சுவரொட்டிகள், பேனர்கள், செய்தித் தாள்களில் வெளியிடப்படுகின்ற விளம்பரங்கள் உட்பட இந்த விதிகளுக்குள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது, சில சுவர்களில் ஒட்டக்கூடாது என்று உரிமையாளார்கள் தெரிவித்தும், அங்கே சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள். அதை கிழிக்கிறார்கள்; அல்லது ஆபாச சுவரொட்டிகள் என்ற காரணத்தினாலே கிழிக்கின்ற முயற்சியில் இப்போது யாரும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை; அல்லது மாநகராட்சிக்கு வரி செலுத்தாமல் ஒட்டப்பட்டிருந்தால் அதை கிழிப்பதற்காக சில முயற்சிகள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தச் சுவரொட்டிகள் கிழிக்கப்படுவதைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று விளக்கமாக தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்[illegible].

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆபாச சுவரொட்டி விளம்பரம் சம்பந்தமாக மத்திய சர்க்கார் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் அனுமதி கிடைப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்; காலம் கடந்தால்,



1986 மே 3]

அதைப் பெற்று துரிதமாக வாங்கி; இன்றைக்கு குறிப்பாக சென்னை நகரத்திலே பார்ப்போமேயானால், இந்த ஆபாச சுவரொட்டிகளைப் பார்த்துக்கொண்டே போகிறபோது சாலை விபத்துகள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலைகூட இருக்கிறது. மாண்புமிகு சமரசம் சொன்னதுபோல இன்றைக்கு நமது சட்டமன்ற விடுதியிலேகூட பலவிதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு ஒரு அசிங்கமான சூழ்நிலை உருவாகிற நிலை இருக்கிறது. அதையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டால்கூட நமது அரசினுடைய சட்ட விதிகளுக்கு உட்பட்டு இதையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கும், இதில் ஈடுபடக்கூடியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சர்கள் துரிதமான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே இந்தச் சட்டம் இயற்றப்பட்டாலும் இதை அமல்படுத்துகிறபோது வேறு மாநிலங்கள் தொடர்புள்ள பத்திரிகைகள் அல்லது விளம்பர நிறுவனங்கள் வழங்குகின்ற விளம்பரங்கள் இவைகள் எல்லாம் இதற்குள்ளே வருகின்றன. ஆகவேதான் மத்திய அரசு சில பிரிவுகளில், மூன்று பிரிவுகளில் அதற்கான விளக்கத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். விளம்பரங்கள் என்றால் எப்படிப்பட்ட விளம்பரங்கள் அதற்குள்ளே அடங்குகின்றன, வெளி மாநிலங்களிலிருந்து பத்திரிகைகள் வெளியிடுகின்ற அந்த விளம்பரங்களை நீங்கள் கட்டுப்படுத்தினால் வெளி மாநிலங்களிலிருந்து அவர்கள் அனுமதித்து தமிழகத்தின் உள்ளே வருகின்ற அந்த பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் அதிலே வெளியிடுகின்ற விளம்பரங்கள் எப்படி கட்டுப்படுத்தப்படும்? இப்படிப்பட்ட சில பிரிவுகள் பற்றி அவர்கள் விளக்கம் கேட்டு இருக்கிறார்கள். அதை சட்டத் துறையோடு கலந்து தமிழக அரசு பதில் அளிக்க இருக்கிறது. ஆனால் இப்போதே சில விளம்பரங்கள் ஆபாசமாக மக்களுடைய நலனுக்கு உகந்ததாக இல்லை என்று கருதுவார்களானால் நம்முடைய மாநகர் காவல் துறை ஆணையர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். எந்த இடத்தில் அப்படிப்பட்ட சுவரொட்டிகள் இருந்தாலும் உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு

இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இவைகளுக்கு எல்லாம் சட்டப்படி ஒரு பாதுகாப்பு வேண்டும், அது முதலிலேயே தடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட இருக்கிறது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆபாச சுவரொட்டி அனுமதித்துவிட்டு அவற்றை மறைவான இடத்தில் ஒட்டலாமா ? மக்கள் பார்வைபடும்படி ஒட்டலாமா ? அல்லது அதை தடை செய்யலாமா ? என்பதை விவாதித்துக் கொண்டு இருப்பதைவிட, எப்படி திரைப்படங்களை தணிக்கை செய்வதற்கு மத்திய அரசின் தணிக்கைக் குழு ஒன்று இருக்கிறதோ, அதைப் போல் இந்த விளம்பர சுவரொட்டிகளை தணிக்கைச் செய்து வெளியிடுவதற்காக மாநில அளவில் ஒரு Screening Board என்ற அமைப்பை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பரிசீலனையில் இருக்கிற இந்த சட்ட முன்வடிவே அதற்காகத்தான் கொண்டுவரப்படுகிறது. ஏன் என்றால் இப்போது அந்த காரியத்தை நாம் சட்டப்படி செய்ய முடியாது. எல்லோருக்கும் உரிமையிருக்கிறது, அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற உரிமையின்படி அவரவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு விளம்பரங்களைச் செய்கிறார்கள். அதை முன்பே எங்களிடம் கொடுத்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு இப்போது சட்ட விதிகளில் இடம் இல்லை. ஆகவேதான் திரைப்படத்திற்கு தணிக்கை இருப்பது போல் இந்த விளம்பர சாதனங்களும் தணிக்கை செய்யப்படவேண்டும் என்ற அந்த விதியின் தொடக்கத்திலே இருந்து தான் மற்றவைகள் வருகின்றன. ஆகவே, வர இருக்கின்ற சட்டத்தில் அந்த கட்டுப்பாடு அந்த தணிக்கை முறைகள் அதிலே இருக்கின்றன.





### ராக்காயி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்.

**610—(*வினா எண் 6901) திரு. மெ. ஆண்டி அம்பலம்) :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அழகர்கோவிலுள்ள ராக்காயி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயில், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு துணைக்கோயிலாகும். அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் கும்பாபிஷேக ஏற்பாடுகள் செய்யும்போது அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### கோவையில் புதிய சிமிண்ட் ஆலை.

**611—(* வினா எண் 2082) திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டத்தில் புதிய சிமிண்ட் ஆலை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் சிறு சிமெண்ட் ஆலை அமைக்க இரண்டு தனியார் நிறுவனங்கள், இந்திய அரசின் தொழில் நுட்பவியல் வளர்ச்சி தலைமை இயக்குநரின் பதிவு ஒப்புதல் பெற்றுள்ளன.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஜில்லாவிலே சிறிய 2 சிமெண்டு தொழிற்சாலைகள் தனியார்கள் ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு மூலதனத்தில் அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் எட்டிமடையில் சிறிய சிமெண்டு ஆலை நிறுவ தகிராபானு, கோவை, திருவாளர் ஸ்டீல் ராக் சிமெண்டு நிறுவனம், திருப்பூர், திருவாளர் வெல்கோ சிமெண்டு நிறுவனம், கோவை ஆகிய 3 தனியார் நிறுவனங்களுக்கு பதிவு ஒப்புதல் வழங்க இந்திய அரசின் தொழில் நுட்ப இயல் வளர்ச்சி தலைமை இயக்குநர் அவர்கள் மாநில அரசுக்கு பரிந்துரை செய்ததில் திருவாளர் ஸ்டீல் ராக், வெல்கோ நிறுவனங்களுக்கு D. G. S. & D. Registration. வழங்கப்பட்டு இருக்கிறது. இதில் ஸ்டீல் ராக் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் உற்பத்தி திறன் கொண்ட சிறிய ஆலை ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

(முற்பகல் 9-20)

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் ஏற்கெனவே ஏ.சி.சி. சிமெண்ட் நிறுவனம ஒன்று தற்போது அமைச்சர் குறிப்பிட்ட அதே பகுதியில் மதுக்கரைப் பகுதியில் அமைந்திருக்கிறது. கேரள மாநிலத்தில் இதை யொட்டி ஒரு சிமெண்ட் ஆலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏ.சி.சி. சிமெண்டிற்குப் போதுமான ராமெட்டீரியல்ஸ், லைம் ஸ்டோன் போன்றவைகள் கிடைப்பதற்கு அரியதாகிவிடும் என்ற கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மைதானா என்பதையும், இருந்தாலும் பெரிய ஆலை வருவது என்பது வரவேற்கத் தக்க ஒன்று என்ற வகையில், அந்தக் கவலையைப் போக்குகின்ற வகையில், ஆலைக்கான ராமெட்டீரியல்ஸ் கிடைக்கிறது என்ற உறுதியை மாநில அரசு மத்திய அரசிற்குத் தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தற்போது கோவையிலே நடைபெற்று வருகிற ஏ.சி.சி. சிமெண்ட் ஆலையிலேயிருந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் வரவில்லை. இன்றைக்கு இந்தச் சிறு சிமெண்ட் ஆலையில் 241.75 ஏக்கர் பரப்பளவில் 6 ஆண்டுக் காலத்திற்கு சுரங்கக் குத்தகை, சுண்ணாம்புக் கல் எடுப்பதற்கு வழங்கப்பட்டிருக்கிறது.





**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக மதுரையில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்கும் ஒரு ப்ரபோசல் இருக்கிறதே, அது எந் நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் இதை மானியக் கோரிக்கையிலே எடுத்துச் சொன்னேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரவ நைட்ரஜன் தொழிற்சாலை.**

612 — (* வினா எண் 5009-ஏ) **திரு. க. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை.

**டை ஆக்ஸைடு தொழிற்சாலை.**

613—(* வினா எண் 5533) **திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், குமரி மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் இலுமினைட்டில் இருந்து டை ஆக்ஸைடு (Titanium Di-oxide) தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், துவக்கப் பணிகள் எப்போது துவங்கப் பெறும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இலுமினேட் 75,000 டன், ஒரு ஆண்டிற்குக் கிடைக்கிறது. இதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி, அதை அவர்கள் டைட்டேனியம் டை ஆக்ஸைடு, டைட்டேனியம் மெடல்ஸ் ஆக்கச் சொல்லி, ஃபைன் க்வாலிட்டி திரும்ப இந்தியாவிற்கு தருகிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இத்தகைய பொருள்கள் இருக்கின்றன. இதை நம்முடைய அரசு பரிசீலித்து, 75,000 டன் கிடைக்கின்ற இலுமினெட்டை வைத்து, ஒரு தொழிற்சாலையைத் துவங்கினால், பயனுள்ளதாக இருக்கும். ஏனென்று சொன்னால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்த ஒரு அரசுடைமையாகவோ, அல்லது தனியார் நடத்துகின்ற தொழிற்சாலையோ இல்லை. ஆகையால் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மத்தியப் பேரரசைச் சார்ந்த இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் அந்தப் பணியிலே தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது. இலுமென்ட்டிலிருந்து டைட்டேனியம் டை ஆக்ஸைடு செய்வதற்கு ஏராளமான பொருள்கள் தேவை. மின்சாரம் தேவை. வெளிநாட்டு நுட்பம் தேவை. அதோடு இது இலாபகரமாக நடக்கிறதா, நடத்த முடியுமா என்பதையும் நாம் ஆராய வேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பரிசீலித்துத் தான் முடிவுகளை அரசு மேற்கொள்ள முடியும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவர் அவர்களே, இன்ப்ராஸ்டரக்சர் என்கிற வகையில் தண்ணீர் வசதியும், அதிகமாக கட்லோரப் பகுதியில் அங்கே இருக்கிறது. மேலும் அந்த இடத்தைப் பொறுத்தவரையில், எல்லா வாகன வசதிகளும் இருக்கின்றன. படித்த மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் மூலப்பொருள் அதிகமாக இருப்பது இந்த இலுமெனட்தான். ஆகவே தான் மத்திய அரசு ரேர் எர்த் நிறுவனத்தை, அவர்கள் அந்த டைட்டேனியம் ஆக்சைடு செய்கின்ற தொழிற்சாலை இல்லை என்பதால் அவர்கள் அதை எடுத்த



வுடனேயே இந்த இல்லுமெனைட்டை எடுத்து ப்யூர் செய்வதற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகையால் நான் கேட்டுக் கொள்வது, மாநில அரசு டைட்டேனியம் தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை அமைத்து, அதன்மூலம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல், இன்றைக்கு பல பொருள்கள் தேவைப்படுகின்றன. ஆகவே தான் ரேர் எர்த் நிறுவனம் கூட, மத்தியப் பேரரசைச் சார்ந்த நிறுவனம் கூட, அதை எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்புகிறது. இங்கே இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அது லாபகரமாக இருக்குமா என்பதை தமிழ்நாடு தொழில் முதலீட்டு வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இது லாபகரமாக இருக்கும் என்று தெரிந்தால், அந்தத் தொழிற்சாலையை அமைப்பது பற்றி, இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகம் ஆலோசிக்கும்.

### தென்காசியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

614 — (*வினா எண். 7737) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசி தாலுகாவை தொழிற்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஆம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிப்பதற்காக பாண்டே கமிட்டி அமைக்கப்பட்டு அந்த பாண்டே கமிட்டியின் தீர்வின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 6 தாலூக்காக்களை அவர்கள் ஆராய்ந்து அதிலே தென்காசி தாலூகாதான் தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கப்பட இலாயக்கானது, ஏனென்றால் அங்கு பலதும் இருக்கின்றன என்று அவர்கள் அறிக்கையில் வெளியிட்டிருக்

கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 'ஆம்' என்று பதில் சொல்லி இருக்கிறார்கள் என் கேள்விக்கு. நான் கேட்க விரும்புவது, அது எந்த அளவில் இருக்கிறது? இன்னும் எவ்வளவு நாட்களுக்குள் தென்காசி தாலூகா தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரையில் அதை ஏற்றுக்கொண்டு பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கிற ஏற்பாட்டில் இறங்கியிருக்கிறது. ஆகவே, தென்காசி தாலூகாவை மத்திய அரசின் 'பி' பிரிவின்கீழ் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும்படி கோரி இந்த அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறது. மத்திய அரசின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அந்தத் தகவலுக்கு நன்றி. இருந்தாலும் கூட மத்திய அரசு தென்காசியைத் தொழில்துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிப்பதற்கு முன்னால் மாநில அரசே கூட முன்வந்து அதை தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கலாம். ஆகவே, மத்திய அரசும் அதை அறிவிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே நாம் முதலிலேயே, முன்மாதிரியாக, தமிழ்நாடு அரசே தென்காசி தாலூகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிக்க முன்வருமா? அதைத் தொடர்ந்து மத்திய அரசின் ஆணையும் வரும்போது இரண்டும் சேர்ந்து முழுமையாக தென்காசி தாலூகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்க இயலும். அங்கே பல வசதிகள் இருக்கின்றன. சில இடங்களை, சகாரா பாலைவனமாக இருக்கக் கூடிய இடங்களை, தொழில்துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்துவிட்டு ஒரு பலனும் இல்லாமல் இருப்பதைவிட தென்காசியில் பல வசதிகள் இருப்பதால், அது Semi urban area ஆக இருப்பதால் அதை தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவித்தால் பல வசதிகள் அங்கு ஏற்படும். எனவே மாநில அரசே முதலில் அதை தொழில்துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு அப்படி முன்வருவதற்கு தயக்கம் கிடையாது. மாநில அரசைவிட மத்திய அரசு செய்தால் சலுகைகள் அதிகமாகக் கிடைக்கும். கொஞ்சம் பொறுத்திருந்தால் அதிகச் சலுகைகளோடு வந்தால் மாண்புமிகு உறுப்பினருக்கு அது பயன்படும்.

**திரு. துரை கோவிந்தராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுகாவை தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கிற மற்றத் தாலுகாக்களையும் தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அறிவிக்கிற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. ஆனால் அதைப்பற்றிய விவரங்களை தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என மாநில அரசு மத்ய அரசு மூலம் எவ்வளவு தாலுகாக்கள் அறிவிக்கப்பட இருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. எஸ். என். இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுகாவை தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோன்று சாத்தான்குளம் தாலுகாவும் தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி முதலில் கிடைக்கட்டும். பிறகு சாத்தான்குளத்திற்குப் போகலாம்.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக எந்தக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏ, பி, சி என்ற மூன்று பிரிவுகளாக மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளை அறிவிப்பதில் கவனம் செலுத்துகிறது. அனுமதி அளிக்கிறது. அந்த வகையில் தென்காசியை 'பி' பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். 'பி' என்று சொன்னால் 15 சதவிகிதம் வரை சலுகை கிடைக்கும். 15 இலட்சத்திற்கு மேற்படாது உதவிகள் கிடைக்கும்.

## தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர்.

615—(*வினா எண் 1847) திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவ மன்றம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மருத்துவக் கல்லூரி முதல்வர் பதவிக்கு குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆசிரியர்களாக (மருத்துவம் கற்பிக்கும்) பணி அனுபவம் பெற்றிருக்கவேண்டும் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளாரா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : இத்தகுதி பெறாதிருந்த முன்னாள்டனை மாற்றிவிட்டு இத்தகுதி பெற்றுள்ள ஒருவரை அக் கல்லூரிடனாக நியமிக்கப்பட்டுள்ளது.



## குமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை.

616 — (*வினா எண். 3603) — டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் மாற்று இடம் தேர்ந்தெடுத்து மூலிகைப் பண்ணை அமைக்க தமிழ்நாடு மூலிகைச் செடி பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்க மூலிகைப் பண்ணையில் சிறியாநங்கை மூலிகைச் செடி வளர்க்கப்படுகின்றதா ? பாம்பு கடித்தால் இந்த சிறியாநங்கை மூலிகையைச் சாப்பிட்டால் உயிர் பெற்றுவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உயிர் பெறுகிறார்கள். எனவே, ஒவ்வொரு வீட்டிலும் இந்த சிறியாநங்கை மூலிகைச் செடியை வளர்க்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா ? அதற்கு மானியத் தொகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசு மருத்துவமனைகளில் தற்காலிகத் தொழிலாளர்கள்.**

*617 — (*வினா எண். 7492) — திரு: சைதை. சா. துரைசாமி:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் பதிலியாட்கள் எத்தனை வருடங்களுக்குள் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்?

(ஆ) சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் காலியிடங்கள் இருந்தும் பதிலியாட்களை நிரந்தரம் செய்யப்படாததற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) நிரந்தரப் பணியிடங்கள் காலி ஏற்படும்போது, பணி மூப்பின் அடிப்படையில் பதிலிப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(ஆ) சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் நிரந்தரப் பணியிடங்கள் பதிலிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமைக்கும் மருத்துவமனைகளில் எத்தனை பதிலியாட்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களை குறைந்தபட்ச அடிப்படையிலாவது வருடத்திற்கு இவ்வளவு பேர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற உத்திரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா? அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம், இந்தப் பணியாளர்களை நிரந்தரமாக்கினால், திடீரென்று ஓரிடத்தில் காலி ஏற்படுகின்ற நேரத்தில், அவர்களை அதிலே அமர்த்த முடியாது. நர்சிங் அசிஸ்டெண்ட், ஸ்டிரெச்சர் போரர்ஸ், லஸ்கர்ஸ், ஆஸ்பிடல் ஒர்க்கர்ஸ் என்று பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் உள்ளவர்களை நிரந்தர





மாக்கினால், அதற்குப் பிறகு ஓரிடத்தில் காலி ஏற்படுகின்ற போது, உதாரணத்திற்கு லஸ்கர் பிரிவில் காலி ஏற்பட்டால், அங்குள்ளவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகவேதான், இந்த பதிலியாட்கள் என்ற ஒரு கேடிகரியை வைத்திருக்கிறோம். இது சென்னை மாநகரில் மட்டும் தான் இருக்கிறது. இப்போது இந்த பதிலியாட்கள் இங்குள்ள மருத்துவமனைகளில் மட்டுமல்லாது, பல மாவட்ட, வட்ட மருத்துவமனைகளிலும் நியமிக்கலாம் என்று கருதியிருக்கிறோம். ஏனென்றால், அந்த மருத்துவமனைகளில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தினால், இந்த பதிலியாட்கள் நியமிக்கும் முறையை தமிழகம் எங்கும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலியாட்கள் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் எல்லாம் கொண்டு வரப்பட இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்போது 15, 20 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பதிலியாட்களை, ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை நிரந்தரமாக்குவது என்ற வகையில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் மீண்டும் அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனையை இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த யோசனையின் அடிப்படையில், 24 பேர்களை இராயப்பேட்டை மருத்துவமனையில் நிரந்தரமாக்கி அதற்காக 24 தற்காலிக பதிலியாட்கள் இடங்களை நிரந்தர இடங்களாக ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த 24 பேர்களில் 7 பேர்கள் மட்டும் 'கம்பேஷனேட் கிரவுண்ட்' அடிப்படையில் Appointment of the legal heirs of the deceased employees on compassionate grounds. அந்த வகையில் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது இறந்து போகின்றவர்களுடைய துணைவியார்

அல்லது அவரது மகன், மகள் ஆகியோர்களுக்கு 7 இடங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றன. மற்ற 17 இடங்களுக்கு பதிலி ஆட்களை நிரந்தரமாக்கி இருக்கிறோம்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை மருத்துவமனைகளில் பதிலியாட்கள் பல வருஷங்களாக வேலை செய்கிறார்கள். சட்டப்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்தால், நிரந்தரமாக்கப்பட வேண்டும். ஆனால், இங்கே பல ஆண்டுகள் ஆகியும், நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களை நிரந்தரமாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் கேட்ட இதே கேள்விக்குத்தான் பதில் அளித்தேன்.

திரு. ஆர். செங்காளியப்பன் : பேரவைத் தலைவர் அர்வகளே, நீண்ட நாட்களாக தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய, எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலே உள்ள தொழிலாளர்கள் பர்மனென்ட் செய்யப்படாமல் இருக்கிறார்கள். நம் அரசே கூட, தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை பார்த்தால் கன்பர்ம் செய்ய வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த முறையை ஆஸ்பத்திரிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னமாதிரியாக எங்கே பர்மனன்ட் செய்வதற்கு இடம் இருக்கிறதோ அங்கே அவர்களைப் பெர்மனன்ட் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த வேலைகள் ஒரே கேட்டகரி வேலைகள் இல்லை. நான் சொல்லியிருக்கிற மாதிரி Nursin Assistants, Luscars, Stretcher-bearers, Office boys, என்ற பல்வேறு கேட்டகிரிஸ் பல வகையான வேலைகள் இருக்கக் கூடிய காரணத்தினாலே சப்டிட்யூட் ஒர்க்கர்ஸ் என்ற முறையிலே டெம்பரரியாக ஆங்காங்கே காலியாகிறபோது போடுகிறோம்.



## அணைக்காடு தாய்சேய் நல விடுதி

618—(* வினா எண் 8883) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்காடு தாய்சேய் நல விடுதி கட்டப்பட்டும் இன்னும் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தஞ்சை மாவட்டம், தாமரன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தின் எல்லைக்குள், அணைக்காடு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலமையம் செயல்பட்டு வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே தாமரன்கோட்டை ஆரம்ப சுகதார நிலையக் கட்டுப்பாட்டில் அணைக்காடு கிராமத்தில் மகப்பேறு நிலையம் இயங்கிவருவதாகச் சொன்னார்கள். நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வது அந்தக் கட்டடம் கட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்தக் கட்டடம் திறக்கப்படாமல் பாழடைந்து கிடக்கிறது. அங்கே ஆயா வேலை செய்வதாகச் சொல்கிறார்கள். அவர்களும் சரிவர அங்கே வந்து கவனிப்பதில்லை. ஒரு நர்ஸ் இருப்பதாகச் சொல்கிறார்கள். தாமரன்கோட்டையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் அது இருக்கிறது, ஆகவே அவர்களும் வருவதில்லை. ஆகவே உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுத்து அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த பஞ்சாயத்து யூனியனிலிருந்து 29—9—1982 அன்று நல்வாழ்வுத் துறை பெற்றிருக்கிறது. அந்த இடத்திலே இப்போது Multi-purpose Health Worker's Scheme. என்ற அடிப்படையில் அங்கே கே. சாரதாம்பாள் என்ற அம்மையார் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது மருத்துவ

மனை கிடையாது, மருந்தகமும் கிடையாது. தாய்சேய் நல விடுதி என்ற அடிப்படையில் இருக்கிறது. அங்கே குழந்தைகளைக் கண்காணிப்பதற்கும் தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அது சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். உடனடியாகக் கவனிப்பதற்கு தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட நிலையங்களிலே தாய்சேய் நல விடுதி, மகப்பேறு நிலையம் ஆகியவை ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் அங்கே இருக்கிற செவிலியர்கள் மருத்துவத் துறையின் கீழ் இருக்கிறார்கள் என்பது குழப்பமான சூழ்நிலையையும் குளறுபடிகளையும் உண்டாக்குகிறது. எனவே அதைப் போக்குகிற முறையிலே அந்த நிலையங்களை அரசே தன்னகத்தே கொண்டு சிறப்பாக அவை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அண்மையிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்கீழ் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

**திரு. எஸ். பி. மணவாளன் :** தலைவர் அவர்களே, இந்த அணைக்காடு தாய்சேய் நல விடுதி மட்டுமல்லாமல் தமிழகத்திலே சுகாதாரத் துறையிலே கட்டப்பட்டுள்ள பல விடுதிகள் இன்னும் ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே சரியாக தண்ணீர் வசதி செய்யப்படாத காரணத்தினால் அவைகளைப் பயன்படுத்த முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இந்த மூலக்கேள்வி ஒரு தனிப்பட்ட தாய்சேய் நல விடுதியைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் அதுகுறித்த விவரங்களைச் சேகரித்துத் தரலாம். திடீரென்று ஒரு கேள்வியைக் கேட்டால் எப்படிப் பதில் சொல்லமுடியும்?



**திரு. மு. ஆனந்தன் :** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே தியாகதுர்க்கம் வட்டத்தில் ஈயனூர் என்ற கிராமத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அங்கே பல்நோக்குப் பெண் மருத்துவப் பணியாளர் 6 ஆண்டுக்காலமாகப்போடாமல் இருக்கிறது. 1982 ஆம் ஆண்டிலே முன்னாள் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் வருகை தந்து அதைத் திறந்தார்கள். அங்கே அதிலிருந்து மருத்துவப் பணியாளர் நியமிக்கப்படவில்லை. எப்போது நியமிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, முழுவிவரங்களையும் கொடுப்பார்களானால் உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கைத்தறி நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்.**

619—(*வினா எண் 7485) **திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் ஏற்கனவே அமலில் உள்ளது. மூன்று வகையான திட்டங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு மட்டும் பொருந்தும்படியான திட்டம். நெசவாளர்கள் தாங்கள் பெறும் சம்பளத்தில் ரூபாய்க்கு ஆறு பைசா கட்ட வேண்டும். கடைசியில், அவர் இறந்த பிற்பாடு 3,000 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகமும், 1—7—1984 முதல் கோவாப்டெக்ஸ் 2,000 ரூபாயும் சேர்த்து 5,000 ரூபாய் கொடுத்து வருகிறது. இன்னொரு திட்டம், விபத்து பாதுகாப்பு திட்டம். இதற்கு நெசவாளர் பணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை. ஆனால், தனியார் துறைக்கு மாத்திரம் பொருந்தும். வேலை செய்கிற பொழுதே இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய்

கொடுக்கப்படும். இன்னொரு திட்டம் இருக்கிறது. ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம். இதன் பிரகாரம் கூட்டுறவு நெசவாளர் அல்லது தனியார் துறையில் வேலை செய்யும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் கட்டினால் 55 அல்லது 58-வது வயதில் ஓய்வு பெறும்போது 33,500 ரூபாய் பெறுவார்கள்.

**வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய பட்டு கூட்டுறவு சங்கங்கள்.**

620—(*வினா எண் 8879) **திரு. த. பழனி :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய இடங்களில் பட்டு கூட்டுறவு சங்கம் புதியதாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** அப்படி அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆற்காட்டில், ஆற்காடு வட்டம், ஆற்காடு, திமிரி, கலவை, விளாப்பாக்கம், வாழைப்பந்தல் ஆகிய கிராமங்களில் பட்டு கைத்தறி நெசவாளர் தொழிலாளர்கள் பல நூறு கிலோமீட்டர்களுக்குச் சென்று பல்வேறு இடங்களில் உள்ள, உதாரணமாக காஞ்சிபுரம், ஆரணி போன்ற இடங்களுக்குச் சென்று அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுடைய குடியை உயர்த்தி இல்லங்களைக் கவனிக்க முடியாமல் இருக்கிறது என்ற சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்காகப் பட்டு கூட்டுறவு சங்கம் அமைத்துத் தருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, நூறு பேர்களுக்குக் குறையாமல் அப்படி பட்டு நெய்யும் நெசவாளர்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த தகவலின்பேரில் புதிதாக பட்டு கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, பட்டு கூட்டுறவு சங்கத்தில் இருக்கின்ற பட்டு கூட்டுறவு கைத்தறியாளர்களுக்கு அந்தந்த சங்கங்களின் வாயிலாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவரவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அந்தந்த சங்கங்களை அரசு வலியுறுத்துமா என கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே எல்லா நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள், வீடு கட்டுவதற்கான நிலம் இருக்கிறது என்று சொன்னால், வீடு கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்றபொழுது, நூறு குடும்பங்கள் இருந்தால் அங்கே கூட்டுறவு சொசைட்டி அமைக்கலாம் என்று சொன்னார்கள். கொடவாசல் பகுதியில் திருச்சேறை, இஞ்சிக்கொல்லை போன்ற இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தனியார்களிடம் சென்று குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழைக் குடும்பங்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு கொடவாசலிலே ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

## பாரீஸ் கலைவிழாவிற்கு தஞ்சை ஓவியங்கள்.

621—(*வினா எண் 2980) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரீஸ் நகரில் நடைபெறும் கலை விழாவுக்கு பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் தஞ்சை கலம் காரி ஓவியங்கள் அனுப்பப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** (அ) மற்றும் (ஆ): அவையின் முன் ஓர் விவர அறிக்கை * வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாரீஸ் நகரில் நடைபெறும் கலைவிழாவிற்கு, ஒரு வயதான ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள தூய அன்பை—காதலை, சிறிதுகூட ஆபாசம் இல்லாமல் தமிழகத்தின் இயற்கைச் சூழலில் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ள, நடிகர் திலகம் நடித்த 'முதல் மரியாதை' திரைப்படம் அனுப்பப் படுமா? ஏனென்றால், அந்தத் திரைப்படத்தைப் பார்க்கின்ற அந்த வெளிநாட்டினர், இந்தியாவிற்கு வர வேண்டும், இங்கேயுள்ள அழகிய கிராமங்கள் அடங்கிய பகுதிகளுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கருதி இங்கு வருவார்கள். அப்படி வெளி நாடுகளிலிருந்து அவர்கள் வருகை தந்தால் நமக்கு அன்னியச் செலாவணியும் அதிகமாக வருமே. எனவே, இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பாரீசில் நடந்த ஓர் கலை விழாவிற்கு இங்கிருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் சம்பந்தப் பட்டது. பாரீஸ் நகர் கலைவிழாவிற்கு பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் தஞ்சாவூரில் தயார் செய்யப்பட்ட பல அலங்காரப் பொருட்கள் சென்னையிலுள்ள இந்திய அரசினுடைய கைத்திறன் மற்றும் கைத்தறிப் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்டது பற்றிய வினா. இதற்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

* 447–448 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



126484
600 008

## திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

622—(*வினா எண் 5940) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வரும் கூட்டுறவு பூட்டு தொழில் ஆண்டுக்கு எவ்வளவு பூட்டுகளை உற்பத்தி செய்து வருகிறது?

(ஆ) இந்த பூட்டுகளின் தரத்தை உயர்த்தி ஏற்றுமதி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** (அ) திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வரும் திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 32,000 பூட்டுக்கள் ஆண்டொன்றிற்கு தயார் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) சங்கத்தின் பூட்டுகள் ஏற்கனவே தரத்திற்கு பெயர் பெற்றவை. ஐ.எஸ்.ஐ. விதிகளின்படி தயார் செய்யப்படுகிறது. உற்பத்தியாகும் பூட்டுக்கள் யாவும் விற்பனையாகி விடுவதால் ஏற்றுமதி பிரச்சனை இதுவரையில் எழவில்லை. சங்கத்தின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இயந்திரங்கள் கொள்முதல் செய்தவுடன் சங்கத்தின் பூட்டுக்களின் உற்பத்தி அதிகரிக்கப்படும். அதற்குப் பிறகு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சிறப்பான முறையிலே பூட்டுக்கள் தயாரிக்கின்ற இடமாக திண்டுக்கல் இருக்கிறது. ஏன், இந்தியாவிலேயே சிறப்பான இடம் என்று சொல்லலாம். நவதால், அலிகார், பூட்டுக்களை விட, மிகச் சிறப்பாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், பாட்லாக்குகள், ஆட்டின் லாக்குகள் என்றெல்லாம் புதிதாய் செய்கிறார்கள். அலமாரிகள், கதவுகள் போன்ற அனைத்துக்கும் உரிய பூட்டுக்களைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல லாக்குகளை, நல்லமுறையிலே, விளம்பரப்படுத்துகிறார்களா என்றால், விளம்பரம் செய்யவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். அந்த வகையிலே, நல்ல

விளம்பரம் செய்து, அதனுடைய உற்பத்தித் திறனை இன்னும் அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப் பிரதேசத்திலுள்ள, அலிகாரில் அதிக அளவில் தயாரிக்கும் பூட்டுக்களை விட, நேர்த்தியானதும், வலுவானதும் ஆகும் நம்முடைய திண்டுக்கல் பூட்டுக்கள். அது குடிசைத் தொழிலாகத் தயாரிக்கப்பட்டாலும் கூட, எல்லாவிதமான தரத்தோடு தயாரிக்கப்படுகிறது. தேவையான அளவுக்கு அவை விற்றுவிடுவதன் காரணமாக, தேக்கம் இல்லாததன் காரணமாக, அதிகப்படியாகச் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லை. அதற்கென சில திட்டங்கள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன. அந்தத் திட்டப்படி இயந்திரங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்ட பின்னாலே, விரிவாக்க, அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற சமயத்திலே, அங்கு தயாரிக்கப்படுகின்ற பூட்டுக்கள் அனைத்துமே விற்பனையாகின்றன என்று சொன்னார்கள். அதே நேரத்திலே, அரசு நிறுவனங்கள் அனைத்துமே இப்படிப்பட்ட திண்டுக்கல் பூட்டுக்களை உபயோகப்படுத்துகின்றனவா என்றால், முழுவதும் இல்லை என்றுதான் தெரிகிறது. ஆகவே, அந்த நிலைகளை எல்லாம் கருதி, அரசு நிறுவனங்கள் இந்தப் பூட்டுக்களை உபயோகிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்படுமா? அதே போல், அனைத்துப் பூட்டுக்களும் விற்பனையாகிற நிலைமையிருப்பதால், உற்பத்தித் திறனை இன்னும் அதிகரிக்கிற அளவுக்கு, அந்தப் பூட்டுத் தொழிலாளர்களை, இன்னும் அதிகமான அளவிலே சேர்த்து, அந்தத் தொழிலை இன்னும் ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பெரிய உற்பத்திக்கு அதிக முதலீடு தேவைப்படுகிற காரணத்தினாலே, பழமையான பூட்டு தயாரிப்பாளர்கள் நவீனப்படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தர முன்வரவில்லை. எனவே, மைய அரசின் தேசிய சிறு



தொழில் கழகம், தொழில் நுட்ப அபிவிருத்திக்காகவும், பூட்டுத் தொழிலை நவீனப்படுத்துவதற்காகவும் திண்டுக்கல்லில் ஒரு பொது சேவை நிறுவனத்தைத் துரிதமாகத் துவக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்குப் பிறகு அதிகப்படியான பூட்டுக்களைத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு சற்றேறக்குறைய 32,000 பூட்டுக்கள் உற்பத்தியாவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், அந்த நிறுவனம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு இலாபம் ஈட்டித் தருகிறது? என்னதான் திண்டுக்கல் பூட்டுக்கள் உறுதிக்கும் உத்திரவாதத்திற்கும் பெயர் பெற்றவையாக இருந்தாலுங்கூட, இன்றைக்கு நாடு முழுவதும் எடுக்கின்ற நேரத்தில், மற்ற பூட்டுக்கள்தான் பிரபலமாக இருக்கின்றன. எனவே, அந்தப் பூட்டுக்களை இன்னும் அதிகப் பிரபலப்படுத்துவதோடு, அதன் கிளைகளை வேறு இடங்களிலும் துவக்கி, அதன் மூலமாக, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும், மக்களுக்குத் தரமான பூட்டுக்களையும் கொடுக்கும் முயற்சியில், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறன் ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 6 இலட்சம் அளவில் இருக்கிறது. 1985 டிசம்பர் வரையில் ரூ. 57,000 இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, ஆண்டொன்றுக்கு 50,000 பூட்டுக்களுக்கு மேல் வாங்குவதற்கு ஆர்டர் கொடுத்தும், அவர்களுக்குச் சரியான முறையிலே சப்ளை ஆகாத நிலை காரணமாக, பல வீடுகள் இன்றையதினம் முடித்துக் கொடுக்க முடியாத சூழ்நிலையிருக்கிறது. மாநில வீட்டு வசதி வாரியத் துறைக்கு இருக்கிற தேவையை அரசு அறிந்து, உடனடியாக இலட்சம் பூட்டாவது ஆண்டொன்றுக்கு தயாரிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. ஞானசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூட்டுகளுடைய தரத்தை உணரும் வகையில் உறுப்பினர்களுக்கு ஒரு பூட்டு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**ஆதரவற்ற விதவைகளுக்கான உதவித் தொகை.**

459—(*வினா எண் 3118) **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதரவற்று இருக்கும் இளம் விதவைகளுக்கு வயதைக் கருத்தில் கொள்ளாது பென்சன் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** இல்லை.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இளம் விதவைகளுக்கு வயதைக் கருத்தில் கொள்ளாது பென்சன் வழங்கும் செயற்குறிப்பு பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அப்படிப்பட்ட விதவைகளுக்கு அரசு முன்னுரிமை கொடுத்து வேலை கொடுக்கப்படுமா ? உதாரணமாக விருதுநகரிலே கலப்பு திருமணம் செய்துகொண்ட தம்பதி—கணவனை யாரோ கொன்று விட்டார்கள்—மனைவி இரண்டு கைக்குழந்தைகளுடன் பல முயற்சிகள் செய்தும் வேலை கிடைக்கவில்லை. அநாதைகளான அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் விதவைகளுக்கும் வயதின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டு வருகின்றது. கலப்புத் திருமணம் என்பது இந்தத் துறையில் வரவில்லை. அது ஆதி திராவிடர் நலத் துறையில் வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இளம் விதவைகள் என்பது **கிட்டத்தட்ட 40 வயது** என்று அறிகிறேன். எனவே அந்த வயதை 30 வயதாக குறைத்து அந்த உதவித் தொகையை கொடுத்தால்தான் நிச்சயமாக விதவைகளுடைய கண்ணீரைத் துடைக்க முடியும் என்பதை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வயது வரம்பை 40 லிருந்து 30 ஆக குறைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித்தொகை அடிப்படையில் விதவைகளுக்கு 40 வயது நிர்ணயம் செய்து அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30 வயதாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அரசு ஆணை 1465, சமூகநலத்துறை, நாள் 3–5–1985-ன்படி கணவனால் கைவிடப்பட்ட, நீதி மன்றத் தீர்ப்பு பெற்ற பெண்களுக்கும், 30 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும்.

**டாக்டர் ந. மாசிலாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதவைகளுக்கான வயது வரம்பு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 40க்கு கீழே இருப்பவர்களுக்கு, மறுமணம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குகின்ற அடிப்படையில், வயது நிர்ணயத்தை பற்றி நான் முன்பே பதில் சொன்னபோது தெரிவித்தேன். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் நீதிமன்றத் தீர்ப்புகள் பெற்று, 30 வயது நிரம்ப பெற்றிருந்தால், முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசியாவது, இந்த விதவைகளுக்கு வயது வரம்பே இல்லை என்ற ஒரு சட்டத்தை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 வயது என்று இன்றைக்கு நிர்ணயம் செய்திருக்கிறோம். அதற்குக் கீழ் இருக்கின்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அல்லது விதவைகள் என்று பார்க்கின்றபோது, பல திட்டங்கள் சமூக நலத்துறையில் இருக்கின்றன. அவர்களுக்கு வேலைவாய்ப்பு, கைத்தொழில் போன்ற சுய வேலை வாய்ப்பு இன்னும் பலவிதமான வேலைவாய்ப்புகளை அவர்களுக்கு கொடுக்கின்ற அடிப்படையில் தான் 30 வயது என்று நிர்ணயம் செய்து, அதிலும் நீதி மன்றத் தீர்ப்பு பெற்ற பிறகு அவர்கள் உதவித்தொகை பெறவேண்டும் என்ற நியதியை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது கணவனால் கைவிடப்பட்டவர்கள் நீதிமன்றத்திலே தீர்ப்பை பெற்று அவர்கள் 30 வயதை அடைந்திருந்தால் அவர்களுக்கு அரசு சலுகை கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். கணவனால் கைவிடப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட பல பெண்கள் நீதிமன்றத்திற்குப் போகாமலே, கிராமங்களிலே இருக்கின்ற பஞ்சாயத்துக்களின் மூலமாகவே அந்த விவாகரத்துப் பிரச்சினைகளை முடிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அப்படி கிராமங்களிலே இருக்கின்ற பஞ்சாயத்துக்களின் மூலமாக விவாகரத்து பெற்ற பெண்கள் போன்றவர்களுக்கும், இந்தச் சட்டத்தின் சலுகை கிடைக்கின்ற வகையில் விஸ்தரித்து, தேவையானால் உரிய வகையில் விதிவிலக்கு அளித்து, அவர்களுக்கும் உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்டு நீதிமன்றத்திற்குப் போகாத பெண்களுக்கும், கிராமப்புறங்களில் பஞ்சாயத்துக்களின் மூலமாக விவாகரத்து பெற்ற பெண்களுக்கும், நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்ற பிறகு தான் அவர்அகளுக்கு உதவித்தொகை தரவேண்டும் என்ற நியதியைத் தளர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.



**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகள், வயது வந்தோர் போன்றவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கக் கூடிய வகையில் அதற்காக அனுப்பப்பட்ட அந்த ஃபார்ம்களை எல்லாம் கட்டி வைத்து இருக்கிறார்கள். கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? ஒருவருக்கு பென்ஷன் கொடுக்கவேண்டுமென்றால் பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்களில் ஒருவர் இறந்தால் தான் கொடுக்க முடியும் என்ற வகையில் நிதி இல்லை என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் என்னுடைய தாலுக்காவிலே பல பேப்பர்கள் இந்த பென்ஷனுக்காக வந்தவை, தேங்கிக் கிடக்கின்றன. அது அரசுக்குத் தெரியுமா? அத்தகைய நிலைமையை மாற்ற உரிய வகையில் நிதியுதவி செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையில் இருக்கும் மனுக்கள் அத்தனைக்கும், அதாவது அவர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை கொடுக்கவேண்டும் என்று நான் மானியக்கோரிக்கையில் பேசுகிறபோதே இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் 26,268 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு அதாவது 1986-ஆம் ஆண்டுக்கான விவரத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு விண்ணப்பங்கள் முதியோர் உதவித்தொகைக்காக வந்திருக்கின்றன, ஒவ்வொரு மாவட்டத்திலும் என்பதைப் பார்த்து அதாவது அந்த எண்ணிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மூலமாக அரசுக்கு அனுப்பிய பிறகு அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நாம் ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 30 வயதுக்கு மேலான, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், 30 வயதுக்கு மேலான விதவைகளுக்கும் உதவித்தொகை அளித்து உபகாரம் செய்வதாக அமைச்சர் அவர்கள்

[1986 மே 3

சொன்னார்கள். 30 வயதுக்கு உட்பட்ட விதவைகளைப் பொறுத்தவரையில் அல்லது கணவனால் கைவிடப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தவறு செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உதவித் தொகை அளிக்கிற திட்டமே இருக்கிறது. எனவே தவறு செய்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு இருப்பதன் காரணத்தால் அவர்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்தவரையில், மக்களிடத்திலே தொடர்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு சர்ட்டிஃபிக்கேட் கொடுத்தால், அதை வைத்து அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கிற திட்டத்தை அரசு ஏற்படுத்துமா? அந்த வகையில் பரிசீலனையில் இல்லை என்றாலும், இனிமேலாவது அதனை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்டவர்களும், விதவைகளும் தவறுகள் செய்யக்கூடாது என்ற அளவுக்குத்தான் அரசு இன்றைக்கு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கிற வகையில் உதவித் தொகைகளை அளிக்கிறது. அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்கிற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சான்றிதழ் கொடுத்தால் உதவித் தொகை கொடுப்பதற்குரிய வகையில் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இவர்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள்தான் என்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஊட்டச்சத்து திட்டத்துக்கு உலக வங்கி உதவி.

**623—(* வினா எண். 4549) திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி அளித்துவரும் ஊட்டச்சத்து உதவி எதுவரை கிடைக்கும்?



1986 மே 3]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்திற்கு உலக வங்கி அளித்து வரும் உதவி 30—6—1986 வரை கிடைக்கும்.

### சென்னையில் மகளிர் விடுதிகள்.

**624—(* வினா எண். 6894) திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் சமூக நலத் துறையால் மகளிர் தங்குவதற்கு மேலும் விடுதிகள் கட்டுவதற்கு அரசு பரிசீலித்து வருகிறதா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** இல்லை.

(முற்பகல் 10-00.)

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிட்டார்கள். பரவாயில்லை. சென்னையில் சமூக நலத் துறையால் நடத்தப்படும் மகளிர் தங்கும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த விடுதிகளில் எத்தனை பெண்கள் வசிக்கிறார்கள் என்பதையும், சென்னையில் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த தனியார் விடுதிகளுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பணிபுரியும் மகளிருக்காக 2 விடுதிகள் சமூக நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலும், கிண்டியிலும் அந்த விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலே 35 அங்கத்தினர்களும், கிண்டியில் 50 அங்கத்தினர்களும் தங்கி இன்றைக்கு அந்த வசதிகளை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிறுவனங்கள் எவ்வளவு என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக இயங்கும், பணிபுரியும் மகளிர் விடுதிகள் 10 சென்னையில் இருக்கின்றன. (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தனியார் நிறுவனங்களுக்கு பலவிதமான அடிப்படையில் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிர் நலம், சமூக நலம், மகளிர் கல்வியில் பொறுப்புடையவர்கள் போன்ற அந்த நிறுவனங்களும், மற்றும் சில பொது நிறுவனங்களும், சமூக நலத்துறையின் கீழ் உள்ள திட்டங்களின் மூலமாக சில திட்டங்களை மேற்கொள்ளும் தகுதி உடையவர்களாவார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் விடுதிகளைக் கட்டுவதற்காக—தனியார் நிறுவனங்கள் கட்டுவதற்காக—75 விழுக்காடு மைய அரசும் மானியம் கொடுக்கிறது. மைய அரசின் மானியத்தை முழுவதுமாக பெற்றதற்குப் பிறகுதான் மாநில அரசு உதவி தருகிறது. மாநில அரசு 15 விழுக்காடு அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைவோ அத் தொகையை வழங்கும். மீதம் உள்ள பத்து விழுக்காடு, அந்த நிறுவனமே, மகளிர் விடுதியை ஏற்று நடத்தக்கூடிய அந்த நிறுவனமே ஏற்கிறது.

**விமான தளங்களின் சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு.**

**கு. கா வி. எண். 9—(* வினா எண். 9137) திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விமான தளங்களுக்கு அருகிலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி விபத்தை தடுக்க சுற்றுப்புற தூய்மை நிர்வாகக் குழு Environment, Management Committee என்ற அமைப்பை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** சிவில் மற்றும் விமானப் படை விமானங்களுக்கு பறவைகளினால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கும் வழிவகையை ஆராயும் பொருட்டு தமிழ்நாடு அரசு 1980-ல் விமானதள சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு என்ற ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர் இதன் தலைவராவார். இக்குழுவில்



சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும், விமான நிலைய அதிகாரிகளும், உள்ளாட்சி மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர்களும் இடம் பெற்றுள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 625 மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. தகவல் கோரல்.**

**குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் குறித்து.**

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை தயவுசெய்து அருள் கூர்ந்து அவையில் எழுப்ப அனுமதிக்க வேண்டும்.

மன்றத்தின் தலைவர் அவர்களே, தாங்கள் வழக்கறிஞர் என்ற முறையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னைக்கு அருள்கூர்ந்து தாங்கள் அரசிடமிருந்து விளக்கத்தைப் பெற்றுத் தந்தால் மிகவும் உதவியாக இருக்கும். பொதுப் பிரச்சினை.

தங்களுக்கு மிக நன்றாகத் தெரியும் குதிரைப் பந்தய ஒழிப்பு சம்பந்தமான வழக்கு வாபஸ் பெறப்பட்டு விட்டது. 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டே குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. அப்படி அமலுக்கு வந்திருக்கிற நிலையில் ஊட்டியில், சென்னையில் குதிரைப் பந்தயம் நடந்தால் அது போலீஸ் சட்டத்தின்படியும் சட்ட விரோதமானது. சட்டப் படியும் சட்ட விரோதமானது. இதுவரையில் மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் ஒன்றும் செய்ய இயலவில்லை என்று சொல்லி வந்தார்கள். இப்போது அரசாங்கம்

அந்த குதிரைப் பந்தயத்தையும், ரேஸ் கிளப்பையும் அண்டர்டேக் பண்ணியிருக்கிறது. ஆகையினால் குதிரைப்பந்தயம் .....

(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை என் அறையிலேயே வந்து கேட்டிருக்கலாம். அங்கேயே நேரிடையாகப் பதில் சொல்லியிருப்பேன். இப்போது எதற்கு?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் சம்பந்தமாக நீண்ட காலமாக ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருந்து வந்தது. அந்த வழக்கு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாக ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. (குறுக்கீடு) அந்தச் செய்திதான் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கத்திற்குத் தகவல் வர வேண்டும். முறையாக நீதி மன்றத்திலே இருந்து அந்தச் செய்தி வர வேண்டும். அந்தச் செய்தி தமிழக அரசுக்குக் கிடைத்தவுடன் அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை அரசு எடுக்கும்.

## 3. அறிவிப்பு.

**ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (மே.செ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1986) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது."

## 4. கவன ஈர்ப்புகள்.

**(அ) தமிழக எல்லையிலுள்ள மங்களதேவி கண்ணகி கோயிலை கேரள அரசு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது குறித்து.**

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம், கூடலூருக்கு அருகிலுள்ள தமிழகத்திற்குச் சொந்தமான மங்களதேவி. கண்ணகி கோவிலை கேரள அரசு ஆக்கிரமித்துக் கொண்டு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அங்கு





சென்று வழிபாடு செய்வதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி இருப்பதால அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திறகுக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தல்லவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சிலப்பதிகாரக் காப்பிய நாயகி கண்ணகியின் நினைவாக சேரன் செங்குட்டுவனால் எழுப்பப்பெற்ற பத்தினிக்கோட்டம் சுருளிக்குன்றுகளின் மேற்குத் தொடர்ச்சியிலுள்ள வேங்கைக் கானல் என்று அழைக்கப்பட்ட மங்களதேவி கோட்டத்தில் உள்ளது. இக்கோயில் தமிழ்நாட்டு எல்லையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் கேரள மாநிலத்தில் இருப்பதாகச் சொல்லப் பட்டது. அழிவுறும் நிலையில் உள்ளதால் அதைப் புதுப்பிக்க எண்ணிய தமிழக அரசு 1971 ஜுன் திங்களில் இப்பகுதியைத் தமிழக அரசிற்கு மாற்றித் தருமாறு கேரள அரசைக் கேட்டுக் கொண்டது. பின்னர், இதுசம்பந்தமாக அரசிடமிருக்கின்ற ஆவணங்களைக் கொண்டு, கவனமாகப் பரிசீலித்த பிறகும், முன்னாள் நிலவரித் திட்ட ஆணையரும், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறையின் இணை இயக்குநரும் மேற்கொண்ட ஆய்விற்குப் பிறகும் இக்கோயிலானது மதுரை மாவட்டத்தின் எல்லைப் பகுதியாகவே தொன்றுதொட்டு இருந்திருக்கின்றதே தவிர, அது எக்காலத்திலுமே திருவிதாங்கூர் அல்லது கேரள மாநிலத்தின் பகுதியாக இருந்ததே இல்லை எனத் தெரிய வந்தது.

இக் கோயிலை புதுப்பிக்க வேண்டி, முன்னாள் முதலமைச்சர் கேரள முதல்வருக்கு மேற்கூறிய நிலையை விளக்கி, தகுந்த ஒத்துழைப்பை நல்குமாறு 1975 நவம்பர் திங்களில் கோரினார். இந்நிலையை ஏற்றுக்கொள்ளாத கேரள அரசு மைய அரசுக்கு முறையீடு செய்தது. இப்பிரச்சினை குறித்து முடிவெடுக்கும் வரை புதுப்பிக்கும் பணியை நிறுத்தி வைக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. அதை தமிழக அரசும் ஏற்றுக்கொண்டது.

2. கேரள, தமிழக அரசுகள் இரண்டுமே இக்கோயிலைப் புதுப்பிக்கும் பணியை விழைவதால், தேவையான பழுது பார்த்தலை மேற்கொள்ளுமாறு இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென மத்திய அரசைத் தமிழக அரசு 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கேட்டுக் கொண்டது. இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பொது இயக்குநர் (டைரக்டர் ஜெனரல்), இந்திய நில அளவை துறையின இணை பொது இயக்குநர் (டெபுடி டைரக்டர் ஜெனரல்), மற்றும் சம்பந்தப்பட்ட மாநில இயக்குநர்களின் துணையுடன் இரு மாநிலங்களின் சம்பந்தப்பட்ட துறைச் செயலர்கள் அடங்கிய ஒரு குழு மங்களதேவி கோயில் பகுதியை நேரடியாகப் பார்வையிட்டு மத்திய அரசுக்குத் தனது பரிந்துரையை அனுப்ப வேண்டுமென மத்திய அரசு அறிவுறுத்தியது.

3. கேரள அரசினால் அப்பொழுது அமைக்கப்பட்டு வரும் சாலைப் பணிகள் முடியும் வரை இக்கோயிலுக்குச் சென்று பார்ப்பது இயலாது என்று இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை தெரிவித்தது. கேரள அரசால் அமைக்கப்பட்ட சாலையானது தமிழகப் பகுதி வழியாக இரண்டு இடங்களில், அதாவது 67 சென்ட் அளவிற்குப் போடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தமிழக நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளரையோ அல்லது வனத்துறையினரையோ சம்பந்தப்பட்ட கேரள அரசு அலுவலர்கள் கலந்தாலோசிக்கவில்லை. மேலும், கேரள அரசு மைய அரசுக்கு மங்களதேவி கோட்டம் கேரள அரசின் எல்லைக்குள் உள்ளது என்றும், இதில் ஏதேனும் சந்தேகம் ஏற்படின் அதை நிவர்த்திக்கும் பொருட்டு ஒரு கூட்டு நில அளவை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மைய அரசிற்குக் கூறியது. 1978 ஜூன் மாதத்தில் நில அளவைத் துறை இணை இயக்குநர் இக்கோயிலை பார்வையிட்டு, பெங்களூரில் உள்ள இந்திய நில அளவை துறையின் இயக்குநர் அலுவலகத்தில் இது சம்பந்தமாக செய்துள்ள நில அளவை முடிவினையும் அறிந்துவரப் பணிக்கப்பட்டார். அவர் அக்கோயிலை மட்டும் பார்வையிட்டு, இரு அரசுகளின் அலுவலர்கள் மட்டும் கொண்ட ஒரு உயர்மட்ட குழுவினைக் கொண்டு விவாதித்த பின்னர் முடிவை இந்திய சர்வே துறையினருக்கு அறிவிப்பது நல்லதென



கருத்து தெரிவித்தார். கண்ணகி கோட்டம் எவ்விதத்தில் தமிழக எல்லைக்குள் அமைந்துள்ளது என்பதற்கான பல இலக்கிய மற்றும் சரித்திரச் சான்றுகளைச் சுட்டிக் காட்டி, இப்பிரச்சனைக்கு கேரள அரசுடன் தொடர்பு கொண்டு தீர்வு காணும் வகையில நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், எல்லையை கூட்டு நில அளவை செய்திட வழி செய்யுமாறும் வேண்டி அப்போதைய இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கு நமது முதலமைச்சர் அவர்களால் 1980 அக்டோபர் திங்களில் ஒரு கடிதம் எழுதப்பட்டது. இக்கடிதத்திற்கு, உள்துறை அமைச்சர் கேரள முதலமைச்சரிடமிருந்து கிடைத்த பதிலை 1981 மே திங்களில் இவ்வரசுக்கு அனுப்பினார். இக்கடிதத்தில், கேரள முதல்வர் மங்களதேவி கோயில் மங்களதேவி மலையில்தான் உள்ளது என்றும், சுருளி மலையில் அல்ல என்றும், இக்கோயில் எப்போதுமே கேரள அரசின் அதிகார வரம்புக்குள்ளாகவே (எல்லைக்காவல் உள்பட) இருந்து வந்துள்ளது எனவும் தேக்கடி விலங்குகள் சரணாலயத்திலிருந்து இக்கோயில் வரை பெரும் பொருட் செலவில் ஒரு பாதையினை அவ்வரசு அமைத்துள்ளதாகவும், அவ்வரசால் இக்கோயிலை புணருத்தாரணம் செய்து பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எனவே தமிழக அரசை இவ்வெல்லைத் தகராறைக் கைவிட்டு விடுமாறு அறிவுரை வழங்குமாறு வேண்டப்பட்டுள்ளது. மேலும், கேரள மாநில முதலமைச்சர் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் மாநில எல்லைகளை திருத்தி அமைத்துள்ளதாகவும், நில அளவை கற்களை கேரள மாநிலத்திற்குள் நட்டிருப்பதாகவும், கேரள மாநில கோட்டயம் புலிகள் பாதுகாப்பு திட்டங்கள் இயக்குநர் தமக்கு தெரிவித்திருப்பதாகவும், மங்களதேவி கோயில் சுற்றுப்புற சுவர்களின் நில அளவுகள் தமிழ் நாட்டின் எல்லைக்குள் இருப்பதாக 29—9—1984 நாளிட்ட கடிதத்தில் நமது மாநில முதல்வருக்கு தெரிவித்துள்ளார்.

4. இந்திய நில அளவை படத்தின்படியான நில அளவைக் குறிகள் மற்றும் இதர நில அளவைக் குறிகள் ஏதும் தமிழ் நாட்டின் நில அளவைக் குழுவால் மாற்றம் செய்யப்படவில்லை என்பதால், தமிழ் நாட்டின் நில அளவைக் குழு இரு மாநிலங்களுக்கிடையேயான எல்லையைத் திருத்தி

அமைத்துள்ளது மற்றும் நில அளவைக் கற்கள் கேரள மாநிலத்திற்குள் நடப்பட்டுள்ளன என்று கேரள முதலமைச்சர் தெரிவித்திருப்பது சரியானதல்ல என்று கருதப்பட்டதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு எழுதிய 11—10—1985 நாளிட்ட கடிதத்தில் மங்களதேவி கண்ணகி கோவில் தமிழ்நாட்டு எல்லையில் உள்ளதால் கேரள அரசின் தலையீட்டை நிறுத்தி தமிழ் மக்கள் இக்கோவிலில் வழிபாடு செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இந்தியப் பிரதமரின் பதில் எதிர் நோக்கப்படுகிறது.

5. 1986-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 24—4—1986 முதல் 27—4—1986 வரை (அதாவது சித்திரைத் திங்கள் 11, 12, 13 மற்றும் 14 தேதிகளில்) மங்களதேவி வழிபாட்டு விழா கண்ணகி கோயிலில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் தமிழக பக்தர்களும் கலந்து கொண்டு, எவ்வித இடையூறுகளில்லாமல் வழிபாடுகள் நடத்துவதில் கேரள அரசு போதிய பாதுகாப்பு வசதிகள் நல்குமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சர் அவர்களைக் கோரி தந்தி அனுப்பியுள்ளார். மதுரை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் கேரள மாநிலத்திலுள்ள இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருடன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் 9—4—1986 அன்று இது குறித்து விவாதித்து, தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்று அரசுக்கு தெரிவித்துள்ளார்.

6. மங்களதேவி (கண்ணகி) கோவிலுக்குச் செல்ல கேரள எல்லைப் பகுதியில் கட்டணம் வசூலிக்கிறார்கள். மேலும் அங்கு சென்று வழிபடும் இம்மாநில மக்களுக்கு பல சிரமங்கள் ஏற்படுவதாலும், கம்பம்—கூடலூர் பகுதியில் தமிழக அரசே தக்கதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, கண்ணகிக்கு புதிதாக கோவில் ஒன்று அமைக்கப்படும். இக்கோவில் கட்டுவதால், பழைய கண்ணகி கோவிலுக்கு இம்மாநிலத்துக்கு உள்ள உரிமை விட்டுத் தராமல் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று 16—4—1986 அன்று மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

7. நிலைமையை அரசு கவனித்துக் கொண்டு வருகிறது.



**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்க அறிக்கையிலிருந்து சில உண்மைகள் தெரிய வருகின்றன. கண்ணகி கோவில் தமிழகத்திற்குச் சொந்தமானது. 1883 ஆம் ஆண்டிலிருந்த நோட்டிபிகேஷனில் வண்ணாத்திப்பாறை ரிசர்வ் பாரஸ்டிலே அந்த இடம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல பாண்டிய மன்னர்கள் வல்லப பாண்டியன், மாரவ வர்மன், குலசேகரப் பாண்டியன் ஆகியவர்களின் கல்வெட்டுகள் எல்லாம் இந்த இடம் தமிழகத்திற்குச் சொந்தமென்பதை நிரூபிக்கிறது. ஆகவே இவ்வளவு ஆதாரங்கள் அது நமக்குச் சொந்தமானது என்பதற்கு இருக்கின்றன. அந்த உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சொல்லப்படுகிறது.

அதேநேரத்தில் இன்றைக்கு கண்ணகி கோவிலில் இருந்த கண்ணகி சிலையை அகற்றிவிட்டு துர்காதேவி சிலையை அங்கே பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். கேரள அரசாங்கம் அங்கே புதியதாக பாதை போட்டிருக்கிறது. தமிழகத்தின் பக்தர்கள் அனுமதிக்கப்படாத நிலைமை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் உண்டியல் வசூல் செய்வதாகவும் சொல்கிறார்கள். கேரள அரசின் உள்துறை அமைச்சருக்கு கேரள முதல்வர், இந்த கண்ணகி கோவில் கேரளாவிற்குச் சொந்தமானது என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். 1981 ஆம் ஆண்டு இடுக்கி கலெக்டரும் அதைப்போல சர்வே செய்து, இது கேரளாவிற்குச் சொந்தமானது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த உரிமையை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, போராடுவதற்குப் பதிலாக, ஏற்கனவே தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை இழந்துவிட்டதை போல கண்ணகி கோவிலையும் இழந்துவிடுவோமோ என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் புதியதாக இதற்கு போராடுவதற்குப் பதிலாக, கம்பம், கூடலூர் பகுதியில் புதிய கண்ணகி கோவிலைக் கட்டப்போகிறோம் என்று சொல்வது பழைய உரிமைகளை திசை திருப்புகிற முயற்சி இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1986 மே 3

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வரலாற்றிலே இடம் பெற்றிருக்கிற ஒரு நிகழ்ச்சியாகும். ஒரு காலத்தில் தமிழக எல்லைகள் இன்றைக்கு கேரள மாநிலமாக விளங்குகிற அந்த மாநிலத்தோடு சேர்ந்திருந்த நேரத்தில், எது தமிழக எல்லை, எது கேரள எல்லையென்று பிரிக்கப்படாத அந்தச் சூழ்நிலையில், இவைகள் எல்லாம் ஒரு எல்லை, ஒரு பகுதியென்று கருதப்பட்டு இருந்திருக்கலாம். ஆனால் பின்னாலே மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நேரத்திலே இது நம்முடைய எல்லைக்குள்ளேதான், தமிழகத்தின் எல்லைக்குள்ளேதான் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக சாட்சியங்கள், அந்த எல்லைகளைக் காட்டுகிற சான்றுகள், ஆவணங்கள் நமக்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. இதில் வில்லங்கம் எப்போது வந்தது என்பதையும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நம்முடைய உறுப்பினர் அவர்களுக்கும், அவைக்கும் தெரிவித்துக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன். 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தான் இப்படிப்பட்ட ஒரு ஆலயம் அங்கேயிருக்கிறது என்று கண்டு பிடித்த நேரத்திலே, அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று அந்த உணர்வோடு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கேரள அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். இதை நாங்கள் புதுப்பிக்க விரும்புகிறோம், இதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று அவர்கள் எழுதினார்கள், "சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தார்கள்" என்று பழமொழி சொல்வார்களே அதைப்போல, வம்பை விலை கொடுத்து வாங்கியதைப் போல. கேரள அரசு அன்று தான் விழித்துக் கொண்டு, தங்களுடைய எல்லையிலே இருக்கிறதோ என்று கருதி அவர்கள் உங்களுக்கு அனுமதி தருவதைப் பரிசீலிக்கிறோம் என்று தொடங்கி, கடைசியாக அது எங்களுடைய எல்லையிலே இருக்கிறது என்ற விவாதத்தை வைக்கத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வந்ததற்குப் பிறகு, ஆவணங்களை எல்லாம் தேடிக் கண்டுபிடித்து, தொல்பொருள் ஆய்வுத் துறையினர், இந்த எல்லைகளை நிர்ணயிக்கிற துறையினர், அவர்களையெல்லாம் அனுப்பி நம்முடைய எல்லையிலே தான் இருக்கிறது. நீண்டகாலமாக



1986 மே 3] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வண்ணாத்திப்பாறை ரிசர்வ் பாரஸ்ட் என்று அழைக்கப்படுகிற எல்லைக்குள் இருக்கிறது. நீண்டகாலமாக வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்தக் கண்ணகி கோயிலை வழிபடுவதற்காக கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து மக்கள் செல்வதற்காக அந்த ரிசர்வ் பாரஸ்ட் வழியாகச் செல்லலாம், அங்கே வணங்கலாம் என்பதற்காக அவ்வப்போது அனுமதிகள் வழங்கப்பட்டதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆகவே அது தமிழக எல்லைக்குள்ளேதான் இருக்கிறது. நாங்கள் புதுப்பிக்கிறோம் என்று தொடங்கிய நேரத்திலேதான் கேரள அரசு மீண்டும் வேகமாக தங்களுடைய ஆட்சேபணையை தெரிவிக்கத் தொடங்கினார்கள்.

(முற்பகல் 10-10)

அன்றைக்கு இருந்த இந்தியப் பிரதமர் காலம் சென்ற அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள், இதை மிகத் தெளிவாக அது எங்களுக்கு உரிமை படைத்தது என்பதை எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு இந்த இரண்டு மாநிலங்களைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளும், இந்த எல்லையை நிர்ணயிக்கின்ற அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் முதலிலே இதைப் பரிசீலிக்கட்டும், அதற்குப் பிறகு 2 மாநில அரசுகளும் இதிலே பேசி ஒரு முடிவு காணவேண்டும் என்று தெரிவித்தார்கள். அப்படி பரிசீலிக்கின்ற ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டபோது, கேரள அரசு ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டார்கள், நம்முடைய அதிகாரிகள் மீது. நம்முடைய அதிகாரிகள் எல்லைக் கல்லை மாற்றி வைத்துவிட்டார்கள் என்று கூட குற்றம் சாட்டினார்கள். நாம் அதையெல்லாம் கடுமையாக மறுத்து இருக்கிறோம். கடைசியாக 1985 ஆம் ஆண்டு இன்றைய பிரதம அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்த உரிமையை எங்களுக்குப் பெற்றுத் தர வேண்டும், அதற்காக மத்திய அரசு இதிலே தலையிட்டாக வேண்டும் என்று நாம் சொல்லி, கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அதற்கு இடையிலே இது விவாதப் பொருளாக மாறியதற்குப் பிறகு, யாருடைய கவனத்திற்கும் படாமல் இருக்க இந்தப் பகுதி, குறிப்பாக அந்த ஆலயத்

இப்போது இந்த இரண்டு மாநிலங்களிலும் மிகப் பெரிய பிரச்சனையாக உருவெடுத்து விட்டது. வழக்கமாக சித்திரைத் திங்களில் முழு நிலவு நாளில் நம்முடைய கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து மக்கள் அங்கே சென்று அந்த ஆலயத்திலே வழிபாடு நடத்துவதற்காகச் செல்லுகின்ற வழக்கத்தை வைத்து இருந்தார்கள். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுக்காலமாக இந்தப் பிரச்சனை மிகுந்த சிக்கல் உள்ள பிரச்சனையாக மாறியதற்குப் பிறகு, கேரள அரசு சில சங்கடங்களை உருவாக்க முனைந்தது. அங்கே போகின்ற யாத்திரிகர்களுக்கு அல்லது வழிபாடு செய்யப் போகின்றவர் களுக்கு அல்லது விழா நடத்தச் செல்லுகின்றவர்களுக்கு தடை களை ஏற்படுத்தியது. ஒவ்வொரு சமயத்திலேயும் மாநில அரசு தலையிட்டு, கேரள அரசோடு தொடர்பு கொண்டு, அந்த இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரும், மதுரை மாவட்ட ஆட்சித் தலை வரும் உட்கார்ந்து பேசி, செல்லுகின்ற மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும், வேறு எந்தவிதமான சம்பவங்களும், அமைதியைக் குலைக்கின்ற சம்பவங்களும் வந்துவிடக் கூடாது என்றும் கடந்த சில ஆண்டுக்காலமாக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

ஆனால் ஒவ்வொரு ஆண்டும் அந்த விழாக் காலத்தில் கொஞ்சம் கொந்தளிப்பும் பதட்டமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற உறவு அல்லது நட்பு கூட இதனாலே, இந்த நிகழ்ச்சிகளினாலே கொஞ்சம் பாதகம் அடைகின்ற அளவிற்கு இரண்டு தரப்பிலே யிருந்து உணர்ச்சிகளை வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் நம்முடைய உரிமைக்காக நாம் போராடிக் கொண்டு இருக்கிற நேரத்தில் அந்த ஆலயமே கிடைத்தால் கூட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ரகுமான்கான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அங்கே சிலை இல்லை. அந்த இடம் கண்டுபிடிக்கப்பட்ட போது, கன்னை மாவட்டத்தில் உள்ள கந்தன்சாவடியைச் சேர்ந்த ஒரு காபிர் அலிஷர்தான் முதலிலே அதைப் போய்ப் பார்த்தார்கள். பார்த்தபோது அங்கே இருந்த ஒரு ஊனப்பட்ட சிலையை எடுத்துக் கொண்டு வந்து அவர் தான் வைத்து இருக்கிறார்கள். அது நல்லதொரு சிலையாக இருக்கலாம் என்ற கருத்தை அவர்





தெரிவித்தார். ஆகவே அங்கே சிலை இல்லை. ஆகவேதான் நானே அந்த இடத்திற்கு 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு, மிகுந்த காற்றும் மழையுமாக இருந்த நேரத்திலே கூட அங்கே போய் அகப்பட்டுக்கொண்டு, அந்தச் சூழ்நிலையிலே அதை எல்லாம் பார்வையிட்டு, 40, 50 லட்ச ரூபாய் செலவில் அந்த வளாகத்தை மிக அருமையாக எந்தக் காலத்திற்கும் இந்த மக்களாலே போற்றி வணங்குகின்ற வகையில் உருவாக்க வேண்டும் என்று திட்டத்தை நாம் உருவாக்கினோம்.

அது மாத்திரம் அல்ல, நம்முடைய பகுதியிலே இருந்து மக்கள் போகின்ற அந்த வழியில் உள்ள தோரணவாயில்கள் கூட இடிந்து கீழே விழுந்து கிடக்கின்ற காட்சியைக் கூட பார்த்தேன். நம்முடைய மலைப் பகுதியில், பாதைகளில் நீங்கள் இதைப் போடலாம் என்று கூட நான் சொல்லிவிட்டு வந்தேன். உடனடியாக கேரள அரசு எங்களுடைய வனவிலங்கு சரணாலயங் களுக்கு நீங்கள் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள், சாலைகளை அமைக்கிறீர்கள், அது சட்டப் படி தவறு என்று அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு அந்த வேலைகள் கூட நிறுத்தப்பட்டன. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் வேகம் வேகமாக பாதைகளைப் போட்டு இருக்கிறார்கள். அதிலே கூட நம்முடைய அனுமதியைப் பெறாமல் நம்முடைய எல்லைக்குள்ளே ஒரு சிறு அளவு இடத்திலே கூட நுழைந்து சாலைகள் போடப்பட்டு இருக்கின்றன. எனவே இவைகள் எல்லாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. ஆனால் இவ்வளவு செய்து அதைக் காப்பாற்றியதற்குப் பிறகும், அங்கே சிலை இல்லை, அது தொல் பொருளை பாதுகாக்கின்ற, ஒரு தொல்பொருள் சிறப்புமிக்க இடமாக இன்றைக்கு விளங்கு கிறதே தவிர, ஆலயமாக இல்லை. ஆகவேதான் நம்முடைய மக்கள் எல்லாம் விரும்பிக் கேட்டுக் கொண்டதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அந்த இடத்திலே வணங்கு வதற்கு உரிய ஒரு புதிய ஆலயத்தை நாம் தோற்றுவிக்க முடியும், தோற்றுவிக்கலாம் என்பதை உலக தமிழ்ச் சங்கத்தினுடைய தொடக்க நாளிலே அறிவித்தார்கள். இந்த ஆலயம் உருவாக்கு வதற்கும் ஏற்கனவே வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த கண்ணகி

கோட்டத்தை நாம் திரும்பப்பெற்று அதை என்றைக்கும் நினைவுச் சின்னமாக, வரலாற்றுச் சின்னமாக, 2 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னாலே நடைபெற்ற ஒரு இலக்கியத்தினுடைய நிகழ்ச்சியின் நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்வதற்கும், எந்தவிதமான தொடர்பும் இல்லை. அந்த உரிமையை என்றைக்கும் நாம் பெறுவதற்காகவும் மீண்டும் நிலைநாட்டு வதற்காகவும், திரும்பப் பெறுவதற்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்; அதை கைவிடவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். நானும் அந்தப் பகுதியைச் சார்ந்தவன், நானும் பலமுறை அங்கே போய் இருக்கிறேன். அந்தக் கோயிலிலே ஏற்கனவே கண்ணகி சிலை இருந்தது. இன்னும் சொல்லப் போனால் அங்கே யுள்ள கல்வெட்டிலேகூட 'மாசாத்துவான்' என்ற வார்த்தைகூட இருக்கிறது. தேவிக்கு அமுது படைக்க வேண்டுமென்ற கல்வெட்டுகள்கூட நிறைய எடுத்திருக்கிறார்கள். அதிலேகூட இருக்கிறது. ஆக, சிலை இருந்தது, சிலையை ஊனப்படுத்தி விட்டார்கள். ஆக, முக்கியமானப் பிரச்சினை, இந்தச் சிலையை அகற்றிவிட்டு கேரளத்தைச் சேர்ந்தவர்கள் துர்கா தேவியி னுடைய சிலையை அங்கே பிரதிஷ்டை செய்து இருக்கிறார்கள். possession and enjoyment அந்தக் கோவிலினுடைய கட்டுப் பாடு அவர்களுடைய கையிலே போய்விட்டது. ஆக, அது நம்மைவிட்டு போய்விட்ட நிலைதான். அதை கைப்பற்றுவதற்கு என்ன வழி? கண்ணகி கோயிலை காப்பாற்றுவதில் அரசியலே கிடையாது. ஆக, சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்தான் ஆண்டி என்பதைப் போல அன்றைக்கு இருந்த முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இதுபோன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறார் என்று சொன்னார்கள். ஆண்டிகள் இது போன்ற சங்கை ஊதலாம். ஆனால் அரசாண்ட கலைஞர் அவர்கள் சங்கை ஊதி கெடுக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர், கூடலூர் காரர், அவரும் ரெவின்யூ போர்டு மெம்பரை அன்றைக்கே அனுப்பி பரிசீலனை செய்து நமக்குத்தான் சொந்தம் என்று நிலைநாட்டி யிருக்கிறார். ஏற்கனவே நமக்கு இருந்த சொந்தத்தை அவர்கள்



அபகரித்த காரணத்தினால்தான் இந்தப் பிரச்சனை வந்ததே தவிர கண்ணகி சிலை என்றாலும் அரசியல, ஆகவே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆண்டி என்கிற வார்த்தையை பயன்படுத்தவில்லை. ஒரு உதாரணத்திற்காக, 'சும்மா இருந்த சங்கை ஊதி கெடுப்பதைப்போல' என்றுதான் சொன்னேன. மிகுந்த எச்சரிக்கையோடு சொன்னேன். நான் சொன்னதற்கே காரணம், நம்முடைய ஆராய்ச்சியாளர்கள் அந்த இடத்திற்குச் சென்று இதைக் கண்டுபிடித்தார்கள். அதுவரை அப்படிப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் இருப்பது யாருக்குமே தெரியாது. கம்பத்திலே இருக்கிற மக்கள் போய், வழி வழியாக வணங்கிக்கொண்டு இருந்தார்களே தவிர, வெளியிலே யாருக்கும், மாநிலத்திற்கும் சொல்லவில்லை. அரசினுடைய கவனத்திற்கு 71 ஆம் ஆண்டுதான் வந்தது. வந்த உடனேயே நம்முடைய மக்கள் போய் வணங்கிக்கொண்டு வருகிறார்கள், நம்முடைய இடமென்று நாம் வேலையைத் தொடங்கி இருக்கவேண்டும். அப்படித் தொடங் காமல், கேரள அரசுக்கு நீங்கள் அனுமதி கொடுங்கள் என்று எழுதிய அந்தக் கடிதம்தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை நிலைநாட்டி விட்டது. நான் இந்தச் சான்றைத்தான் சொல்ல வருகிறேன். காரணம் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இதிலே அக்கறையோடு எழுப்பி இருக்கிற காரணத்தி னாலே, என்றைக்கு இந்த வில்லங்கம் தொடங்கியது என்று சொல்லவேண்டும் அல்லவா? நோய் தீர்ப்பதற்கு மருத்துவம் பார்ப்பது என்பது வேறு. நோய் எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? அதையும் கண்டுபிடித்து அந்தக் காரணத்தையும் களைய வேண்டுமென்பதற்காக தகவலுக்காகச் சொன்னேன். இதை அரசியல் ஆக்குவதற்காகச் சொல்லவில்லை. ஆகவே கேரள மாநிலத்திற்கு உரிமை இருக்கிறது என்று நம்முடைய மாநில அரசு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியதன் மூலம் ஒப்புக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகுதான் இந்தச் சங்கடங்கள் தொடங்கி இருக்கின்றன என்பதற்காக அந்த வரலாற்றைச் சொன்னேனே தவிர வேறு அரசியலுக்காக அல்ல. எப்படி இருந்தாலும் இது நம்முடைய இடம் என்பது உறுதிப்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1986 மே 3

பழுதுபட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருந்த சிலை அகற்றப்பட்டது என்றார்கள். முன்னாடியே அந்த இடத்திலே சிலைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி அங்கிருந்த சிலையைத்தான் எடுத்து வந்திருக்கிறோம். அது கண்ணகி சிலைதான் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது கொஞ்சம் ஊனம் அடைந்த சிலையாகக்கூட இருக்கிறது. அதற்குப் பிறகு ஒரு சிலையை வைக்க முயற்சித்தார்கள். இதற்குள்ளே பிரச்சனை பெரிதாகிவிட்டது. கேரளத்துக்காரர்கள் கொண்டு வந்து வேறு ஒரு சிலையை வைத்தார்கள். ஆனால் அவர்களுடைய எல்லைக்குள்ளே ரோடுகளையெல்லாம் போட்டு அவர்களுடைய ஆதிக்கத்திலே இப்போது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் போகின்ற நேரத்திலேகூட அந்த அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவித்துவிட்டுதான் அங்கே போனேன். இருந்தாலும் நாம் இன்றைக்கு ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளே இருக்கிறோம். அந்தக் கட்டுப்பாட்டிற்கு நாம் அடங்கி நடக்க வேண்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்தான். சிக்கலுக்கு உரிய பிரச்சனையாக இருக்கிறபோது, விவாதத்திற்குரிய பிரச்சனையாக இருக்கிறபோது நாம் அடாவடித்தனமாக போய் எதுவும் செய்துவிடக் கூடாது. அது தேவையும் அல்ல. ஆகவே முறையாக முயன்றுகொண்டு இருக்கிறோம். அந்த இடத்தை நாம் திரும்பப் பெறுவதற்கு எவ்வளவு தீவிர முயற்சிகள் மேற்கொள்வதானாலும், அதை மேற்கொள்ளப் போகிறோம். கைவிடப் போவதில்லை. மத்திய அரசுதான் இதிலே காலந் தாழ்த்தாமல் ஒரு முடிவைக் கண்டாக வேண்டும். காரணம் ஆவணங்கள் அவர்களிடத்திலே இருக்கின்றன. Archaeology department, Central survey, Directorate of survey. இருக்கின்றன. ஆகவே அதையெல்லாம் வெளியே கொண்டு வந்து, மிகத் தெளிவாக, வெளிப்படையாக விவாதித்தால் இந்தப் பிரச்சனை தீர்ந்து விடும். மத்திய அரசு காலம் தாழ்த்தாமல் இதை விரைவில் முடிக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் 4, 5 மாதங்களுக்கு முன்பே இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்கள். மிக விரைவிலே மத்திய அரசு இதிலே தலையிட்டு இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் என்று நாம் கருதுகிறோம். அப்படி வருகிறபோது அதைப் புதுப்பிப்பதிலும் சிக்கல் வரும்.



1986 மே 3] [திரு. ஆர். எம். வீரப்பன்]

காரணம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருக்கிற ஒரு நினைவுச் சின்னத்தை இப்போது புதுப்பிப்பதையோ மாற்றுவதையோ யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதை அப்படியே பாதுகாக்க வேண்டும். அதற்கு பக்கத்தில் — ஏன் என்றால் சில அடிகள் தூரத்தில் — இப்போது விவாதம் நடந்துகொண்டு இருக்கிறது, அதற்குப் பக்கத்திலேயே கண்ணகிக்கு ஒரு கோயிலை எழுப்ப வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டம்.

(முற்பகல் 10-20)

**(ஆ) கோவை சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான இடவசதி, பாடநூல்கள் போன்றவை குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் கொடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் கிடைக்காமையாலும், போதிய தகுதி உள்ள ஆசிரியர்கள், வகுப்பறைகள் இல்லாமையாலும், வெளியூர் மாணவர்களுக்கு முறையான தங்கும் விடுதி வசதி இல்லாமையாலும் அம்மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் நீங்கள் ஓர் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

கோவை சட்டக் கல்லூரி 1979-80 கல்வியாண்டு முதல் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கு மூன்றாண்டு சட்டப் படிப்பில் 210 மாணவர்களும், ஐந்தாண்டு சட்டப்படிப்பில் 240

மாணவர்களும், மாலை நேரச் சட்டப்படிப்பில் 180 மாணவர்களும் பயிலுகிறார்கள். ஒவ்வொரு சட்டப்படிப்பிலும் மூன்று வகுப்பறைகளே உள்ளன. மூன்றாண்டு வகுப்புகள் மூன்றும் காலை 9-30 மணி முதல் மதியம் 1.05 வரையிலும், ஐந்தாண்டு சட்டப்படிப்பு மூன்று வகுப்புகளும் மதியம் 1.30 முதல் மாலை 5.30 மணி வரையிலும், மாலைநேர மூன்றாண்டின் மூன்று வகுப்புகளும் மாலை 5.45 முதல் இரவு 9.05 வரையில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு படிப்பிலும் மூன்று பிரிவுகளேயுள்ளதாலும், மூன்று வகைப் படிப்புகளும் வெவ்வேறு நேரங்களில் நடத்தப்படுவதாலும், இட வசதியில் எவ்வித இடையூறும் இல்லை.

2. கோவை சட்டக் கல்லூரியில் முதல்வரைத் தவிர்த்து மூன்று பேராசிரியர் பணியிடங்களும், 5 இளநிலைப் பேராசிரியர் பணியிடங்களும், இரண்டு பகுதி நேர இளநிலைப் பேராசிரியர் பணியிடங்களும், ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கான பகுதி நேர உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் 10-ம் உள்ளன. இவற்றில் பேராசிரியர் பணியிடங்கள் இரண்டு மட்டும் காலியாக உள்ளன. இப்பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலியாக உள்ள பேராசிரியர் பணியிடங்களின் வேலையை முதல்வருக்கும் மீதமுள்ள பேராசிரியர் மற்றும் இளநிலைப் பேராசிரியர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டு பாடங்கள் நடத்தப்படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கு முழு நேர ஆசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. எனெனில் முழு நேர ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் போதிய பணியில்லை. ஆயினும் வரும் ஆண்டு முழு நேர ஆசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. கல்லூரி நூல் நிலையத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 50,000 பெறுமான புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதால், அதன் முதல் இரண்டு வகுப்புகளுக்குச் சட்டமல்லாப் பாடங்களுக்கு பாடத்திட்டங்கள், எற்கனவேயுள்ள பல புத்தகங்களிலுமிருந்து எடுக்கப்பட்டுள்ளதால் இன்னமும் தனியாக பாடப் புத்தகங்கள் வெளி வரவில்லை. அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் பாடப் புத்தகங்களை தயார் செய்து கொண்டிருக்கிறது. அவை கூடிய சீக்கிரம் வெளியிடப்படுமென வழக்கறிஞர் மன்றம் தகவல் தந்துள்ளது. ஆயினும்



பாடத் திட்டத்திலுள்ள பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் கல்லூரி நூல் நிலையத்தில் ஒவ்வொன்றிலும் பல படிகள் வாங்கி வைக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. தவிரவும் ஒவ்வொரு வருடத்திலும் பாடக் குறிப்புகள் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு படிபெருக்கி மூலம் படிகள் எடுத்து மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களுக்கு இடையூறுகள் ஏதுமில்லை.

4. கோவையைப் பொறுத்தமட்டில், தனியார் கட்டிடத்தில் விடுதியொன்று உள்ளது. அதில் 30 மாணவர்களே தங்கி வருவதால் உணவு ஏற்பாடு செய்யப்படவில்லை. விடுதிகளில் உணவுச் செலவு மாணவர்களால் பிரித்து பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியது. மிகவும் குறைந்த அளவு மாணவர்கள் உள்ளதால் விடுதியில் தர ஏற்பாடு செய்தால், அவர்களின் செலவு கூடுவதால், அவர்கள் கையிலிருந்து அதிகம் பணம் செலவு செய்ய நேரும், அதிகமான மாணவர்கள் விடுதியில் சேர முன்வரும்போது உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

5. இப்பொழுதுள்ள நிலையில் மாணவர்களுக்கு வகுப்பறைகள் குறைவு, போதிய ஆசிரியர்கள் இன்மை, புத்தகங்கள் இன்மை, விடுதி வசதியின்மை போன்ற எந்தப் பிரச்சினையும் இல்லை.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் கல்லூரி நூல் நிலையத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 50,000 பெறுமான புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பு புதிதாக தோற்றுவிக்கப்பட்டதால், அதன் முதல் இரண்டு வகுப்புகளுக்குச் சட்டமல்லாப் பாடங்களுக்கு பாடத் திட்டங்கள் எற்கனவே உள்ள பல புத்தகங்களிலுமிருந்து எடுக்கப்பட்டுள்ளதால் இன்னமும் தனியாக பாடப் புத்தகங்கள் வெளி வரவில்லை. அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் பாடப் புத்தகங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. அவை கூடிய சீக்கிரம் வெளியிடப்படுமென வழக்கறிஞர் மன்றம் தகவல் தந்துள்ளது. ஆயினும் பாடத் திட்டத்திலுள்ள பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் கல்லூரி நூல் நிலையத்தில் ஒவ்வொன்றிலும் பல படிகள் வாங்கி வைக்கப்பட்டு மாணவர்களுக்கு

விநியோகிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஆனால் எப்போது அந்தப் புத்தகம் தயார் செய்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடிய சீக்கிரம் வெளியிடப்படு மென வழக்கறிஞர் மன்றம் நமக்கு தகவல் தந்து இருக்கிறது. வந்த உடன் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

**5. வரவு-செலவுத் திட்டம் 1986-87—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)**

**(அ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.**

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,78,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் குடிசை வாழ் மக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள சிறு கைத்தொழில்கள் உண்டாக்கித் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,78,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஆர். செங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் தொழிற்சாலைகளை அரசு நிறுவுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,78,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**(ஆ) கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,63,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,63,01,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் சம்பந்தமான குறிப்புகளை @ அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்பே வழங்கப்பட்டு இருக்கிறது. அவற்றை எல்லாம் நான் படித்ததாகக் கருதி குறிப்பேட்டில் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்ன பிறகு, நான் இறுதியாக என்னுடைய பதில் விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்

---

I @ 448-493 முடிய உள்ள பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1986 மே 3

களைச் சொல்ல முன்வந்துள்ளேன். இந்த ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் பல்வேறு நிறுவனங்கள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக சிட்கோவின் மூலம் நடைபெறும் தொழில்கள் அதிகமாக இருக்கின்றன. சிட்கோ நிறுவனங்களின் மூலம், ராணிப்பேட்டை, ஓசூர், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் பெரிய தொழில்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால், அரசு நடத்துகின்ற எந்த நிறுவனமும் மூடப்படுகின்ற சூழ்நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. இது பத்திரிகை மூலமாக அனைவரும் அறிந்த செய்தி. இதிலே 7½ சதவிதத்திற்கு வட்டிக்குக் கடனைக் கொடுத்தார்கள். அங்கேயிருக்கின்ற சேர்மன் அவர்கள் அதை வட்டிக் கடையாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 7½ சத விதம் வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டு, தொழில் நிறுவனம் தொடங்கியது. ஆனால் இப்போது 19 சதவிதம், 20 சதவிதம் என்ற அளவில் வட்டி வாங்கக்கூடிய நிலையில், சேர்மன் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். ஹிந்து பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஹிந்து பத்திரிகையில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது.

Many Entrepreneurs felt that the penal interest of 19.5 per cent which had been levied on them was exhorbitant considering the earlier rate of 11.5 per cent agreed upon.

அந்த அளவிற்கு 19.5 சதவிதம் வட்டி ஆக்கினால் எந்த ஒரு நிறுவனத்தை நடத்த முடியும்? வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்றால், தொழில்கள் அதிகமாகத் துவங்கப்படவேண்டுமென்று தொழிற்துறையிலே மாநில அரசும் மத்திய அரசும் உதவிகள் செய்துகொண்டு வருகின்றன. அதைத் தடுக்கின்ற முறையில்தான் இந்த சேர்மன் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே முன்னேற்றம் அடையுமா என்பது தான் கேள்விக் குறி. நாடு வாழ வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தலையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 மே 3] [திரு. மா. சுந்தரதாஸ்]

அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு இதையெல்லாம் கொண்டு வருவதில்லை. அவர்களாகவே காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ராணிப்பேட்டையில் அனைத்துத் தொழிற்கூடங்களையும் மூடுகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ராணிப்பேட்டையிலும், கோயம்புத்தூரிலும் தொழிற்பேட்டைகள் மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி 19.5 சதவிதம் பெனல் இன்ட்ரஸ்ட் வாங்கினால் யாரால் எப்படித் தொழில்களை நடத்த முடியும்? 7.5 சதவித வட்டிக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு, வட்டிக்கு மேல் வட்டி, அதற்குப் பெனல் இன்டரஸ்ட் என்று போடுவதன் காரணமாக தொழிற்சாலைகள் மூட வேண்டிய நிலையில் இன்று இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது டான்சியிலே என்ன நிலைமை இருக்கிறது? உங்களுடைய பாலிசி நோட்டிலே சொல்லியிருக்கிறீர்கள். அனைத்து நிறுவனங்களும், நிறைய டான்சி நிறுவனங்களும் மூடப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. அரசாங்கம் ஒரு தொழிற்சாலையைக் கொடுத்தால், அதை அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சரியாக செயல்படாமல், மூடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் தனியார்கள் நடத்துகின்ற அரசினுடைய பாங்கின் மூலமாக, சிட்கோ மூலமாக, இல்லையென்றால், 'டிக்' மூலமாக கடன் வாங்கி அங்கே நடத்துகின்ற அதையும் நீங்கள் மூட நினைத்தால் இந்த நாட்டினுடைய நிலைமை என்ன?

டான்சி நடைபெறவில்லை என்றால், அதற்குக் காரணம், ஒரு ஆர்டர் கொடுக்கப்போனால், சில சமயத்தில் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தங்களுக்கென்று சில நிறுவனங்களை வைத்திருக்கிறார்கள். நீங்கள் அங்கு சென்று வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். ஆக வருகின்றவர்கள் அங்கே வாங்க முடியாத காரணத்தால் நிச்சயமாக அங்கே நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லி, இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ரிட்ரென்ச்மெண்ட் செய்யப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக அரசு நடத்துகின்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில், அது நஷ்டத்தில் இயங்குகிறது என்று சொல்கிறார்கள். இதுபோன்று ஓசூர், ராணிப்பேட்டை, கோயம்புத்தூரில் உள்ள சிக் நிறுவனங்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1986 மே 3

களை மூடிவிட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் தவிப்பார்கள். அவர்களுக்கு பண உதவி செய்தவர்களின் கதி என்ன? அதேபோன்று சிக் நிறுவனம் என்று சொன்னால், நிச்சயமாக டிட்கோ எந்தவித உதவியும் செய்வதில்லை. அதற்கு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

ஒரு பத்திரிகையிலே அதற்கு ஒரு குறிப்பு வந்திருக்கிறது. The sick units which are in need of finance, do not get any co-operation from SIDCO which even refused to recognise a unit as sick, it is alleged. According to the owners, it is actually SIDCO's procedures which make a unit sick in the first place. அந்த அளவிற்கு மத்திய மாநில அரசுகள் ஒரு சிக் யூனிட் என்று சொன்னால், அந்த இண்டஸ்ட்ரீஸ்களை மூடிவிடலாமா என்கின்ற நிலை.

ஆனால் சிட்கோ நிறுவனம் அந்தத் தொழிற்பேட்டையை வேறு ஒருவருக்குக் கொடுக்க முடியுமா அல்லது அதை மூட முடியுமா என்று பார்க்கிறது. அந்த சிக் யூனிட்டுக்கு ஏதாவது மானியம் கொடுத்து ஊக்குவிப்பதாக இல்லை. அங்கே இருக்கிற சேர்மன் யார் என்று எனக்குத் தெரியாது. அவருடைய நிலைமையைப் பார்த்து The High Court passed a stricture on SIDCO Chairman, நான் சொல்லவில்லை. ஹைகோர்ட் என்று சொல்லியிருக்கிறார். நான் சொல்லவில்லை. ஹைகோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரியைப் பழி வாங்கியிருக்கிறார். அந்த விவரம் எல்லாம் அதிலே இருக்கிறது, நான் அதை வாசித்து என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை. The High Court passed a stricture on SIDCO Chairman, என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற அரசாங்க ஊழியரை பழிவாங்கியிருக்கிறார் என்று உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ட்ரிக்ச்சர்ஸ் பாஸ் பண்ணியிருக்கிறார்கள் என்றால் எந்த அளவுக்கு அவர் நடந்திருப்பார்? ஆகவே உடனடியாக அமைச்சர் அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனித்து அந்த சேர்மன் கையில் இருப்பதை எடுத்து நல்ல முறையிலே அது செயல்படச் செய்யவேண்டும். அங்கே 19 சதவிகிதம் அல்லது 20 சதவிகிதம் என்று கொள்ளையடிக்கிற முறையில் வட்டிக்காக நடத்தாமல்



1986 மே 3] [திரு. மா. சுந்தரதாஸ்]

அந்த நிறுவனத்திலே கடன் வாங்கியிருப்பவர்கள் நியாயமான முறையிலே ஒப்பந்தப்படி அந்தக் கடன்களை வசூலிப்பதற்கும் வட்டியை வசூலிப்பதற்கும் நேரடியாக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து Rural Industries—Creation of job opportunities. என்று இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 200-க்கும் மேலான கேஷ்யூ தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் இன்றைக்கு மூடப்படக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நான் இந்த அரசைக் குறை சொல்லவில்லை. Cashew Corporation of India. இல் கேரள அதிகாரிகள் இன்றைக்கு டாமினேட் செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஸ்டேட்டிற்கு Cashow Corporation of India. எந்தவிதமான கச்சாமுந்திரியையும் கொடுக்கவில்லை. நமக்கு ஒரு அங்கத்தினர் வேண்டுமென்று கேட்க இருப்பதாக முன்னாள் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு இங்கே விடை அளித்தார்கள் Cashew Corporation of India. என்பது கேரள அதிகாரிகளுடைய டாமினேஷனில் செயல்படுவதால் தமிழகத்திலே இருக்கிறவர்களுக்குக் கச்சா முந்திரி கிடைப்பதில்லை. அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிறது. ஆகவே தமிழ் நாடு அரசு தமிழ்நாட்டிற்கு என்றே தனியாக Tamil Nadu Cashew Corporation. என்ற ஒரு கார்ப்பரேஷனை உருவாக்கக்கூடாதா? நம்முடைய பாரஸ்டிலேயே கச்சா முந்திரி கிடைக்கிறது. அதைக்கூட கேரள அதிகாரிகள் ஏலம் எடுத்து வாங்கிக்கொண்டு அங்கே போய் கேரளாவிலே வேலை செய்து அங்கிருந்து எக்ஸ்போர்ட் செய்கிறார்கள். நமக்கு இம்போர்ட் லைசென்ஸ் கிடைக்காதா? தமிழ் நாட்டிற்கு என்று தனியாக—Cashew Corporation of India.ன் தயவு இல்லாமல் தமிழகத்திற்கு என்று Tamil Nadu Cashew Corporation. என்ற ஒன்று உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற கேஷ்யூ யூனிட் தொழிற்சாலைகள். அப்போது சிறப்பாக நடைபெறும். ஆகவே ஒரு கார்ப்பரேஷனை

[திரு. மா. சுந்தரதாஸ்] [1986 மே 3

உருவாக்கி தமிழகத்திலே கிடைக்கிற கச்சா முந்திரியை ஏலம் விடாமல் வாங்கி நேரடியாகவே இங்கே இருக்கிற தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து நாமாகவே இங்கிருந்தே எக்ஸ்போர்ட் செய்ய முடியும். தேவைப்படுகிற கச்சா முந்திரியை இம்ப்போர்ட் செய்ய முடியும். ஆகவே Cashew Corporation of India. ஐ நம்பி எந்தவித பிரயோசனமும் இல்லை. அதை நம்பியிருந்தால் பல ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழக்க நேரிடும். ரூரல் இண்டஸ்ட்ரியின் முக்கிய நோக்கமே கிராமத்திலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பதும் கிராமங்களிலே தொழிற்சாலைகள் வரவேண்டும் என்பதும் ஆகும். ஆகவே தமிழ்நாட்டிற்கு என்றே ஒரு கார்ப்ரேஷனை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டிக் என்று சொல்லப்படுகிற Tamil Nadu Industrial Investment Corporation. நிறுவனம் நல்ல முறையிலே கடன் கொடுக்கிறது. சிரித்துக் கொண்டே கடன் கொடுப்பது டிக்தான். ஆனால் இன்றைக்கு நடப்பது என்ன? நல்ல முறையில் அது செயல்படவில்லை. காரணம் அங்கே ஒருவர் 2 லட்சம் அல்லது 3 லட்சம் கடன் வாங்கி விட்டால் அவருடைய ஓர்க்கிங் கேபிடல் இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. வங்கியில் சென்றால் அவருடைய வஸ்துக்களை ஜாமீன் வாங்கிக் கொள்கிறார்கள். நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள், ஜாமீன் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. டிக் ஒருவருக்கு 5 லட்ச ரூபாய் கடன் கொடுத்தால், ஒரு லட்சம் ஓர்க்கிங் கேபிடல் கொடுத்தால், என்ன ஆகியிருக்கிறது? 5 லட்சம் ஒருவருக்குக் கொடுத்து விட்டால் 6 மாதம் வட்டி கொடுக்க வேண்டாம், 1½ ஆண்டுக்குப் பணம் கட்டவேண்டாம் என்று சொல்கிற கன்சேஷன் மட்டும் போதுமா? ஒரு லட்சம் கடன் கொடுத்தால் அது இயங்குகிறதா இல்லையா என்று பார்ப்பது டிக்கின் கடமை. மேலும் அவர்களைப் பொறுத்தவரையில் லோன் கொடுத்தால் மின்சாரம் கிடைப்பதில்லை. 4 ஆண்டுக்காலம் 5 ஆண்டுக்காலம் ஆகியும் மெஷின் வாங்கிய பிறகும் மின்சார சப்ளை கிடையாது. ஒரு இண்டஸ்ட்ரிக்கு லோன் கொடுத்தால் அது நடக்கிறதா அதற்கு மின்சாரம் கிடைத்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.



1986 மே 3] [திரு. மா. சுந்தரதாஸ்]

இந்தப் பொறுப்புக்களையும் 'டிக்' நிறுவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். எக்ஸ்போர்ட்டிற்கான பொறுப்புக்களையும் டிக் நிறுவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். லோன் கொடுப்பதை மட்டும் மேற்கொண்டால் போதாது. அப்படிப்பட்ட பொறுப்புக்களையும் எடுத்துக்கொண்டு செய்தால் நல்லமுறையில் அது நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கயிறு இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டம்தான் முக்கியமான இடத்தை வகிக்கிறது. மத்திய அரசானது எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கொல்லங்கோடு என்ற கிராமத்தை மாடல் வில்லேஜாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் உள்ள 20 இலட்சம் ரூபாய் தேங்கிக்கிடக்கிறது. அந்தத் தொகையில் அரிசன மக்களுக்குப் பள்ளிக்கூடம், வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. இதைப் பல்வேறு அதிகாரிகள் பார்க்கிறார்களே தவிர, அது சரியாகச் செய்யப்படவில்லை. கயிறு விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கிறது. எனவே, மாநில அரசு உடனடியாக இந்தியாவின் வடக்குப் பகுதிகளில் மார்க்கெட் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கிராமங்களில் உள்ள மக்கள் உழைத்து கயிறு திரித்து வைத்திருந்தால், அதை வைப்பதற்குக்கூட இடமில்லை என்று சொல்கிறார்கள். எனவே, கயிறு திரிக்கின்ற தொழிலாளர்களுக்கு வாழ்வு கொடுக்கக்கூடிய முறையில் இந்தியாவில் உள்ள அனைத்துப் பகுதிகளிலேயும் அதற்கான ஸ்டோரைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிப்காட் நிறுவனம் வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. பத்மநாபபுரம் என்ற இடத்தில் தக்கலைக்கு அருகில் சிப்காட்டினுடைய இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே அதற்கான இடம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னின்று சிப்காட்டினுடைய இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை பத்மநாபபுரத்தில் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, சிறுதொழில் பற்றிய மானியக் கோரிக்கையின் கீழ் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் இயங்குகின்ற இந்த அரசு சிறுதொழில் துறையைப் பொறுத்தவரையில் இரண்டு நோக்கங் களைத் தலையாய அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை அளித்திருக்கிறது. கிராமப்புறங்களிலே தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும், கிராமப்புறங்கள் வளர்ந்தால்தான் நகரங்கள் வளர முடியும், மக்கள் நலம் பெற முடியும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமப்புறத் தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டுமென்ற காரணத்திற்காகவும், அதேபோல, கிராமப்புறத்தில் இருக்கின்ற படித்த மற்றும் படிக்காத வேலையில்லாதவர்களுக்கு உரிய நியாயமான வேலைகள் வழங்கப்பட வேண்டும், அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயும் தமிழக அரசு பல்வேறு நிறுவனங் களைத் துவக்கி இருக்கிறது. குறிப்பாக தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ் நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் என்று இப்படிப் பல்வேறுபட்ட நிறுவனங்களை, அமைப்புகளை உருவாக்கி, அதன் மூலம் கிராமப்புறங்களிலே தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டுமென்ற உன்னத நோக்கத்திற்காக, இலட்சியத்திற்காக, அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவை நிறைவேற்ற வேண்டு மென்பதற்காக புரட்சித் தலைவரவர்களின் அரசு, அவர்களின் கீழ் இயங்குகின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு சிறுதொழில் அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தை முன்மொழிந்திருக் கிறார்கள்.

அந்த அடிப்படையிலே நாம் பார்ப்போமேயானால், தமிழக அரசு ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மத்திய அரசு அறிவித்த பின்தங்கிய வட்டங்களைத் தவிர மேலும் 30 வட்டங்களை மாநில அரசு பின்தங்கிய வட்டங்களாக அறிவித்து தொழில்



முனைவர்களை ஊக்குவித்து இருக்கிறார்கள். மற்றும் விற்பனை வரிச் சலுகைகள், கடன் வழங்குவதில் சலுகைகள், வட்டிகளைத் தருவதில் சலுகைகள் போன்ற சலுகைகளை மாநில அரசு அதிகப்படுத்தி சிறுதொழில் தொடங்கும் அந்த முனைவர்களை ஊக்குவித்திருக்கிறார்கள். அதை நான் முதற்கண் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

இன்றையதினம் அந்த அடிப்படையிலே நாம் பார்ப்போமே யானால் 1977 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்கள் என்று கணக்கு காட்டப்பட்டிருப்பவை 18,781. அதே சிறுதொழில் வளர்ச்சி 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எடுத்த கணக்கின்படி 49,920 ஆக, ஏறத்தாழ 30,000 சிறுதொழில்கள், ஏழு ஆண்டுகளில் அதிகப்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு இவர்கள் கொடுத்த ஊக்கம், அடிப்படை மாமருந்தாக, அந்தத் தொழில் முனைவர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது.

அதே போல், நீங்கள் பார்ப்பீர்களானால், 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 1984 ஆம் ஆண்டில் 50,000 ஆக பதிவுசெய்யப்பட்ட சிறுதொழில்களின் எண்ணிக்கை 70,981 ஆக, உயர்ந்திருக்கிறது. இரண்டு ஆண்டு களில், ஏறத்தாழ 20,000 அரசின் விடாமுயற்சியினால், ஊக்கம் அளிக்கின்ற தன்மையில் உயர்ந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்வோமானால், சிட்கோ நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம், 1985-86 ஆம் ஆண்டு கட்டிய தொழில்கூடங்கள் 96, 1986-87-ல் கட்டப்பட இருக்கிறவை, தேனி, திருச்சி, வாலாஜா, தஞ்சாவூர், முதலிய இடங்களில், 98 தொழில் கூடங்களைக் கட்டுவதற்கு ரூ. 2·13 கோடி ஒதுக்கியிருப்பது என்பது இந்தக் கோரிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக் கிறது. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, நான் இங்கே குறிப்பிட்டு கூறிட ஆசைப்படுகிறேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் மூலம் அரசு நல்ல திட்டங்களை எல்லாம், சலுகைகளை எல்லாம் வழங்கியிருக்கிறது.

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1986 மே 3

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மருத்துவ வல்லுநர்கள், ஏழைச் சமுதாயம் மருத்துவத்தைப் பெற்று, சுகாதார வசதியோடு, வாழ்வதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மருத்துவத் தொழிலை நல்ல முறையில் மேம்படுத்த வேண்டும், எளிய முறையில், ஏழை எளிய மக்களுக்கு சுகாதார வசதி கிடைத்திட வேண்டுமென்பதற்காக, புரட்சித் தலைவர் அரசு தொழில் வல்லுநர்களுக்குக் கொடுத்து வந்த கடன் தொகை ரூ. 2 இலட்சமாக இருந்ததை, இப்பொழுது, ரூ. 15 இலட்சமாக உயர்த்தி இருக்கிறார்கள். அதையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் இந்த இடத்தில் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய அன்புசால் சகோதரர் சுந்தரதாஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முந்திரித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மத்திய அரசு உரிய பிரதிநிதித்துவத்தைத் தமிழகத்திற்கு வழங்கவில்லையென்று சொன்னார்கள், நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு நீங்களும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக சில தகவல்களைச் சொல்கிறேன். அதை நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவர்கள் சொல்லிய நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ்நாடு நிறுவனங்கள் மூலம் கடன் வழங்குவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அதைக் கோடிட்டுக் காட்ட நான் ஒருசில கருத்துக்களைச் சொன்னால், அது தவறாகாது என்று கருதுகிறேன். மரியாதைக்குரிய மறைந்த பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு உன்னதமான திட்டத்தை நாட்டிற்கு தமிழகத்திற்கு அளித்தார்கள். வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்பதுதான் அந்தத் திட்டம். 1—4—1985 முதல், 31—12—1985 வரை, குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிற, புள்ளி விவரத்தைப்



1986 மே 3] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

பற்றி மட்டும் சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால், அதை இந்த மாமன்றத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 1985-86 ஆம் ஆண்டில், வேலையில்லா பட்டதாரிகளுக்கு, அல்லது வேலையற்றிருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்குத் தமிழக அரசின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 19,212. இலக்கு நிர்ணயிக்கப்பட்டது 18,100. மொத்தம் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 19,212. வந்த விண்ணப்பங்கள் 86,128. அதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஒதுக்கீடு செய்திருக்கிற தொகை ரூ. 39,93,50,000 என்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அதில், நீங்கள் அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரிந்துரை செய்து அனுப்பிய விண்ணப்பங்களில் 19,212 மனுக்களை வங்கிகள் ஏற்றுக் கொண்டதாக ஒப்புதல் அளித்தவை 1,894. அந்த 1894-ல் இதுவரை வழங்கப்பட்டிருப்பது 578. வழங்கப் பட்டு இருக்கின்ற பணம் 1,12,13,000 ரூபாய். இதனை மரியாதைக் குரிய திரு. சுந்தரதாஸ் அவர்களும் அவர்களைச் சார்ந்த மத்தியிலே ஆளுகின்ற பொறுப்பு ஏற்றிருக்கும் மரியாதைக்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களும் சிந்தித்து பாரக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரூபாய் 40 கோடி ஒதுக்கீடு பண்ணியதில் 1 கோடியே 12 இலட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட பணம் 106 சதவிகிதம். ஒப்புதல் அளிக்கப்பட்டது 10 சதவிகிதம். கொடுக்கப்பட்ட பணம் 3 சதவிகிதம். இன்னும் இதைவிட துல்லியமாக ஒரு புள்ளிவிவரத்தை என்னால் சொல்ல முடியும். அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த அளவிற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், சிறு தொழில் முனைவோர் அல்லது வேலையில்லா பட்டதாரிகள் விஷயத்தில் அக்கறை காட்டாமல் அல்லது அலட்சியப் போக்கில் அல்லது மெத்தனமாக தங்களுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டகடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரை நீங்கள் நன்கு அறிவீர்கள். அது விவசாயத்தை நம்பியிருக்கின்ற பகுதி. அங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற உதவி செய்யப்பட வேண்டிய இலக்கு ஆயிரம். சிறுதொழில் முனைவோருக்கு

கொடுக்கப்படவேண்டும் என்று அரசு பரிந்துரை செய்திப்பது 1,140. வங்கி ஒப்புதல் பெற்றது 52 பேர்களுக்கு. ஆனால் கொடுக்கப்பட்டிருப்பது 17 பேர்களுக்கு. இதைவிட ஒரு படி மேலே போனால் புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். அங்கே இலக்கு 500-க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்டு இருப்பதோ ஒருவருக்கு. ஒப்புதல் கொடுக்கப்பட்டிருப்பது மூன்று நபருக்கு. இவற்றை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைவிட மோசமாக இருப்பது திருச்சி செங்கை மாவட்டத்தில் 1,200, 15,000 என்று இலக்கு இருந்தும் ஒருவருக்கு கூட வழங்கப்படவில்லை என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட போக்கிலேதான் இன்றையதினம் தேசிய வங்கிகள் இருக்கின்றன. ஆனால் இந்தியா இங்கு ஒரு நாடு என்று நாம் சொல் அளவிலே சொல்லிக்கொண்டு இருக்கிறோமே தவிர செயல் அளவில் தமிழகம் ஒரு தீவாகத்தான் மத்திய அரசைச் சேர்ந்த நிறுவனங்கள் ஏற்று இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். இன்னும் ஒரு கருத்து. . . . (மணியடிக்கப்பெற்றது).

என்னுடைய தொகுதியைப் பற்றி. இந்த சீரிஸ்லே இப்போதுதான் நான் முதன் முதலில் பேசுகிறேன். தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனம் என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக அரசின் 4½ கோடி மக்களுக்காக சில நல்ல திட்டங்களை எல்லாம் தீட்டி செயல் பட்டுக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட இந்த அரசு விடுபட்ட சில நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இந்த டான்சி நிறுவனத்தை பொறுத்தவரையில் 1965-ல் துவங்கப்பட்டதாக குறிப்புகள் சொல்கின்றன. 1985-86-ல் உற்பத்தி 24 கோடி என்றும் இழப்பு 4 கோடியே 20 இலட்சம் என்றும் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறுகின்ற காரணம் ஆய்த்தீர்வை சுமை, வட்டிச்சுமை, பழைய இயந்திரங்கள், மிகையான தொழில் பணியாளர்கள் என்று காட்டியிருக்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரை உண்மையான காரணமாக படுவது அங்கே சரியான நிர்வாக அமைப்பு இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.





இன்றையதினம் நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். பொது மக்களின் நலன் கருதி பல்வேறுபட்ட நிறுவனங்களில் இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளை அதன் தலைவர்களாக நிர்வாக இயக்குநர்களாக நியமித்து நிர்வாக அமைப்பை மாற்றியமைத்திருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிர்வாகத் துறைக்கு தம்மை அர்பணிந்து கொண்டிருக்கிறார்கள். வாய்ப்பை தந்திருக்கிறார்கள். நல்ல முறையில் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற அக்கறையோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த டான்சியை பொறுத்தவரை தொடர்ந்து வருகின்ற நட்டத்திற்கான காரணம் நிர்வாக அமைப்புதான் என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதில் இருக்கின்ற அதிகார பெருமக்களை மாற்றி, மக்கள் பிரதிநிதித்துவம் உள்ளவர்களை, பொதுத்தொண்டில் ஈடுபாடு உள்ளவர்களை, மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களை அந்தத் துறை தலைவர்களாக நிர்வாக இயக்குநர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து எனது தஞ்சை மாவட்டத்தைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மலைமகள் உலர்த்தும் மாநெடுங் கூந்தலாம் காவிரிப்படுகையில் கன்னல் தமிழ் பேசித் செந்நெல் பயிராக்கும் சுந்தரத் தமிழர்களாகிய நாங்கள் ஆறு மாதம் சோம்பேறித் தமிழர்களாக வாழ வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக சிறு தொழில் துறை அமைச்சர் அவர்களை ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம்—தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தென்னை அதிகமாகப் பயிரிடுகிற மாவட்டம். நெல்லுக்கு அடுத்தபடியாக விவசாயம் செய்யப்படுவது தென்னையைத்தான். ஆகவே அங்கே தென்னையின் உப பொருட்களை வைத்துக்கொண்டு தென்னை சார்புத் தொழில்களை நீங்கள் துவக்கலாம். அப்படித் துவக்கினால் சேற்றில் கால் மிதித்து செந்நெல் விளைவிக்கு

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1986 மே 3

நாற்றெடுத்து பயிராக்கி நல்ல வளம் கொழிக்கும் தஞ்சை விவசாயிகளுக்கு ஆறு மாதத்திற்கு மாற்றுத் தொழிலாக அது அமையும் என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தென்னையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் காயிர் மேட்ரஸ், மிதியடிகள், கயிறுகள் போன்ற பொருட்களுக்கு மேல்நாடுகளில் அதிகப்படியான கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் தென்னை சார்புத் தொழில்களைத் துவங்கிக் கொடுக்கவேண்டும். சென்ற ஆண்டுகூட மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சைக்கு வந்திருந்தார்கள். பட்டுக்கோட்டைக்கு வந்திருந்தார்கள். இரண்டு நாள் கருத்தரங்குகள் நடந்தன. மற்றும் பல அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். தென்னை சார்புத் தொழில் பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கின் முடிவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பத்து கோடி ரூபாய் அளவில் தொழில் பேட்டை துவங்கலாம் என்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றிப் பரிசீலனை செய்து எங்களுக்கு அதைத் துவக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

லேட்டஸ்ட் டெக்னாலஜியாக தென்னையின் கொட்டாங் குச்சியிலிருந்து பேட்ரி செல்லுக்குத் தேவையான கார்பன் தயாரிக்கலாம் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள் கோவையில் இருக்கிற தொழில் வல்லுநர்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுகுறித்து பரிசீலனை செய்து பட்டுக்கோட்டைப் பகுதியில் 10 கோடி ரூபாய் செலவில் தென்னை சார்புத் தொழிலை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பட்டுக்கோட்டையில் அமைந்திருக்கிற நார்த்திக் கோட்டையில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் பாட்சித் தலைவர் அவர்கள் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் வந்து உப்புத் தொழிலைத் துவக்கி வைத்தார்கள். அங்கே



1986 மே 3] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

ஏறத்தாழ இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களில் உப்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த உப்புத் தொழில் இன்றையதினம் நலிந்த நிலைமையில் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து உப்பு சார்ந்த சார்பு தொழிலைத் துவக்கினால் அதாவது காஸ்டிக் சோடா போன்றவற்றைத் தயாரிக்கின்ற சார்புத் தொழில்களைத் துவக்கினால் அந்தத் தொழிலாளர்களின் உப்புக்கும் நல்ல விலை கிடைக்கும். அவர்கள் வாழவும் வழி கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தம்பிக்கோட்டையில் இருக்கிற உப்புத் தொழிலகத்திற்கு ஒரு தனியார் நிறுவனம் ஏறத்தாழ 20 லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுக்காமல் ஐந்து ஆண்டுகளாகக் கட்டிக் கழித்து வருகிறார்கள். கோத்தாரி நிறுவனம் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து அந்த நிறுவனத்திடமிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுத் தந்தால் நல்லது. அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்குச் சம்பளம் கூட கொடுக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். எனவே அதைப்பெற்றுத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு கருத்தைச் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில்—எங்கள் தொகுதிக்கு அடுத்த தொகுதியான பேராவூரணியைப் பொறுத்தவரையில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் மானியம் அதாவது சப்சிடி தொழில் முனைவோர்களுக்கு 15 சதவீதம் கொடுக்கப்படுகிறது. பேராவூரணி நல்ல வளமான தொகுதி. தென்னை மரங்கள் நிறைந்த பகுதி. விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற பகுதி. அதேபோல் ஒரத்த நாடு பகுதியும் காவிரியின் துவக்கம். கல்லணையின் துவக்கம் ஒரத்த நாடு மற்றும் திருவோணம் பகுதிகளாகும். அந்தப் பகுதியில் தரப் படுகின்ற மானியம் 15 சதவீதமாக இருக்கிறது. கடைமடை பகுதி பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற பட்டுக்கோட்டைக்கு 10 சதவீதம்தான் அறிவித்திருக்கின்றார்கள். எனவே அருள்

கூர்ந்து அந்தப் பகுதிக்கும் 15 சதவிதம் மானியம் தருகிற வகையில் மாற்றி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஊரகத் தொழிலில் நல்ல திட்டங்களைப் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், செயல்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த பாராட்டுக்களை சொல்லிக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

* திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களை கூற விழைகின்றேன். ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான அடிப்படைத் தேவையாக இருப்பது இப்படிப்பட்ட சிறு தொழில்கள் தான் என்பதற்கு உதாரணமாக ஜப்பானும் ஜெர்மனியும் திகழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையிலே அதை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசும் 1977-லே 18,789 என்று மட்டுமே இருந்த சிறுதொழில்களை 70,983 ஆக அதிகரிக்கக்கூடிய அளவுக்கு கொண்டு வந்திருப்பதை பாராட்ட விழைகின்றேன். அதேசமயத்தில் மின் அணு தொழிலிலே 1980-லே 221 என்று மட்டுமே இருந்ததை இன்றைக்கு 1986-லே 462 ஆக அதிகரித்து மாற்றியிருப்பதை பாராட்டுவதிலே நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுதொழில்கள் பற்றி சொல்லும்போது, அண்ணா மாவட்டமானது மிக முக்கியமான மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துக் கூறத்தான் வேண்டும். தோல் பொருள்கள் செய்யக்கூடிய தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, பட்டுத் தொழில் செய்யக்கூடிய தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, கூட்டுறவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற வேறு சிறுதொழில்களானாலும் சரி, முக்கியமாக முதன்மையாக இருக்கக்கூடிய மாவட்டம் அண்ணா மாவட்டம் தான். தோல் தொழில்கள் துவங்கப்பட்டிருக்கக்கூடிய இடமே முதன் முதலாக திண்டுக்கல், ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு என்கிற சில இடங்கள் தாம் என்று





சொல்ல வேண்டும். அந்த வகையிலே திண்டுகல்லானது இத் தொழிலில் மிக மிக முக்கியமான இடமாக இருக்கிறது. அங்கு ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அரசு கூட வண்ணத் தோல் செய்கின்ற ஒரு நிலையத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. இவ்வளவு சிறப்பாக இயங்கும் தோல் தொழிலினால் ஏற்படும் மற்றொரு பாதிப்பையும் என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அந்தத் தோல் தொழிலினால் வெளியேற்றப்படும் கழிவு நீரால் எந்த அளவுக்கு அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்தால் உண்மையிலேயே மிகமிக வருந்தக் கூடிய சூழ்நிலைதான் அதிலே இருக்கிறது.

திண்டுக்கல்லினுடைய எந்தப் பகுதியிலே நுழைந்தாலும் சரி அந்தப் பகுதிகளெல்லாம் அந்தக் கழிவு நீரால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் உவர் நிலமாக ஆகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் கூட சொல்லப்போனால், அங்கே இருக்கக்கூடிய குடிதண்ணீர் எல்லாம் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. அங்கே எந்த இடத்தில் கிணற்றைத் தோண்டினாலும் அதிலே வரக்கூடிய தண்ணீர் மிகவும் மோசமான உப்பு நீராக மாறக்கூடிய சூழ்நிலை தான் இன்றைய தினம் அங்கே ஏற்பட்டு, அதனால் கடுமையான அச்சத்தைத் தரக் கூடிய ஒரு அபாயம் தான் அங்கே இருக்கிறது.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே 10 ஆம் பக்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் ". . . அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள சிறு தோல் பதனிடுபவர்கள் பொது வசதி கழிவு நீர் அகற்றும் மையங்கள் அமைக்கும் நோக்கத்துடன் தொழிற் கூட்டுறவு சங்கங்களை அமைக்கத் தாங்களாகவே முன் வந்துள்ளனர்." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த நிலையிலே அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலுரையிலே விளக்கமாக சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சொல்லவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1986 மே 3

அது மட்டும் அல்ல இன்னும் கூட சொல்லப்போனால் இங்கு இருக்கக் கூடிய அறிக்கையிலே 34 ஆம் பக்கத்திலே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய தொழில் நுணுக்க அறிக்கை தயாரிக்கும் மதிப்பில் 80 சதவிகிதம், அதாவது ரூ. 25,000க்கு மிகாமல் தனிப் பட்ட தோல் தொழிலதிபர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப் படும்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களை கேட்கின்ற நோக்கிலே அவர்கள் அந்த 25 ஆயிரம் ரூபாய் என்பது மிக மிகக் குறைவு என்று சொல்லுகிறார்கள். அந்த 80 சதவீதம் என்று வைத்தால் அது பல லட்சங்களை செலவிடக் கூடியதாக உள் அடக்கியதாக இருக்கும். ஆகவே தான் அதை உடனடியாகச் செய்ய முடிய வில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதற்கு எதாவது மாற்றங்களைக் கொடுத்து, உரிய முறையிலே நடை முறைப்படுத்த வேண்டும் என்று இந்த நோக்கிலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அங்கே வன்னைத் தொழில் மையம் ஒன்றும் அரசால் துவங்கப் பட்டிருக்கிறது. ஆனால் திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்தத் தொழிலிலே தோலை மட்டும் தான் பதப்படுத்தி அவற்றை அவர்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். விற்பனையும் உள்ளூரிலே செய்கிறார்கள். ஆனால் இன்னும் அதனுடைய பினிஷ்டு பிராடக்ட்ஸ் என்று சொல்லுவார்களே, அப்படிப்பட்ட பினிஷ்டு பிராடக்ட்ஸாக இருக்கக்கூடிய செருப்புகள், பர்சுகள், கை பைகள், தோல் ஆடைகள் போன்றவற்றையெல்லாம் கூட தயாரித்து அவற்றையெல்லாம் நல்ல முறையிலே ஏற்றுமதி செய்யலாம், அதற்கு அங்கிருப்பவர்களும் நல்ல முறையில் செய்வார்கள், ஆகவே அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நோக்கிலே நான் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் சிறு தொழில்களின் மூலமாக அரசுக்கு அதிகமான பொருளை ஈட்டக்கூடிய தொழில் எது என்று சொல்ல வேண்டுமானால் அது நிச்சயமாக தோல், மற்றும் தோலினால் செய்யக் கூடிய பொருள்களே ஆகும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1986 மே 3] [திரு. ஆ. பிரேம்குமார்]

அடுத்து இதில் மிக முக்கியமாக சொல்லவேண்டும் என்று சொன்னால் லேக் ஆப் டெக்னிஷியன்கள் என்று சொல்லுவார் களே அந்த வகையில் இந்தத் தோல் தொழிற்சாலைகளில் பணி புரியக்கூடிய டெக்னிஷியன்கள் மிக மிக குறைவாக இருக் கிறார்கள். அப்படி அந்த தோல் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடிய அந்த டெக்னிஷியன்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளத் தைப் பார்த்தால் ஆயிரம் ரூபாயிலிருந்து 7 ஆயிரம் ரூபாய் வரை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லிலே இன்னும் மிகமிக அதிகமாக அவர்கள் தேவைப்படுகிறார்கள். 500 பேர்களுக்கு மேல் 2 ஆயிரம் வரையில் அவர்கள் இருந்தாலும் கூட அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்று அங்கே இருக்கக்கூடிய தொழில் வல்லுநர்கள், தோல் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அந்த டெக்னிஷியன்களுக்கு என்று அறிவிக்கப்பட்டி ருக்கிற டிரைனிங் கோர்ஸானது இங்கே சென்னையில் மட்டும் தான் இருக்கிறது. வருடா வருடம் 40 பேர்களை மட்டும் தான் அதிலே சேர்க்கிறார்கள்.

இன்றைக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கக் கூடிய சூழ்நிலையில் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். அல்லது திண்டுக்கல்லிலே அந்த டெக்னிஷியன்ஸ் கோர்ஸை ஆரம்பிக்க வேண்டும். அந்த வகையிலே அந்த டெக்னிஷியன்களுடைய குறைபாட்டை தடுக்க முடியும். வேலை இல்லாத் திண்டாட்டத்தையும் போக்க முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதிலே கூட இங்கே இருக்கின்ற டெக்னிஷியன்கள், அதிகப்படியான சம்பளம் கிடைக்கிறது என்ற காரணத்திற்காக வெளிநாடுகளுக்குக் கூட சென்று விடுகிறார்கள். அவைகளையெல்லாம் ஆராய்ந்து உடன டியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குறையை நிறைவு செய்யும் வண்ணம் திண்டுக்கல்லிலே அந்த கோர்ஸை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது. இந்தத் தோலை பதனிட்ட பிறகு, செம்மறியாட்டின் முடியிலே என்ன செய்கிறார்கள் என்று சொல்வோமேயானால் வெறும் உரத்திற்கு மட்டும் தான் பயன்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1986 மே 3

(முற்பகல் 11-00)

படுத்துகிறார்கள். இந்த முடியை வைத்து கால்மிதிகள், கார்ப் பெட்டுகள் போன்றவற்றை தயார் செய்து நல்லமுறையில் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Tools and Dyes. என்ற நிறுவனத்தை திண்டுக்கல் பகுதியில் அரசாங்கத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள். தமிழ் நாட்டில் மிகச் சிறப்பான நிறுவனம் என்று சொல்லக்கூடிய அளவிலே அந்த நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பூட்டுத் தொழிலுக்கு தேவையான உதிரிப் பாகங்களையும், சைகிள்களுக்குத் தேவையான மெஷினரி பாகங்களையும் அவர்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் பயிற்சி பெற மூன்று ஆண்டுகள் கோர்ஸ் கூட ஒன்று இருக்கிறது. அதிலே படிக்கிற மாணவர்களைப் பார்த்தால் மிக மிகக்குறைவாகத் தான் இருக்கிறார்கள். இங்கே பயிற்சி பெற்றவர்கள் இந்தியா முழுவதிலும் வேலை பார்த்துக் கொண்டு, சிறப்பான முறையில் பாராட்டைப் பெறுகிறவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட கோர்சில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்து அவர்கள் பயிற்சி பெற்று பயன்பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு காலையில் கேள்வி நேரத்தில் கூட அமைச்சர் அவர்களிடத்தில் பூட்டுத் தொழிலைப்பற்றி கேட்டேன். பூட்டுத் தொழில் தமிழகத்தில் சிறப்பாக நடைபெறுகிற மாவட்டம் என்று சொன்னால் நிச்சயமாக அது திண்டுக்கல் என்று தான் சொல்ல வேண்டும். திண்டுக்கல் என்று சொன்னாலே பூட்டு நினைவிற்கு வருகிற அளவிற்கு சிறப்பான முறையில் புகழ் பெற்றிருந்தது. இன்றைக்கு ஓரளவிற்கு நல்லமுறையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னாலும், விற்பனையின் எண்ணிக்கை 32,000 என்று தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நம்பிக்கொண்டிருக்கிற தொழிலாளர்களின் குடும்பங்களும், தனியார் துறையில் இருக்கிற பூட்டு உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் அதிகமாக இருக்கிறார்கள். பூக் கடைக்கே விளம்பரம் தேவையென்ற தற்போதைய நிலையில்,



1986 மே 3] [திரு. ஆ. பிரேம்குமார்]

பூட்டுத் தொழிலில் அந்த விளம்பரம் இல்லாத காரணத்தினாலே தான் பூட்டுகளின் விற்பனையை அதிகப்படுத்த முடியவில்லையென்பதை என்னுடைய கருத்தாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே பூட்டுத் தொழிலில் உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கவும், தொழிலாளர்களை இன்னும் எந்த அளவிற்கு எண்ணிக்கை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு செய்யவும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூட்டு என்று எடுத்துக்கொண்டால் பாட்லாக், டபுள்லாக் என்று சொல்லக்கூடிய பூட்டுக்களையும், அலமாரி, கதவு, ஜன்னல் போன்றவற்றில் வைக்கிற பூட்டுக்களையும், மற்றும் எல்லா வகையான பூட்டுக்களையும் உற்பத்தி செய்கிறார்கள். இன்னும் இரும்புப் பெட்டிகளை எடுத்துக்கொண்டால் தரமான இரும்புப் பெட்டிகளை தயார் செய்து தனியார் துறையில் இந்தியா முழுவதிலும் விற்பனைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொழிலை அரசும் ஏற்படுத்தி சிறந்து விளங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மற்ற பொருள்களை எடுத்துக் கொண்டால் நாம் அவற்றை கூட்டுறவு அங்காடிகளிலும் வைத்து விற்பனை செய்கிறோம். அதேபோல இந்தப் பூட்டுகளை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிலும், மற்ற சூப்பர் மார்க்கெட்டிலும் வைத்து விற்பனை செய்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே இந்த நிலையை மாற்றி அனைத்து சூப்பர் மார்க்கெட்டுகளிலும், அனைத்து அரசு விற்பனை நிலையங்களிலும் இந்தப் பூட்டுக்களை விற்பனைக்கு வைக்கவேண்டுமென்று சொல்லி அதன்மூலம் அவற்றின் விற்பனையைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அனைத்து அரசு நிறுவனங்களிலும் திண்டுக்கல் பூட்டுக்களைத்தான் வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டு தமிழ் நாட்டில் இந்தத் தொழிலுக்கு ஒரு மகத்துவத்தைத் தரக்கூடிய அளவிற்கு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு விஞ்ஞான தொழில் நுட்பங்கள் அதிகமாக வளர்ந்திருந்தாலும்,

நம்பர் லாக் என்ற பூட்டுக்களும், தொட்டவுடனே திறக்கக்கூடிய பூட்டுக்களும் இருந்தாலும், இப்படி திறவுகோலை வைத்துத் திறக்கக்கூடிய பூட்டுகளைத்தான் மக்கள் அதிகமாக விரும்புகிற இந்தச் சூழ்நிலையில் இந்தப் பூட்டுக்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டுக்கல் அருகில் சிறுமலை என்ற பகுதி இருக்கிறது. அது மிகவும் பிரசித்தி பெற்ற இடம். அங்கே செரிகல்ச்சர் என்ற முறையில் பட்டுத் தொழிலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே இடத்தில் மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, திராட்சை, ஆரஞ்சு போன்ற பழங்கள் மிக அதிகமாக பயிரா கின்றன. அந்தப் பழங்களையெல்லாம் அங்கே மார்க்கெட்டிலே தான் இப்போது விற்று வருகிறார்கள். அந்தப் பழங்களையெல் லாம் பதப்படுத்துகிற வகையில் அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி பதப்படுத்திய டின் பேக்கேஜ் பழப்பொருட்களை நல்லமுறையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் எலுமிச்சை சிறு மலையில் அதிக மாக விளைகின்றது. பண்ணைக்காடு பகுதியிலும் அதிகமாக பயிராகிறது. பெப்டிக் என்ற மருந்து பொருளை இதுவரையில் அயல் நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்து கொண்டிருக் கிறார்கள். எலுமிச்சையிலிருந்து இந்தப் பெப்டிக் பொருளை தயார் செய்வதைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதற்கான ஏற்பாட்டைச் செய்து உடனடியாக பெப்டிக் தொழிற்சாலையை திண்டுக்கல்லில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த மாவட் டத்தைச் சுற்றிலும் குறிப்பாக ஆத்தூர், அய்யம்பாளையம். நத்தம், கணவாய்ப்பாடி போன்ற பகுதிகளில் தென்னைமரங்கள் அதிகமாக இருக்கின்றன. இங்கே தென்னை பொருட்களிலிருந்து தயார் செய்யும் பைரைக் கொண்டு இண்டஸ்ட்ரீசை தனியார் துறையில் வைத்திருக்கிறார்கள். ஃபைபர் இன்டஸ்ட்ரிஸ்களை





மட்டும் வைத்திருக்கிறார்கள் என்று சொல்வதோடு நிப்த்திக் கொள்ளாமல், அதற்கு மேலே இருக்கக்கூடிய பினிஸ்டு புராடக்ட்ஸ் அதை பதப்படுத்தி இன்னும் இருக்கக்கூடிய குஷன் சீட்டுகள், அங்கே இருக்கக் கூடிய படுக்கை விரிப்புகள் போன்ற வற்றை எல்லாம் தயாரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

புகையிலைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று சொன்னால், அண்ணா மாவட்டத்தில்தான் அதிகமாக இது வளர்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். புகையிலையை தனியார் துறையில் இருப்பவர்கள் மிக நல்லமுறையில் செய்து, லாபம் ஈட்டக்கூடிய அளவிற்கு சிறப்பான முறையில் அவர்கள் செய்து வருகிறார்கள். சுருட்டுத் தொழிலைக் கூட சிலர் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் சிகரெட்டுகளைச் செய்யக்கூடிய அளவிற்கு அதை காட்டேஜ் இன்டஸ்ட்ரிசாக, சிறுதொழிலாக செய்யக்கூடிய அளவிற்கு அரசு ஆராய்ந்து அதை யும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டான்சியைப் பற்றி மாண்புமிகு மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் இங்கே பல காரணங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார் கள். அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களை நிறுத்துவதற்கு என்ன காரணம்? அது ஏன் நஷ்டத்திலே இயங்குகின்றது, அதனுடைய ஆய்வுத் தீர்வை, அதனுடைய வட்டிச் சுமை அங்கேயிருக்கக்கூடிய தொழில் நுட்பப் பணியாளர்களுடைய நுட்பத் திறமை இன்மை காரணம் என்று சொல்லியிருந் தார்கள். இந்த சூழ்நிலையில் திண்டுக்கல்லில் கூட பலர் வேலை வாய்ப்பை இழந்து இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏறக்குறைய 30 ஆண்டுக்கு மேலாக அனுபவம் பெற்றவர்கள். அப்படி அனுபவம் பெற்றவர்களை நாம் ஏன் கைவிடவேண்டும் என்பதை எண்ணத்திலே கொண்டு, அப்படிப் பட்டவர்கள் தானாகவே அவர்கள் தங்களுடைய வேலையில் இருந்து சென்றாலும் கூட அப்படிப்பட்ட நல்ல வல்லுநர்களை விட்டு விடாது, அவர்களுக்கு மாற்றுத் தொழிலைக் கொடுத்து, அதன் மூலமாக சிறந்த தொழிலை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. பிரேம் குமார்] [1986 மே 3

அடுத்தபடியாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு மிக முக்கியமான எல்லாத் தொழில்களுக்கும் தேவைப்படுவது மின்சாரம். இந்த மின்சாரத்தினுடைய தடை காரணமாக ஜெனரேட்டர்களை வைத்து உற்பத்தியை செய்கிறார்கள். ஆனால் இந்த ஜெனரேட்டர்களுடைய விலைகளைப் பார்க்கின்ற போது அதை உடனடியாக யாரும் வாங்க முடியாத அளவிற்குத் தான் இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நிலையில், மிக விலை குறைவாக உள்ள ஜெனரேட்டர்களை செய்து தர முடியுமா என்பதையும் மற்ற புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து, சிறுதொழில்கள் மூலமாக அவைகளை எந்தெந்த அளவிலே வைத்து செய்ய முடியும் என்பதையும் பார்ப்பதற்கு புதிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சுயவேலை வாய்ப்பு பொறுத்தவரையிலும், 25 ஆயிரம் ரூபாய் லோனாக பண உதவி செய்கிறார்கள். ஆனால் இது எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்கு மட்டும் தான் என்று தகுதியை வைத்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள், அதைப்பற்றி உண்மையிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அவர்களுக்கு பிறகு வேலை என்று ஒன்று கிடைத்துவிட்டால், வங்கிகளில் கிடைத்து விட்டால், அங்கே சென்றுவிடுகிறார்கள். இதை கவனிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே எஸ்.எஸ்.எல்.சி. படித்து தேர்ச்சி பெறாத மாணவர்கள் இருந்தாலும் சரி, அப்படிப் பட்டவர்களுக்கும், இந்த சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக பண உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பி.எஸ்.சி. பட்டதாரிகள், பி.ஏ. பட்ட தாரிகள், எம்.ஏ. பட்டதாரிகள் இன்னும் டெக்னிக்கல் அல்லாத துறையில் பட்டங்களைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு தனிப் பட்ட பயிற்சி ஒன்றை அளித்து, அவர்களுக்கும் இப்படிப்பட்ட நிறுவனங்கள் மூலமாக பண உதவி செய்யவேண்டும். அப்படிச்



1986 மே 3] [திரு. ஆ. பிரேம்குமார்]

செய்வதன் மூலமாக இன்னும் இப்படிப்பட்ட சிறு தொழில்கள் நல்லமுறையில் முன்னேற முடியும் என்பதை நான் என்னுடைய கருத்தாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எங்களுடைய அண்ணா மாவட்டத்தில் பூவானது மிக அதிகமான முறையில் கிடைக்கிறது. மல்லிகைப் பூ, இன்னும் மருக்கொழுந்து போன்ற பூக்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகவே அதை வைத்து, எசன்ஸ் எடுக்கக்கூடிய முறையில் அங்கே தைலங்கள் மற்றும் செண்ட் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளைக் கூட வைத்தால், இந்தியா முழுமைக்குமே மிகச் சிறப்பான முறை யில் உற்பத்தி செய்து தரக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லி, அதற்கும் அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திண்டுக்கல் பகுதியில் உள்ள பாலிதின் கூட்டுறவுச் சங்கமானது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு மிகச்சிறந்த முறையில் லாபகரமான முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அது முழுக்க முழுக்க பெண்களைக் கொண்ட ஒரு நிறுவனமாக இருந்து மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வரு கிறது. அங்கே வேலை செய்பவர்கள் போனஸ் வேண்டும் என்று பல தடவைகள் கேட்டு இருக்கிறார்கள். அரசு தர மறுத்து இருக்கிறது என்பதுதான் என் என்று தெரியவில்லை. எனவே அப்படி லாபகரமாக நடக்கின்ற அந்தச் சங்கத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களுடைய போனஸ் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு கருத்து என்னவென்றால், நசிந்துவிட்ட தொழில் களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் நசுக்கப்பட்ட சிக் யூனிட்டுகளை இன்னொருவர் வாங்கி, அதை நல்லமுறையில் நடத்தலாம் என்று நினைத்தால், அவர்களுக்கு, அதற்காக வங்கி களிலோ அல்லது சிட்கோவிலோ லோன்கள் தரப்படாமல் இருக் கின்றது. எனவே அவர்களுடைய நிலையைக் கருத்தில்

[திரு. ஆ. பிரேம் குமார்] [1986 மே 3

கொண்டு, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை வாங்கி நடத்த முன் வருபவர்களுக்கு லோன்கள் தரலாம் என்ற வகையில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற தொழில்களுக்கு நீங்கள் எந்த அளவிற்கு உதவி தருகிறீர்களோ அதைவிட சற்று குறைவாக வேண்டுமானாலும் அவர்களுக்கு கொடுத்து, அந்த பண வசதிகளைச் செய்து வந்தால், நல்லமுறையில் அவர்கள் இந்தச் சிறு தொழில்கள் மூலமாக முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படும் என்பதைக் கூறிக் கொண்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

Thiru G. K. FRANCIS: Hon. Mr. Deputy Speaker, Sir, in regard to the Demand on Rural and Small Industries, it is creditable to find that the Government of Tamil Nadu under the leadership of Dr. M. G. Ramachandran, has achieved a higher and a better performance during the year and is poised for further growth and development. This is reflected in the increase in the number of permanent recognition of Small Scale Industries from 18,789 at the end of March 1977 to 49,920 at the end of 1984 and to 70,981 at the end of March 1986, which means in two years there has been an increase by 20,000. The tremendous growth in the number speaks volumes of the impact of policies undertaken by the Government to give an impetus to the development of Small Scale Industries. A significant development is also the increase of Industrial Co-operatives and Rural Industries. The fact that the Department of Industries and Commerce has switched from a traditional regulatory role to a developmental role is also a noteworthy feature and that has played a significant role in the increase of Small Scale Industries. The developmental role of the Small Industries Development Corporation. TIIC and TANSI have also to be commended for the thrust and boost they have given to Small Scale Industries.

(முற்பகல் 11-10)

The concept of District Industries Centres was to fulfill the long felt need of aiding the growth and development of rural industries. According to the data the District Industrial Centres have registered 10,722 units by the end of March 1986 thereby creating an employment potential of 72,000 persons. Viewed in the total perspective of all districts there is the need to speed up the development of these units and to opt for labour intensive production rather



1986 மே 3] [Thiru G. K. Francis]

than capital based production. Interaction between District Industries Centres and the local Banks have to be further strengthened and red tape and bureaucratic procedures in setting up units and in obtaining loans needs to be looked into and solved and made more easier for aspirants to establish units. The need for District Industries Centres to develop and disseminate literature about their various programmes and to spread the message of self employment through Industry must be given greater impetus and priority. The further success in solving the unemployment problem is through winning the minds of the Rural Youth and channelising them into productive enterprise. There is a built in perspective amongst the youth in Rural areas that they could only work for others. This has to be cast out and a feeling that with the direction and help they could pilot their own industry is very necessary.

The single window clearance concept is a step in the right direction to find solution to the problems faced by Small units in securing statutory and other clearances but more important is the urgent need to minimise these statutory and other formalities that hang like milestones on the necks of prospective and on going Small Scale Industrialists. One of the questions that need to be asked is how many Small Scale Industries come into being and soon fade away like the morning mist and what were the causes of these failures. Can the analysis of these failures make us think as to what needs to be done to strengthen the role of Small Scale Industry.

The Government in its Policy note has rightly pointed out that it has constituted two State Level Committees to examine the problems faced by Sick Units and to take steps to revive them. I would suggest that more important is the need to look into the credibility of persons who start Small Scale Industry. One of the greatest problems faced by Small Scale Industry is that dishonest persons who know the means of obtaining Government loans and facilities with the Government and the Banks in the garb of small industries get all the benefits but hardly give it back to society or from the source from which they obtain loans This area needs to have closer monitoring as there is waste of scarce resources which could otherwise be utilised for more productive purposes.

A more stricter scrutiny is needed into these sick industries and facts need to be ascertained whether they had deliberately become sick or due to business reasons.

In order to avoid sickness and to improve the turnover of Small Scale Industries, there is an urgent need to monitor the productivity of the Small Scale Industries. Productivity in terms of turnover,

[Thiru G. K. Francis] [1986 மே 3

raw materials utilisation, capital and labour should be studied frequently. This will go a long way in avoiding sickness and in making a more efficient use of resources. It will also bring the Industrialists and the Government officials together to check the performance. It would also be in the interests of the viability of Small Scale Industries to opt for Management by objectives. This programme of Management by Objectives would imply that the Financing Agency together with the Small Scale Industrialists would constantly check the performance and ensure a higher productivity.

I would like to suggest to the Government of Tamil Nadu to establish a Rural Industries Development Corporation. The purpose of this Rural Industries Development Corporation is to give a boost to develop and initiate a speedier growth of Rural Industries. I am of the view that there is the need to distinguish between Small Industries and Rural Industries. This is so because of the built in nature of Rural Industries. They have a different environment, a different calibre of people, a different infrastructure and a different Industrial Culture. Further there is the tendency of Small Scale Industries to utilise the machinery; but in case of Rural Industries there is the need to opt for Labour intensive productions; there is the need to give emphasise on employment potential and to harness the energy of Rural people to get into the stream of working in Industries rather than in the fields in which there is under-employment. This Rural Industries Development Corporation should identify areas in which these Rural Industries should be established and these should not overlap with those of the Small Scale Industries or the large Industries. They should reflect the environment in which they are established and should utilise the raw materials of that particular region. Further, the Rural Industries Development Corporation should spread the message of "Entrepreneurial Development". This is a serious block amidst the rural people. They are frightened and wonder if they would succeed in the battle of taming rural people into potential Industrialists and to clear their minds and to motivate them. Again, the Rural Industries Development Corporation should be vested with developing infrastructural facilities in the Rural Sector, especially for Industrial Development which is a serious impediment to-day. The Rural Industries Development Corporation should also grant loans, and assist in providing raw materials and should extend support in marketing of their products. I am sure that the Rural Industries Development Corporation would give a boost to the Development of Rural Industries by making use of the productive talents of the rural people and in the proper utilisation of the raw materials.



1986 மே 3] [Thiru G. K. Francis]

The emphasis of the Government to consolidate and strengthen the Industrial co-operatives is an outstanding measure. I consider this as a very significant and notable step. The establishment of a new Industrial Co-operative Tea Factory at Kinnakorai and the desire to bring the Small Leather Tanneries in Ambur, Perambur, Ranipet together and form a Co-operative Society is a welcome step.

Further, the Consolidation of the Small Match Industrial Co-operative Societies and the Polythene Industries Co-operative Societies is a step in the right direction. A remarkable feature of the Development of Industrial Co-operatives is the massive assistance given by the Tamil Nadu Co-operative Banks. The proposal of the Government to grant additional Share Capital of Rs. 25 lakhs for 1986-87 is a remarkable measure. This will go a long way in permitting the Bank to increase its loans to Industrial Co-operative Societies. The consent of the Bank to extend financial assistance to Industrial Co-operative Societies to be started by the Tamil Nadu Backward Classes Economic Development Corporation is another outstanding measure of the Bank.

The importance of Electronics in the Twenty First Century can never be under-estimated and the emphasis that the Government of Tamil Nadu has bestowed is amply borne out by the fact that the Government is establishing an Electronic Industrial Estate. The Seven Industrial Estates exclusively for Electrical and Electronic Industries with 138 built in sheds and 293 Developed plots are examples of the priority accorded by the Government to Electronics and Electricals. Combined with Tamil Nadu Government's new measure of low tax for electrical items would give a further boost to the Electronics Industry in Tamil Nadu. The various facilities provided by the Government of Tamil Nadu like the establishment of the Central Electrical Testing Laboratory, the Electronic Test and Development Centre and the Electronics Testing Laboratory are also remarkable and outstanding measures.

(முற்பகல் 11-20)

The role of the Small Industries Development Corporation must be complimented because it acts as a catalyst to Small Industries. The step up in loans, the role played in the value of services rendered, the rehabilitation of Sick Units, the provision of infrastructural facilities, the distribution of raw materials, the marketing support provided to the Small Scale Industries and various other support services rendered by it, speak volume of the massive

[Thiru G. K. Francis] [1986 மே 3

effort taken by it to promote and develop small scale industries. Indeed, the Small Industries Development Corporation is doing a tremendous job in making Small Scale Industries profitable, productive and promising.

The performance of the Tamil Nadu Leather Corporation in developing the leather industry is commendable. In this connection, I would like to point out that the establishment of Material Banks and the establishment of training Centres for Women is also a commendable step in the right direction. In order to overcome the serious pollution that tanneries cause it is noteworthy to find that the Corporation is acting as a Model Agency to commission a common Effluent Treatment Plant. It is necessary that this is commissioned as early as possible, to deal with the severe problem of pollution. The Government should also make it compulsory for Tanneries in other parts of the State to have an Effluent Treatment Plant to treat the problems of pollution.

The performance of the Tamil Nadu Handicrafts Development Corporation is also noteworthy and the establishment of a District Sericulture Centre to provide a package of services to Sericulturists as also commendable considering the staff competition that it faces from the experienced Silk Manufacturers from Karnataka. It is hoped that these measures and the extension of area under mulberry cultivation would strengthen sericulture in the State of Tamil Nadu.

The Guindy Technical Library is playing a vital role in giving technical information and other data to prospective entrepreneurs. It would be in the larger interest of these prospective entrepreneurs to have a larger quantity of books and periodicals, video programmes on the industrial growth of the other countries, especially in Japan, Taiwan, Korea, etc., could be held. The Library could also have an outreach cell to educate College Students about entrepreneurial development. This will draw many a young man to the field of industry.

I conclude wholeheartedly supporting the Demands.

Thank you.

*திரு. க. நரசிம்மபல்லவன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் என்ற தொழிற்துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 மே 3] [திரு. க. நரசிம்மபல்லவன்]

இன்றையதினம் ஜப்பான் நாடு போன்ற மிகச் சிறு நிலப் பரப்பில் வாழுகின்ற, அதிகமான அளவில் ஜனத்தொகை கொண்டு, வாழ்கின்ற நாடுகளில் கூட, அங்குள்ள மக்கள் நல்ல சுறுசுறுப் போடு, கால நேரத்தை வீணாக்காமல், வேகமாக முன்னேறும் நிலையில், தொழில் வளமும், நல்ல தொழில் வளர்ச்சியும் பெற்று, வருகின்ற நிலையில், அதேபோன்ற ஒரு சூழ்நிலையை இங்கே உருவாக்கவேண்டுமென்று, நல்ல தொழில் வளத்தை உருவாக்கி, வளமான ஒரு நிலையை மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டு மென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் தொழில் கல்வி ஒன்றை நல்லமுறையில் உருவாக் கித் தந்து, அதே சமயத்தில், அதேபோன்று சிறு தொழில்கள் வளர்ச்சியில் நல்ல ஆக்கமும், ஊக்கமும் தந்து இன்றையதினம் வளர்த்துகொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையிலே தான் இன்றையதினம் பல்வேறு திட்டங்களினுடைய அடிப்படையில் நல்ல செம்மையாகவும், சீராகவும் சிறு தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில், இன்றைய தினம் வங்கி மூலமாக பலகோடிக் கணக்கில் கடன் பெற்று தொழில் நடத்த முன் வந்தால், அவர்களுக்கு தமிழக அரசு தொழிற்கூடங்களைக் கட்டித் தருகின்ற நிலை இருக்கிறது. அதாவது ஒரு கிராமத்தில் 10 நபர்கள் கடனை வங்கி மூலமாகப் பெறுவார்களானால் அந்த நபர்களுக்கு நிலங்களை ஆர்ஜிதப்படுத்தியும் நல்ல கட்டட வசதி ஏற்படுத்தியும் தருகிற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கி றார்கள். அதற்காக தமிழக அரசிற்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நல்ல முறையில் செம்மையாக நடை பெறுவதற்கும் குறைந்த அழுத்த மின்கட்டண மானிய உதவித் தொகை அளித்து அதன்மூலம் அவைகளை ஊக்குவித்துக் கொண்டு வருகிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் சிறு தொழில்கள் மேன்மையாகவும் சிறப்பாகவும் விளங்குவதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது.

சிறு தொழில்களுக்கு உதவியாக விற்பனை செய்யக்கூடிய உதவிகளை செய்வது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. அந்த முறையில் அவைகள் செம்மையாக நடைபெறுவதற்கு உதவிகர மாக இருந்து வருவதைப் பாராட்டுவதோடு 187 சிறு தொழில்

[திரு. க. நரசிம்மபல்லவன்] [1986 மே 3

நிறுவனங்கள் பயன்பெற்று இருப்பதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அவை விரிவுபடுத்தப்பட்டு அனைத்து அரசு நிறுவனங்களும் அவைகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை கண்டிப்பாக வாங்க வேண்டுமென்ற நிலையை உருவாக்கித் தரவேண்டும். அந்த முறையிலே தமிழகத்திலே சிறு தொழில்கள் நடத்துகிறவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிறார்கள் என்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும்கூட சிறு தொழில் நடத்துபவராக இருக்கவேண்டும். சிறுதொழில் நடத்தாத சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தில் இல்லையென்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நிலை வந்தால் சிறு தொழில்கள் மேன்மையாகவும் வளமாகவும் அவைகளின் நன்மைகள் மக்களுக்கு விரிவாகப் புரியக்கூடிய முறையிலும் நிலைமையை ஏற்படுத்தி அவர்கள் புரிந்துகொள்வதற்கும் இன்றைக்கு அதன் மூலமாகப் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் திரிந்துகொண்டிருக்கிறவர்கள் தங்களுடைய கவனத்தையெல்லாம் ஒரு திசையிலே திருப்பி முன்னேற்ற வேண்டுமென்ற சிந்தனையைச் செலுத்தி இந்த நாட்டிற்கு ஆக்கப்பூர்வமான முறையில் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு படித்த இளைஞர்கள் முன் வருகிறபோது அவர்களுக்கு சிறு தொழில் நிறுவனங்கள் மூலமாக உதவிசெய்தாலும் வங்கிகள் கொடுக்கிறபோது காலதாமதம் ஏற்படுகிறது. வங்கிகள் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபடுத்தி டெபாசிட் உள்ளவர்களுக்கு மட்டுமே கொடுக்கிற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. படித்துவிட்டு வேலையின்றி இருக்கிற இளைஞர்களுக்கு நல்லமுறையிலே சுலபமான முறையில் கடன்கள் கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படித் தொழில் நடத்த விரும்புகிறவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பது போதாது. 25 ஆயிரம் ரூபாயில் எதுவும் செய்ய முடியாது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை 50 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 3] [திரு. க. நரசிம்மபல்லவன்]

நான் விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் நடமாடும் சிறு தொழில் வண்டிகள் எல்லாம் கிண்டியில் வந்து சிறு தொழில் பயிற்சி கற்றுக் கொடுக்கிற வண்டிகள் வந்திருந்தன. அதன் மூலமாக குறுகிய காலத்திலே குறைந்தது 30 மாணவர்களுக்கு மேல் படித்த இளைஞர்கள் அந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் பயிற்சி பெற்றதோடு அவர்கள் திறமையாகவும் செயல்படுவதற்கான ஆற்றலைப் பெற்று இருக்கிறார்கள். குக்கிராமங்களிலே விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கிற இளைஞர்கள் கைத்தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு அவர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மானியத் தொகையைக் கொடுத்து தொழிற் கருவிகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிற் கருவிகளை வழங்குகிறபோது கடன் உதவியும் அளித்து அவர்களுக்கு நல்ல முன்னேற்றத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதோடு, பட்டு வளர்ப்புத் தொழிலைப் பொறுத்தவரையில், காஞ்சிபுரம் பகுதிக்கு அருகிலே உள்ள இடமாக என்னுடைய தொகுதி இருப்பதால், அங்கே அதிகமான முறையிலே பட்டு வளர்ப்பு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை ஊக்குவிக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உதவிக்கரமாக இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, ஊரகத் தொழில் குறித்த இந்த மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த உங்களுக்கு நான் நன்றியைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு குறித்துப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களைப் பொறுத்தவரையில், 1977 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த சிறுதொழில்களின் எண்ணிக்கையைவிட, இன்றையதினம் 1986 ஆம் ஆண்டு வரையில்

[திரு. த. பழனி] [1986 மே 3

ஏறக்குறைய மூன்று மடங்காக உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரவர்கள் அளித்திருக்கின்ற புள்ளிவிவரங்களின் வாயிலாக அறிந்து நான் அதை வரவேற்கவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆம் ஆண்டு 18,789 சிறுதொழில்கள் இருந்தன. 1984 ஆம் ஆண்டில் அது 49,920 ஆக உயர்ந்திருக்கிறது. 1986 ஆம் ஆண்டில் அது 70,981 ஆக உயர்ந்திருக்கின்றது என்றால் அதனுடைய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களைச் சார்ந்தது என்பதை நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிக் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படும் இன்டஸ்ட்ரீகளை வலிவுள்ளதாகவும், பொலிவுள்ளதாகவும் ஆக்குவதற்குண்டான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மாநிலத்தையும் மாவட்டங்களையும் ஒரே கூரையின் கீழ் அமைத்து பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் மகத்தான், அதற்காக அமைக்கப்பட்ட அமைப்புகளின் மூலம் 196 கூட்டங்களை நடத்தி, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பிரச்சினைகளை—தொழிற் கூடங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை தீர்த்து வைத்திருக்கின்ற காரணத்திற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும், இந்தத் துறையின் அமைச்சரவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடுத்தரத் தொழில், உயர்தரத் தொழிலாக இருக்கின்ற அந்தத் தொழில்களுக்குத் தொழில் முதலீட்டு மையம் அளித்த பணத்தின் வரம்பு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 60 இலட்சம் ரூபாயாக உயர்க்கப்பட்டிருப்பதை வரவேற்கவும் வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடுத்தர தொழில்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற பணம் 15 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்க்கப்பட்டு இருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 மே 3] [திரு. த. பழனி]

சுய வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் வாயிலாகத் தமிழகத்தில் இருக்கின்ற படித்த வேலையில்லாப் பட்டதாரிகள் 'பயன் பெறுகின்ற விதத்தில் இந்தச் சிறுதொழில்களை வைத்து, நாட்டிலே உள்ள பல்வேறு தொழிற் சாலைகளைத் தொழில் அமைதிப் பூங்காவாக உருவாக்குவதற்காக அரசு 1983—84 ஆம் ஆண்டில் ஒப்புதலுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 17,500 ஆக இருந்தது. இந்தச் சாதனையை மிஞ்சுகின்ற அளவிற்கு 22,162 21,700 ஆக இருக்க, அரசு செய்திருக்கின்ற சாதனை 22,500. பயன் பெற்றிருக்கின்ற அந்தப் பணம் 34·3 இலட்சம் ஆகும்.

அதேபோன்று 1984—85 ஆம் ஆண்டு அரசினுடைய இலக்கு 21,700 ஆக இருக்க, அரசு செய்திருக்கின்ற சாதனை 22,500. பயன் பெற்றிருக்கின்ற அந்தப் பணம் 42,49,000.

1985-86 ஆம் ஆண்டில் 18,100 இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்க, செய்யப்பட்ட சாதனை 18,510 ஆக இருக்கிறது. இதிலே பொதுமக்கள் பெற்றிருக்கின்ற சுய வேலை வாய்ப்பிற்கான தொகை 37·63 இலட்சம் ஆகும்.

எனவே, தற்போது தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக படித்த வேலையற்றவர்களும், மற்றவர்களும் பயன்பெறுகின்ற அளவிற்கு அரசு பல்வேறு சலுகைகளை அளிப்பதன் வாயிலாக இந்தத் துறை மேலும் இலாபநோக்கோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது.

3,128 சிறுதொழில்களுக்குக் கடந்த ஆண்டு ஏறக்குறைய 950 இலட்சம் ரூபாய்களை நிதியுதவியாக அளித்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று ஊரகத் தொழில்கள் என்றாலே ஆறேகால் சதவீத வட்டிவிதத்தில்—மிகக் குறைந்த வட்டிக்கு ஒவ்வொரு தொழில் கூடத்திற்கும் 25,000 ரூபாய் கடனாக அளிக்கிறார்கள். அதிலே, 14 மாவட்டத் தொழில் மையங்களை வைத்து, நாம் ஒரு சிறு தொழிலுக்கு ரூ. 25,000 அளிப்பதை, மேலும் சற்று உயர்த்தி, அதனுடைய அளவை ரூ. 1 இலட்சம் வரை என நிர்ணயித்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் வாயிலாக, இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட அரிய பல நல்ல திட்டங்களை உருவாக்கிச் செயலாற்றிக் கொண்டிருக்கிற அதே நேரத்திலே, கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்குப் பல்வேறு நல்ல திட்டங்களைச் செயலாற்ற வேண்டுமென்றுநான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலே இருக்கிற தென்னை மட்டையிலேயிருந்து கிடைக்கின்ற நார்களைக் கொண்டு, கயிறு திரிக்கின்ற தொழிற் சாலைகளை, கூட்டுறவுச் சங்கங்களை பலப்படுத்திட வேண்டுமென்று நான் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அங்கே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி ஆதாரங்கள் போதவில்லை. மூலப் பொருளாக இருக்கிற நாரைக் கொண்டு கயிறு தயாரிக்கலாம், வேறு மூலப் பொருள்கள் எல்லாம் தயாரிக்கலாம். கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழை, எளியவர்கள், அன்றாடங்காய்ச்சிகளாக இருக்கிறவர்கள் தங்களுக்கு தினந்தோறும் நடைபெறக்கூடிய ஒரு தொழிலாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக, நாரைக் கயிறாகத் திரிக்கிற தொழிற்சாலையைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏற்படுத்தித் தருவதன் மூலமாக, பல நூற்றுக்கணக்கான ஏழைகள் பயன்பெற வாய்ப்பிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டுகின்றேன்.

அதே போன்று கிராமப்புறங்களிலே, கயிறு திரிப்பது போன்ற மற்றொரு தொழில் தோல் தொழில். தோல் தொழில் என்றாலே, ஏழைகளின் இருப்பிடமாக, அன்றாடங் கூலி வேலை செய்கின்ற—குறைந்த கூலிக்கு வேலை செய்கின்றவர்களின் தொழிலாக இருக்கிறது. அந்தத் தோல் தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக, தனி நிறுவனத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 1983-ஆம் ஆண்டு ரூ. 10 கோடி மூலதனத்தில், டால்கோ நிறுவனமாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். இருந்தாலும், அந்த நிறுவனத்தின் வாயிலாக, குறிப்பாக, எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், வாணியம்பாடி, திருப்பத்தூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, மேல்விஷாரம் போன்ற பகுதிகளில், தோல் தொழிற்சாலைகள் அதிக அளவில் இருக்கின்றன. அந்தத் தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோருக்கு பணி பாதுகாப்பு அளித்து, அவர்கள் தொழிலில் நிரந்



தரமாக இருக்கும் வகையில் நிலைமையை உருவாக்கித் தந்திட வேண்டுமென்று அருமை அண்ணன் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அங்கே கூலி வேலை செய்பவர்களாகப் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களை வா என்று சொல்வதற்கும் ஆள் இல்லை, போ என்று சொல்வதற்கும் ஆள் இல்லை. பினாமியாக நடத்தப்படுகிற பல்வேறு தொழிற்சாலைகளில், ஏழை, எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு, பாதுகாப்பு அளிக்கும் நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவு நீர், அந்தப் பகுதி குடிநீரையும் பாதித்திருக்கிறது, விவசாய நிலங்களையும் பாதித்திருக்கிறது. கடந்த இருபது ஆண்டுக் காலமாக, நச்சு உள்ள தொழிலாக அது இருந்தாலுங் கூட, வேகமாக, அந்தத் தொழில் முன்னேறிக் கொண்டு வரும் போது, அந்தப் பகுதியிலேயிருந்து வருகிற தண்ணீர் பாலாற்றிலே கலக்கிறது. எங்கள் மாவட்டத்திலே 12 நகராட்சிகளிலே, 9 நகராட்சிகளுக்கும், ஆயிரக்கணக்கான கிராமங்களிலே, ஏறக்குறைய 600 கிராமங்களுக்கும் குடிநீரைப் பாலாறுதான் சப்ளை செய்கிறது. அந்தப் பாலாற்றிலே கழிவு நீர் விடப்படுவதன் காரணமாக, பாலாற்றினுடைய நீர் அறவே பாதிக்கப்பட்டு, நச்சு நீராக்கப்பட்டு, விவசாய நிலங்கள் உப்பு நிலங்களாக மாற்றப்படுகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கழிவு நீரைத் தூய்மைப் படுத்துகின்ற ஒரு தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்க வாணியம்பாடியிலே, சென்ற ஆண்டு புரட்சித் தலைவர் அரசு ஏற்பாடு செய்திருப்பதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வாணியம்பாடியில் அது முழுமையாகச் செயல்படுகிறது. ஆனால், இராணிப்பேட்டையில் அதன் பணி முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. தொழில் அதிபர்கள் தகராறு செய்வதாக அறிகிறேன். தொழிற்சாலைகள் துவங்க அனுமதி வழங்குகின்றபொழுது, உற்பத்தியாகிற கழிவு நீர் டிரீட்

மெண்ட் ப்ளான்ட் இல்லாமல், அனுமதி வழங்கக் கூடாது என்ற சட்டம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அத்தகைய ப்ளான்ட் இல்லாமல் எப்படி அனுமதி வழங்கினார்கள்?

(முற்பகல் 11-40)

அதற்குண்டான வாய்ப்பு எப்படி அவர்களுக்கு ஏற்பட்டது என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கேயிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளின் வாயிலாக பல கோடிக்கணக்கான ரூபாய் இந்திய நாட்டிற்கு வருமானமாக வரலாம். விவசாயிகள் அந்த மாவட்டத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற 1, 2 ஏக்கர் நிலங்கள் உப்பு நிலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த மாமன்றத்தின் வாயிலாக, நாம் பேசுவதன் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதன் மூலமாக, இந்த நாட்டு மக்களுடைய குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரச்சனையை நாம் கண்காணித்து கொண்டிருக்கிறோம், பாதுகாத்துக்கொண்டிருக்கிறோம், புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்ற வகையிலே அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏழை எளிய விவசாயிகள் அன்றாடம் காய்ச்சிகள் இந்த ஆட்சியிலே ஆறுதல் அடைந்துகொண்டிருக்கிறார்கள். இந்த புரட்சித் தலைவர் அரசு மேலும் மேலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருப்பவர்கள் இந்த ஏழை எளியவர்கள். இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக, இந்த ஆட்சியினுடைய முதுகெலும்பாக இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு பாதுகாப்பு தரப்படுவதன் மூலமாக தமிழகத்தில் உண்மையான ஒரு ஜனநாயக முறை இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த முடியும்.

இந்த மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் என்னுடைய மாவட்டம் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறது. எனவே தான் எங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து கோரிக்கை எழுப்புவதன் மூலமாக அதற்கு உடனடியாக பரிகாரம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதில் வெகு ஆவலோடு இருக்கிறோம்.



நாங்கள் கிராமப்புறங்களுக்கு செல்கின்றபோது இந்தப் பிரச்சனையை ஒரு கோரிக்கையாக வைக்கிறார்கள். வெடி விபத்து நடந்தால் என்ன விபரீதம் ஆகுமோ அதேபோன்ற நிலை கிராமப்புறங்களில் உருவாகிக்கொண்டிருக்கிறது. நாங்கள் அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தயங்குகின்ற சூழ்நிலையில் இருக்கிறோம். இதற்கு காரணம் அங்கிருக்கின்ற தோல் தொழிற்சாலை. அதனுடைய கழிவு நீர் பாலாற்றிலே, மகேந்திரவாடி, காவேரிப்பாக்கம் கால்வாய், கக்கரநல்லூர் கால்வாய், தூசி கால்வாய், பழைய கால்வாய் போன்ற 5 பெரும் கால்வாய்களிலே இந்த கழிவு நீர் செல்வதன் வாயிலாக ஏறக்குறைய 1 இலட்சம் ஏக்கர் நிலங்கள் வாயிலாக பாலாற்று படுகைக்குள் கொண்டு வரப்பட்டு அங்கேயிருக்கின்ற ஏறக்குறைய 150 ஏரிகள் பாதிக்கப்படுகின்றன. இந்த சூழ்நிலை போக்கப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை, என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் ராணிப்பேட்டையிலே அந்த ட்ரீட்மென்ட் ப்ளாண்ட்டை எத்தனை நாட்களுக்குள் முடிப்பீர்கள் என்பதை அறுதியிட்டு உறுதியாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டுத் துறையைப் பற்றி பாராட்ட விரும்புகிறேன். பட்டு வளர்ச்சியை பொறுத்தவரை பல்வேறு தென் மாநிலங்களோடு போட்டியிடுகிற சூழ்நிலையை நீங்கள் சந்தித்து இருக்கிறீர்கள். அதற்காக அந்த பட்டு வளர்ச்சித் துறையை நான் பாராட்டவும் வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வேகம் விவேகமான வளர்ச்சி. நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி. இந்தத் துறை வெகு வேகமாக வளர்வதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய கூட்டுறவு நெசவாளர்களுக்குண்டான ஊதியத்தையும், அடிப்படையான தேவைகளையும் நிறைவேற்றி இருக்கிறது என்று கூறி அந்த பட்டு வளர்ச்சித் துறை மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு கிராமங்களில் மாவட்டத்திற்கு ஒரு மையத்தை விரிவாக்கி தோட்டத்திற்கு ஒரு மையம் என்று உருவாக்குவதன் மூலம் அந்தத் துறை மேலும் வளரும் என்பதை சுட்டிக்காட்டி வாழ்த்தி அமர்கின்றேன். நன்றி.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே இந்த மானிய கோரிக்கையின் மீது

'சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க சில பயன் உள்ள கருத்துக்களை மட்டும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே சிறு தொழில்கள் என்ற குறிப்பை படித்துப் பார்த்தேன். இன்றைக்கு உற்பத்தியை அதிகமாக பெருக்குவதும், வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதும்தான் 'இண்டஸ்ட்ரியல் பாலிசி ஆப் தி கவர்ன்மெண்ட்' இந்த அரசாங்கத்தின் கொள்கை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே வேலைவாய்ப்பு என்று பார்க்கின்றபோது இன்றைக்கு பி.ஏ., எம்.ஏ., படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த பிரிவின் கீழே சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நிதி உதவியெல்லாம் வழங்கப்படுகிறது.

அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தை எல்லாம் காட்டியிருக்கிறார்கள். ஆகவே வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்குகிற வகையில் இந்தப் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற வகையில் பல்வேறு சிறு தொழில்கள் அமோகமாகத் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்ற கருத்துப்பட கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் முதன்முதலாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆஃபீசிலே சென்று பார்ப்பீர்களேயானால் படித்தவர்கள், வேலையில்லாமல் தங்களைப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள், ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே போகிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழே நாம் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி, பல்வேறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தி அவர்களுக்கெல்லாம் சுய வேலை வாய்ப்புக்காக வேண்டிய ஏற்பாடு செய்து தருகிறோம். நிதி தருகிறோம், உதவி செய்கிறோம்





என்பதெல்லாம் முழுமையான அளவில் உண்மையானால் இன்றைக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆஃபீசிலே படித்தவர்களின் எண்ணிக்கை இந்த அளவுக்குக் கூடிக்கொண்டு போனதற்கு என்ன காரணம் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலே பதிவு செய்தவர்கள் தங்களின் வாழ்க்கையிலே பல கட்டங்களைத் தாண்டிவிடுகிறார்கள். அரசாங்க வேலைக்குப் போவது என்றால் ஒரு குறிப்பிட்ட வயது வரம்பு வேண்டி இருக்கிறது. அதற்குள் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் அவர்களின் வயது காலாவதியாகிவிடுகிறது. அரசாங்க அதிகாரி உத்தியோகத்திலிருந்து ரிட்டையர் ஆனால் அரசாங்கம் அவருக்குப் பணம் கொடுக்கிறது. நான் அரசாங்கத்திற்கு ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். எம்ப்ளாய்மெண்ட் ஆபீசில் வேலை தேடி கிடைக்காமல் பல பேர் ரிட்டையர் ஆகிறார்கள். அங்கே பதிவு செய்துவிட்டபின் வேலை கிடைக்காமல் அவர்களுடைய வயது காலாவதியாகிவிடுகிற நிலைமையில், அரசாங்க அதிகாரி ரிட்டையர் ஆனால் அவர்களுக்கு எப்படி நாம் நிதி கொடுக்கிறோமோ அதுபோல் இப்படி பதிவு செய்து வயது ஆகிவிட்டவர்களுக்கும் உதவுகிற வகையில், அவர்களைக் காப்பாற்றுகிற வகையில் நிதி கொடுத்தால்கூட சரியாக இருக்கும் என்று நான் அரசாங்கத்திற்கு உங்கள் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தொழில் உற்பத்தி என்பது நமக்கு மிக, மிக முக்கியம். சிறு தொழில்களாக இருந்தாலும், பெருந்தொழில்களாக இருந்தாலும் மின்சாரம் தேவை. சிறு தொழில்கள் சங்கத் தலைவர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதிலே சிறு தொழில்கள் நடக்க முடியாமல் மின் இணைப்பு கிடைக்காமல் சிக்கல் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திருச்சியில் ஒரு திருமண விழாவில் பேசுகிறபோது நான் சொன்னேன், மின்சாரம் மனித வாழ்க்கைக்கு எப்படி அவசியமோ அதுபோல் மின்சாரம் அவசியம் என்று சொன்னேன். எனக்குப் பின்னால் பேசிய எங்கள் தலைவர் கூடச் சொன்னார்கள் 'அது தமிழ் நாடு மின்சாரம்போல் இருக்கக்கூடாது, அடிக்கடி சிக்கல் ஏற்பட்டுவிடும்' என்று. அந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழகத்தில்

மின் இணைப்பு தரப்படாத காரணத்தால் பல சிறு தொழில்கள் நடக்க முடியாமல், அமோக உற்பத்தியைச் செய்ய முடியாமல் இலாபத்தைப் பெற முடியாமல் இருக்கின்றன. அதுபோல் நமக்கு நிலக்கரி அவசியம். ரா மெட்டீரியல்ஸ் வேண்டும். இவைகளை எல்லாம் நாம் எப்படிக் கொண்டு வருகிறோம்? மின்சாரப் பற்றாக்குறைக்கு ஒரு முக்கியமான காரணமே தூத்துக்குடியில் இருக்கின்ற அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காமல் போகிறது என்பதுதான். அதுபோலவே சிறு தொழில்கள் செய்வதற்கு கோல் அதாவது கரி வேண்டும். அது கிடைக்காமல் போகிறது. இவை எல்லாம் வடக்கே இருந்து வர வேண்டும். வடக்கே இருந்து வரவேண்டும் என்றால் வேகன் கிடைக்க வேண்டும். மரியாதைக்குரிய, உண்மையிலேயே உலகம் சுற்றும் வாலிபராக இருக்கக்கூடிய பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்—மக்கள் எல்லாம் கை சின்னத்திற்கு ஓட்டுப் போட்டுவிட்ட காரணத்தால் அதைப் பாராட்டுகிற வகையில் பல்வேறு பொருட்களின் கட்டணத்தை எல்லாம் உயர்த்தி இருக்கிறார்கள். சிமெண்ட், சர்க்கரை போன்றவற்றின் விலைகளை எல்லாம் உயர்த்தியதுபோல் இரயில்வே கட்டணம், வேகன் கட்டணம் ஆகியவற்றையும் உயர்த்தி இருக்கிறார்கள். எனவே நிலக்கரி, ரா மெட்டீரியல்ஸ் போன்றவற்றைக் கொண்டு வருவதற்குச் சிரமமாக இருக்கிறது. வேகன் கிடைக்கவில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பக்கத்திலே இருக்கக்கூடிய குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய ஊர் குன்றக்குடி. அங்கே ஒரு தொழிற்சாலை துவக்கப்பட்டு 3 ஆண்டுகள் ஆகியும் உரிய மூலப்பொருள் கிடைக்கவில்லை. தமிழகத்தில் உள்ள இப்படிப்பட்ட பல்வேறு தொழில்களைப் பற்றி என்னால் சுட்டிக்காட்ட முடியும். இப்படி மூலப்பொருள் கிடைப்பதில் சிக்கல் இருக்கிறது. எனவே நிலக்கரி கொண்டு வர வேண்டும். நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூம்புகார் சம்பந்தமாகக் கூட பாலிசி நோட் வைத்தார்கள். நிலக்கரி கொண்டு வரவேண்டும் என்றால் ஒரு டன்னுக்கு அதிகமான அளவில் கட்டணம் கொடுக்கவேண்டி இருக்கிறது. ஆகவே கப்பல் வாங்கி, கப்பலிலே கொண்டுவந்தால்





குறைந்துவிடும் என்று சொல்லி நமது மாண்புமிகு 'ட்ரான்ஸ் போர்ட் அமைச்சர் திரு. முத்துசாமி, முதலமைச்சர், மரியாதைக்குரிய எலக்ட்ரிசிட்டி போர்ட் மினிஸ்டர், அவர்களுடைய பி.ஏ.-க்கள் * ஜப்பானுக்குப் போய் கப்பல் வாங்கி வந்தார்கள். அதற்கு மூன்று இலட்சம் ரூபாய் செலவு என்றுகூடச் சொன்னார்கள். அது மொத்தச் செலவா, அல்லது தனிப்பட்ட செலவா . . .

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது கப்பல் வாங்குவதற்காக * என்று சொன்னார்கள். அது தேவையா? இப்போது சிறு தொழில் மானியக் கோரிக்கை நடந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கப்பல் வாங்குவது பற்றிப் பேசுகிறார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா?

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருக்கும்போது பேசியிருக்கலாம். அவர் பதில் சொல்லியிருப்பார். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) என்ன பேசினார் என்பதைக் கேட்டு நீக்கச் சொல்லுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசியதில் * என்று சொன்னதை மட்டும் நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்னிக்க வேண்டும். ஏற்கெனவே சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே ஜப்பானுக்குப் போய் கப்பல் மற்றும் பல சாதனங்கள் வாங்குவது சம்பந்தமாக எந்தெந்த அமைச்சர்கள் போய் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு & அதர்ஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் இங்கே கொடுத்திருக்கும் புஸ்தகத்திலேயும் இருக்கிறது. ஆகவே அதை வைத்து அமைச்சர்கள், வேண்டியவர்கள், அவர்களுடைய * * பி.ஏ. க்கள், அவர்களின் * எல்லோரும் போயிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ற கருத்திலே சொன்னேன். தப்பாக இருந்தால் மாற்றிக் கொள்கிறேன். ஆனால் அது உண்மைக்கு புறம்பானது என்பத னால் வேண்டாம் என்று சொல்லுகிறார்களா அல்லது தவறான தகவல்கள் சொல்லுவதாக வேண்டாம் என்று சொல்லுகிறார்களா, அல்லது அவையிலே அமைச்சர் இல்லை என்பதனால் வேண்டாம் என்று சொல்லுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர்கள் எல்லாம் போனார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். குறிப்பிலேயும் தரப்பட்டு இருக்கிறது. ஆனால் * * என்று சேர்த்துச் சொல்வது சரியல்ல. அதை நீக்கி விடுகிறேன்

**திரு. அ. ரகுமான்கான்:** மன்னிக்க வேண்டும். சார் அரசு செலவிலோ, தனிப்பட்ட செலவிலோ எல்லோரும் போயிருக்கி றார்கள். கப்பல் வாங்கப்பட்டது. ஆக கப்பல் ஒன்று வந்திருக் கிறது. அது எதற்காக என்று கேட்டால், அந்தக் கப்பல் நிலக் கரியைக் கொண்டு வருவதற்காக. ரா மெட்டீரியல்ஸ், மின்சாரம் (குறுக்கீடு) இது சிறுதொழில் குறித்த மானியம்தான். ஆனால் அதிலே நிலக்கரி வருகிறது. மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, சிறு தொழில்கள் என்று சொல்லுகிறபோது உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். தேனீ வளர்ப்பதும் சிறு தொழில்தான். தேயிலை தயாரிப்பதும் சிறு தொழில்தான். பட்டுப் பூச்சி வளர்ப்பதும் சிறு தொழில்தான். தோல் பதனிடும் தொழிற்சாலையை வைத்திருப்பதும் சிறு தொழில்தான். இன்னும் தீப்பெட்டி தொழிற்சாலை, ஜவ்வரிசி தொழிற்சாலை என்று இவைகள் எல்லாம் சேர்ந்ததுதான் சிறு தொழில்கள்.

ஆனால் இவைகளை யெல்லாம் தெரியாமல் அறியாமையின் காரணமாக நான் பேசிக் கொண்டிருப்பதாக கற்றறிந்த மேதை, அருமை நண்பர் * * போன்றவர்கள் சொல்லுவார் களேயானால் அதற்காக நான் வருத்தப்படுகிறேன். (கூச்சல்,

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



குழப்பம்) சார், இப்படிப்பட்ட நடவடிக்கைகளைத்தான் இவர்கள் மேற்கொள்ளுவார்களேயானால், பிறகு எனக்கும் தெரியும். நானும் யாரையும் பேச விடாமல் செய்வேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் யாரையும் குறிப்பிட்டு பேசக் கூடாது. பெயர் குறிப்பிட்டுச் சொன்னதை நீக்கும்படி ஆணையிடுகிறேன். நீக்கியாகிவிட்டது, நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சுருக்கமாக பேச வேண்டும். மேலே மேலே பேசிக் கொண்டேயிருக்காதீர்கள். மானியத்திற்கு தொடர்பானது என்று பேசிக் கொண்டேயிருந்தால், எலக்ட்ரி சிட்டி, அக்ரிகல்சுரல் டாக்டஸ் என்று பல துறைகளுக்கும் போக லாம். ஒரு தொழில் என்றால் எல்லாத் துறைகளும் சம்பந்தப் பட்டுத்தான் இருக்கும். ஆகவே சுருக்கமாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினரை பெயர் குறிப்பிட்டுச் சொன்னதை நீக்கியாகிவிட்டது. எல்லோரும் உட்காருங்கள். ரகுமான்கான் தொடருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சிறப்பாக இருக்க வேண்டுமானால் நிலக்கரி மின் சாரம் போன்றவைகள் எல்லாம் அதிகமாக கிடைக்க வேண்டும். கிடைக்கிறதா? மூலப் பொருள்கள் எல்லாம் வெளியிலே இருந்து கொண்டு வரப்பட வேண்டும். இவைகள் எல்லாம் இன்னும் அதிகமாகக் கிடைக்க, இருக்கின்ற சிக்கல்கள் எல்லாம் போக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மத்திய சர்க்கார்தான் இந்த சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது என்று சொல்லி விட முடியாது. காரணம் 1 கோடி ரூபாய் வரையில் லெட்டர் ஆப் இன்டென்ட் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் வரையில் வெளிநாடுகளிலிருந்து தேவையான சாதனங் களை, சிறு சிறு சாமான்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மே 3

இன்னொன்றையும் நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன். பஞ்சாபை பார்க்கிறபோது, ஹரியானாவைப் பார்க்கிறபோது, அவைகளையெல்லாம் தமிழகத்தோடு ஒப்பிடுகிறபோது, அங்கேயெல்லாம் சிறு தொழில்கள் பெரிதும் வளர்ச்சி பெற்று சிறப்பாக விளங்குவதைப் பார்க்கிறோம். அதைப் போலவே உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஜப்பான் நாடு, அமெரிக்கா, சோவியத் ருஷ்யா ஆகியவைகளைக் காட்டிலும் இது போன்ற சிறு தொழில்களில் முன்னணியில் நிற்கிறது. அப்படியானால் தமிழகத்திலே அப்படிப்பட்ட டெக்னிகல் எக்ஸ்பர்ட்களே இல்லையா என்று கேட்டால், இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்க அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? சிறு தொழில்களுக்கு கேப்பிடல் இன்வெஸ்ட்மெண்ட் என்ற முறையிலே கடன் உதவி கிடைப்பதற்கு, ராமெட்டீரியல்ஸ், எலக்ட்ரிசிட்டி, நிலக்கரி போன்றவைகள் எல்லாம் சிறப்பாக கிடைப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது, ஒன்றும் இல்லை.

பண உதவி செய்கின்ற நிறுவனங்கள் ஏதோ இருக்கின்றன. அரசு மானியமும் கொடுக்கிறது. சில கார்ப்பொரேஷன்கள் கூட அப்படி உதவி செய்வதாக சொல்லப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்த கேப்பிடல் இன்வெஸ்ட்மெண்ட் பற்றி உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். இன்னும் எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு சிறு தொழில்கள் செய்ய வரும் முதலாளிகள் அந்த சொசைட்டிகளை, நிதி உதவி கோரி அணுகினால், அந்த அப்ளிகேஷன்கள், மனுக்கள் எப்படி மூவ் ஆகிறது? எப்படி சாங்ஷன் ஆகிறது? அதற்கிடையில் இருக்கிற மர்மங்கள் என்ன? * * ஆகவே பெட்டிஷன் டிஸ்போசல் டிலே ஆகிறது. இதனால் அமவுண்ட் சாங்ஷன் ஆவது தாமதம் ஆகிறது. இதனால் கேபிட்டல் இன்வெஸ்ட்மெண்ட முடியாமல் போகிறது. ஆகவே சிறுதொழிலில் தேக்கம் ஏற்படுகிறது. எனவே இந்த நிதி வழங்குகிற துறையிலே * * என்ற பார்வை கூடாது. நாம் தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாகப் பணிகளைச் செய்கிறோம்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மே 3] [திரு. அ. ரகுமான்கான்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஸ்வீப்பிங்காக சொல்வது சரியாக இருக்காது. ஸ்பெசிபிக்காகச் சொன்னால் அமைச்சர் பதில் அளிக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, நான் ஆர்கியூமெண்டாக ஒன்றைச் சொல்கிறேன். இதே அவையில் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் வேறு மாவட்டங்களுக்கு தஞ்சாவூரிலிருந்து அரிசி கடத்தப்பட்டது என்று நிர்வாகத்தை மொத்தமாகச் சொல்வதில் தவறில்லை யென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது இருக்கிற முறை ஸ்வீப்பிங் அலிகேஷனை அவாய்ட் பண்ண வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** குறிப்பிட்டுச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குறிப்பிட்டுச் சொல்வதற்கு விதி இருக்கிறது. (குறுக்கீடு) அமைச்சர்கள், உறுப்பினர்கள், அதிகாரிகள் மீது சொல்ல வேண்டுமென்றால் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். திடீரென்று பேச முடியாது.

**திரு. அ. ரகுமான்கான் :** அங்கேதான் சிக்கலே ஆரம்பிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆகவே அது வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** எனக்குக் கிடைத்திருக்கிற தகவலைச் சொல்வதற்கு அனுமதித்தால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு முதலில் அனுமதி பெறவேண்டும். விதி 93 இருக்கிறது.

According to that 'whenever an allegation is made against a Minister or official, prior permission of the Chair should be obtained.'

[பேரவைத் துணைத் தலைவர்] [1986 மே 3

என்று அதிலே இருக்கிறது. (குறுக்கீடு) அப்படி பேச அனுமதித்தால் இந்தப் பக்கத்திலும் பேச ஆரம்பிப்பார்கள். பிறகு பிரச்சனையாகி விடும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு தெரியாதது அல்ல. தாங்கள் ஒரு வழக்கறிஞர். நடைமுறை தெரிந்தவர். பாங்கிலே லோன் வாங்குவதில் கால தாமதம் ஆகிறதா இல்லையா? பெட்டிஷன் டிஸ்போசல் ஆவதில் பிரச்சனை இருக்கிறதா, இல்லையா? நான் லைனை மாற்றி பேசுகிறேன். பெட்டிஷன் டிஸ்போசல் ஆவதில் காலதாமதம் ஆகிறது. ஒரு கனமான பொருளை வைத்தால்தான் நகர்கிறேன் என்று சொல்கிறது. அதுவும் இன்னும் சொல்லப் போனால் சில முக்கியமான நபர்கள் வந்து அந்த கனத்தை வைத்தால்தான் அது நகர்கிற கொடுமையான சூழ்நிலை இருக்கிறபோது சிறு தொழில் எப்படி வளரும்?

திரு. மா. சின்னராசு: துணைத் தலைவர் அவர்களே, நமக்குத் தெரியாத சில விஷயங்களை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அவருடைய அனுபவத்திலிருந்து சொல்கிறார்களா? * * என்ற நிலை நமக்கு இல்லை. நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் யார் தொழில் செய்ய விண்ணப்பித்தாலும் அவர்களுக்கு உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் போகக்கூடாது என்ற தடையும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் போகக் கூடாது என்ற தடையும் கிடையாது. அப்படி யாருக்காவது பேவரிட்டிசம் கொடுத்தோ, அல்லது தகுதியான விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டோ இருந்தால் அதை அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசலாம். அப்படியில்லாமல் * * சொல்வது நிர்வாகத்தை குறை கூறுவதாக இருக்கிறது. அதே சமயத்தில் தேவையில்லாமல் சொல்வதாகவும் இருக்கிறது. ஆகவே அது தேவையில்லை என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மே 3]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சின்னராசு அவர்கள் துணைத் தலைவராக வர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம்தான். ஆனாலும் இப்போது நீங்கள் துணைத் தலைவராக இருந்துசொல்கிற யோசனையை ஏற்று என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை என்னவென்றால் தோல் பதனிடும் தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையைப் பற்றி இதற்கு முன்னாலே வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினராக இருந்த குலசேகரபாண்டியன் அவர்கள் இங்கே இந்த அவையிலே பேசினார்கள். நான் இதை இரண்டு நாட்களாக படித்துப் பார்த்தேன். ஏனென்றால் பேசுகிறபோது விவரம் தெரியாமல் பேசிவிட்டேன் என்று நண்பர் துரைசாமி போன்றவர்கள் கேட்டு விட்டால் என்ன செய்வது என்பதற்காக அதை படித்துப் பார்த்தேன். நம்முடைய குலசேகரபாண்டியன் அவர்கள் பேசுகிறபோது 400 கோடி ரூபாய் அன்னிய செலாவணி இந்த லெதர் பாக்டரிகள் மூலம் கிடைப்பதாகவும், அதிலே ஏறத்தாழ 300 கோடி ரூபாய் தமிழ் நாட்டின் மூலமாக பாரின் எக்சேன்ஞ் கிடைக்கிறது என்று புள்ளி விவரத்தைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து அவர்கள் இப்படி சொல்லியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் அரசுக்கு ஆலோசனை ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன ஆலோசனை என்று கேட்டால், இந்த தோல் வளர்ச்சிக் கழகம், தோல் உற்பத்திக் கழகம், லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேசன் என்று ஒன்றை உருவாக்குங்கள். அதற்கு ஒரு தலைவரைப் போடுங்கள் என்று சொன்னார். ஆனால் நீங்கள் தோல் வளர்ச்சியிலே கவனம் செலுத்துகிறீர்களோ இல்லையோ, யார் கோரிக்கை வைத்தார்களோ, அவர்களைத் தலைவராக ஆக்கிவிட்டீர்கள். இது எப்படி இருக்கிறது என்று கேட்டால்—அது உங்களுடைய விவகாரம், நாட்டிலே பலர் பல விதமான காரியங்களைச் செய்கிறார்கள்,—அரசியலிலே ஊன முற்றவர்களுக்கு சில வாரியங்களில் வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக இதுபோன்ற வாரியங்களை வைத்து ஏற்பாடு செய்கிறார்கள். இங்கே எப்படி நிலைமை என்பது எனக்குத் தெரியாது. ஆனால்

நான் சொல்ல விரும்புவது எல்லாம் தோல் வளர்ச்சிக் கழகம் என்ன செய்து கொண்டு இருக்கிறது, என்ன சாதித்து இருக்கிறது என்ற விவரத்தைப் பற்றி இந்த பாலிசி நோட்டிலே ஏதாவது போட்டிருக்கிறார்களா என்று நான் பார்த்தேன். ஒரே ஒரு சென்டன்சிலே ஓடிவிடுகிறது. தற்போது மாடர்ன் எகுப்மென்ட் இன்றைக்கு தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு சொசைட்டி ஏற்படுத்தி இருக்கிறார்கள், ஒன்றிரண்டு இடங்களில், ராணிப்பேட்டையில் கூட கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதன் மூலமாகத் தருகிறார்கள்.

அடுத்து பெரிய மெடிக்கல் காலேஜஸ் இருக்கிற இடத்திலே தான்—ஹாஸ்பிட்டல் போன்ற இடங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியும்—தனியார் மருத்துவக் கல்லூரி இருக்கின்ற இடத்திலே தான் பயிற்சி பெறுவார்கள். அதுபோல் வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளில்—தற்போது அடையாறிலே ஒரு லேதர் டெக்னாலஜி இருக்கிறது—இதைப்போன்ற டெக்னால்ஜி, பூட் வேர் டெக்னாலஜி எல்லாம் தொழிற்பேட்டையாக நீங்கள் வைத்திருப்பீர்களானால், அவர்கள் பயிற்சி பெற முடியும். அங்கேயே அவர்கள் டெக்னிக்கல் ஸ்டடி படிக்க முடியும். பிராக்டிகலாக அதைப் பார்க்க முடியும். ஆகவே அந்த மாதிரியாக ஆம்பூர் வாணியம்பாடி, பேரணாம்பட்டு போன்ற பகுதிகளை எல்லாம் ஒரு தொழிற்பேட்டையாக இணைத்து, இதுபோன்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை என்னவென்று கேட்டால் இன்றைக்கு 400 வருடங்களாக இந்தத் தொழில் நடக்கிறது. குரோம்பேட்டை, ஆலந்தூர், பம்பல் போன்ற பகுதிகளில் எல்லாம் நடக்கிறது. இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளி வருகிற கழிவு நீர் ஒரு மிகப் பெரிய சுகாதாரப் பிரச்சனையாக இருந்து வருகிறது. இன்றைக்கு நாம் ராணிப்பேட்டை நகருக்கு போகும்போது தெரியும், வருக, வருக என்று வாழ்த்துவது எது என்றால், இந்த தோல் சம்பந்தமாக கழிவு நீர் என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோன்று இந்த சுகாதாரக் கேட்டுக்கு முக்கியமான காரணமாக இருக்கின்ற இந்த





தோல் தொழிற்சாலை குரோம்பேட்டைப் பகுதியிலும் இருக்கிறது. இங்கே சுற்றுப்புறச் சூழலுக்கு என்று இருக்கிற மந்திரியை நான் எப்போதோ, பார்த்ததாக ஞாபகம். மந்திரி பெயர் கூட மறந்துவிட்டது. அதற்கு என்று இலாக்கா இருப்பதாகவும் எனக்கு ஞாபகம். ஆனால் இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே தீப் பெட்டித் தொழிற்சாலை. சின்னக் குழந்தைகளை எல்லாம் வைத்து வேலை வாங்கிக் கொண்டு இருக்கிற தொழிற்சாலைகள். இன்றைக்கு அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக, அரசியல் சட்டத்திற்கு விரோதமாக வேலை வாங்குகிறார்கள். இது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது மட்டுமல்ல, மனிதாபிமானத்திற்கு விரோதமானது, கொத்தடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். இதுபற்றி விசாரித்த ஹர்பன்சிங் கமிட்டி, ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. நம்முடைய அரசாங்கம் பாராட்டுதலுக்குரிய அரசாங்கம். ஏன் என்று கேட்டால், தங்களுக்கு விரோதமான கருத்தை யாராவது சொல்லி இருந்தால், சபைக்குக் கொண்டு வரமாட்டார்கள். அதை எல்லாம் சபையிலே சொல்ல மாட்டார்கள். அவர்கள் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும், தப்பு அந்தப் பக்கம் இருந்தால், தவறு இருந்தால், அரசாங்கத்திற்கு சிக்கல் இருந்தால், வெளியிலே சொல்ல மாட்டார்கள். அடுத்தவர்களுக்கு சிக்கல் என்றால் அதை அம்பலப்படுத்துவதற்கு உடனடியாக செய்வார்கள். காரணம் தேர்தல் சின்னம் இரட்டை இலை, அதனாலே இரட்டை நிலை. ஆகவே தான் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஹர்பன்சிங் கமிட்டி ரிப்போர்ட்டை எடுத்து, சைல்ட் லேபரை தடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தொழிலாளர் பிரிவினரின் மீது அக்கறையோடு இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு நான் சொல்கிறேன். மிக முக்கியமான பிரச்சனை. தமிழக அரசினுடைய டான்சி நிறு

வனம் ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறது. இன்றைக்கு அங்கே ஆட்குறைப்பு, அங்கே இருக்கக்கூடிய டெக்னிக்கல் ஸ்டாப்புகளை ஆட் குறைப்பு செய்கிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. 8 யூனிட்டுகள் மூடப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் கேட்டுக்கொள்கிறேன். டான்சியிலே ஏறக்குறைய 250 தொழிலாளர்கள் திருமணம் ஆகி, குடும்பம் நடத்திக்கொண்டு, குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு, வாழ்ந்து கொண்டு இருக்கிற தொழிலாளர்கள் தெருவிலே நிற்கவேண்டிய நிலை இருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னார்கள். நீங்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, நான் கேட்க விரும்புவது இன்றைக்கு இருக்கிற வேலையைப் பிடுங்காமல் இருக்கவேண்டும். ஒருவருக்கு வேலை கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, இருக்கிற வேலையை எடுப்பதற்கு ஒரு அரசாங்கமா? இதற்கு என்ன சமாதானம் சொன்னாலும் இது எந்தவிதத்திலே நியாயம்?

அடுத்து நம்முடைய சபாநாயகர் அவர்கள் இந்த மன்றத்திலே பேசினார்கள். ஆளும் கட்சிப் பத்திரிகை கூட தலையங்கம் எழுதியது. * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைகளை நீக்கி விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, * *

***திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைமுன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் மற்றைய நிறுவனங்களும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக இந்தத் துறையின் மூலம் பல்வேறு சாதனைகளை புரட்சித்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தலைவர் அவர்களுடைய ஆட்சியில் 8 ஆண்டுக் காலத்தில் செய்து முடித்திருக்கிறது. பல்வேறு சாதனைகளுக்காக இன்று பல்வேறு நடைமுறைகளை அது தன்னுடைய லட்சியங்களாக ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதையும் நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில், மின்தட்டுப்பாடு தொடர்ந்து இருந்துவந்தாலும், தமிழகத்தில் சிறுதொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து சிறந்த ஆக்கத்தை கொடுத்து இவ்வளவு தூரம் தொழில்கள் பெருகி இருப்பதற்குக் காரணமே இந்தத் துறையினர் எடுத்துக்கொண்டிருக்கிற பெருமுயற்சிதான் என்பதையும் இந்தத் துறையின் மூலம் சிறுதொழில் துவங்க முன் வருபவர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு, அவர்களுக்கான எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து நிதி உதவியும் தாராளமாகச் செய்து கொடுப்பதன் காரணமாக இன்று சிறு தொழில்கள் நம்முடைய தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் பெருகி வருவதற்கு காரணமாக இருக்கிறது என்பதை மாற்றுக் கருத்து உடையவர்களும் உணரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்காண்டு நம்முடைய டி.ஐ.பி.சி.—தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கொடுக்கப்பட்டு வருகின்ற கடனை உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறோம். ஆண்டுக்காண்டு கொடுக்கப்படுகிற கடனை உயர்த்துகிறோம் என்றால் கடன் வாங்கி தொழில் துவங்க முன்வந்திருக்கிறவர்கள் எல்லாம் சொந்தக் காரியத்திற்காக அதை பயன்படுத்திக்கொண்டார்கள் என்று யாரும் சொல்லமுடியாது. மீண்டும் அதை திருப்பிச் செலுத்துகிறார்கள். வாங்கிய கடனை மீண்டும் திருப்பிக் கட்டுகிறார்கள். மீண்டும் கடனை நாம் திருப்பிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆக, தொழில் ஒரு பக்கம் பல்வேறு சிரமங்களுக்கு இடையே வளர்ந்து வருகிறது என்பதை இந்தத் துறையினுடைய சாதனை மூலம் நாம் அறிந்து கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தில் குறிப்பாக கோவை மாவட்டத்தில் இன்று நாளொரு சிறு தொழில் அங்கே துவங்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக நாளொன்றுக்கு ஒரு சிறுதொழில் துவங்கப்படுகிறது என்று சொன்னால் அது மிகை

யாக இருக்காது. அந்த அளவிற்கு அதற்கு முழுமுதற்காரண மாக இருப்பது நம்முடைய சிறு தொழில் முதலீட்டுக் கழகமும் நம்முடைய சிட்கோ-வும் ஆகும் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சிட்கோ நிறுவனத்தினால் கடந்த 7 ஆண்டுகளில் துவங்கப்பட்டிருக்கிற புதிய இண்டஸ்டிரியல் எஸ் டேட்டுகள்—தொழிற்கூடங்கள் பல தாலுக்கா மையங்களிலெல் லாம் அமைந்து இருக்கின்றன. இன்னும் சில ஆண்டுகளுக்கு முன்னால், நம்முடைய கொள்கை குறிப்பிலே பிர்க்காவுக்கு ஒன்று என்று 'டைனி செக்டார்' சிறிய தொழிற் கூடங்களை அமைத்து சிறிய அளவில் முதலீடு செய்ய விரும்பும் நடுத்தர மக்களும் தொழில் துவங்குவதற்கான வாய்ப்பையும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த வகையில், இந்தத் தொழிற் கூடங்கள் மூலம் கிராமப் பகுதி களில் இருக்கிறவர்களும் புதிய வேலையைத் துவங்குவதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிதான் காரணமாக இருந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் ஒன்றியத் தலைநகரங் களில் தொழிற் கூடங்களை அமைக்க தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுகொள்கிறேன்.

உதாரணமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பிற்படுத்தப் பட்ட தாலுக்காவாக அறிவிக்கப்பட்ட அவினாசி தாலுக்காவில் நாம் எதிர்பார்த்த அளவு இன்னும் தொழில்கள் வரவில்லை. அதற்கு நீர் பற்றாக்குறை தான் காரணம். குடிதண்ணீருக்கு கூட கஷ்டமாக இருக்கிற ஒரு நிலைமை. அதோடு மின்சார கட்டுப்பாடு இருக்கிறது என்ற இரண்டாவது காரணம். ஆக, இந்த இரண்டிற்கும் ஒரு வழியை தொழில் நிறுவனமே ஏற்படுத்தி குறைந்த அளவு தொழிற்சாலைகளுக்கான நீர் வசதியை அந்தப் பகுதியிலே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். குடிநீரை மக்களுக்குக் கொடுக்கிற அதே நேரத்தில், சிறு தொழில் துவங்குவதற்கும் ஒரு நிரந்தரமான குடிநீர் திட்டத்தை அந்தப் பகுதியிலே ஏற்படுத்துவதன் மூலம் குறைந்த அளவு நீரை அந்தத் தொழிற்சாலைகளுக்கு கொடுத்து, பிற்படுத்தப்பட்ட பகுதியில், தொழில்கள் தொடர்ந்து வளர்வதற்கான ஆக்கத்தையும் நாம்





(பிற்பகல் 12-10)

கொடுக்கவேண்டுமென்று தெரிவிக்கவிரும்புகிறேன். அதே போன்று பிற்பட்ட தாலுக்கா என்று அறிவித்தவுடன் அங்கே யிருக்கிற நிலத்தினுடைய விலை நாம் எல்லாம் எண்ணிப்பார்க் காத அளவிற்கு உயர்ந்து விட்டது. சாதாரண தொழிலை துவங்க நினைப்பவர்கள் நிலத்திற்காக பெரும் மூலதனத்தை போட்டு விட்டால் அதற்கு நிதி நிறுவனத்தினுடைய உதவி கூட நிலம் வாங்குவதற்கு கிடைக்காது. ஆகவே அப்படி நிலத்தின் விலையை கட்டுப்படுத்துவதற்கு சிட்கோ மூலம் குறைந்தது ஆயிரம் ஏக்கர், 2 ஆயிரம் ஏக்கர் என்று நிலத்தை ஆர்ஜிதம் செய்து அதை Industrial Estate. க்கு ரிசர்வ் செய்த நிலமாக, தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட பூமியாக அறிவித்து அதிலே தொழில் துவங்குவதற்கு எளிய விலையில் சாதாரணமாக நம்மால் தாங்கக்கூடிய சக்தியில் நிலத்தைப் பெற்று தொழில் துவங்க சிட்கோ ஷெட் கொடுக்கவில்லை என்றாலும் கூட அவர்கள் கூடம் அமைத்து கொடுக்கவில்லை என்றாலும் கூட வெறும் நிலமாக அவர்கள் பிளாட் போட்டுக் கொடுத்தால் கூட கோவை யில் மிக ஆர்வத்தோடு தொழிலை துவங்குகிற ஒரு நிலையில் அவினாசியில் பிற்படுத்தப்பட்ட தாலுக்காவில் உள்ளவர்கள் தொழிலை துவங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு ஒன்று, தொழில் முதலீட்டு நிறுவனம் பல்வேறு தொழில்களுக்கு நிதி கொடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படி கொடுக்கின்ற நிதி, மறு நிதி மூலம் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஐ.டி.பி.ஐ. மூலம் அந்த மறு நிதியை நம்முடைய டி.ஐ.ஐ.சி. நிறுவனம் பெறுகிறது. இதிலே பல தொழில்களுக்கு ஐ.டி.பி.ஐ. தடை (Ban) செய்து விடுகிறது. சில தொழில் களுக்கு எல்லாம் நாங்கள் நிதியை கொடுப்பது இல்லை என்று. ஆகவே மறு நிதி அதற்கு கிடையாது என்று அவர்கள் கொடுக் கின்ற வரையறைக்குள் உட்பட்ட தொழில்களுக்கு மட்டுமே டி.ஐ.ஐ.சி. அல்லது வங்கிகள் கூட தொழிலுக்கான முதலீட்டுப் பணத்தை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை நிச்சயமாக மாறவேண்டும்.

இந்தியா முழுவதும் ஒரு தொழில் என்று வைத்து இந்தியாவில் ஏதோ ஒரு மாநிலத்தில் ஒரு தொழில் பெயிலூர் (Failure) ஆகிவிட்டது, வெற்றிகரமாக நடக்கவில்லை, அதில் ஏதோ ஒரு சிலர் மூலதனம் வாங்கியவர் தொழில் தொடங்கவில்லை, அது நிர்வாகத் திறமை இல்லாததன் காரணமாகத் தொழில் தகராறு காரணமாக, அங்கே இருக்கிற சூழ்நிலையின் காரணமாக ஏதோ ஒரு காரணத்தால் அந்தத் தொழில் அங்கே தோல்வி அடைந்துவிட்டது என்ற காரணத்திற்காக அந்தத் தொழிலுக்கு இந்தியாவில் எங்குமே மூலதனம் செய்வதற்கு உகந்த தொழில் அல்ல என்ற வரையறையை ஐ.டி.பி.ஐ. செய்து இருப்பது சரியாக இருக்காது.

உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், காகித ஆலை. காகித ஆலையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் வெற்றிகரமாக நடந்து வருகிறது. சிறிய காகித ஆலைகள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் துவங்கப்பட்டு காகித ஆலைகள் ஒரு யூனிட்டு போட்டவர்கள், இன்றைக்கு அது 4, 5 யூனிட்டுகளாக வளர்த்துக் கொண்டு வந்துள்ளார்கள். ஆனால் இந்தத் தொழில் ஐ.டி.பி.ஐ. பொறுத்தவரையில் அது நிதி பெறுவதற்கு தகுதி இல்லாத தொழில் என்று வைத்து இருக்கிறார்கள். இதனால் நாம் மறு நிதி பெற முடியாமல் டி.ஐ.ஐ.சி. மூலம் அதற்கான வசதி பெற முடியவில்லை.

அதேபோல் பல உருக்கு ஆலைகள். (Steel Casting Units). இது போன்றவைகள் எல்லாம் தடை செய்யப்பட்டதாக ஐ.டி.பி.ஐ. அறிவித்து அதிலே தொழில் முனைபவர்கள் உண்மையிலேயே தமிழகத்தில் அதற்கான வாய்ப்பு இருந்தும் தொழில் முனைபவர்கள் வெற்றிகரமாக நடத்த தகுதி இருந்தும் நம்முடைய நிறுவனங்கள் டி.ஐ.ஐ.சி. நிறுவனம் அல்லது வங்கிகள் அதற்கான உதவி செய்ய முடியாமல் இருக்கின்றன. ஆகவே, நாம் இதை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தவேண்டும். எந்தத் தொழில் தமிழகத்தில் நடத்துவதற்கு உகந்த தொழில் என்பதை தீர்மானிக்கிற அதற்கான பரிந்துரை செய்கிற அதிகாரம் நம்முடைய தமிழக அரசுக்குத் தான் இருக்கவேண்டும், நம்முடைய தொழில் துறைக்குத் தான் இருக்க வேண்டும். அந்த





வாய்ப்பையும் நாம் பெறவேண்டும். அதோடு ஐ.டி.பி.ஐ. ரீபைனான்ஸ் இல்லை என்றாலும் கூட சில தொழில்கள் தமிழகத்திற்கு ஏற்ற தொழில்களை நம்முடைய அரசின் உதவியிலே செய்வதற்கு டி.ஐ.ஐ. சியில் தமிழக அரசினுடைய பங்கு மூலதனமும் வேண்டும். அதற்கு என்று 2 கோடி, 3 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டாலும் கூட ஒரு தவிர்க்க முடியாத காரணத்தால் ஐ.டி.பி.ஐ.-லிருந்து ரீபைனான்ஸ் வாங்க முடியாத தொழிலுக்கு நம்முடைய டி.ஐ.ஐ.சி. தமிழக அரசின் நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நமக்கு முக்கியமானது நிதிக்கு அடுத்து மின்சாரம். நிதிக்கும் மேலான அளவுக்கு பணம் கூட எப்படியாவது சமாளித்து தொழிலைத் தொடங்கலாம். ஆனால் மின்சாரம் என்பது நமக்கு கிடைத்ததற்கரிய ஒன்று என்ற கட்டுப்பாடு இருக்கிறது. இதன் காரணமாக சிறிய தொழில் ஆகட்டும், பெரிய தொழில் ஆகட்டும் புதிய தொழில் தமிழகத்தில் துவங்குவதற்கு ஓரளவுக்கு அச்சப்படுகிறார்கள் என்ற நிலையை நாம் உணர்ந்து இருக்கிறோம்.

இந்த நேரத்தில் தனியார் நிறுவனங்கள் கோவை போன்ற சைமா போன்ற பஞ்சாலை நிறுவனங்கள் எல்லாம் தங்களுக்கு வேண்டிய மின்சாரத்தை Carbon Unit. வைத்து உற்பத்தி செய்து கொள்ளுவதற்கு அனுமதி கேட்டு இருக்கிறார்கள். ஆகவே அனுமதி கொடுப்பதில் அரசு கிரிட்டுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று அந்த உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை மின்சார கிரிட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்ததன் காரணத்தால் இன்று அவர்கள் பின் வாங்குகிறார்கள். ஆகவே கிரிட்டுக்கு கொடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. அவர்களுடைய தேவையை அவர்களே உற்பத்தி செய்து பயன்படுத்திக்கொண்டால் மின்சார இலாக்காவில் இருந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மின்சாரம் மிச்சம் ஆகும். அதை அடிப்படையாக வைத்து தயவுசெய்து அந்த Carbon Unit- களை வைக்க முன் வருகிற தனியார் நிறுவனங்களுக்கு முழு அளவு

சுதந்திரத்தை, இந்த நிபந்தனை அற்ற உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக பிற்பட்ட தாலுக்காக்களில் சிறு தொழில்களைத் துவங்க நாம் பல வசதிகளைக் கொடுத்தாலும், லைசன்ஸ் முறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தின் காரணமாக உடனடியாக தொழில்களைத் துவங்க முடிவதில்லை. நம்முடைய நிதி நிறுவனங்கள் உடனடியாக நிதியைக் கொடுத்துவிடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், ஒரு மாதத்திற்குள் இந்த நிதியைப் பெற்று விட முடியும்" அந்த அளவிற்கு அவர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்களில் அடிப்படையாக வேண்டிய மோட்டார் வைப்பதற்கு லைசன்ஸ் பெறவேண்டுமென்றால், அல்லது ஹெல்த் டிபார்ட்மெண்டில் இருக்கிற அதிகாரிகளிடம் அதற்கான உரிமத்தைப் பெறுவது என்றால், அவர்கள் அதிக அளவில் காலதாமதம் செய்கிறார்கள். தொழில் முனைவர்கள் மனம் வெறுத்து அந்தத் தொழிலை விட்டுவிட்டுப் போகின்ற அளவிற்கு அந்த அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு ஏற்கனவே தொழில் துறை அமைச்சர் உறுதி சொன்னதுபோல், சிறு தொழில்களுக்கு இந்த லைசன்ஸ் முறையே தேவையில்லை. அதாவது லைசன்ஸ் இல்லாமல் தொழில்களைத் துவங்க, அந்த இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டின் கீழ் மாவட்ட அளவிலேயுள்ள மாவட்ட தொழில் மையத்தின் அனுமதியைப் பெற்றுவிட்டால் போதும். ரூ. 20 இலட்சத்திற்கும் கீழ் முதலீடு செய்கின்ற சிறு தொழிலாக இருக்குமானால், அந்தத் தேவையில்லாத லைசன்ஸ் முறைகள் இப்போது நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய அந்த உரிமங்கள், தேவையில்லை. என்றும் பஞ்சாபில் இருப்பது போல ஓரளவிற்கு சுதந்திரத்தைக் கொடுத்து, அதற்குப் பிறகு, அந்தத் தொழில் வளர்ந்ததற்குப் பின்னர், நாம் கட்டுப்பாட்டை விதிக்கலாம். தொழில் வளர வளர மாறுதல்கள் செய்து, அந்த வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளித்து கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டின் கீழ் இருக்கும் மாவட்ட தொழில் மையத்திலே உரிமம் பெற்றுக் கொள்ளலாம் என்ற உறுதியை நடைமுறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.



அது இப்போது கொள்கையளவில் இருக்கிறது. அடுத்து நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது, தொழில் முனைவர்களுக்கு இது அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆகவே நம்முடைய கோவை மாவட்டத்தைச் சார்ந்த சிறு தொழில்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற மூலப் பொருள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில், மத்திய அரசைச் சார்ந்த கோல் அதாரிட்டி ஆப் இந்தியாவின் மூலமாகப் பெறுகிற மூலப் பொருள் தட்டுப்பாட்டை நீக்க ஆலோசனைக் குழு ஒன்றை இங்கே வைத்து, சிறு தொழில்கள் பிரச்சினை என்று வருகின்ற போது அவர்களோடு கலந்தாலோசித்து, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற நிரந்தர ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, கைப் பொருள் ஒன்று தன்னிடத்திலே இருக்க, அதை வைத்துக்கொண்டு, ஒருவன் தொழில் செய்வானேயானால், மலையின் மேல் ஏறி, யானைப் போரைக் கண்டதைப்போல என்கின்ற பொருளில்,

"குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை"

என்ற வள்ளுவர் வாக்கை இங்கே நினைவுபடுத்தி, இந்த ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கையிலே ஒரு சில கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். அவ்வாறு என்னுடைய கருத்துக்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இங்கே கூறப்படுகின்ற முகத்து, இங்கே எனக்கு முன்னாலே பேசிய, என்னுடைய அன்பு நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்களே, ஏதோ கைச் சின்னத்திற்கு ஓட்டு போட்டதன் காரணமாகத்தான், இன்றைக்கு விலைவாசி எல்லாம் ஏறிப் போய்விட்டது போன்ற கருத்திலே இங்கே பேசியபோது, அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதய சூரியனுக்கு ஓட்டுப் போட்டதன் காரணமாக, விலை ஏறுவதற்குக் கூட, பொருள்களே இல்லாத நிலைமைகள்கூட இந்த நாட்டிலே ஏற்பட்டன என்றும், இப்போதுகூட உதயசூரியனுக்கு ஓட்டுப் போட்டு, நகராட்சியிலே தலைவர்களாக வந்திருக்கிறவர்கள், வீட்டு வரியும், தொழில்

வரியும், தண்ணீர் வரியையும் கூட்டாமல், அல்லது நீக்கியோ, ஆட்சி செய்வார்கள் என்ற கருத்தை இந்த மன்றத்தில் தெரிவித்திருந்தால், சால்ச் சிறந்ததாக இருக்குமென்று சொல்லி, இந்தத் தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் துறை சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட சில பொருள்களை எங்களுக்கு அன்புடன் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தொழில் வளர்ச்சியிலே, தொழில் வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் முக்கியமான கருத்தாகக் கொண்டுதான் இந்தத் துறை செயல்படுகின்றது என்கின்ற கருத்து சொல்லப்படுகிறது. ஆனால் அவ்வாறு நீங்கள் செயல்படுவீர்களேயானால், இன்றைக்கு சென்னையிலும், நீலகிரியிலும், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் மற்றும் அண்ணா மாவட்டங்கள் எல்லாம் புதியதாக ஏற்பட்டும் கூட, அங்கே எல்லாம் மாவட்டத் தொழில் மையங்கள் இல்லை. அங்கேயெல்லாம் மாவட்டத் தொழில் மையங்களை உடனடியாக நீங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் மாவட்டத் தொழில் மையங்களிலே தவறுகள் நடக்கலாம். அப்படித் தவறுகள் நடந்தாலும்கூட, சில நன்மைகள் விளைகின்றன என்பதை யாரும் ஏற்றுக்கொள்வார்கள். அதை யாரும் மறுக்க முடியாத காரணத்தால், தவறுகள் இருந்தாலும் அந்தத் தவறுகளினாலும் நன்மைகள் விளைகின்ற காரணத்தால், எல்லா மாவட்டங்களிலும், சென்னையை உட்படுத்தி, அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டத் தொழில் மையங்களை ஏற்படுத்த வேண்டும்.

(பிற்பகல் 12-20)

இந்தத் தொழில் வளர்ச்சி மையங்களைப்பற்றிப் பேசுகின்றபோது பாரதப் பிரதமருடைய சுயவேலை வாய்ப்புக் குறியீடுகளைக் கொடுத்து அதிலே அதிகப்படியாக தமிழகம் செயல்பட்டு குறியீட்டை மிஞ்சியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். கடந்த ஆண்டு குறியீடுகள் குறைந்துவந்து கடைசியில் அதாவது 1985-86 ஆம் ஆண்டிலே 18100 என்று குறியீடு வைத்து 18510 நபர்களுக்கு





சுய வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம் என்று கூறி இருக்கிறீர்கள். வேலைவாய்ப்பு என்பது ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே இருக்க வேண்டுமே தவிர வேலைவாய்ப்புக் குறையுமானால் அந்தத் திட்டமே சிறப்பாகச் செயல்படவில்லை என்று பொருள் ஆகும். தமிழகத்திலே சுயவேலைவாய்ப்புக் கேட்டு வருகிற இளைஞர்களே இல்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன். இந்தக் குறியீடு மிஞ்சப்படுமானால் அடுத்த ஆண்டு, சென்ற ஆண்டு மிஞ்சப்பட்ட குறியீட்டை அடிப்படையாக வைத்து நீங்கள் செயல்பட வேண்டுமே தவிர சென்ற ஆண்டு மிஞ்சப்பட்ட குறியீட்டைக் குறைத்து அதையே குறியீடாக வைத்து சிறப்பாகச் செயல்படுவதற்கு இலக்கணமாக அமையாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் டான்சி பற்றிப் பக்கம் பக்கமாகப் பேசிச் சென்றார்கள். டான்சி நிறுவனத்திலே 20 கோடிக்கு வியாபாரம் நடைபெற்றும் 20 சதவீதமாவது லாபம் வரும் என்று எதிர்பார்க்கிற நேரத்திலே இன்றைக்கு 20 விழுக்காடு நட்டத்தில் அது இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அதற்காக ஒரு பொதுப்படையான அல்லது ஓப்பன் என்குயரி வைத்து எதனால் லாபத்திலே அது நடக்கவில்லை, என்ன காரணத்தினால் நட்டம் அதிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த உலகத்திற்கு அரசு விளக்கியாக வேண்டும்.

இன்றைக்கு டான்சியிலே, விண்ணமங்கலம் என்ற இடத்திலே ஒரு தோல் தொழிற்சாலை இருக்கிறது, அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விண்ணமங்கலம் தொழிற்சாலையிலே நடக்கிற ஊழல்கள் விண்ணையே தொடுகிற அளவுக்கு தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு வைக்க விரும்புகிறேன். நான் காலத்தின் அருமையைக் கருதி ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் எடுத்துரைத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கே Sarvo machine என்ற மெஷின் 5 லட்ச ரூபாய் செலவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்டது. வாங்கிய அந்த மெஷின் அங்கே வந்து சேர்வ

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 மே 3

தற்கு ஒரு ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது. வாங்கப்பட்ட அந்த மெஷின் இயங்குவதற்கு 2 ஆண்டுக்காலம் ஆகியிருக்கிறது. இப்படி காலதாமதம் ஆகி அந்த மெஷினுக்குச் செலவு செய்தது எல்லாம் நட்டம் என்ற அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த மெஷினை வைக்கவேண்டிய இடத்தில் வைக்காமல் தூசியும் குப்பையும் கூளமும் நிறைந்த இடத்தில் வைத்த காரணத்தினால் அந்த மெஷின் இயங்காமல் முடங்கிவிட்ட அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று 1981 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட அந்த மெஷின் 1984 ஆம் ஆண்டிலேதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் 4 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று 1983 ஆம் ஆண்டிலே பிப்ரவரி மாதத்தில் 2 லட்சம் ரூபாய் செலவில் இரண்டு Vulcanising machine வாங்கப்பட்டிருக்கின்றன. அதை வாங்கியபிறகு அதைப் பயன்படுத்த வேண்டும் என்றால் அதன் தொடர்புடைய Accessories வாங்கினால்தான் பெரிய மெஷினைப் பயன்படுத்த முடியும். யானையை வாங்கிவிட்டு தோரட்டியை வாங்காதவன் கதைபோல இருக்கிறது. Vulcanising machine வாங்கியவர்கள், Accessories வாங்காத காரணத்தினால் வாங்கிய மெஷினைப் பயன்படுத்த முடியாமல் போய் அது துருப் பிடித்துக் கொண்டிருக்கிற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

விண்ணமங்கலத்திலே இருக்கிற தோல் தொழிற்சாலையிலே இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற தோல் பொருட்களின் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்கள் நாம் அன்னியச் செலாவணியாகப் பெற்று வருகிறோம். இவ்வாறு அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகிற அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, தனியார் நிறுவனமாக இருந்தாலும் சரி, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக வருகிற அன்னியச் செலாவணியை ஊக்குவிக்கின்ற முறையில் பல வரிச் சலுகைகளையும் பல இன்சென்டிவ்களையும் அளித்து ஏற்றுமதி இறக்குமதியில் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்கிற நிலை இருக்கிறது. ஆனால் விண்ணமங்கலம் தோல் தொழிற்சாலையிலே அதற்காக சாதாரணமாக வேறு எதுவும்



1986 மே 3] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

செய்திருக்க வேண்டாம், குறிப்பிட்ட காலத்திலே அதற்கான மனுவை மத்திய அரசுக்கு நாங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம், ஏற்றுமதி செய்கிற வருமானத்திலிருந்து எங்களுக்கு வரிச் சலுகை தாருங்கள் என்று கேட்டு குறிப்பிட்ட காலத்திலே மனுப் போடாத காரணத்தினாலே ஒரு ஆண்டிலே 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த நிர்வாகம் என்ன செய்து கொண்டிருக்கிறது? அந்த நிர்வாகம் இயங்குகின்றதா? அந்த நிர்வாகம் செயல்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்த நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? நான் சொன்ன இந்தக் குற்றச்சாட்டுக்களின் காரணமாக சுமார் 50 இலட்சம் ரூபாய் ஒரே நிர்வாகத்திலே நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்றால், சிறு தொழில்களை நாம் ஊக்குவிக்க வேண்டும்; சிறு தொழில்களை நாம் முன்னேற்ற வேண்டும்; சிறு தொழில்கள் முன்னேறினால்தான் வீடு முன்னேறும்; வீடு முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்று பக்கம் பக்கமாகப் பேசுவதால் என்ன பயன்? இதனால் யாருக்கு என்ன இலாபம் என்பதைத்தான் கேட்க ஆசைப்படுகிறேன். செய்வன ஒன்றைச் செய்ய வேண்டும், அந்த ஒன்றையும் நன்றாகச் செய்ய வேண்டும், நன்றாகச் செய்வதையும் இன்றே செய்ய வேண்டும்; இன்றே செய்வதையும் திருந்தச் செய்ய வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்காவிட்டால், விழலுக்கு இறைத்த நீராகத்தான் இந்தப் பணம் செல்லும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பல தொழில்களைப் பற்றி இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் மூலம் பல தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 'காயர் மார்க்கெட்டிங் சொசைட்டி' என்று கேரளாவை ஒட்டியுள்ள தென்காசியில் பல காயர் இண்டஸ்ட்ரிகள் என்று, தென்னை மட்டைகளிலிருந்து நார் எடுக்கின்ற தொழில்கள் ஏகமாகப் பெருகி, இன்றைக்கு அந்தத் தொழிற்சாலைகள் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் எங்கள் பகுதியில் எடுக்கின்ற நார்களைக் கொண்டு முழுப் பொருட்களாக அவற்றை மாற்றுகின்ற வாய்ப்பு தமிழகத்தில் அதிகமாக இல்லாததால்— கேரளாவிற்குக் கொண்டு செல்வதையும் தடுத்து விட்ட

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 மே 3

தால், அந்தத் தொழிற்சாலைகள் நலிந்து கொண்டு வருகின்றன. நம்மிடத்திலே மூலப்பொருட்கள் இருக்கின்றன. ஆனால் நம்மிடத்திலே அதற்காகச் செய்கின்ற தொழில் நுணுக்கங்கள் இல்லாததால் இந்த நிலைமை இருக்கிறது. குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டுமென்பது நம்முடைய இலட்சியம், நம்முடைய கோட்பாடு என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்தக் கயிறு பொருட்களை நல்ல பொருட்களாக மாற்றி அவற்றை விற்பதற்கான தொழில் நுணுக்கங்கள் எங்கள் பகுதியில் இல்லை. அந்தத் தொழில் நுணுக்கங்களை அந்தப் பகுதியில் கொண்டு வந்தால், எண்ணற்ற ஏழை மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதை நான் இங்கே உங்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

அதைப்போல, எங்கள் பகுதியில் உள்ள கிராமங்களில் பீடி சுற்றுகின்ற தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். உங்களுடைய கிராமத் தொழில் திட்டத்தில் பீடித் தொழில் வருகிறதா இல்லையா என்பது தெரியவில்லை. நான் படித்த அளவில், பாலிசி நோட்டிலே பீடித் தொழில் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எனவே, இதிலே அது இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் 'Subjected to lot of exploitation'. அவர்கள் இன்றைக்கு சுரண்டப்படுகிறார்கள். அவர்களுக்குச் சரியானபடி மருத்துவ வசதி இல்லை. அவர்கள் எல்லோரும் குடிசைத் தொழிலாக இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பெண்கள் வீட்டு வேலை போக மற்ற நேரங்களில் பீடி சுற்றுகிறார்கள். இந்தத் தொழிலினால் அவர்களுக்குக் காசு வருகிறதோ இல்லையோ டி.பி. நோய் மட்டும் வருகிறது. இதனால் அந்த மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அதை அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது மைய அரசானது, தொழிலாளர் நலன் என்று சொல்லி பீடித் தொழிலாளர்களுக்காக, தென்காசியிலே தனியாக ஆஸ்பத்திரியை வைத்திருக்கிறது. அப்படியென்றால் நம்முடைய மாநில அரசும் இதற்காக நம்முடைய ஏழை மக்களுக்கு உதவக் கூடாதா? டெல்லியிலே இருப்பவர்கள் தென்காசியில் பீடித் தொழிலாளர்களுக்காக ஆஸ்பத்திரியை நடத்துகின்றபொழுது சென்னையிலே உள்ள நாம் அதை விரிவுபடுத்திச் சிறப்பாகச் செய்தால் என்ன என்றுதான் கேட்க விரும்புகிறேன்.



1986 மே 3] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

ஏறக்குறைய குடிசைத் தொழில்களைப்பற்றியே இன்றைக்கு இதிலே பேசப்பட்டாலும்கூட, எலக்ட்ரானிக் தொழில்களைப் பொறுத்தவரையில் ஜப்பான் மிஞ்சியிருக்கிறது. குடிசைத் தொழில் முறையில் அவர்கள் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். அதைப்போல கிராமப்புறங்களில் உள்ள உழைப்பாளிகளை, பீடியைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற நம்முடைய சகோதரர்களையும், சகோதரிகளையும் மோட்டிவேட் செய்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தால், அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்தினால், எலக்ட்ரானிக் தொழில் நம்முடைய மாநிலத்தில் முன்னேற்றம் அடைவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்; அதன் மூலம் பொருளாதாரமும் வளரும்; தொழிலாளர்களுக்கு டி.பி. நோய் வருகின்ற தன்மைகள் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், எலக்ட்ரானிக் பற்றிச் சொல்லுகின்ற காரணத்தால் கூறுகிறேன், குற்றாலத்திலே இருக்கின்ற சீதோஷ்ண நிலையை மனத்திற் கொண்டு, குற்றாலம் பகுதியிலே எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்-க்கு என்று தனியாக ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று காலையில்கூட தென்காசி தாலுக்காவை தொழிற்துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கின்ற செயற்குறிப்பு பற்றிய வினா வந்த நேரத்தில்கூட மாண்புமிகு தொழிற்துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், தென்காசி தாலுக்காவை தொழிற்துறையில் பிற்பட்ட தாலுக்காவாக அமைப்பதற்கு, ஏ. பி, சி மின்பதில் பி என்ற இனத்தில் தென்காசியைத் தொழிற் துறையில் பிற்பட்ட தாலுக்காவாக அமைப்பதற்கான ஆலோசனை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டு, எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரியல்

[திரு. ஆர். வேங்கடரமணன்] [1986 மே 3

எஸ்டேட் ஒன்றை சிட்கோ மூலம் தொடங்கிவிட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மத்திய அரசு தென்காசி தாலுக்காவை தொழிற்துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்த பிறகு 25 ஆண்டுகள் கழித்து தொழில்கள் வருவது என்ற முறையைத் தடுக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பது பற்றி மத்திய அரசுக்கு எப்பொழுது நீங்கள் உங்களுடைய வேண்டுகோளை அனுப்பிவிட்டீர்களோ அப்பொழுதே தொடர்ந்து இந்தத் தொழிற்துறை வல்லுநர்களையும், அதிகாரிகளையும் அனுப்பி ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்றும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

தஞ்சை மாவட்டத்திலே, சிட்கோ மூலமாக, தொழிற்பேட்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

டான்சியின் மூலமாக, முதன் முதலிலே, மொப்பெட் கம்பெனி ஆரம்பித்தார்கள். தமிழ்நாட்டில் அல்ல, இந்தியாவிலேயே, மொப்பெட் அவ்வளவு அதிகமான அளவு பிரபலமாகாத காலத்திலே, தமிழ்நாட்டிலேதான் மொப்பெட் செய்யும் தொழிற்சாலை வந்துங்கூட, தகுந்த சேல்ஸ் ப்ரொசீஜர் இல்லாத காரணத்தாலே, அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு முடங்கிவிட்டாலுங்கூட அந்த கம்பெனியிலே இருக்கிற இயந்திரங்களை வைத்து, வேறு சில பொருள்கள் தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பயன்படுத்த நான் ஒரு நல்ல கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மொப்பெட் இன்ஜின், மோட்டார் சைக்கிள் இன்ஜின்களை வைத்து, ஜப்பான் போன்ற நாடுகளிலே ஜெனரேட்டர்கள் உற்பத்தி செய்கிறார்கள். மின்சாரம் கிடைக்காத காரணத்தால், பல வியாபாரிகள் அந்த ஜெனரேட்டர்களை உபயோகிக்கிறார்கள். ஆகவே, மொப்பெட் இன்ஜினை வைத்து, ஜெனரேட்டர்கள் உற்பத்தி செய்தால், பொதுமக்களுக்கும் பயன் கிடைக்கும், கம்பெனிக்கும் இலாபம் கிடைக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 3] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

செரிகல்ச்சர் பற்றிச் சொல்லும்போது, முதன் முதலிலே செரிகல்ச்சர் ஆரம்பிக்கப்பட்ட இடம் என்னுடைய தொகுதியிலே உள்ள குற்றாலத்திலேதான். முதல் கோணல் முற்றும் கோணல் என்று சொல்வார்கள். அதைப்போல், தென்காசியிலே அதை ஆரம்பித்தபோது எப்படியிருந்ததோ, அதிலே எந்தவிதமான புதிய வசதிகளும் செய்யப்படாமல் அப்படியே இருக்கிறது. எனக்குக்கூட நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் பள்ளிக்கூடத்திலே நான்காவது வகுப்பு மாணவனாக இருந்தபோது, எக்ஸ்கர்ஷன் என்று அழைத்துச் சென்று காண்பித்தார்கள், பட்டு நூலை எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக. அந்தச் சம்பவங்கள் எனக்கு நன்றாக ஞாபகத்திலே இருக்கிறது. அன்றிருந்த நிலையிலேயே இன்றும் இருக்கிறது. ஆகவே, அதை முன்னேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையைப் பற்றி பல பேர்கள் சொன்னார்கள். கதிர்வேலு அவர்கள் இராணிப்பேட்டையிலே இருக்கிற சிட்கோ தொழிற்சாலையினுடைய கஷ்டங்களைப் பற்றியும் அங்கேயிருக்கிற தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீர் பிரச்னையைப் பற்றியும் இந்த மன்றத்திலே அடிக்கடி எடுத்துச் சொன்னார்கள். 'பாலிசி' நோட்டிலே சொல்லியிருக்கிறார்கள், அப்பிரச்னையைத் தீர்க்க ஆவன செய்வோம் என்று. செய்வோம் என்று சொல்வதற்கும் செய்தோம் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. கழிவு நீரால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றி எல்லாம் சண்டே பத்திரிகை எழுதியிருக்கிறது. நாங்கள் செய்வோம், எதிர்காலத்தில் செய்யப்படும் என்ற நிலையில்லாமல், இன்றே செய்யுங்கள் என்ற வேண்டுகோளோடு, அதை நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மாவட்ட தொழில் மையங்களை அதிகமாக அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முதலிலே வைத்தேன். மாவட்டத் தொழில் மையங்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, சிபாரிசு செய்து, வங்கிகளுக்குக் கடன் வழங்க அனுப்பினாலும்கூட மாவட்டத் தொழில் மையங்கள் சொல்கிற தொழில்களைத் துவக்கக்கூடாது, வேறு தொழில்களைத் துவக்குங்கள் என்று வங்கிகள் சொல்கின்ற நிலையிருக்கிறது.

ஆகவே, ஒரு சீரான உறவு நிலை இல்லை—லாக் ஆப் கோஆர்டினேஷன் என்று சொல்லலாம். அந்த நிலைமை, இன்றைக்குத் தமிழகத்திலே பல இடங்களிலே நீடித்துக் கொண்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புவதெல்லாம், லீட் பேங்க் ஸ்கீம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, கண்டிப்பாக, தொழில் முனைவோர்களுக்கும், வங்கிகளுக்கும் இடையே உறவு நிலையை வளப்படுத்தி, கண்டிப்பாகக் கடன் கொடுக்கக்கூடிய நல்லதொரு நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மானியக் கோரிக்கைகளின் மீது, 9 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். கடந்த 9 ஆண்டுக்காலமாக, புரட்சித் தலைவருடைய தலைமையின் கீழ் இயங்குகின்ற இந்த அரசு, மக்கள் நல்வாழ்வு பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, தொழில்களை, அதிலும் குறிப்பாக, சிறு தொழில்களை, எந்த அளவுக்கு வளர்ச்சி அடையச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்ய சிறந்த ஏற்பாடுகளையும் திட்டங்களையும் தீட்டி, செயல்பட்டு வருகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு கருத்துக்களை தேவையான நல்ல கருத்துக்களை, தொழில் துறை, ஊரகத் தொழில் துறை வளர்ச்சி அடைவதற்கான நல்ல கருத்துக்களை எல்லாம் இங்கே பரவலாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தனித் தனியாகப் பதில் சொல்ல இயலாவிட்டாலும் கூட. ஒட்டு மொத்தமாகச் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி அவர்களுடைய எண்ணங்களை ஈடேற்றுவதற்கு இந்த அரசாங்கம் எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் பணிவாக எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். தொழில் வணிக இயக்ககத்தை பொறுத்தமட்டில் அத்தொழில்களை மேம்படுத்துவதற்கு, நடந்து வரும் தொழில்களையும், புதிய தொழில்களையும் ஊக்கம் அளித்து வேகமாகச் செயல்படுத்துவதற்காக நடைமுறை விதிகளை எளிதாக்குவது, தொழிற் பிரிவுகளுக்கு விரைவாக அனுமதி பெற்றுத்தருவது தனியார் துறையில் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு ஏற்றச்





சூழ்நிலையை உருவாக்குவது மூலப் பொருள்கள் சுலபமாக கிடைக்கும்பொருட்டு ஏற்பாடுகளைச் செய்வது இப்படிப்பட்ட பல்வேறு பணிகளை தொழில் வணிக இயக்ககம் செய்து வருகின்றது. அந்த நிலைமை காரணமாக 1960 முதல் 1983 வரை ஏறக்குறைய 18 ஆண்டு காலத்தில் சுமார் 18,789 சிறு தொழில்கள் பதிவாகியிருந்தன. ஆனால் இன்றைக்கு 31—3—1986 முடிய அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து 70,981 சிறு தொழில்கள் இன்றைக்கு பதிவாகியிருக்கின்றன. 7-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு 6,000 வீதம் மேலும் ஏறக்குறைய 18,000 சிறு தொழில்களை உருவாக்க வேண்டும் என்று குறியீடு வைத்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை ஆண்டு ஒன்றுக்கு 10,000-க்கு மேலாக சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் 6,000 தொழில்கள் என்று குறியீடு செய்யப்பட்டாலும் அந்தத் தொழில்கள் பரவலாக இருக்க வேண்டும் என்பதற்காக இன்னின்ன தொழில்களைத் துவங்க வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டு ஒரே தொழிலை பல பேர் செய்வதால் போட்டி ஏற்படுமே ஒழிய அதனால் பலன் ஏற்படாது என்ற கருத்தின் அடிப்படையில், மின் அணுவியல் இரசாயன மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், மோட்டார் உதிரி பாகங்கள், பொறியியல் மற்ற இனங்கள் என்று இனம் வாரியாக பிரித்து சிறு தொழில்களை பரவலாக வளர்ச்சி அடையச்செய்ய இந்தத் துறை சிறந்த திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இங்கே பல நண்பர்கள் கேள்வி நேரத்தின்போதும் இங்கே நடைபெற்ற விவாதத்தின் போதும் பேசினார்கள். நிரந்தர பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை ஏராளமாக இருக்கின்றன. ஆண்டுக்கு 10,000க்கு மேலாக இருக்கின்றன. ஆனால் இதிலே எந்த அளவிற்கு இயங்கிக் கொண்டு இருக்கிறது என்பதை நீங்கள் சொல்ல வேண்டுமென்று ஒரு பத்து நாட்களுக்கு முன்னாலே கூட கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு பொதுநல கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். 3 மாதத்திற்கு ஒரு முறை நிரந்தர பதிவு செய்யப்பட்ட தொழில் யூனிட்டுகளை இந்தத் துறையைச் சார்ந்த இன்ஸ்பெக்டர்கள் போய் அவை ஒழுங்காக இயங்குகின்றனவா. தொடர்ந்து. இயங்குகின்றனவா என்று கண்காணித்து இருக்கிறார்கள். தொழில் ஆரம்பிக்கும்போது

[திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்] [1986 மே 3

பதிவு உடனடியாக செய்யப்படுவதில்லை. தொழில் ஆரம்பித்த பிறகு அந்தத் தொழில் நடக்கிறதா என்பதைப் பார்த்து அதற்கு போதிய அவகாசம் கொடுத்து பிறகு தான் பதிவு செய்கிறார்கள். இப்படி செய்கின்ற காரணத்தினால் பல பேர் தொழில் தொடங்கினால் கூட பதிவு செய்ய வருவதில்லை. பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை 72,000 என்று சொல்கிறோமே தவிர பதிவு செய்யப்படாமல் இப்போது தமிழகத்தில் இருக்கின்ற எண்ணிக்கை 1½ இலட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதை எதற்காக கணக்கிடுகிறோம் என்றால் மின்சார இணைப்பு பெறுவதற்காக அனுமதி கேட்கிறார்கள். உள்ளாட்சி நிறுவனங்களில் அனுமதி கேட்கிறார்கள்.

அடுத்தபடியாக, கோவையில் மேற்கு ஜெர்மனி அரசுடைய தொழில் நுட்ப உதவியோடு 2.84 கோடி செலவில் பம்ப் மோட்டார் மற்றும் டீசல் போன்றவற்றை அது சம்பந்தப்பட்ட துறைகள் தயாரிப்பதற்கும் வளர்ச்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் அமைக்க தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவாக மத்திய அரசுடைய ஒப்புதல் பெறவேண்டும். சில விளக்கங்களை மத்திய அரசுக்கு கொடுத்திருக்கிறது. அதில் ஒப்புதல் கிடைத்த உடனே அந்தப் பணி முடிவு பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்தபடியாக பல பேர் இங்கு சொன்னார்கள். தொழில் பதிவு செய்வதற்கு நீண்ட நாட்கள் நடக்க வேண்டியிருக்கிறது. பலயிடங்கள் சுற்றி அலைய வேண்டியிருக்கிறது. இது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் சொல்லப்பட்ட கருத்து. அதை அடிப்படையாக வைத்துதான் சிங்கிள் யூனிட் சிஸ்டம் கொண்டு வரப்பட்டு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராக வைத்து ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அதேபோல் மாநில அளவில் தொழில் ஆணையர் மற்றும் வணிக இயக்குநர் அவர்களைத் தலைவராகப் போட்டு ஒரு குழு இயங்குகிறது. இந்த இரு குழுக்களும் மாதம் ஒன்றுக்கு இரண்டு முறை கூடி விவாதித்து எத்தனை தொழில்கள் பதிவு செய்யப்படாமல் நிலுவையில் இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்து ஆராய்ந்து



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

45 நாட்களுக்குப் பிறகும் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால், அனுமதி தரவில்லை என்று சொன்னால் அவற்றை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து உடனடியாக அனுமதி தர ஏற்பாட்டை இந்தக் குழு செய்கிறது. இதன் காரணமாக இன்றைக்கு எதிர்பார்த்ததை விட அந்தப் பணி சிறப்பாக மேலோங்கி இருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 1985—86-ல் 196 கூட்டங்கள் நடத்தப்பட்டு 2,980 பேர்களைப் பொறுத்தவரையில் தீர்வு காணப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களைப்பற்றிச் சொன்னார்கள். சுய வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிப் பேசினார்கள். 1983-84-லே இருந்து கொஞ்சம் கொஞ்சமாக இன்றைக்கு நாம் முன்னேறிக்கொண்டு இருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசும் போது கூட குறிப்பிட்டார்கள். படித்த வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களைப் பொறுத்தவரையில் போதிய அளவுக்கு வங்கிகள் மூலமாக உடனடியாக அவர்களுக்குப் போதிய பணம் கிடைக்க வில்லை என்று சொன்னார்கள். சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. முதலிலே இவ்வளவு என்று ஒரு குறியீடு வைக்கிறோம். ஏராளமாக வருகின்ற மனுக்களை எல்லாம் பரிசீலனை செய்து, குறியீட்டிற்கு மேலாகவே அதாவது 10 ஆயிரம் என்று சொன்னால் 12 ஆயிரமாகத் தொகுத்து எடுத்து மிகவும் கூர்ந்து கவனித்து அதுவும் அந்தச் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகளை உடன் வைத்துக் கொண்டு பார்க்கிறோம். அதிலே சிலவற்றைக் கழித்துவிட்டு அவர்கள் ஒப்புதல் தருகிறார்கள். அவ்வாறு ஒப்புதல் கொடுத்த பிறகு ஓராண்டுக் காலத்திற்குள்ளாக அவர்கள் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். அவ்வாறு செய்கிறார்களா என்று சொன்னால் சுமார் 80, 85 சதவீதம்தான் செய்கிறார்கள். கடைசியாக அதிலேயும் குறைந்துவிட்டு சராசரியாகப் பார்க்கிறபோது 60, 65 சதவீதம்தான் கடன் கொடுக்கப்படுகிறது என்பது முழுமையான உண்மையான விவகாரம். அதற்காகத்தான் மாவட்டத் தொழில் மையம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அதேபோல் வங்கி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இன்றைக்கு ஒருவரை ஒருவர் கலந்து

பேசுகிற அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இருந்தாலும் கூட சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

அதிலும் குறிப்பாக ஸ்டேட் பாங்க், இன்டியன் ஓவர்சீஸ் பேங்க், இன்டியன் பேங்க், கனரா பேங்க் போன்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைப் பொறுத்தவரையில் ஓரளவுக்குக் குறியீட்டை நிர்ணயித்துச் செய்கிறார்கள். சின்னஞ்சிறு வங்கிகளுக்கெல்லாம் சில இனங்களில் அதாவது மிகக் குறைந்த அளவுதான் கொடுக்கப் படுகிறது. அந்த இடங்களில் கூட பெரும்பகுதி விடுபட்டுப் போகின்றன என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. அதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து படித்த இளைஞர்களுக்கு அளிக்கப்படுகின்ற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழகம்தான் தொடர்ந்து முதல் நிலையை வகித்து வருகிறது என்பதை நாம் மறுக்கக் கூடாது. 1985-86-ல் 18,100 தொழில்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று நாம் குறியீடு நிர்ணயித்தோம். அதிலே இன்றைக்கு ஏறக்குறைய 7,169 பேர்களுக்கு 13 கோடியே 68 இலட்சம் கடன் உதவி செய்யப்பட்டு இருக்கிறது. மீதம் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு இறுதிக்குள் கடன் தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரதப் பிரதமர் அவர்களுடைய 20 அம்சத் திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்களுக்கு அளிக்கப்படும் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 25,000 என்ற அளவுக்குக் கடன் வழங்கிக் கொண்டிருக்கிறது. அது போதுமானது அல்ல. சாதாரணமாக ஒரு தொழில் தொடங்க வேண்டுமென்றால் 35,000 ரூபாய் 40,000 ரூபாய் 50 ஆயிரம் ரூபாய் என்று ஆகிவிடும். ஆகவே 50 ஆயிரம் ரூபாய் தேவை அந்த அளவிற்குத் தரவேண்டுமென்று மைய அரசை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். 25,000 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிற இளைஞர்களைப் பொறுத்தவரையில் உடனடியாகத் தொழில் தொடங்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறதேயொழிய அவர்களால் உடனடியாகச் செய்ய முடியவில்லை. கடனை வாங்கிக் கொண்டு என்ன தொழிலைச் செய்வது என்று தெரியாமல் குழப்பம்





அடைகின்றனர். மேலும் பல பேர் ஒரே தொழிலைச் செய்வதன் காரணத்தால் போட்டி ஏற்பட்டு அத்தனை பேருக்கும் இலாபம் இல்லாமல் போய் மிகவும் சிரமப் படுகிறார்கள். இப்படி ஒரேவிதமான தொழிலைப் பல பேர் தொடங்கி நஷ்டம் அடைகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய மத்திய அரசினுடைய சிறு தொழில் மையத்தில் இயக்குநர் அவர்களோடு மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் அவர்கள் விவாதம் நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அது முடிந்த பிறகு இரண்டு வாரப் பயிற்சி சம்பந்தப் பட்ட மாவட்டத் தொழில் மேலாளர் (கடன்) மாவட்டத் தொழில் மைய மேலாளர் (தொழில் நுட்பம்) ஆகிய இரண்டு பேர்களையும் மாவட்ட ரீதியாக வரவழைத்து பயிற்சி கொடுத்து அதற்குப் பிறகு அந்த வேலையில்லாமல் இருக்கின்ற, கடனை வாங்கிக் கொண்டு என்ன தொழில் செய்வது என்று தெரியாமல் இருக்கின்ற இளைஞர்களுக்குப் பயிற்சி தருகிற ஏற்பாட்டை நாம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.

அடுத்து இந்த நிறுவனம் மூலப் பொருள்களை வழங்குகிறது. அதிலும் குறிப்பாக பிக் அயர்ன் என்று சொல்லப்படுகிற வார்ப் படப் பட்டைகளுக்குத் தேவையான பிக் அயர்னை இந்த நிறுவனம் 'செயில்' நிறுவனத்திடமிருந்து நேரிடையாகப் பெற்று தர ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறது. அதேபோல ஆந்திராவிலே உள்ள சிங்கரேனியில் இருந்து நிலக்கரியைக் கொண்டு வந்து மெட்ராஸ் ப்ரிக் அண்ட் டைல்ஸ் சொசைட்டி என்னும் கூட்டுறவு சொசைட்டியின் மூலமாக செங்கல் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் பல தொழில் நிறுவனங்களுக்கும் வினியோகித்துக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் சுமார் 5 ஆயிரம் சிறு தொழில்கள் பயன் அடைகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக . . . . .

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிட மிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன். தமிழகத்தில் சிறு தொழில் நடத்தும் சொந்தக்காரர்களிடமிருந்தும், மற்றும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வரக்கூடிய புகார் என்னவென்றால், கோல், கோக் மற்றும் ஸ்டீல் போன்றவைகள் முறையாக கிடைக்க வில்லை என்பதுதான். அதாவது நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு

கிடைக்கவில்லை என்கிறார்கள். ஆனால் மார்க்கெட்டிலே எப்பொழுது வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. அந்தக் குறைபாட்டை போக்குவதற்கு முறையாக விநியோகிப்பதற்கு அரசு ஏதேனும் ஏற்பாட்டைச் செய்யுமா? அதுதான் அவர்களுடைய முக்கியமான ஒரு கோரிக்கையாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தாலே மாண்புமிகு அமைச்சரிடமிருந்து இந்த விளக்கத்தை நான் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நிலக்கரியும், ஸ்டீலும் இப்போது சிக்கல் இல்லாமல் கிடைக்கிறது. கோக் எனப்படும் சுட்ட கரிக்கு மட்டும் மிக மிக சிக்கலான சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மட்டும் அல்ல இந்திய துணைக் கண்டம் பூராவும் கோக் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆனாலும் கூட இப்போது இருக்கிற சூழ்நிலையில் ஏறக்குறைய 65 வாகன்கள் ஒரு மாதத்திற்கு வந்து கொண்டிருந்தது. அதை மாற்றி இப்போது 80 வாகன்கள் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. மேலும் பெற தொடர்ந்து வற்புறுத்திவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிட்கோ நிறுவனம் இதுவரையில் வட்டி இல்லாத கடனை சில தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வந்தது. சில நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக தொழில் வணிகத் துறையே அந்தப் பணியினை ஏற்று தொடர்ந்து செய்து வருகிறது. அடுத்த நலிந்த சிறு தொழில்களுக்கு மார்ஜின் மணி வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் 44 தொழில் நிறுவனங்களுக்கு 91.17 லட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கி வருகின்ற மின் அணு இயல் மற்றும் மின் இயல் சார்ந்த சிறு தொழில்கள் சம்பந்தமாக பல உறுப்பினர்களும் தங்களுடைய யோசனைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின் அணு இயல், மின் இயல் சார்ந்த சிறுதொழில்களின்





முக்கியத்துவத்தை உணர்ந்து அவைகளின் வளர்ச்சிக்காகவும், அவைகளை ஊக்கப்படுத்த வேண்டியதற்காகவும் தமிழக அரசு மாநில தொழில் வணிக இயக்ககத்தை 1970 ஆம் ஆண்டு தொடங்கியது.

அந்த அடிப்படையில் இன்றைக்கு 1986 மார்ச் திங்களில் 7 தொழில் கூடங்களை உருவாக்கியிருக்கிறது. அந்த 7 தொழிற் கூடங்களிலேயும் ஏறக்குறைய 293 மேம்படுத்தப்பட்ட மனைகளும் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனுடைய விளைவாக காக்களூரிலே மைய மின் அணு பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றும், சென்னையிலே மின் அணு பரிசோதனை மற்றும் அபிவிருத்தி நிலையம் ஒன்றும், மதுரையிலே மின்னணுவியல் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்றும், ஓசூரிலே பொது வசதிப் பணி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 14.7 லட்சம் செலவில் கோயம்புத்தூரில் பொது வசதிப் பணி நிலையம் ஒன்று அமைத்தல், திருச்சியில் 16 லட்சம் செலவில் மின் அணு பொருள் வளர்ச்சி மையம் ஒன்று ஏற்படுத்துதல் போன்ற பணிகளையும் இந்த அரசு மேற்கொண்டு, அவைகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று கிடைப்பதற்கு அரிதாக உள்ள மூலப் பொருள்கள் சிறு தொழில்கள் செய்பவர்களுக்கு எளிதாகக் கிடைப்பதற்காக உதவி அளிக்க வேண்டும் என்பதற்காக, சென்னையில் மூலப் பொருள் விநியோக நிலையம் ஒன்று ரூ. 12.79 லட்சம் செலவில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது இன்னும் 3 மாத காலத்திற்குள் முழு அளவில் செயல்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சென்னைக்கு அடுத்துள்ள நந்தம்பாக்கத்திலே 35.85 லட்சம் மதிப்பீட்டில் மின் மற்றும் மின் அணு தொழில்களுக்கு என்று தனியாக தொழில்பேட்டை அமைக்கப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 12-50)

அடுத்து மின்னணுவியில் தொழில்களுக்கு சிறப்பு உதவி அளிக்கும் பொருட்டு மத்திய மாநில அரசுகள் உதவித் தொகை

வழங்கும் திட்டத்தின் கீழ் இடம் பெறாத மின்னணுத் தொழில்களை தமிழகத்தில் எந்தப் பகுதியில் நிறுவப்பட்டாலும், ஏற்படுத்தப்படும் நிறுவனத்தின் மொத்த மதிப்பில் 10 சதவீதம் அல்லது எத்தனை நிரந்தரப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதை கணக்கிட்டு, ஒரு தொழிலாளிக்கு 20 ஆயிரம் ரூபாய் என்று வைத்து பார்த்தால் எது குறைவோ அந்தத் தொகை வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து மின்னணுவியலைப் பொறுத்தவரையில் அரசுத் துறையில் உள்ள மின்னணுவியல் தொழில்களுக்கு மானிய உதவி 1984-85-ம் ஆண்டில் சிட்கோ நிறுவனத்தின் மூலமாக வழங்கப் பட்டு வந்தது. அது தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் மூலமாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. 'டிக்' நிறுவனத்தின் மூலமாக மட்டும் ஏறக்குறைய 11 மின்னணுவியல் தொழில்களுக்கு 1984-85 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 9.41 இலட்ச ரூபாயும், 1985-86 ஆம் ஆண்டில் 8 நிறுவனங்களுக்கு ரூ. 5.67 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்கள் முன்னேற்றத்தில் தமிழகம் பின்தங்கி இருக்கிறது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான புள்ளிவிவரங்களை நாம் பார்க்கிறபோது மத்திய அரசும், மாநில அரசும் எந்த அளவிற்கு முயற்சியெடுத்து தமிழகத்தில் தொழிற் துறையில் முன்னேற வேண்டுமென்பதற்கு அக்கறை காட்டி வருகிறார்கள் என்பது தெரிய வரும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் மத்திய அரசு தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த சிறு தொழில் வளர்ச்சி ஆணையர் அவர்களால் மத்திய அரசு மூலமாக ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது அதன்படியும், அதேபோல 1984 ஆம் ஆண்டு மத்திய அரசு புள்ளி விவரத் துறையால் வெளியிடப்பட்ட தொழில் ஆய்வறிக்கை படியும், தொழில் துறையில் நம்முடைய தமிழகம் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களில் இருந்து, சராசரியாக மூன்றாவது இடத்தில் இருக்கிறது என்பதை தைரியமாகச் சொல்ல முடியும். குறிப்பாக பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதில் தமிழகம் முதலாவது இடத்தில் இருக்கிறது. சுய வேலைவாய்ப்பு





அளிப்பதில் தமிழகம் இரண்டாவது நிலையில் இருக்கிறது. முதல் நிலையில் ஒரிசா மாநிலம் இருக்கிறது. அதேபோல் மொத்த உற்பத்தியை எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது. நிகர மதிப்பு என்று எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் மாநிலங்களுக்கு அடுத்து தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. இடுபொருள்கள் மொத்த மதிப்பு என்று எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களை அடுத்து தமிழகம் மூன்றாவது நிலையில் இருக்கிறது. வேலை செய்கிற தொழிலாளர்கள் கணக்கை எடுக்கிற போது தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. நிகர வருமானம் என்று எடுத்துக் கொண்டாலும் தமிழகம் மூன்றாவது நிலையில் தான் இருக்கிறது. தொழிற்சாலைகள் எண்ணிக்கையை எடுத்துக்கொள்கிற போது தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது. அதேபோல மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக ஏற்றுமதி செய்கிற கணக்கை எடுத்துக் கொண்டால் தமிழகம் முதல் நிலையில் இருக்கிறது. மாவட்ட தொழில் மையங்களுடைய முன்னேற்றப் பணிகளுக்கு செலவிடப்பட்ட கணக்கை எடுத்துப் பார்த்தால் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. சிறு தொழில் பிரிவுகளுக்கு சிட்கோ, சிப்காட், 'டிக்' போன்ற நிறுவனங்களால் அளிக்கப்பட்ட உதவியை எடுத்துக் கொண்டால் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் முதல் இடத்தில் வருகிறது. மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக அமைக்கப்பட்ட சிறப்பு சிறு தொழில்களின் பொருள் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆகவே சராசரியாக பார்க்கிறபோது தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிறு தொழில்கள் முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் இப்போது இருக்கிற ஒரே ஒரு குறை என்னவென்றால் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் நலனிற்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிராம கைவினைஞர் நிலையம் நம்மிடத்தில் இல்லையென்பதுதான். அதைச் செய்தால் போதுமான அளவிற்கு இப்போது இருப்பதை விட முன்னேற்றம் காண முடியும்

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பிய காரணத்தால், இதுபற்றி விவரம் சேகரித்தபோது அந்த செயல்பாடு இந்தியத் துணைக் கண்டத்தில் ஆந்திராவில்தான் நடைபெறுகிறது என்பது தெரிய வந்தது. இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை குழுவாக அமைத்து, ஆந்திராவிற்கு அனுப்பி, அங்கேயுள்ள நிலைமையை தெரிந்து கொள்வதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பான பணி முவடைந்தால் அது நிச்சயமாக மூன்றாவது நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்கு நாம் துரிதமாக முன்னேறுவதற்கு வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு பார்க்கிறபோது திருச்சிக்கு அடுத்திருக்கிற மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ், அழுத்த குழாய் உருவாக்க ஆரம்பிக்கப்பட்ட திட்டம் சிறப்பாக, இலாபகரமாக விளங்குகிறது. நம்முடைய தென்மாநிலங்களில் முதல் இடத்தை அது பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதேபோல் அச்சுந்தாள் காகித நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் உள்ள புகளூரிலே இருக்கிறது. அது தமிழகத்தினுடைய சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு விளங்கிக் கொண்டு இருக்கிறது. பெரிய தொழிலாக இருந்தாலும்கூட, அதை நாம் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு, இன்றைக்கு வெற்றிகரமாக நடந்து வருகிறது.

அதேபோல் கனிம நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அந்தத் தொழிற்சாலையையும் நாம் ஆரம்பித்து இருக்கிறோம். முழுக்க முழுக்க வெளிநாட்டுச் சந்தையை பிடிக்கக்கூடிய, வெளிநாட்டு அன்னியச் செலாவணியை பெறத்தக்க ஒரு சிறப்பு நிறுவனமாக இன்றைக்கு இருந்து வருகிறது. தமிழ்நாட்டு தொழில் இயல் வெடி மருந்து நிறுவனம் காட்பாடியில் ஏற்பாடு செய்யப்பட்டு, இன்றைக்கு நடந்து கொண்டு வருகிறது. ஏறக்குறைய 60 கோடி ரூபாயிலே அங்கே இருக்கக்கூடிய 2 நிறுவனங்கள் செயல்பட இருக்கின்றன. அதை எல்லாம் பார்க்கும்போது, தமிழகம் இன்றைக்கு வேகமாக தொழில் துறையில், அது பெரிய தொழிலாக இருந்தாலும், சிறு தொழிலாக இருந்தாலும், முன்னேறிக் கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயம் நம்புவார்கள் என்று கருதுகிறேன்.





அடுத்து தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், 1982-83-லே ஏறக்குறைய 200-க்கும் அதிகமாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இருந்தோம். அன்றைக்கு நம்முடைய தீப்பெட்டிகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது. கூட்டுறவு முறையிலே, அது சேவை மையங்களாக இருந்தாலும் சரி, அல்லது கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் சில கண்டிப்புகளை வைத்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு பெட்டிகளுடைய தரம் இருக்க வேண்டும், எந்த அளவிற்கு அதிலே சம்பந்தப்பட்ட மருந்து இருக்க வேண்டும், எண்ணிக்கை 50 என்று பெயரைப் போட்டுவிட்டு, 30 என்று இருக்கக் கூடாது, குறைந்தபட்சம் 47-வது இருக்க வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாட்டை எல்லாம் விதித்ததன் காரணமாக சில சிக்கல்கள் இருக்கின்றன. சில பேர்கள் அங்கே இருப்பதற்கே பயந்து கொண்டு இருக்கிறார்கள். இதிலே தவறு நடந்தால், அந்தத் தவறைச் செய்கின்ற அந்த சிறுதொழில் யூனிட்டுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. ஆனாலும்கூட வட மாநிலங்களில் நம்முடைய கூட்டுறவு சம்பந்தப்பட்ட சிறு தீப்பெட்டித் தொழிலுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்பதை இங்கே இருக்கின்ற அருமை நண்பர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு மத்திய அரசைப் பொறுத்தமட்டில், சில சலுகைகளை வழங்கியதன் காரணமாக இந்தத் தொழில் மிகச் சிறப்பாக இருந்தது. இதிலே இப்போது உள்ள தொழில்கூடங்கள் 81. அதிலே லாபகரமாகச் சென்று கொண்டு இருப்பவை 17. நஷ்டம் அடைபவை 64. அதிலே பாரம்பரியான பகுதியில் இருப்பவை 43. பாரம்பரியம் அல்லாத பகுதிகளில் இருப்பவை 38. உற்பத்தி மதிப்பு 15.81 கோடி. விற்பனை 17.87 கோடி. இந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், 81 சங்கங்களில் சுமார் 22,220 பேர்கள் வேலை பார்க்கிறார்கள்.

1985-86-லே உற்பத்தி 8.88 கோடியாகும். விற்பனை 9.82 கோடியாகும். இன்றைக்கு உற்பத்தி குறைந்து இருக்கிறது. தொடக்க காலத்திலே மத்திய அரசு பண்டல் ஒன்றுக்கு 1.60 என்று நம்முடைய தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கலால் வரிச் சலுகையை அளித்துவந்தது. இந்த கலால் வரிச் சலுகையினால் இந்தத் தீப்பெட்டித் தொழில் மிகுந்த அளவிற்கு வேகமாக வளர்ந்து

[திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்] [1986 மே 3

வருகிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால், இந்தத் தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில், சிறுதொழில் என்றும், கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற தொழில் என்றும், பெரிய டிரேடிங் கம்பெனி என்றும் 3 வகையாகப் பிரிக்கலாம். இந்தக் கலால் வரிச் சலுகை சிறு தீப்பெட்டித் தொழிலுக்குப் பொருந்தும் என்று மத்திய அரசாங்கம் உத்தரவிட்டது. அதன் பலனாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருந்த கலால் வரி மாற்றப்பட்டதன் காரணமாக பெரிய டிரேடிங் கம்பெனிக்காரர்கள் சிறுதொழில் என்று தவறான, பொய்யான வகையில் இந்த உற்பத்தியைப் பெருக்கி, இந்த கலால் வரிச் சலுகையை பெறுவதன் காரணமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களோடு போட்டி போட முடியவில்லை. மிகுந்த நஷ்டத்தில் இயங்கக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டது.

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களுக்காக மத்திய அரசு பொது லேபிள் முறை, காமன் லேபிள் சிஸ்டம் என்று வைத்திருந்தார்கள். இந்த முறையை இன்றைக்கு மாற்றி, எல்லா சிறு தொழிலுக்கும் பொருந்தும் என்ற உத்தரவை மாற்றியதன் காரணமாகவும் இந்த இரண்டு காரணங்களினாலும், இந்தத் தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில், இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் நசிந்துபோய் விட்டன. இந்த கலால் வரிச் சலுகையும், பொது லேபிள் முறையும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற வகையில் விதியை மாற்றித் தர வேண்டும் என்று சொல்லி, தொடர்ந்து மத்திய அரசை கடந்த 1½ ஆண்டுக்காலமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். நிச்சயமாக மத்திய அரசு இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அதேபோல் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. ஆகஸ்டு 1985 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. அடுத்து ஸ்ரீவில்லிப்புத்தூரில் சிறிய அளவில் தீப்பெட்டிக்கான காகித ஆலை ஒன்றை நிறுவவும், அதை விரைவாகத் துவங்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. ஏற்கனவே குன்றக்குடி பாரதி தொழில் கூட்டுறவு குளோரைட் தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

(பிற்பகல் 1-00)

இப்படி பல்வேறு வகையாக தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்த மட்டில் தமிழகம் முன்னணியில் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய தொழிலைப் பொறுத்தவரையில், தேங்காய் நார் பொருள்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இங்கே பேசினார்கள். நம்முடைய நிலையைப் பொறுத்த மட்டில், முதல் நிலையில் கேரளாவும், இரண்டாவது நிலையிலே கர்நாடகமும், மூன்றாவதாக தமிழகமும் தேங்காய் நார் பிரித்தெடுப்பதிலும் சரி, தேங்காய் நார் உற்பத்தியிலும் சரி, தென்னை மரங்கள் இருக்கின்ற நிலையை எடுத்துக்கொண்டாலும் அந்த நிலையிலேதான் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 1 லட்சத்து 62 ஆயிரம் எக்டேர் நிலத்தில் 178 கோடி தேங்காய்கள் இன்றைக்கு உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஏறக்குறைய அவ்வளவு தேங்காயை நாம் அறுவடை செய்தாலும்கூட, தேங்காய் நாரை பொறுத்தமட்டில் 45 ஆயிரம் டன்கள்தான் இன்றைக்கு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். இதை மேலும் விரிவாக்க வேண்டும். இதனால் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. கேரளத்தை பொறுத்த மட்டில் அங்கே அதை ஒரு பெரிய தொழிலாக வைத்திருக்கிறார்கள். 75 லட்சம் பேர் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அங்கே கடற்கரை ஓரங்களிலே உப்பங்கரைகளிலே தேங்காய் மட்டைகளை, 10 மாதம் ஊறவைத்து, பிறகு கையாலேயே அடித்து நார் எடுக்கிறார்கள். 10 மாதம் அந்த உப்பங்கரையிலே ஊறுகின்ற காரணத்தால் அந்த நார் மிக மிருதுத் தன்மையோடு தேவையான அளவுக்கு எந்த வண்ணத்தைச் சேர்த்தாலும் அந்த வண்ணத்தை ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிலே சிறப்பாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அப்படி செய்வது என்பது இயலாத காரியம். எவ்வளவோ இயந்திர சாதனங்கள் வந்தாலும்கூட தேங்காய் நாரை பொறுத்தமட்டில் இயந்திரங்களை தேங்காய் நார் உற்பத்திக்கு பயன்படுத்துவதில்லை. ஏனென்று சொன்னால் தேங்காய் நார் . . . (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இப்போது அந்த தேங்காய் மட்டை நார்களைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு செல்வதற்கு தேங்காய் மட்டை நார்களுக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதாக கேள்விப்படுகிறேன். உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு அது வர முடியாது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வர முடியாது. அப்படி தடை விதித்திருப்பதன் நோக்கம் என்ன என்பதையும் அந்தத் தடை தளர்த்தப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டுக்கு முன்னாலே தேங்காய் நார் தட்டுப்பாட்டின் காரணமாக சில மாவட்டங்களில் மிகுந்த சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தங்களிடம் இருக்கின்ற தேங்காய் நாரை வெளியிலே கொண்டுபோகக்கூடாது என்று தடை விதிக்கக்கோரி ஒரு விண்ணப்பம் வந்து, அந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து அந்தத் தடையை முதலிலே போட்டோம். அதனாலே ஏற்பட்ட நிலை என்ன என்று சொன்னால் உண்மையிலேயே தேங்காய் நார் அதிகமாக உற்பத்தி செய்கின்ற குமரி மாவட்டத்திலே தேங்காய் நார் கிடைக்காமல் தட்டுப்பாடாகிப் போவதை அறிந்து இப்போது அந்தத் தடையை நீக்கி மாநிலத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக் கூடாது என்ற ஒரு தடை உத்தரவைப் போட்டிருக்கிறோம். ஆக அண்டை மாநிலங்களுக்கு போகக் கூடாதேயொழிய நம்முடைய மாவட்டங்களுக்குள் எங்கு வேண்டுமானாலும் தேங்காய் மட்டையையோ, நாரையோ கொண்டுபோக முழு உரிமை இருக்கிறது. தடை இல்லை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்று சொன்னால் 1980 ஆம் ஆண்டு 11 தேங்காய் நார் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இன்றைக்கு அது 62 ஆக உயர்ந்திருக்கின்றன. அதைப்போலவே தனியார் நார் பிரிக்கும் தொழிற்சாலையும் 137 ஆக இருந்தன. இன்றைக்கு 347 ஆக வளர்ந்து



இருக்கிறது. 1986-87-ல் அது மேலும் வளர்ந்து ஏறக்குறைய 34 லட்சமாக இருந்த அந்த வியாபாரம் 64 லட்சமாக உயரும் என நாம் கருதுகிறோம்.

தேங்காய் நார் பொருள்களைப் பொறுத்தமட்டில், தஞ்சாவூர், திருநெல்வேலி, கோவை போன்ற இடங்களிலே ஏராளமாக வரவேற்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் பிள்ளையார்பட்டியிலே ஏறக்குறைய 24 லட்சம் ரூபாயில் பயிற்சிக் கூடத்திற்கான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. கழிவுகளுக்காகவும், உபகாரச் சம்பளத்திற்காகவும் ஏறக்குறைய 21 லட்சம் ரூபாய் கயிறு வாரியத்திலே தரப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பயிற்சிக் கூடத்தின் மூலமாக நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அப்படிப்பட்ட நல்ல கயிறு பொருள்களை உற்பத்தி செய்ய இந்தப் பயிற்சி இருந்தால்தான் முடியும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஏறக்குறைய 71 பேருக்கு அரசு அலுவலர்களுக்கும், தனியார்களுக்கும் பயிற்சி வழங்குகின்ற திட்டத்தை இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அந்தப் பயிற்சி தனியார் துறையிலே வேலை செய்பவர்களுக்கு 11 மாதமும் அதைப்போல 'பிஸினஸ் மேனேஜர்' என்ற பயிற்சியை ஆறு மாத காலத்திற்கும் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1985-86-ல் அம்பரய்பாளையம் கயிறு உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம், வாடமங்கலம் நார் பிரித்தெடுக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், பனஞ்சோலை தேங்காய் நார் பிரித்தெடுக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், தந்தை பெரியார் கூட்டுறவுச் சங்கம், மரக்காணம், குலசேகரப்பட்டிணம் சுருள்கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கம், பெரியகுளம் கயிறு தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், கொல்லங்கோடு தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை வேகமாக பணிகளை ஆரம்பிக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் இன்றைக்கு எழுதேசம் ஆதி திராவிடர் கயிறு பாய் மிதியடி கூட்டுறவுச் சங்கம், மலையம்பாளையம் ஆதி திராவிடர் கயிறு தொழிலாளர்

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

கூட்டுறவுச் சங்கம், கோட்டூர் ஆதி திராவிடர் தென்னை நார் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கம், ஒட்டம்பட்டி ஆதி திராவிடர் தென்னை நார் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கம், அம்மாபேட்டை கயிறு பாய் மற்றும் நார் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மையங்கள் ஏறக்குறைய 12 லட்சம் ரூபாய் அளவுக்கு தரப்பட்டு அவை எல்லாம் இன்றைக்கு சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தேயிலைத் தொழிலைப் பற்றி இங்கே பேசினார்கள். நீலகிரியில் இன்றைக்கு தேயிலை பயிரிடுபவர்கள் அத்தனை பேரும் சிறு சிறு விவசாயிகள். அந்த நிலைமையை கருத்தில் கொண்டு தான் அவர்களுக்கு நடுத்தரகர் மூலமாக இருந்து வந்த ஒரு பெரிய இடர்பாட்டை தவிர்க்கும் பொருட்டு தான் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. அசாம் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், அங்கே இருப்பவர்கள் பெரிய பெரிய தேயிலை தோட்ட முதலாளிகள். ஆசியா கண்டத்திலே தேயிலை தொழில் கூட்டுறவுச் சங்கம் இந்தியாவிலேயே எங்கே இருக்கிறது என்று சொன்னால் நீலகிரியில் மட்டும் தான் இருக்கிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கம் வந்ததற்குப் பிறகு தான் 1 ரூபாய், 1¼ ரூபாய் அங்கே பச்சை தேயிலை விற்று வந்தது. இன்றைக்கு அது 4 ரூபாய் 75 காசு என்றும் 4 ரூபாய் 80 காசு என்று விலைக்கு ஓரளவுக்கு கூடுதலாக விலையை அதிகரித்து கொடுக்க முடிகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீலகிரியில் ஏறக்குறைய 12 தேயிலை தொழில் கூட்டுறவுச் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டு தொழில்கூடங்கள் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. அவற்றில் எருமாட்டு என்ற இடத்தில் பாரதியார் தொழில் கூட்டுறவு தொழிற்சாலையினுடைய கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிந்து விட்டன. இயந்திரங்களை பொருத்திக் கொண்டிருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் அந்தச் சங்கம் இயங்கத் தொடங்கும். அதேபோல் நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தி சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு சேவை சங்கத்தை இன்றைக்கு நாம் நிர்வகித்துக்



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

கொண்டு வருகிறோம். மேலும் சின்னக்கோவையில் ஒரு தொழிற்சாலை ஏற்பாடு செய்ய அரசு திட்டமிட்டு ஏறக்குறைய 7.5 லட்சம் ரூபாய் பங்கு மூலதனமாக வழங்கியிருக்கிறது. இந்தச் சங்கம் 1985-86-ல் பதிவு செய்யப்பட்டது. இதை விரைவில் செயற்படுத்த தகுந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அதேபோல் கை காட்டி தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நீண்ட காலத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்யப் பட்டு அது இயங்கி வருகிறது. அதேபோல் இத்தலா தொழில் கூட்டுறவுச் சங்கமும் நீண்ட காலத்திற்கு முன்னால் தொடங்கப் பட்டது. இந்த இரண்டும் 19.6 லட்சம், 12.3 லட்சம் ரூபாய் என்ற செலவில் புதுப்பிக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல் முதன் முதலாக தொழில் கூட்டுறவுத் தேயிலை சங்கமான குந்தா தேயிலை தொழில் கூட்டுறவுத் தொழிற் சாலையை நவீனமாக்க 17.4 லட்ச ரூபாய் செலவில் திட்டம் தீட்டப்பட்டு இன்றைக்கு சிறப்பாக அது பணியை தொடங்கிக் கொண்டு இருக்கிறது. ஆக 1985-86 ஆம் ஆண்டில் சுமார் 17 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தி மதிப்பு சுமார் 965.22 லட்சம் ஆகும். விற்பனை மதிப்பு 993.11 லட்சம் ஆகும். அந்த அளவுக்கு இன்றைக்கு செழித்து வளர்ந்து இருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் அறிவோம். இன்றைய நிலையில் எடுக்கப்பட்ட பச்சை தேயிலைக்கு 4 ரூபாய் 76 காசு கிலோவுக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விலை ஏற்றம், விலை சரிவு உலக தேயிலை சங்கத்தின் விலையை பொருத்தது ஆகும். ஆகவே நாம் தனியாக எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். இருந்தாலும் கூட இந்த தேயிலை அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை மத்திய அரசு நமக்குத் தரவேண்டும். வட இந்தியாவில் இருந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு ஏராளமான அளவில் அங்கே தேயிலை ஏற்றுமதிக்கு வழி செய்து இருக்கிறது. தென்னாட்டைப் பொறுத்தவரையில் தமிழகத்திற்கு அது இன்றைக்கு குறைப்பட்டு இருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி தென்னிந்திய தேயிலை தொழிலுக்கு அதிக ஏற்றுமதியை தரக்கக் கோரி ஊரகத் தொழில் அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சர்

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

அவர்களிடமிருந்து நேர்முக கடிதம் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. அதன் மூலம் இன்றைக்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதாக சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 1-10)

அதேபோன்று தேயிலைச் சங்கங்கள்—தாய்ச் சங்கமான இன்கோசெல் நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. சந்தையிலே நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, இன்றைக்கு புதிய திட்டமாக தேயிலை—குரோதி நிறுவனம் என்று ஒரு நிறுவனத்தை நிறுவி, அதன் மூலமாக நம்முடைய தேயிலையையும், டான்—டீயினுடைய தேயிலையையும் இன்றைக்கு விற்பனை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 50 லட்சம் நாற்றுகளைப் பயிரிட அரசு 50 சதம் மான்யமாகவும், மற்றும் மூலதனமாகவும் வழங்க, நிதியுதவிட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பாலிதின் தொழில். இந்தப் பாலிதீன் தொழிலைப் பொறுத்தவரையில், பாலிதீன் தொழிற் சங்கங்களில் ஏறக்குறைய 17 தமிழகத்தில் வேகமாக வளர்ந்து வருகிறது. அதனுடைய தொழிற்கூடங்களில் ஏறக்குறைய 580 பெண் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1.20 இலட்சம் ஊதியமாக தரப்படுகிறது. ஏறக்குறைய 15 சங்கங்கள் இன்றைக்கு அதனுடைய உற்பத்தியைச் செய்துகொண்டிருக்கின்றன. அதனுடைய உற்பத்தி 218 இலட்சம். ஊதியமாக ரூ. 13 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 17 கூட்டுறவுச் சங்கங்களில் 3 தவிர மற்ற 14 சங்கங்கள் இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 1985-86-ல் அதனுடைய லாபம் ரூ. 42 லட்சம். தொழில் வணிகத் துறை மூலமாக இன்றைக்கு வேண்டிய கிரான்டுகள் சுலபமாகக் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 1986-87-ல் திருச்சி. தென் னார்காடு மாவட்டங்களில் இரண்டு சங்கங்கள் நிறுவ டாப்கோ மூலமாக ரூ. 12.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மதுராந்



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

தகத்தில் பாலிதீன் சாக்குத் தொழிற்சாலை 1985 ஏப்ரல் முதல் அதனுடைய உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

அடுத்து திண்டுக்கல் பூட்டைப்பற்றி இங்கே பல உறுப்பினர்கள் கேட்டார்கள். அங்கே கூட்டுறவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், சிறப்பாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. தனியார் பூட்டுக்கு நிகராக, ஏன் அதை விட கொஞ்சம் கூடுதலாகக் கூட சொல்லலாம். அந்த அளவிற்கு சிறப்பான பூட்டு அங்கே தயாரிக்கப்பட்டு வருகிறது. பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து அவர்கள் தொழில் செய்து வருகிற காரணத்தால் அப்படிப்பட்ட நல்ல பூட்டை அவர்கள் தாங்களாக செய்து வருகிறார்கள். இருந்தாலும் அதனுடைய மேல் பரப்பு, வடிவமைப்பு, ஆகியவற்றை மாற்றியமைக்க வேண்டும். பார்ப்பதற்கு ரம்யமாக இருக்க வேண்டுமென்பதற்காக சில புதிய ஏற்பாடுகளை எல்லாம் இந்த அரசு செய்திருக்கிறது. அங்கே இருக்கின்ற பூட்டைப் பொறுத்தவரையில்—ஏனென்று சொன்னால் அலிகார் என்ற ஒரு பூட்டை எடுத்துக்கொண்டால், 170 சாவிகள் ஒருவரிடத்திலே இருந்தால், அந்த 170 சாவிகளிலே ஏதாவது ஒன்று அந்தப் பூட்டை திறந்து விடும். ஆனால் நம்முடைய திண்டுக்கல் பூட்டை எடுத்துக்கொண்டால், 300 சாவிகள் வைத்திருந்தாலும்கூட, அந்தப் பூட்டை திறக்க முடியாது. அந்த அளவுக்கு சிக்கலான வேலைத் திறன் கொண்டு நம்முடைய திண்டுக்கல் தொழிலாளர்கள் இன்றைக்குத் தயாரித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த அளவிற்கு சிறப்பான தொழில். ஆனால் பார்ப்பதற்கு அவ்வளவு எடுப்பாக, ரம்யமாக இல்லை என்ற குறை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்பதற்காகச் சில பணிகளை அரசு மேற்கொண்டிருக் கிறது. ஆகவே அதற்காக பூட்டு விற்பன்னர்கள் பலரை, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி மையத்தை திண்டுக்கல் தொழிற்பேட்டையில் துவங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 1985-86-ல் 60 உற்பத்தியாளர்களுக்கு நான்கு வார பயிற்சி அளிப்பதற்கு ரூ. 25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1986-87-ஆம் நிதியாண்டில் ரூ. 162 இலட்சம் செலவில் அந்த பயிற்சியை தீவிரமாக வலிந்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்காக

இடம் ஏறக்குறைய ஐந்து ஏக்கர் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். அதற்கு வருவாய்த்துறையின் மூலமாக நில ஆர்ஜிதப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடுத்து, செக்கோசெல் ஸ்டார்ச் தயாரிப்பதைப் பொறுத்த வரையில், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் மிகுந்த அளவிற்கு ஏழை எளியவர்களுக்கு உதவிக்கொண்டிருக்கிறது. சுமார் 600-க்கும் மேற்பட்ட அலகுகள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 50,000 எக்டேரில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகிறார்கள். அதில் 25,000 எக்டேரில் சேலம், தர்மபுரி மாவட்டங்கள் மட்டும் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இருப்பவர்கள் இதை உணவுப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். கேரளாவிற்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. சேலம், தர்மபுரியைப் பொறுத்தவரையில், அதை ஜவ்வரிசியாகவும், மாவாகவும் தயார் செய்து அதை வட மாநிலங்களுக்கு ஏராளமாக அனுப்பிக்கொண்டிருக்கிறோம். தரகர்கள் தொடர்ந்து குறுக்கிட்டதன் காரணமாக சில நேரங்களில் விலை வீழ்ச்சி ஏற்பட்டாலும் கூட, இன்றைய அளவிற்கு விலை ஏறிக் கொண்டிருக்கிறது. அதை அனுசரித்து பெரிய காடாம்பட்டி என்ற இடத்திலே ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏறக்குறைய ரூ. 16.02 லட்சம் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் எல்லாம் நடந்து வருகிறது. இந்த சாகோ இண்டஸ்ட்ரிஸ் ஒரு ஆண்டிலே நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டினைவிட விலை சிறப்பாக இருக்கிறது. மார்ச், பிப்ரவரி, ஜனவரி ஆகிய மூன்று மாதங்களில் 490, 472, 425 என்ற அளவுக்கு உச்ச நிலையை அடைந்திருக்கிறது என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இன்றைக்கு தொழில் கூட்டுறவு சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு நிதியுதவி தடையின்றி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது 1961-ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு முடிய உள்ள கால அளவில் அங்கே 345 உறுப்பினர்கள் இருந்தார்கள். 30-6-1985 முடிய இந்தக் காலத்திலே அது வளர்ந்து 508 உறுப்பினர்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது. தேயிலை, தீப்பெட்டி, கயிறு, டூரிஸ்ட் டாக்சி, ஆட்டோ ரிக்ஷா போன்ற தொழிற் கூட்டுறவு



சங்கங்கள் எல்லாம் அதிலே உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். அதன் மூலமாக 30—6—1977 வரை கொடுத்த கடன் 187 லட்சம். ஆனால் 30—6—1985 வரை கொடுக்கப்பட்ட கடன் 71 லட்சம். ஆகவே சிறப்பான அளவுக்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் 30—6—1985 கணக்குப்படி நிகர லாபம் ரூ. 13.69 லட்சம். ஆகவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக உதவியாக இந்த வங்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு இந்த வங்கி மூலமாக குறைந்த அளவு வட்டி 8 சதவீதம் வட்டிச் சலுகையாக கடன் உதவி செய்து வருகிறோம்.

அடுத்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். இது 1949-ம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் முதன்முதலாகத் தமிழகத்திலே தொடங்கப்பட்ட நிதி நிறுவனம். இந்த நிறுவனம் நடுத்தரத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் பெருமளவு கடன் உதவி வழங்கி வருகிறது. நிலம் வாங்க, கட்டடம் கட்ட, இயந்திரங்கள் வாங்க போன்றவைகளுக்கு ஏராளமாகக் கடன் வழங்குகிறது. கூட்டமைப்புகளுக்கு 30 லட்சமாக இருந்தது 60 லட்சமாக மாற்றப்பட்டிருக்கிறது. தனி உரிமைதாரருக்கு, பங்குதாரருக்கு 15 லட்சம் என்று இருந்தது 30 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. தனி நபர்களுக்கு லாரி, வேன், ஜெனரேட்டர்கள் போன்றவைகள் வாங்கி அதன் மூலமாக தொழில் செய்ய உதவிசெய்து கொண்டிருக்கிறோம். 1949-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு 1978 வரை 30 ஆண்டுக்காலத்திலே மொத்தம் ஒப்புதல் அளித்த கடன் 118 கோடி. அதிலே 74 கோடி கடன் ஆக வழங்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு 1979-ஆம் ஆண்டிற்குப் பிறகு 1986 மார்ச் வரையில் எட்டு ஆண்டுக் காலத்திலே 269.25 கோடி கடன் வழங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. 1986-87-இல் உத்தேசம் 100 கோடி. அதிலே ஒப்புதல் அளிக்கக் கூடியது 85 கோடி. கடனாக வழங்கக்கூடிய அளவு 50 கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம் 1985-86-இல் தன்னுடைய இலக்கை மீறி சாதனை புரிந்து இருக்கிறது. அதற்கு அனுமதிக்கப்பட்ட கடன் 77 கோடி. சாதனை 92 கோடி. விநியோகித்தது 62.50 கோடி.

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

அதேபோல் இந்த நிறுவனம் தொடர்ந்து லாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. 1975-76 முதல் 1985-86 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுக் காலத்தில் அதனுடைய லாபம் 978.47 லட்சம். கடந்த ஐந்து ஆண்டுக்காலத்தில் இந்த நிறுவனம் நடுத்தரத் தொழில்களைவிட சிறுதொழில்களுக்கே ஏராளமாக உதவி செய்கிறது.

முதலிலே ஆரம்பிக்கப்பட்டபோது நடுத்தரத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் என்றாலும்கூட சிறுதொழில்களுக்குத்தான் ஏராளமாக உதவியைச் செய்துகொண்டிருக்கிறது. 1984-85-இல் சிறுதொழில்களுக்கு வழங்கிய மொத்தக் கடன் 92 சதவீதம். 1985-86 ஆம் ஆண்டிலே மொத்தக் கடனில் 93 சதவீதம் சிறு தொழில்களுக்கு வழங்கி சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக இது அரும்பாடுபட்டு வருகிறது.

(பிற்பகல் 1-20)

1978-79 முதல் 86 மார்ச் வரை 'டிக்' நிறுவனத்தினுடைய கடன் பெற்று நடத்தப்பட்ட தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை பெருகி வருகிறது. அதைப்போல தொழிலாளர்களின் எண்ணிக்கையும் 2,43,443 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதிலே இதற்கு முன்னாலேயெல்லாம் நீண்ட காலத்திற்குக் கடன் கிடைக்காமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது 45 நாட்களுக்குள் அதற்குண்டான மனுக்களைப் பரிசீலனை செய்து கடன் வழங்க வேண்டுமென்ற நியதியை மேற்கொண்டு இன்றைக்கு அதற்கான குழுவைப் போட்டு, அந்தக் குழுவின் மூலமாகப் பரிசீலிக்கப்படுகிறது. 45 நாட்கள் வரை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்துவிட்டு, யாரும் வரவில்லை என்றால் அந்த சம்பந்தப்பட்ட தொழில் முனைவோருக்கு மூன்று முறை நினைவூட்டுக் கடிதங்களை அனுப்புகிறோம். அதற்குப் பிறகும் வரவில்லை என்று சொன்னால்கூட அந்த மனுக்களை நிராகரிப்பதில்லை. இரண்டாண்டுக் காலத்திற்கு அதை ஒத்திப் போட்டு, அதற்குள் யாராவது வருகிறார்களா, வந்தால் உதவி செய்யலாம் என்ற நோக்கத்தோடு அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு வந்தால் அதற்குண்டான பணத்தைக் கொடுத்து தொழில் துவங்குவதற்கு நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோம்



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

'டிக்' நிறுவனம் மூலமாக இந்தக் குழுவை நியமித்ததற்குப் பிறகு, 45 நாட்களுக்குள் அந்தப் பரிசீலனையைச் செய்து கடன் வழங்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய குழு ஏற்பட்டதற்குப் பிறகு, 82 ஆம் ஆண்டு 1866 மனுக்கள் கிடப்பிலே இருந்தன; அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, இன்றைக்கு வருகின்ற மனுக்களையும் ஏற்றுக்கொள்கிறோம். இருக்கின்ற பழைய மனுக்களையும் பரிசீலனை செய்கிறோம். மொத்தத்தில் இன்றைக்கு நிலுவையில் இருப்பது 564. ஆகவே, மாதாமாதம், ஒவ்வொரு மாதமும் கூட்டம் போட்டு அதற்குண்டான பரிசீலனையைச் செய்து நூறு, நூற்றைம்பது மனுக்களையாவது தீர்வு கண்டு கொண்டிருக்கிறார்கள் மாதந்தோறும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறப்புத் திட்டமாகத் தரப்படுகின்ற லாரி, வேன், கார் போன்றவற்றிற்கெல்லாம் இன்றைக்கு 20 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம். 80 சதவீதம் தொழில்களுக்கும், 20 சதவீதம் வாகனங்களுக்காகவும் ஒதுக்கியிருக்கிறோம். கடன் கேட்டு ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. முழு விண்ணப்பங்களுக்கும் தர முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால், தொழில் தொடங்குவதற்கு அதிகமாக யாரும் விரும்பவில்லை. அதேநேரத்தில், வேன் வேண்டும், கார் வேண்டும், லாரி வேண்டும் என்ற மனுக்கள் ஏராளமாக வருகின்றன. அப்படியே கொடுத்து விடுவோமேயானால் தொழில் தொடங்குவதற்கு நம்மால் உதவி செய்ய முடியாது என்ற காரணத்தினாலே 80, 20 சதவீதக் கணக்கை வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 'டிக்' நிறுவனம் தான் வழங்குகின்ற கடனுக்கெல்லாம் அரசு மானியத்தை, மாநில அரசு, மைய அரசு மானியத்தைத் தான் வழங்கிவிட்டு பிறகு அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. அப்படி 1—4—85 முதல் 31—3—86 வரை ஓராண்டுக் காலத்தில் 957 இனங்களுக்கு 262 இலட்சம் ரூபாய் மத்திய மானியமும், 344 இனங்களுக்கு 213 இலட்சம் ரூபாய் மாநில மானியமாகவும் மொத்தத்தில் 1301 இனங்களுக்கு 475 இலட்சம் ரூபாய் மானியத்தை இந்த 'டிக்' நிறுவனம் வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 மே 3

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்ற பொழுது லாரி, வேன்களுக்குக் கடன் தருவதாகச் சொன்னார்கள். டிராக்டர் வாங்குவதற்கும் அப்படிப்பட்ட கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** அது விவசாயம் சம்பந்தப்பட்டது; தொழில் அல்ல. ஆனால் தனியார் தொழில் நடத்துவதாக இருந்தால் அதற்குக் கடன் கொடுக்கலாம். இப்பொழுது அப்படிப்பட்ட ஏற்பாடு எதுவுமில்லை.

அடுத்து, சிட்கோ நிறுவனம். இந்த சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், தொழில்பேட்டைகளைப் பரவலாகத் தமிழகம் பூராவும் ஏற்படுத்துவது என்பது இதனுடைய முக்கிய நோக்கம். மேம்படுத்தப்பட்ட மனைகளை, திட்டமுறை, தண்ணீர், மின்சாரம், சாலைவசதி, வடிகால் வசதி போன்ற வசதிகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்குவது, மூலப் பொருட்கள் விநியோகம் செய்வது, சிறுதொழில் மூலம் தயார் செய்யப்படுகின்ற அந்தப் பொருட்களுக்கு விற்பனை வசதி ஏற்படுத்தித் தருவது, மத்திய மாநில முதலீட்டு மானியங்களைப் பெற்று தருவது, குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி வழங்குவது என்று இப்படி ஏறக்குறைய பல வசதிகளை, சிறு தொழில்களை பரவலாக்குவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் சிட்கோ நிறுவனம் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் 1970இலே தனியார் நிறுவனமாக நிறுவப்பட்டு, 1971இலே பொதுத் துறை நிறுவனமாக மாற்றப்பட்டு, 1974-இலே சிட்கோ இந்தப் பணிகளை மேற்கொண்டது. சிட்கோவைப் பொறுத்தமட்டில், ரீசைக்கிளிங் என்ற முறையில். மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நேரடியாகவும், அதேபோல சிப்காட் மூலமாகவும் கடனைப் பெற்று. மற்றவர்களுக்கும் கடன் வழங்கிக்கொண்டிருக்கிறது. ஷெட் கட்டி முடிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது, மனைகளை ஒதுக்குவதாக இருந்தாலும், அந்தப் பணத்தை மூலதனமாக வைத்துக்கொண்டுதான் அந்தப் பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படுகின்றபொழுது,1977-78-ல் அதனுடைய பணிகளுடைய மதிப்பீடு ரூ. 5.87 கோடி; 1986-87-ல்



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

ரூ. 5.87 கோடியாக இருந்தது 10 மடங்கு உயர்ந்து ரூ. 50 கோடியாக இன்றைக்கு வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1984-85-ஐ ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த ஆண்டு அது 26 சதவிகிதம் அதிகமான பணிகளைச் செய்து முடித்திருக்கிறது.

நம்முடைய சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், மத்திய மையத்தினுடைய மானியமாக 15 சதவிகிதத்தை, ஏறக்குறைய 62 வட்டங்களுக்குப் பெற்றுத் தருகிறது. அதிலே தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பி.சி. என்ற இரண்டு இனங்களிலேதான் மைய அரசு மூலதனம் வழங்குகிறது. ஏ என்ற அந்தத் தொகுதியின்கீழ் ஒரு தாலுகாகூட நம்முடைய மாநிலத்திலே இல்லை. ஏ பிரிவின்கீழ் இருந்தால், 25 சதவிகிதம் மானியம் கிடைத்திருக்கும். அந்த ஏ பிரிவில் சில இடங்களை வைக்க வேண்டுமென்று மைய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அந்தப் பாகுபாட்டின்படி நமக்குத் தொழிலே இல்லாத வட்டம் என்று வட்டாரீதியிலே வந்தால், நிச்சயமாக 25 சதவிகிதம் மைய அரசு மானியம் கிடைக்கும். அந்தச் சலுகையை இன்றைய தினம் பெற முடியாமல் இருக்கிறோம்.

1976-77 முதல், 1985-86 வரையிலும், 4,076 சிறுதொழில்களுக்கு, ரூ. 1,163.31 இலட்சம் மைய அரசு மானியமாக சிட்கோ பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதே போல், 1985-86-ல் மட்டும் 854 தொழில்களுக்கு ரூ. 229.64 இலட்சம் மானியமாகக் கொடுத்திருக்கிறது. மைய அரசு நிர்ணயித்த குறியீடு ரூ. 200 இலட்சம். மேற்கொண்டு ரூ. 29.64 இலட்சம் மானியமாகப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதன்மூலமாக, ஏறக்குறைய 5,000 பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மாநில அரசு மானியம் 33 வட்டங்களுக்கு 15 சதவிகிதம், 467 சிறுதொழில்களுக்கு ரூ. 130.51 இலட்சம் மானியமாக சிட்கோ பெற்றுக் கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்தமட்டில், குறியீடு ரூ. 50 இலட்சம். ரூ. 50 இலட்சத்தைத் தாண்டி. ரூ. 50.72 இலட்சத்தை, 123 சிறு தொழில்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறது.

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தமட்டில், 1980-81 முதல் 1985-86 வரை 3,276 சிறு தொழில்களுக்கு ரூ. 39.32 இலட்சம் மானியமாக வழங்கியிருக்கிறது. தொழிற் கூடங்களைப் பொறுத்த மட்டில் ஆண்டுதோறும் கொஞ்சங்கொஞ்சமாகக் கட்டி வந்து, இன்றைக்கு அரசு மூலம் கட்டப்பட்ட தொழிற்கூடங்கள் 783. சிட்கோ மூலம் கட்டப்பட்ட தொழிற்கூடங்கள் 1,165. அதிலே சென்ற ஆண்டு 66 தொழில் கூடங்கள் கட்டியதும் சேர்த்து 1165.

டைனி ஷெட்ஸ், சின்னஞ்சிறு ஷெட்டுகள், 1,844 கட்டிக் கொடுத்திருக்கிறோம். மேம்படுத்தப்பட்ட மனைகளாக, அரசும் சிட்கோவும் வழங்கியிருப்பது 983. அதில், இன்றைக்குப் புதிதாகச் சிட்கோ மூலம் தொடங்கப்பட்டிருக்கிற 15 தொழிற் பேட்டைகள் உட்பட மொத்தம் 48 தொழில் பேட்டைகள் தமிழகத்தினுடைய எல்லா மாவட்டங்களிலும் பரவலாக உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1986-87-ல் 93 தொழில் கூடங்களை 8 இடங்களிலே ஏறக்குறைய ரூ. 293 இலட்சத்தில், கட்டுவதற்கு உத்தேசித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், முன்னாலே விடப்பட்ட 25 தொழில் கூடங்களைச் சேர்த்து, ஏறக்குறைய 123 தொழில் கூடங்களை இந்த அரசு கட்டி முடிக்க வேண்டும். ஒரு தொழில் கூடம் கட்டி முடிக்க சுமார் 9 மாத காலம் அவகாசம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆக, சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், எனக்கு ஷெட் கட்டி தரவில்லை, போதுமான அளவில்லையென்ற குறையில்லாத அளவுக்கு 6 மனுக்கள் வந்தால், அந்த 6 மனுக்களுக்கு 6 கட்டுவதில்லை. 6 மனுக்கள் வந்தால் 8 அல்லது, 10 அளவுக்குக் கூடுதலாகவே ஷெட்டுகளை — அந்தத் தொழில் கூடங்களைக் கட்டி வருகிறோம். தொழில் துவங்க முன் வருபவர்கள் கொஞ்சம் காலதாமதப்படுத்துவதன் காரணமாக, ஏராளமான தொழில் கூடங்கள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மொத்தம் 7 இடங்களிலே, 45 பெரிய தொழில் கூடங்கள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன, கேட்பாரற்ற நிலையிலே.



1986 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே காலியாக உள்ள டைனி ஷெட்ஸ் ஏறக்குறைய 210. இந்த தொழிற்கூடங்கள் எல்லாம் பயன்படுத்தப்படுமானால் மேலும் தொழில் அபிவிருத்தி அடையும் என்பதிலே சந்தேகம் இல்லை. இப்போது கிண்டி, அம்பத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் மேம்பாட்டு மனைகள், பொது மேலாளர், மாவட்ட தொழில் மைய துணை இயக்குநர், வணிகவரித் துறை, சிட்கோ மேலாளர் ஆகியோர் அடங்கிய குழு பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு மேல் அதிகமானால் அது அரசினுடைய பரிசீலனைக்கு வருகிறது. அதை அரசு பரிசீலித்து முடிவு செய்கிறது. கிண்டியிலே எல்லா இடங்களிலும் தொழிற் கூடங்களை கட்டி முடித்து விட்டோம். லாயக்கு இல்லாமல் பள்ளமாக இருந்த இடங்கள் எல்லாம் இன்றைக்கு மேம்படுத்தப்பட்டு, மாற்றப்பட்டு, சுமார் 20 ஏக்கர் மேம்பாடு செய்யப்பட்ட நிலங்கள் வழங்குகின்ற நிலை இருக்கிறது. ஜூன் 86-க்கு பிறகு அவை தொழில் தொடங்குவதற்கு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கிண்டி, அம்பத்தூர் போன்ற 17 இடங்களில் தொழிற்பேட்டைகளை ஒட்டிய குடியிருப்புகள் ஏறக்குறைய 1,111 இருக்கின்றன. அந்த காலத்தில் தொழிற்பேட்டைகள் எங்கெங்கே உருவாக்குகின்றார்களோ அதற்கு பக்கத்திலேயே தொழிலாளர்கள் குடியிருக்க வேண்டும், அதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கட்டப்பட்ட அந்த தொழிற்சாலை சம்பந்தப்பட்ட குடியிருப்புகளில் இன்றைக்கு யார் குடியிருக்கிறார்கள் என்றால் சம்பந்தப்பட்டவர்கள் இல்லாமல், மாற்றங்கள் ஏற்பட்டு, வியாபாரிகள். மற்ற சம்பந்தப்பட்டவர்கள் எந்தப் பணியிலும் இல்லாதவர்கள். ஏதாவது ஒரு பணியில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த அளவிலே வாடகைக் குடியிருப்புகள் வழங்கப்பட்டன. வாடகையும் கட்டுவதில்லை. யாருக்கு என்று ஒதுக்கினோமோ அவர்களும் பயன்பெறவில்லை என்பது வேதனைக்கு உரிய விஷயம்.

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

அடுத்து விற்பனை உதவி — 1978-79-ல் இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டு 16 சிறு தொழில்கள் மட்டுமே பயன் அடைந்தது. 1986-87-ல் அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து 360 சிறு தொழில் நிறுவனங்கள் பயன் அடையும் என்று எதிர்பார்க்கிறோம்.

மூலப்பொருளை பொருத்தமட்டில் இரும்பு, எஃகு, சுட்ட கரி, பாலித்தீன் மெழுகு, தீ பெட்டி மெழுகு, பொட்டாஷியம் குளோரைடு, கொழுப்பு அமிலம், துத்தநாகம், ஈயம் போன்ற பொருட்களை இன்றைக்கு எந்தவிதமான குறையும் இல்லாமல் வழங்கியிருக்கிறோம். சுட்ட கரி பொறுத்தமட்டில், கொஞ்சம் தட்டுப்பாடு இருக்கிறது. அதை நீக்குவதற்கு, கோல் இந்தியா நிறுவனத்திடம், பாரத் கோல் அண்ட் கோக்ஸ் நிறுவனத்திடம் தொடர்ந்து முயற்சி செய்கிறோம். சுட்ட கரி கிடைத்தால் கூட வேகன் கிடைப்பது மிகச் சிரமமாக இருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்தி 1—4—1986 முதல் ஆண்டுக்கு 670 வேகன் என்ற ஏற்பாட்டை மாற்றி 960 வேகனாக உயர்த்திக் கொடுக்க ஒப்புதல் பெற்றிருக்கிறோம். இதன் மூலமாக வரும் ஆண்டில் சுட்ட கரி கோக்கினுடைய தட்டுப்பாடு ஓரளவு குறையும் என்று அரசு கருதுகிறது. மற்ற மூலப்பொருள்களில் அதிக அளவு தட்டுப்பாடு இல்லை. 1984-85-ல் இந்த நிறுவனத்தினுடைய மொத்த மூலப்பொருள் விநியோகம் 36,602 மெட்ரிக் டன்கள் ஆகும். 1985-86-லே அது 46,177 மெட்ரிக் டன்களாக உயர்ந்திருக்கிறது. இதனுடைய லாபம் இந்த ஆண்டு மட்டும் 100.11 இலட்சம். 15 ஆண்டு காலத்தில் இதனுடைய லாபம் 259.01 இலட்சம். ஆக 15 ஆண்டுகளிலே 259, இந்த ஒரே ஒரு ஆண்டில் மட்டும் 100 இலட்சம். ஆக நல்ல லாபத்தை தொடர்ந்து அது ஈட்டிக்கொண்டிருக்கிறது. புதிதாக திருவள்ளூருக்கு அடுத்த காவனூர் என்ற இடத்தில் 253 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறோம். முதல் கட்டமாக 85 ஏக்கரிலே கையகப்படுத்தப்பட்டு, மேம்பாடு செய்யப்பட்டு, சாலை வசதி, வடிகால் வசதி போன்றவற்றிக்கு 78 ஏக்கர் போனாலும்கூட 70, 77 ஏக்கர்களில் தொழிற்கூடங்கள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்படி மற்ற தொழிற் பேட்டைகளை போல் இல்லாமல் எல்லாவிதமான வசதிகளையும் கொடுத்து இருக்கிறோம்.



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

அதே போல ஆலந்தூரிலே 11 தொழிற் கூடங்களைச் சென்ற ஆண்டு கட்டி முடித்திருக்கிறோம். இந்த ஆண்டு 3 தொழிற் பேட்டைகளை கட்டப்போகிறோம். 3 அல்ல இன்னும் பல கட்டுவதாக இருந்தாலும் கூட, அதற்கு சிட்கோ நிறுவனம் தயாராக இருக்கிறது. ஆனால் அதை கட்டிவிட்டு மூடாமல் உடனடியாக திறக்க வேண்டும் என்பதால் இன்றைக்கு 3 ஆக குறைத்திருக்கிறோம். சென்ற ஆண்டு 11 தொழிற் கூடங்களை நிறுவினோம். பயன்படுத்திக்கொண்டிருப்பது 8 தான். மற்ற 8 தொழிற் கூடங்களுக்கு பணம் கட்டவில்லை. ஆட்களைத் தேடிப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் காரணத்தால்தான் வேகமாகத் தொழில் கூடங்களைக் கட்ட முடியவில்லை. சிட்கோவைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு சிக்கல்தான். கட்டப்பட்ட இடங்களில் இருப்பவர்கள் முறைப்படி பணத்தைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலைமையில் இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்களுக்குச் சலுகை தர முடியுமோ அந்த அளவிற்கு அவர்களுக்குச் சலுகை தந்திருக்கிறோம். அரசை பொறுத்தவரையில் இன்றைக்கு சிட்கோ நிறுவனத்திற்கு 17 ப்ளான்ட்ஸ் மூலமாக வர வேண்டிய பாக்கி மட்டும்—தவணை கடந்த பாக்கி—இன்றைக்கு நேற்று இருந்த பாக்கியல்ல, 9 ஆண்டு பாக்கி கூட வைத்திருக்கிறார்கள். அப்படி பாக்கி வைத்திருப்பவர்களின் மொத்த அளவு ரூ. 585.006 இலட்சம். அரசு கட்டடங்களுக்காகக் கட்ட வேண்டிய பாக்கி ரூ. 239.758 இலட்சம். ஆக மொத்தம் 824 இலட்சத்துக்கு மேலாக இன்றைக்கு நிலுவை வைத்திருக்கிறார்கள். ஆனால் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. தொழில் நடந்தாலும் கூட சில சிக்கல்கள் இருக்கக்கூடும். சிக்கல்களே இல்லை என்று சொல்ல முடியாது. சிக்கல்களைப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் அல்லது அமைச்சர் போன்ற பொது விவகாரத்தில் தலையிடக்கூடியவர்களை வைத்துக்கொண்டு பேசலாம். ஆனால் கட்டாமல் இருக்கிற அளவில் 824 இலட்சம் ரூபாய் தேங்கி இருக்கிறது என்று சொன்னால் புதிதாகத் தொழில் கூடங்களை எப்படிக் கட்ட முடியும்?

இவர்கள் ஐ.டி.பி. மூலமாகக் கடன் வாங்குகிறார்கள். சிப்காட் மூலமாகக் கடன் வாங்குகிறார்கள். வாங்குகிறபோது 12½ சதவிதம் என்றால் 13½ சதவிதம் என்றும் 14½ சதவிதம் என்றால்

15½ சதவீதம் என்ற வகையில் ஒரே ஒரு சதவீதம்தான் அதிகம். அந்த அளவுக்குத்தான் தருகிறார்கள். இந்தப் பணத்தை அவர்கள் கொடுத்தால் அது போய்ச்சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரும். தவணைகளைக் கடந்த நிலைமையில் 7 ஆண்டு, 8 ஆண்டு என்று பாக்கி இருக்கிறது என்று சொன்னால் அதற்குப் பதிலாக மீண்டும் வங்கியிலே இருந்து கடன் பெறுகிறார்கள். அப்படிப் பெறுகிறபோது அந்தக் கடனுக்கு வட்டி தரவேண்டும். ஆக கொடுக்கப்பட வேண்டிய கடனுக்கு வட்டி, புதிதாக வாங்கிய கடனுக்கு செலுத்தவேண்டிய வட்டி இந்த இரண்டையும் சேர்த்து அபராத வட்டியோடு அதாவது தவணை கடந்த கடன் என்றால் பீனல் இன்ட்ரஸ்ட் உண்டு, அதையும் சேர்த்துப் பார்க்கிறபோது ஏராளமாகக் கூடிவிடுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. அப்படித்தான் கூடும், வேறு வழியில்லை. அப்படிப்பட்ட நிலைமைக்குத்தள்ளுபவர்கள் யார்? ஏன் அப்படிப்பட்ட நிலைமைக்குப் போகவேண்டும். அக்ரிமென்ட் எப்போது செய்தார்களோ அப்போது 8½ சதவீதம் வட்டி என்று போட்டிருந்தால் அந்த சதவீதத்தின்படிதான் பெற்றுக் கொள்வதற்கு நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். அதில் மாற்றம் எதுவும் இல்லை. அதாவது 1970-லே, 1971-லே 8½ சதவீதம் என்று சொன்னால் இன்றைக்கு நிலைமை 14 சதவீதம் 15 சதவீதம் என்று கூடியிருக்கிறது. இந்தச் சதவீதத்தின்படி வாங்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். எனவே அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை.

அதேநேரத்தில் சிக்கல்கள் அங்கே வருகின்றன என்று சொன்னால் அவர்கள் கட்டாமல் இருக்கின்ற காரணத்தால் வட்டிக்கு வட்டி என்று ஆகி 15 சதவீதம் என்றால் 25 சதவீதம் என்று ஒன்றுக்கு இரண்டாகக் கூடிக்கொண்டு போகிறது. பளு கூடிக்கொண்டு போவதால் ஏற்படுகிற சங்கடம் இது.

இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில் 23.8 இலட்சம் ஏறக்குறைய பாக்கி இருக்கிறது. அங்கே இருக்கிற தொழிற் கூடங்கள் 125. ஒதுக்கீடு செய்யப்பட்டது 113. அவர்களில் முழுப் பணம் கட்டியவர்கள் 36 பேர், அவர்களுக்குப் பீனல் இன்ட்ரஸ்ட் இல்லை. வட்டிக்கு வட்டி கிடையாது. 36 பேர் பணத்தைக் கட்டி





விட்டு சொந்த இடமாக ஆக்கிக்கொண்டு விட்டார்கள். கட்டாதவர்கள் 23 பேர் மட்டும்தான். இதிலே 5 பேர் சம்பந்தப்பட்ட தொழிற் கூடங்களைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சத்திற்கு மேலே பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சிக்கல்கள் இருப்பது பற்றிச் சொன்னால் அந்தச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க அரசாங்கம் நிச்சயமாகத் தயாராக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பற்றி குறை சொல்லி அதிகாரிகள் வட்டிக் கடை நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொல்வது சரியாக இருக்காது. இருக்கிற நிலைமையைப் புரிந்துக்கொள்ளவேண்டும். கடன் கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வது ? நாமும் கடனை வாங்கித்தான் தொழில் கூடங்களைக் கட்டுகிறோம். அவர்கள் எங்களிடத்தில் கடனை வாங்கி இருக்கிறார்கள். முதலில் வாங்கியதற்கும் வட்டி செலுத்த வேண்டும்; இரண்டாவது வாங்கியதற்கும் வட்டி செலுத்த வேண்டும். இந்த வட்டியை எல்லாம் யார் தலையில் வைப்பது என்றால் தொழில் நடத்துகிறவர்கள் தலையில்தான் வைக்க வேண்டும். அதற்காக ஒரு நிறுவனம் நஷ்டப்பட வேண்டுமா? நஷ்டப்பட வேண்டும் என்பதற்காக ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதில்லை. சில நிறுவனங்களைப் பொறுத்தவரையில் நஷ்டப்பட்டிருந்தாலும் கூட சில நிறுவனங்களைப் பொறுத்தவரையிலாவது நஷ்டம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் காரியங்களைச் செய்கிறோம். அதிலே சிக்கல்கள் இருந்தால் அதைத் தீர்த்துவைக்க இந்த அரசு தெளிவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கடன் வழங்குகிற திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் மூன்றாம் இடத்தில் நாம் இருக்கிறோம். முதல் இடம் உத்தரப் பிரதேசம்; இரண்டாம் இடம் மத்திய பிரதேசம்; மூன்றாவதாகத் தமிழ்நாடு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன் உத்தரப்பிரதேசம்.மேலே இருப்பதற்கு ஒரே காரணம் என்னவென்று சொன்னால்—சிட்கோ நிறுவனம், டிக் நிறுவனம், சிப்காட் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் எல்லாம் கடன் வழங்குகின்றன.

(பிற்பகல் 1-40)

வழங்குகின்ற கடன்களை அதிகமாக வழங்குகிறோம் என்றாலும்கூட அதிகமான அளவில் மானியம் வழங்க வேண்டும் என்றால் முடியவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், தொழிலே இல்லாத மாவட்டம் என்று ஒரு மாவட்டம் கூட இந்த 19 மாவட்டங்களில் இல்லை. ஆனால் மத்தியப் பிரதேசத்திலும் சரி, உத்திரப் பிரதேசத்திலும் சரி அப்படி, தொழில் இல்லாத மாவட்டங்கள் என இரண்டு மூன்று இருப்பதால்தான் அவர்களுக்கு மானியத் தொகை கிடைக்கிறது. அவர்கள் அதிலே முன்னணியில் இருக்கிறார்கள். நாம் 3-வது இடத்திலே இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டான்சியை பொறுத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். டான்சியைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக நஷ்டத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு தொழிலாளர்கள் மட்டும்தான் காரணம் என்று நான் முன்னமேயும் சரி இப்போதும் சரி சொல்வதயாராக இல்லை. அதற்கு பல்வேறு காரணங்களும் இருக்கின்றன. 56 யூனிட்டுகளும் 7 விற்பனை நிலையங்களும் ஒரு காலத்திலே பயிற்சி பெற்ற சேவா நிறுவனங்களாக ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பித்தபோது தொடங்கப்பட வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. பயிற்சி நிறுவனங்களாக இருந்தது. பிற்காலத்தில் அது இயலாத ஒரு சூழ்நிலையில் மாற்றப்பட வேண்டி வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1965-66 லே அதனுடைய உற்பத்தி மதிப்பு 385 லட்சம். 1986-87 லே அதனுடைய உற்பத்தி மதிப்பு 2600 லட்சம். இவ்வளவு உற்பத்தி செய்தும்கூட நாம் போதுமான அளவுக்கு லாபம் ஈட்டவில்லை. சென்ற ஆண்டு மட்டும் 1984-85-லே 420 லட்சம் இழப்பு. அதாவது 4.20 கோடி. அதற்கு சென்ற ஆண்டிலே எடுத்த சில தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அதைக் கொஞ்சம் குறைத்து, 350 லட்சமாக குறைந்திருக்கிறது. இந்த ஆண்டின் எதிர்பார்ப்பு 1986-87-லே அதை 200 கோடியாக குறைக்க முடியுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) சாரி 200 லட்சமாக.





அதிலே ஏறக்குறைய 3, 4 ஆண்டுகளுக்கு முன்னாலே 13 தொழிற்கூடங்களை மூட வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருந்தது. அதற்குப் பிறகு அதனைக் கொஞ்சம் குறைத்து 8 ஆக ஆக்கினோம். அந்த கட்டுக்குள் உத்தரவு வழங்கப்பட்டிருந்தாலும் கூட உண்மையிலேயே இன்றைக்கு மூடப்பட கூடிய நிலையில் இருப்பவை 6 மட்டும்தான். ஆனால் இந்த ஐந்தையும் கூட ஒரேயடியாக மூட வேண்டும் என்ற நிலையில் இல்லாமல், ஏனென்றால் அதன் மூலம் அவர்களுக்கெல்லாம் எந்தவித இழப்பும் இருக்கக்கூடாது, சங்கடங்களும் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல, அவர்கள் எல்லாம் திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்திக் கொண்டிருப்பவர்கள், திடீரென்று நிறுவனத்தை மூடினால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாது போய்விடும். அத்தோடு மூடப்படுகிற தனியார் நிறுவனங்களைக்கூட அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிற இந்தக் காலக் கட்டத்தில், அதை மூடுவது என்பது சரியாகாது என்ற எண்ணத்தில்தான் சம்பந்தப்பட்ட அலுவலர்களை அரசாங்க அலுவலர்கள் சந்தித்துப் பேசி, அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இப்படிப்பட்ட இந்தத் தொழில்கள் மூடப்படுவதற்கான முக்கியமான காரணமே ஆயத் தீர்வை. ஆயத் தீர்வையைப் பொறுத்த மட்டில் 175 லட்சம் இன்றைக்கும் கட்டிக் கொண்டிருக்கிறோம் ஆண்டு ஒன்றுக்கு. மற்ற சிறு நிறுவனங்களாக இருந்தால் அவர்கள் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்த டாக்ஸைப் பற்றி தனியார் நிறுவனங்கள் கவலைப்படுவதே இல்லை. அத்தோடு பல்வேறு வழி முறைகள் அவர்களுக்கு இருக்கின்றன. அதே நேரத்தில் சம்பளம் மிகமிக குறைவு. பீ. ரேட்டுகள் வைத்து வேலை வாங்குவார்கள். 15 ரூபாய் 20 ரூபாய் என்று கேஷுவல் லேபர்களை வைத்து வேலை வாங்கிவிடுவார்கள்.

டான்சியிலே ஒரு நாற்காலி செய்ய 400 ரூபாய் ஆகிறது என்று சொன்னால், அதேபோன்ற நாற்காலியினை தனியார்கள் 300 ரூபாய்க்கு செய்ய முடியும். காரணம் உற்பத்திச்செலவு நமக்கு அதிகம். அவர்களுக்கு உற்பத்திச் செலவு குறைவு. ஆயத் தீர்வை கட்ட வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அரசு நிறுவனங்களுக்கு

கொடுத்திருக்கிற சாமான்களுக்கு, பொருள்களுக்கு திரும்பப்பெற வேண்டிய பணம் ஏறக்குறைய 400 லட்சம். அப்படி அதை பெற முடியாததினால் அந்த 400 லட்சத்திற்கும் ஏறக்குறைய 80 லட்சம் ரூபாய் வட்டிக் கட்டிக்கொண்டிருக்கிறோம், ஆண்டு ஒன்றுக்கு. அதை ஒரே நேரத்திலேயே அரசு வாங்க முடியுமா என்று சொன்னால் வாங்க முடியாது. அப்படி வாங்க வேண்டும் என்று சொன்னால் அதிலே பல சிக்கல்கள் சிரமங்கள் ஏற்படும். ஆகவே அதற்கும் குறைந்தபட்சம் 80 லட்சம் ரூபாய் வட்டிக் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

அது போல சிக்கலான இன்டஸ்ட்ரிகளுக்கு வாங்கப்பட்ட அந்த இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டன. அந்த இயந்திரங்கள் மூலம் பலனே இல்லாமல் போய்விட்டது. அதை மாற்ற வேண்டிய கட்டாயம். அதேபோல தேய்மானம் ஆன இயந்திரங்களினாலே அதிகப்படியான உற்பத்திச் செலவு ஆகிறது. ஆரம்பத்திலிருந்து தேவைக்கு அதிகமாக தொழிலாளர்கள், பணியாளர்கள் அங்கே பணி புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு எந்த நிறுவனங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பியதோ, அந்த அரசு நிறுவனங்கள் தாங்களாகவே புதிய புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதனால் போதுமான வழங்கல் ஆணை அதாவது ஆர்டர்கள் கிடைக்கவில்லை. தொடர்ந்து தவறு செய்கிற அலுவலர்கள் சிலபேர், டான்சி அரசுக்கு செலுத்த வேண்டிய பாக்கி மட்டும், இப்படி ஆண்டிற்காண்டு நஷ்டம் ஏற்பட்டு ஏற்பட்டு, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக அரசிடமிருந்து பெற்று பெற்று இன்றைக்கு 1,360 லட்சம் ரூபாய் அரசாங்கத்திலிருந்து இந்த நிறுவனம் கடனாகப் பெற்றிருக்கிறது. அதிலே ரூ. 1,000 லட்சத்தை வட்டியில்லாத கடனாகவும் ரூ. 360 லட்சத்தை பங்கு தொகையாகவும் மாற்ற வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு அந்தச் சலுகையை வழங்கி ரூபாய் 360 லட்சத்தை பங்கு தொகையாக ஏற்றுக்கொண்டு, 1000 லட்சம் ரூபாயை வட்டியில்லாத கடனாக ஓராண்டிற்கு தள்ளிப் போட்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு விதமான சிக்கல்கள் டான்சிக்கு ஏற்பட்டு அது சங்கடமான க்ஷீணித்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.





அதே நேரத்தில் டான்சியில் ஏராளமான பணிகளை செய்திருக்கிறார்கள். ஒரு பணி அல்ல, இரண்டு பணியல்ல. ஏறக்குறைய 1800 பணிகளை முடித்து சிறப்பான பெயரைப் பெற்றிருக்கிறார்கள். இங்கே பலர் சொன்னார்கள். தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கையெடுத்தால் நிறுவனம் ஒழுங்காகும் என்று சொன்னார்கள். அந்த வகையில் கடந்த ஆண்டிலிருந்து கொஞ்சம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 8 பேர்கள் வேலை நீக்கம் செய்ய உத்தரவுகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கட்டாய ஓய்வு கொடுத்து இரண்டு பேரை அனுப்ப எல்லா நடவடிக்கைகளும் முறைப்படி, சட்டப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல், 21 பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 33 பேர்கள் மீது கடந்த ஒரு ஆண்டிலே, தவறு செய்த அத்தனைபேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் ஒழுங்காக இந்த நிறுவனம் இயங்குவதற்கான ஏற்பாட்டை அந்த வகையில் செய்திருக்கிறோம்.

இங்கே சொல்லும்போது பலபேர் வேலையற்றுப் போய் விட்டார்களே என்று சொன்னார்கள். சட்டமுறைப்படி கதவை மூடுவதாக இருந்தால் 15 நாள் சம்பளத்தைக் கொடுத்தால் போதும். சட்டத்தில் அவ்வளவுதான் இடமிருக்கிறது. அதற்கு மாறாக அவர்கள் எத்தனை ஆண்டுகள் பணி செய்தார்களோ அதை கணக்கில் எடுத்து ஆண்டிற்கு இரண்டு மாத சம்பளத்தை, இதுவரையில் எந்த அரசாங்கமும் கொடுக்காத அளவிற்கு, பணத்தை கொடுத்து, விருப்பகரமாக அவர்களை அனுப்பியிருக்கிறோம். தானாகவே ஓய்வு பெற விரும்பினாலும், அவர்களுக்கு எந்தவிதமான குறையும் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு செய்திருக்கிறோம்.

'தன்விருப்ப பணிவிலகல்' என்ற திட்டத்தின்கீழ் ஏராளமான பேர்கள் விண்ணப்பித்தார்கள். அவைகளில் சு. 1190 பேர்களின் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்கப்பட்டன. ஆண்டிற்கு இரண்டு மாத ஊதியம் என்ற முறையில் அவர்களுக்கு 497 லட்சம் ரூபாய்

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

உதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே 10 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக வாங்கியவர்கள் நான்கே நான்கு பேர்கள்தான். கடைசிபட்சமாக குறைந்த தொகை வாங்கியவர் ரவிசந்திரன், டோக்கன் நம்பர் 47, டான்சி கனரக தொழிற்சாலை, ஈரோடு, என்பவர்தான். அவர் வாங்கிய தொகை ரூ. 8,614.35 ஆகும். ரூ. 50,000-க்கு அதிகமாக வாங்கியவர்கள் இருக்கிறார்கள். ரூ. 40 ஆயிரம், ரூ. 48 ஆயிரம் என்று வாங்கியிருக்கிறார்கள். அதில் 50 ஆயிரத்திற்கு அதிகமாக வாங்கியவர்கள் 233 பேர்கள். அதிலே அதிக தொகை வாங்கியவர் திரு பி. ஏ. குமார், டோக்கன் நம்பர் 8, டான்சி வார்ப்பட தொழிற்சாலை, ஈரோடு, என்பவர். அவர் வாங்கிய தொகை ரூ. 67,954-85 ஆகும். ஆகவே ஏறக்குறைய ரூ. 68 ஆயிரம் வரையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால் இதுவரையில் யாருக்கும் இப்படி கொடுக்கவில்லை. நீண்ட நாட்கள் பணியாற்றியிருக்கிறார்கள். ஆகவே விரும்பி போனாலும் அவர்கள் மனநிலை சங்கடப்படக் கூடாது என்ற நிலையில், யாருக்கும் எந்தவிதமான குறையும் இல்லாமல் இந்தப் பணியை நிறுவனம் செய்து முடித்திருக்கிறது. இதன்மூலமாக ரூபாய் 240 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு குறைக்கப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 420 லட்சம் ரூபாயில் புனரமைப்பு வேலைகள் எல்லாம் செய்யவிருக்கிறார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புனரமைப்புப் பணிகள் முடியுமானால். 1990-வம் ஆண்டில் இந்த நிறுவனம் இலாபகரமாக இயங்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தோல் தொழிலைப் பொறுத்தவரையில் ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தோல் தொழிலைப் பொறுத்தவரையில் இந்திய துணைக்கண்டத்திலே 70 சதவீதம் தோல் உற்பத்தி தமிழகத்தில் தான் இருக்கிறது.

(பிற்பகல் 1-50)

ஏற்றுமதியில் 65 விழுக்காட்டை தமிழகம் அடைந்திருக்கிறது. என்றாலும் கூட தோல் பொருட்களைப் பொறுத்தவரையில் 20 சதவீதம் தான் இன்றைக்கு நாம் அடைந்திருக்கிறோம். ஆகவே இதைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு பல்வேறுவிதமான திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. இந்த திட்டங்கள் எல்லாம் 1986-87-ல் நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக கொள்கிறேன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அதிலும் குறிப்பாக பெண்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 20 பேர்களுக்கு ஒன்பது மாத காலம் பயிற்சியைக் கொடுத்து, 150 ரூபாய் பயிற்சித் தொகை கொடுத்து, 10 இடங்களில் இதைப்போல் 200 பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. பெரம்பூர், பல்லாவரம் ஆகிய இரண்டு இடங்களில், மகளிர் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,200 பெண்களுக்கு இந்த பயிற்சி தரப்படும். சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த சிட்கோ நிறுவனத்தின் மேற்பார்வையில் இருந்த மாதவரம் தொழில் பேட்டையை டால்கோ நிறுவனத்திற்கு மாற்றி இருக்கிறோம். அந்தத் தொழில் பேட்டையில், ஏறக்குறைய 34 தொழில் கூடங்கள் இருக்கின்றன. திண்டுக்கல்லில் உள்ள பள்ளப்பட்டிக்கு அருகில் தோல் தொழில் பேட்டை ஒன்றைத் தொடங்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். நில ஆர்ஜிதம் செய்து இருக்கிறோம்.

டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த விண்ணமங்கலம், பெரம்பூர், பல்லாவரம் மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் உள்ள தோல் தொழில் கூடங்களை டால்கோ நிறுவனத்திற்கு 14—4—1986-லிருந்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தொடர்ந்து ஒழுங்காக பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்து ஏறக்குறைய 10 கோடி ரூபாயை மூலதனமாக இந்த அரசு வழங்கி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை எல்லாம் நிச்சயமாக இந்த அரசு நடைமுறைப் படுத்தி 1986-87-க்குள் இருக்கிற குறியீட்டை அடைய இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாணியம்பாடியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். வாணியம்பாடியைப் பொறுத்தவரையில் இரண்டு கோடி செலவிலே திட்டமிடப்பட்டு, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதை

விரைவாகச் செய்வதற்கான ஏற்பாடுகளை எல்லாம் தொடர்ந்து செய்து வருகிறோம். அதிலே சில சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களை எல்லாம் நீக்கிவிட்டு அந்தப் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறோம். இதைப் போல இந்தத் திட்டங்களை எவ்வளவு வேகப்படுத்தினாலும் கூட . . .

திரு. மா. கதிர்வேலு: தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் தோல் கழிவு நீரைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை அமுல் படுத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரவேற்கிறோம். ஆனால் ராணிப்பேட்டையில் தோல் தொழிற் சாலைகளில் இருந்து வரும் கழிவு நீரை கட்டுப்படுத்தும் திட்டம் எந்த அடிப்படையில் எவ்வளவு காலத்திற்குள் அமுல்படுத்தப் படும் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் குடிநீர் திட்டங்கள் எல்லாம் பாழடைந்து இன்றையதினம் அண்மையில் கூட இந்த குடிநீருடைய பர்சன்டேஜுடைய அளவு தகுதியற்றது என்ற நிலையில் இன்றைக்கு மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு ராணிப்பேட்டையில் தோல் கழிவுநீரைக் கட்டுப்படுத்துகின்ற திட்டத்தை—வாணியம்பாடியில் உள்ளதைப் போல—அரசு அமுல் படுத்த முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் மட்டுமல்ல. எங்கெல்லாம் தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இப்படிப் பட்ட கழிவு நீரை சுத்திகரிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. சில இடங்களில் அவர்களாகவே முன்வந்து அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய அளவில் உதவிகளை செய்து கொண்டு இருக்கிறோம். ஆம்பூர், பேரணாம்பேட், ஈரோடு, பம்மல் போன்ற பகுதிகளில் கூட இப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ராணிப்பேட்டையில் மட்டுமல்ல, தோல் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற தொழில் அதிபர்கள் இதற்கு முன்வர வேண்டும். சில இடங்களில் தான் ஒட்டுமொத்தமாக இந்த சுத்திகரிப்பு நிலையம் வைக்க முடியும். எல்லா இடங்களிலும் அரசாங்கம் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி, இப்படிப்பட்ட





செயலைச் செய்வது என்பது இயலாத காரியம். ஒரு நகரத்தை எடுத்துக்கொண்டால், இப்போது வாணியம்பாடி என்று எடுத்துக் கொண்டால், ஏறக்குறைய ஏராளமான தொழிற்சாலைகள் ஒன்றுக்குப் பக்கத்திலே ஒன்றாக இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த கழிவு நீரை ஒட்டுமொத்தமாக எடுத்துச் செல்ல ஒரே கால்வாயில் எடுத்துக்கொண்டு போக வசதி இருக்கிறது. ஆனால் ராணிப்பேட்டையைப் பொறுத்தமட்டில், சிட்கோ நிறுவனத்தினுடைய ஷெட்டுகள், ஏழு, எட்டு இருக்கின்றன. அவர்களுக்கு ஏதாவது தனியாக செய்ய முடியுமா என்பதை ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக கைத்தறிப் பொருள்களின் வளர்ச்சிக்கு என்று பூம்புகார் என்ற நிறுவனம் 1973-லே நிறுவப்பட்டு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது. ஆனால் போதிய அளவிற்கு அதற்கு வருவாய் இல்லாத நிலைமை இருக்கிறது. ஏன் என்று சொன்னால், அங்கே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள், அது பொம்மையாக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் சரி, போதிய அளவிற்கு விற்பனை வசதிகள் இல்லை. இந்த விற்பனை வசதி இல்லாத இடங்களில் எல்லாம் மூடிவிடவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்குமானால், லாபம் வரக்கூடிய தொழிலை மட்டும் வைத்துக்கொண்டு, ஏறக்குறைய இவ்வளவு வருமானம் லாபம் வருகிறது என்று நாம் சொல்ல முடியும். ஆனால் இன்றைக்கு லாபம் குறைவாக இருந்தாலும் கூட, அப்படிப்பட்ட வருவாய் இல்லாத இனங்களைக் கூட இன்றைக்கு நாம் வைத்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி இருந்தும் கூட ஏறக்குறைய 1.07 லட்சம் இந்த ஆண்டு லாபத்தோடு இயங்குகிறது. தொடர்ந்து 80 முதல் லாபத்தோடு இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது வெளி மாநிலங் களுக்கு, வெளிநாடுகளுக்குக்கூட பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பட்டு வளர்ச்சித் துறை. பட்டு வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழகத்தை வேகமாக முன்னுக்கு கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர்

அவர்கள் சீரிய திட்டங்களைச் செயலாற்றும்படி அவ்வப்போது வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். அதன் மூலமாக 1965-லே மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது வெறும் 50 ஏக்கர்லே மட்டும் மொசுக்கொட்டை பயிரிடப்பட்டு வந்தது. கொள்ளேகால் பகுதியெல்லாம் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்து விட்ட காரணத்தினாலே ஓசூர், தாளவாடி பகுதிகளிலே மட்டும் அதுவும் அரசு பண்ணையிலே ஒரு 500 ஏக்கர் பயிரிட்டு வந்தோம். அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து 1979 ஆம் ஆண்டில் 21,419 ஏக்கரில் மொசுக்கொட்டை செடி பயிரிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்தோம். ஏறக்குறைய 78 ஆம் ஆண்டில் தனியாக பட்டு தொழிலுக்கு என ஒரு துறையை நிறுவி அதன் மூலமாக சிறப்பாக சேவை செய்து கொண்டிருக்கிற காரணத்தினாலே 1985 மார்ச் முடிய 64 ஆயிரம் ஏக்கர் என்ற அளவுக்கு மொசுக்கொட்டை சாகுபடி அதிகரித்தது. இன்றைக்கு, 1985-86-க்குப் பிறகு 5 ஆயிரம் ஏக்கரிலே மொசுக்கொட்டை செடியை பயிரிடவேண்டுமென திட்டமிட்டிருந்தோம். அதற்கும் மேலாக 5,600 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு மார்ச் முடிய 72,672 ஏக்கரில் அது வளர்ந்து மிகச்சிறப்பான உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. நம்முடைய ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பொறுத்தமட்டில் அது மேலும் வளர்ந்து 1990-ல் 1 லட்சம் ஏக்கரில் இந்தச் செடியைப் பயிரிடவேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறோம். இதனால் வேலைவாய்ப்பு குறைவதற்கு வாய்ப்பு இல்லை. இதில் முக்கியமானது என்று சொன்னால் மைசூர் மாநிலம், ஆந்திரப் பிரதேசம் போன்ற இடங்களிலே இந்த பட்டு வளர்ச்சித் துறை மிகச் சிறப்பாக இருக்கிறது. நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோம். இருந்தாலும்கூட அந்த மாநிலத்தை எல்லாம் எடுத்துக் கொள்கிறபோது மாநிலத்திலே ஒரு பகுதியிலேதான் அது வளர்ச்சியுற்று இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அதற்கு முன்னாலே குளிரான இடத்திலேதான் இந்த மொசுக்கொட்டைச் செடி பயிரிட முடியும்; பட்டுப்புழு வளர்க்க முடியும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்த நிலை மாறி இன்றைக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டம், காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் இப்படிப்பட்ட வறட்சியான மாவட்டங்களிலேகூட இந்த





மொசுக்கொட்டை பயிரிட முடியும். நல்ல சிறப்பான அளவுக்கு சிறிய விவசாயிகள், வசதியான, வாய்ப்பான அளவுக்கு அவர்களுக்குக் கூலி கிடைக்கவும், வருமானம் கிடைக்கின்ற அளவுக்கு இன்றைக்கு ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் மொசுக்கொட்டை செடி வைத்தால்கூட வீட்டில் இருக்கிற பெண்கள் அந்தப் புழுக்களை, இந்த பட்டு வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டால் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாய் வரையிலே வருமானம் கிடைக்கக் கூடிய ஒரு நல்ல தொழிலாகும். பணப்பயிரிலேகூட இந்த அளவுக்கு வருமானம் கிடைக்காது. அந்த அளவுக்கு இன்றைக்குச் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பட்டு வளர்ச்சி மிகமிகச் சிறப்பாக இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. பல திட்டங்களை இன்றைக்கு நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஏறக்குறைய 16 திட்டங்களை 1985-86-லே நிறைவேற்றி இருக்கிறோம். 1986-87-லே தர்மபுரியிலே 1 கோடி செலவிலே பட்டு நூல் நூற்கும் விசைத்தறி மூலம் பட்டு நூல் நெசவு செய்வதற்கான ஆலை ஒன்றை நிறுவ தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

காமராஜர் மாவட்டத்தில் சேவலூர் கிராமத்தில் 42 லட்சம் செலவில் 100 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் பட்டு கிராமம் அமைக்க ஏற்பாடு செய்து நில ஆர்ஜிதம் போன்ற வேலைகளெல்லாம் முடிந்திருக்கின்றன. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் கம்பனூர் கிராமத்தில், இலங்கை அகதிகளுக்காகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கு வள்ளியூர் கிராமத்தில் 'பட்டு கிராமங்கள்' அமைக்க ஆர்ஜித நடவடிக்கைகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தில் பட்டு வளர்ச்சிக்காக ஆதிதிராவிட கழகம் மூலமாக 2.96 லட்சம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் ஏறக்குறைய 5 ஆயிரம் ஏக்கரிலே மொசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். பயிரிடுவது மட்டும் அல்ல, இவைகளை யெல்லாம் கணக்கு சொல்லிக்கொண்டேபோனால், ஒரு ஆண்டுக்கு

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 3

எவ்வளவு பயிரிடுகிறோம் என்று சேர்த்துக் கொண்டே போனால், 67 ஆயிரம், 72 ஆயிரம், 77 ஆயிரம் என்று போய் கொண்டே இருக்கும். ஆனாலும்கூட சில இடங்களிலே பட்டுப்போகிறது. அவைகளை பராமரிக்கமுடியாத நிலை இருக்கிறது. அவைகளையெல்லாம் மீண்டும் பயிரிடுவதற்கு தேவையான ஏற்பாட்டை செய்து மறு நடவு என்ற பெயரில் இந்த ஆண்டு 10 ஆயிரம் ஏக்கரிலே மறு நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சரிவர போதுமான அளவுக்கு இலை பெருக்காத செடிகளையெல்லாம் எடுத்துவிட்டு புதிதாக பயிரிட்டு அவர்களுக்கெல்லாம் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அப்படி 10 ஆயிரம் ஏக்கரிலே இந்த ஆண்டு மறு நடவு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

பட்டு நூற்பு அங்காடி, நூற்புத் தொழிற்சாலை, பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், பட்டு விற்பகம் போன்ற அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத்தக்க அளவில் மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்களை நான்கு இடங்களிலே நிறுவுவதற்கு ஏறக்குறைய 14 லட்சத்தை ஒதுக்க திட்டமிட்டிருக்கிறோம். அதேபோல் ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, ஓரத்த நாடு மலை, கோவை ஆகிய இடங்களில் வெளிநாட்டு ஏற்றுமதி தேவைக்கு மிக சிறப்பான வெள்ளை ரகம் என்று சொல்லத்தக்க இரு சுழற்சி கலப்பின பட்டுப் புழு மண்டலமாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் தரம் மிக்க இரு சுழற்சி கலப்பின விதை கூடுகள் தயாரிக்க விவசாயிகளுக்கு பெரும் அளவுக்கு உதவி செய்து வருகிறோம். ஊக்கத் தொகை கொடுத்து வருகிறோம். இந்த பட்டு இனத்தைப் பொறுத்த வரையில் சாதாரணமாக 1,200 மீட்டர் நீளம் உள்ள பட்டு தர வல்லது. அதை இந்த ஆண்டு ஏறக்குறைய 27 ஆயிரம் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்ய இருக்கிறோம். 5.7 லட்சம் செலவில் கொல்லிமலையில் பட்டு முன்னோடி மையம் ஒன்று 20 ஏக்கர் நிலத்தில் ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

இந்த டான்சில்க் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் காஞ்சிபுரம் தலைமையிடமாக இருக்கிறது. இன்றைக்கு நான்கு கிளைகள் இயங்குகின்றன. புதிதாக இரண்டு கிளைகளை



1986 மே 3] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

கோவையிலும், தர்மபுரியிலும் தொடங்க இருக்கிறோம். பட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்த அனைத்து கிளை நிலையங்களிலும் பணம் வழங்க ஏற்பாடு செய்து இருக்கிறோம், பணம் வழங்குவதில் தட்டுப்பாடு இருக்கக்கூடாது என்பதற்காக. அதன் தரத்தை ஆராயும் பொருட்டு பட்டு நூற்பாலை மற்றும் நெசவாளர்கள் அடங்கிய தரக் கட்டுப்பாடு குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குத் தேவைப்படும் பட்டு டான்சில்க் நிறுவனத்தின் மூலமாக கர்நாடகத்திலிருந்து பெற மாண்புமிகு கர்நாடக மாநில பட்டுப் புழு வளர்ச்சி அமைச்சர் அவர்களை அழைத்துப் பேசப்பட்டது. நம்முடைய அரசின் உதவியோடு 31—3—1986 முடிய ஒரு ஆண்டில் 1 கோடியே 14 லட்சம் கிலோ கிராம் பட்டை 6 கோடியே 10 லட்சம் ரூபாயில் வாங்கி இருக்கிறோம். போதிய அளவு நூற்பு வசதி இல்லாதது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. அதை போக்குவதற்கு தற்போதுள்ள ரீலிங் வசதி பெருக ஏற்பாடு செய்து இருக்கிறோம். இப்போது ரீலிங் வசதியைப் பொறுத்தவரையில் தனியார் பேசின் சர்க்காவையும் சேர்த்து 2,400 யேனங்கள் இருக்கின்றன. அதிலே கூட்டுறவின் மூலம் 300, அரசின் துறையின் மூலம் 300 ஆக 3 ஆயிரம் தான் இருக்கின்றன. நம்முடைய தேவை 6 ஆயிரம் யேனங்கள் இருந்தால் நம்முடைய தேவையை பூர்த்தி செய்ய முடியும். அந்த 6 ஆயிரம் யேனங்களை வாங்குவதற்கு தற்போதுள்ள 3 ஆயிரம் போக 3 ஆயிரம் தேவையை பூர்த்தி செய்வதற்கு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த ஆண்டு கூட பேசின் புதிதாக 150-ம், சர்க்கா 150-ம் அது இல்லாமல் 150 உடைந்த பேசின்களுக்கு வட்டி இல்லாமல் இயங்க மூலதனத்தைக் கொடுக்கிறோம். இப்படி சிறப்பான பணிகளை அந்த பட்டு நூல் வளர்ச்சி இயக்ககம் ஒழுங்காக செய்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். டான்சில்க் பொறுத்த வரையில் ஏராளமான பாக்கி இன்றைக்கு இருக்கிறது. நூற்பு சங்கங்களுக்கு. நூற்பு கூடங்களுக்கு மற்ற நிறுவனங்களுக்கு டான்சில்க் கொடுக்கவேண்டிய பாக்கி 3 கோடியே 40 லட்சம் ஆகும். டான்சில்க்குக்கு நெசவாளர்கள் தரவேண்டிய பாக்கி 2 கோடியே 50 லட்சம் ரூபாய் ஆகும். ஆக இந்த 2 கோடியே 50 லட்சம் என்பது இன்றைக்கு என்று இல்லை இது தொடர்ந்து இருந்து வருகிற பாக்கி, இந்த பாக்கியை வசூலிக்க மிகவும் சிரமப்

பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த பாக்கி வசூல் ஆனால் அவ்வப்போது அந்த பட்டு நூற்பாலைகளுக்கு பட்டு விவசாயி களுக்கு உடனடியாக வசூல் செய்ய ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஏராளமான திட்டங்கள் எல்லாம் பார்ட் II ஸ்கீமில் ஏற்பாடு செய்து இருக்கிறோம். ஏறக்குறைய 17 திட்டங்கள் பார்ட் II ஸ்கீமில் நாம் நடைமுறைப்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானிய கோரிக்கைகள் மீது ஏறக்குறைய ஒன்பது மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரை ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லவேண்டும் என்று சொன்னால் நேரம் அதிகம் ஆகும் என்று கருதுகிறேன். ஆக ஒவ்வொருவருக்கும் பதிலை இங்கே தயாரித்து வைத்து இருக்கிறோம் என்றாலும் காலத்தின் அருமையை கருதி அந்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை, நியாயமான அந்த விண்ணப்பங்களை எல்லாம் நிச்சயமாக அரசு தொடர்ந்து பரிசீலிக்கும். இன்றைக்கு விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் மட்டும் அல்ல, பல நேரங்களிலே இந்த ஒரு ஆண்டு காலமாக கேள்வி நேரத்தின் போதும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் போதும் பல செய்திகளை எல்லாம் இங்கே சொல்லியிருக் கிறார்கள். அவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நிச்சயமாக வேண்டிய நடவடிக்கை அனைத்தையும் இந்த அரசு எடுக்கும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மறுவாழ்வு தருகின்ற முறையில் தஞ்சை மாவட்டத்தில் ஒரேயொரு தாலுக்கா, ஒரத்தநாடு தாலுக்கா தான் இண்டஸ்ட்ரியலி பேக்வார்டு என்று அறிவிக்கப்பட்டு இருப்பதற்கு சிப்காட், சிட்கோ மூலமாக தொழிற்பேட்டையை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல் இந்த இடத்திலே வேண்டுமானாலும் சரி, சிப்காட்டானாலும் சரி, சிட்கோ வானாலும் சரி, தொழிற்பேட்டையை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறது. 98 தொழிற்கூடங்களைக் கட்டத்தான் இந்த ஆண்டு முடிவெடுத்திருக்கிறோம். அந்த தொழிற் பேட்டையைப் பொறுத்தவரையில், அது மிகச் சிறிய வேலை. இதுபோன்று நான்கு மடங்குகூட அவர்களால் செய்யமுடியும். ஆனால் யாரும் முன்வர மாட்டேன் என்கிறார்கள். அனுமதிக்கப் பட்ட 45 இடங்களில் தொழிற்கூடங்கள் இன்னும் துவங்கப் படவில்லை. ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட இடங்களில் டைனி ஷெட்ஸ் இல்லை. ஆகவே மீண்டும் மீண்டும் தொழிற் கூடங்களை திறப்பதில் பணம் இல்லை என்று சொல்வதில், ஏதோ பெருமையாக வேண்டுமானால் திரும்பச் சொல்லிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூட தன்னுடைய தொகுதியில் இந்தமாதிரி செய்யவேண்டுமென்று மிகவும் விருப்பத்தோடு கேட்டு, அதற்கு சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டுவருகிறோம். என்றாலும்கூட, எங்காவது தொழில் துவங்கவேண்டுமென்று சொன்னால், அங்கேயிருந்து 10 பேர் களாவது தொழில் முனைவர்கள் முன்வந்து, நிதி கேட்டு, கடன் கேட்டு அந்த நிறுவனங்களை அணுகி தொழில் துவங்க முன்வருவார்களேயானால், சிப்காட்டும் சரி, சிட்கோவும் சரி, அவர்களுக்கு வேண்டிய தொழிற்பேட்டைகளை ஆரம்பித்துக் கொடுக்க தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையத்திலிருந்து சிபாரிசு செய்து வரப்பட்டவர்களுக்கு பாங்குகளில் கடன் இல்லை என்று சொல்கிறார்கள். முதலிலே ஒரு வாரம் கழித்து வாருங்கள் என்று கொல்கிறார்கள். பிறகு சென்று கேட்டால், தபால் வரும் என்று சொல்கிறார்கள். இன்னொரு வாரம் கழித்துக் கேட்டால், இப்போது கோட்டா முடிந்துவிட்டது. பிறகு பார்ப்போம் என்று சொல்கிறார்கள். அப்படி சிபாரிசு செய்யப்பட்ட இரண்டு நபர்களின் பெயர்களைக் கொண்டு வந்திருக்கிறேன். படித்து

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 மே 3

வேலையில்லாதவர்களுக்கு சுய வேலைவாய்ப்பின் கீழ் ஒன்று. இன்னொன்று, சிறு தொழிலுக்காக வந்தது. படித்து வேலையில்லாதவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு என்ற முறையிலே ஜி. முத்துவேல் என்பவர் விருதுநகரில் இருந்து மனு கொடுத்திருக்கிறார். சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஏ. ஹரிச்சந்திரன் என்பவர் மனு கொடுத்திருக்கிறார். முறையே ரூ. 25,000, ரூ. 5,000-க்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பணம் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆனால் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதிலே பல தவறுகள் நடக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். சட்டமன்ற உறுப்பினர் சிபாரிசு செய்தும் கூட, இவர்களுக்கெல்லாம் மறுக்கப்படுகிறது. ஆனால் சில தனியார்களுக்கு வேறு சில சிபாரிசுகளின் பேரில் கடன் கொடுக்கிறார்கள் . . . (குறுக்கீடு) மாவட்டத் தொழில் மையத்தால் சிபாரிசு செய்யப்பட்ட அந்த இரண்டு பேர்களுக்கும் நிதியுதவி கொடுக்கப்படுமா, விருதுநகரில் மாவட்டத் தொழில் மையம் துவங்கப்பட இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** தலைவர் அவர்களே, இப்போது புதியதாக தொடங்கப்படயிருக்கிற நான்கு மாவட்டங்களிலேயும், நீலகிரி மாவட்டம், அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்களை ஏற்படுத்த மைய அரசு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. விரைவிலேயே அந்தப் பகுதிகளிலே மாவட்டத் தொழில் மையங்கள் ஏற்படுத்தப்படும்.

அதேபோல சில பேர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் அப்படித் தவறு செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, லேபர் காலனியில் இருக்கின்ற குடியிருப்புகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியை மாண்புமிகு



1986 மே 3] [திரு. சைதை சா. துரைசாமி]

அமைச்சரவர்கள் பார்வையிட்டபோது அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த குடியிருப்புகளில் வசதி படைத்தவர்கள் எல்லாம், தொழிலாளர்கள் அல்லாதவர்கள் எல்லாம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படியில்லை. அந்த தொழிலாளர்களுடைய குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை கொள்கை அடிப்படையிலே வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

இந்தத் தொழிற்பேட்டை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூட சில இடங்களில் வழங்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களுடைய குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த மேம்பாட்டு மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் இருக்கிறது. விற்பனைப் பத்திரங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா ? அப்படி வழங்கப்பட்டால், அந்தச் சிறு தொழிலதிபர்கள் இன்னும் தங்களுடைய தொழில்களை அபிவிருத்தி செய்யமுடியும். ஆகவே ஏதாவது மாற்று நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(பிற்பகல் 2-10)

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தொழிற்பேட்டைகளை ஒட்டி 17 நகரங்களில் ஏறக்குறைய 1,111 குடியிருப்புகளைக் கட்டிக்கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குடியிருப்புகளில் ஏறக்குறைய 90 சதவீதத்தினர் எந்த நோக்கத்திற்காக அந்தக் குடியிருப்புகள் வழங்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவுசெய்கிற வகையில் குடியிருக்கிற நபர்கள் இல்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் ரூ. 11, ரூ. 15, ரூ. 20 என்று மிக மிகக் குறைந்த அளவுக்குத்தான் வாடகைக்கு விடப்படுகிறது. அந்தக் குறைந்த தொகையைக்கூட நீண்ட காலமாகக் கட்டாமல்

இருக்கிற பெரியவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அதற்கு வேறு ஒரு வசதியும் செய்வதற்கு இயலாத நிலை இருக்கிறது. நான் போய்ப் பார்த்தபோது கண்டிப் பகுதியிலே அது ஏதோ பாழடைந்த இடம்போல்தான் இருக்கிறது. சாலை வசதி இல்லை, சாக்கடை வசதி இல்லை, தெரு விளக்கு வசதி இல்லை, அத்தனையும் உண்மைதான். இவ்வளவும் உண்மை என்று சொன்னாலும் கூட எந்தவிதமான வசதியும் செய்து கொடுத்தாலும்கூட 11 ரூபாய் கட்டுவதற்கு முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும். அங்கே குடியிருப்பவர்களும் மறுபரிசீலனை செய்யவேண்டும். அதற்குப் பிறகு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தஞ்சையிலே தென்னை இப்போது அதிகமாக பயிரிடுகிறார்கள். தென்னையிலிருந்து கிடைக்கும் உப பொருள்கள் மூலம் சிறு சிறு தொழில்களை தேங்காய் நார் கயிறு தொழிற்சாலை, தேங்காய் ஓட்டிலிருந்து கார்பன் தயாரிக்கும் தொழிற்சாலை, டெசிகேட்டட் கோகோநட் என்று சொல்கிற தேங்காய்பூ திருகுகின்ற தொழில் அகம் ஆகிய பல தொழிலகங்களையும் உப்புத் தொழிலைச் சார்ந்த சார்புத் தொழில்களையும் துவக்கவேண்டுமென்று சென்ற ஆண்டு இரண்டு நாள் கருத்தரங்கத்தில் முடிவு செய்யப்பட்டது அரசு அளவிலே. அதன்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் வல்லுநர்களைக் கொண்டு 10 கோடி ரூபாய் அளவிலே அரசு சார்பிலே சிறு சிறு தொழில் அகங்களைத் தொடங்கவேண்டுமென்று நகல் திட்டமொன்றை அரசுக்கு அனுப்பிவைத்திருக்கிறார். அது எந்த அளவில் இருக்கிறது? அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**திரு. கி. ராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் எழுப்பிய பிரச்சினையில் அமைச்சர் அவர்களின் பதில் முழுமையாக இல்லை என்று கருதுகிறேன். மாவட்ட தொழில் நிலையங்களில் இருந்து சிபாரிசு செய்யப்படுகிற 5 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் கடன்கள் கொடுக்கப்



படுவதே இல்லை. என்னுடைய அனுபவமும் அதுதான். திரு. ஆறுமுகம் சொன்னது போல் மாவட்டத் தொழில் நிலையங்களிலிருந்து சிபாரிசு செய்யப்படுகிற மனுக்களின் நிலைமை என்ன ? சிபாரிசு செய்யப்பட்டு விட்டால் கடன் கிடைக்கும் என்ற உறுதி உண்டா ? சிபாரிசு செய்யப்பட்ட பிறகும் வங்கி அதிகாரிகள் அவர்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மனுக்களை நிராகரிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** தலைவர் அவர்களே, சிபாரிசு செய்யப்பட்ட மனுக்களுக்குக் கடனே வழங்கப்படவில்லை என்பது சரியல்ல. 1985-86 ஆம் ஆண்டிலே மட்டும் 18,100 பேர்களுக்குக் கடன் வழங்க நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். அதிலே ஏறக்குறைய 7,363 பேர் களுக்கு 1,368.82 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கடன் வழங்குகிற கால அளவு இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் இருக்கிறது. ஆகவே கடனே வழங்கவில்லை என்று சொல்வது சரியாகாது. ஒரு சில இடங்களிலே தவறு நடந்திருக்கலாம். அந்தத் தவறுகளைக் களைய அரசு தயாராக இருக்கிறது.

**திரு. கே. பாலாஜி :** தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக மத்திய அரசுடைய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே பரிந்துரை செய்யப்படுகிற நேரத்திலே அவர்கள் பணம் சரியாகக் கொடுப்பது இல்லை. ஆகவே அதற்கு தனியாக ஒரு வங்கியை உருவாக்கி அதிலே பணத்தைக் கொடுப்பதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வங்கியை ஆரம்பிப்பது பற்றி யெல்லாம் இப்போது பேச முடியாது.

விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.**

திருவாளர்கள் சு. பாலன் மற்றும் ஆர். ரெங்கசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

[1986 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,78,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 57.**

**ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.**

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 57 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,63,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5—5—1986 (திங்கட்கிழமை) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1986 மே 3]

**6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

ஏதுவுமில்லை.

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.**

165. தொழில் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில் களும் சிறு தொழில்களும்) 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

166. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

167. 1985-86 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

168. 'ஊரக வளர்ச்சியில் பட்டுத் தொழில்' என்கிற புத்தகம் (தமிழ்).

169. 'சிறு தொழில் வளர்ச்சியின் சிட்கோவின் பங்கு' என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

**இணைப்பு I**

**[30 )-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 621 (2980)-க் கான விடையைக் காண்க.]**

பாரிஸ் நகர் கலைவிழாவிற்கு பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் தஞ்சாவூரில் தயார் செய்யப்பட்ட சுமார் ரூ. 1.00 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் சென்னையிலுள்ள மத்திய அரசினுடைய கைத்திறன் மற்றும் கைத்தறிப் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனத் தின் மூலம் அனுப்பப்பட்டன. விவரங்களாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. கலம்காரி வேலை | | | எண்ணிக்கை. |
| 1 அஸ்மன கிரி | 20' | 20' | 1 எண் |
| 2 அஸ்மன கிரி | 4 | 4 | 4 எண்கள் |
| 3 அஸ்மன கிரி | 4 | 2 | 8 மீட்டர் |
| 4 9' தொம்பை 18" | | | 54 எண்கள் |
| டி. 2 A 100- 23 | | | |

| | |
|---|---|
| 5 9' தொம்பை 36" | 24 எண்கள் |
| 6 6' தொம்பை 18" | 54 எண்கள் |
| 7 6' தொம்பை 36" | 54 எண்கள் |

வாயில் தோரணம்

| | |
|---|---|
| (அ) 2 மீட்டர் 8 மீட்டர் | 4 எண்கள் |
| 3 மீட்டர் 12 மீட்டர் | 2 எண்கள் |
| (ஆ) பார்டருடன் கூடியவை | |
| 3 மீட்டர் 8 மீட்டர் | 2 எண்கள் |
| 3 மீட்டர் 6 மீட்டர் | 1 எண் |

2. அப்ளிக் வேலை—

| | |
|---|---|
| (அ) வாயில் தோரணம் 3 மீட்டர் 2 மீட்டர் | 35 எண்கள் |
| (ஆ) மேற்கூரைக்கான அஸ்மனகிரி— | |
| 6 3 | 6 எண்கள் |
| 2 3 | 25 எண்கள் |
| 6 6 | 4 எண்கள் |
| 3 3 | 16 எண்கள் |
| (இ) நீளத் தோரணம்— | |
| 50 மீட்டர் 2 அடி | |
| 15 மீட்டர் 2 அடி | |

## இணைப்பு

(329-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

சிறிய மற்றும் ஊரகத் தொழில்களைப் பொறுத்தவரை தமிழ் நாடு அரசின் தொழில் கொள்கையில் முக்கியமான குறிக்கோள்கள் இரண்டு வகைப்படும். ஒன்று கிராமப்புறப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பது; இரண்டு கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது. இதற்காக சிறு தொழில் மற்றும் மிகச் சிறிய தொழில்கள், வீட்டுத் தொழில்கள் ஆகியவற்றைப் பரவலாக வளர்ச்சி



அடையச் செய்வதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக, கிராமப் பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளை உருவாக்கும் நோக்கில் தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் முதலிய பல்வேறு முகவரமைப்புகளை அரசு அமைத்துள்ளது. இம் முகவரமைப்புகளின் மூலமாக தொழில் பிரிவுகளுக்குத் தேவையான நிதியுதவி, அடிப்படை வசதிகள், தொழில் நுட்ப உதவி போன்ற வசதிகளை அரசு செய்து வருகிறது. இம் முகவரமைப்புகள் ஆற்றும் பணி பற்றி கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இம் முகவரமைப்புகள் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விவாதிக்கப்படுகின்றன:—

**தொழில் வணிக இயக்ககம்:**

பொதுவாக தொழில்களை, குறிப்பாக சிறு தொழில்களை மேம்படுத்துவதற்காகத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவது தொழில் வணிக இயக்ககத்தின் பொறுப்பாகும். இது தற்போதுள்ள தொழில்களுக்கும் புதிய தொழில்களுக்கும் உதவியும் ஊக்கமும் அளிக்கிறது. தொழில் வணிக இயக்ககம் தானாகவே தொழில் பிரிவுகளை தொடங்கி நடத்துவதில்லை; எனினும் நடைமுறை விதிகளை எளிமைப்படுத்துவது, தேவைப்படுகின்ற தொழில் பிரிவுகளுக்கு விரைவில் அனுமதி பெற்றுத் தருவது, தனியார் துறையில் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்குவது போன்ற பணிகளை மாவட்டத் தொழில் மையங்களின் உதவியுடன் இயக்ககம் உருவாக்கிக் கொடுக்கிறது.

மேற்கொண்ட முயற்சியின் பயனாக தமிழ்நாட்டில் நிரந்தரப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை 1977 மார்ச் இறுதியில் 18,789-லிருந்து 1984 மார்ச் இறுதியில் 49,920 ஆக உயர்ந்து, 1986 மார்ச் இறுதியில் 70,981 ஆக அதிகரித்துள்ளது. இந்த இயக்ககத்தின் மற்றொரு பிரிவு தொழில் கூட்டுறவு அமைப்புகளை கவனித்துக் கொள்கிறது. இக் கூட்டுறவுகளின்கீழ் தீப்பெட்டி தயாரித்தல், தேயிலை, தேங்காய் நார், சவ்வரிசி, பாலிதீன், மின்னணுவியல் முதலிய துறைகள் உள்ளன.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) :**

சிறு தொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்கள் வளர்ச்சிக்கென மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களை விரைவுப்படுத்துவது தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நோக்கமாகும். சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல், மூலப்பொருட்கள் விநியோகம் செய்தல், சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல், மத்திய, மாநில முதலீட்டு மானியம் வழங்குதல், குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி அளித்தல் முதலியன இதன் முக்கிய பணிகளாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்கள் உற்பத்திப் பொருட்களுக்கு அளிக்கப்படும் 15 சதவித விலை முன்னுரிமை திட்டம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தன்னுடைய விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யும் சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநில முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானிய உதவியை மத்திய முதலீட்டு மாநில திட்டத்தின் வழி முறைகளின்படி சலவை நிலையங்கள், ஜெராக்ஸ் நிழல்பட நகல் கருவிகள் போன்ற சிறு தொழில் சேவை நிலையங்களுக்கும் வழங்கலாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. இதற்காக 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் :**

மாநில மட்டத்திலுள்ள முக்கியமான நிதி நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஒன்றாகும். தமிழ்நாடு மற்றும் மைய அரசின் ஆளுகைக்குட்பட்ட பாண்டிச்சேரியிலும் சிறு மற்றும் மத்தியதர தொழில்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பது இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். நிலம், கட்டிடம், தளவாடங்கள், எந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை செலுத்துவதற்குரிய உத்தரவாதத்தையும், பங்கு மூலதனத் தொகையும் வழங்குகிறது. கடன் கேட்டு வரும் மனுக்களின் மீது விரைவில் தீர்வு காணவேண்டும் என்று கருதி, கடன் கேட்டு



வரும் மனுக்கள் கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் முடிவு காண வேண்டும் என்று அரசு இந்நிறுவனத்திற்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது. கூட்டமைப்புகளுக்கு வழங்கப்படும் கடனுதவி ரூ. 30 லட்சத்திலிருந்து ரூ. 60 லட்சமாகவும், சிறிய நடுத்தர தொழில்களின் உரிமையாளர்களுக்கு அல்லது பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி ரூ. 15 லட்சத்திலிருந்து ரூ. 30 லட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் தவணை முறை கடன் வசதிகளை பெறும் நிறுவனங்களுக்கு மத்திய மற்றும் மாநில முதலீட்டு மானியத்தை வழங்கும் ஒரு முகவரமைப்பாக இந்நிறுவனம் செயல்படுகிறது. தொழில் நுட்பத் தகுதிகள் மற்றும் முன் அனுபவம் பெற்ற முதல் கட்ட தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும் எளிதாக்கப்பட்ட குறைந்த வட்டிக் கடனுதவி திட்டம் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் :**

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் பல்வேறு வகையான பொருட்களைத் தயாரிக்கும் பல தொழில் பிரிவுகளைக் கொண்ட நிறுவனமாகும். அதன் செயல் திறனை மேம்படுத்தும் நோக்கோடு புனரமைப்பதற்கான சில செயற்குறிப்புகள் ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன :—

(1) தோல் தொழிற் பிரிவுகள் நான்கினை டால்கோவுக்கு மாற்றுதல்.

(2) ஆதாயமில்லாமல் செயற்படும் 8 (எட்டு) பிரிவுகளை மூடிவிடுதல்.

(3) இரண்டு தொழிற் பிரிவுகளில் உள்ள வார்ப்படப் பகுதியை மட்டும் மூடிவிடுதல்.

(4) அதிகப்படியான தொழிலாளர்கள், பணியாளர்கள் உள்ள சில பிரிவுகளில் ஆட்களைக் குறைத்து அப்பிரிவுகளை ஆதாயத்தில் இயங்கச் செய்தல்.

(5) நிதி நிலை மேம்பாடு அடைய 4 பிரிவுகளை துணை நிறுவனங்களாக மாற்றியமைத்தல்.

(6) புதிய திட்டங்களை வகுத்தல் மற்றும் கருவிகளை நவீனப்படுத்துதல்.

மேற்கண்டவாறு நிறுவனத்தை புனரமைப்பதோடு, உயர் தொழில் நுட்பமும் மதிப்பும் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கென உற்பத்தி முறையை பல்வகைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ):**

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) தமிழ்நாட்டில் தோல் தொழிலை வளர்ச்சியுறச் செய்ய ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், 1983 ஜூன் திங்களில் அமைக்கப்பட்டது. தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கும் விற்பனை வசதிகளை செய்து கொடுப்பதில் உதவி புரியும் ஒரு முகவரமைப்பாக இந்நிறுவனம் செயல்படுகிறது.

இந்நிறுவனம் தோல் தொழில் அடிப்படை கைவினைஞர்களுக்கான திட்டம், பெண்களுக்கான பயிற்சி நிலையங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தோல் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் ஆகியவற்றை மிக அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு இருப்பதால் இவற்றுக்கான திட்டங்களை கூட்டுத்துறையில் நிறுவவும் திட்டம் தீட்டியுள்ளது. தோல் தொழிற்சாலைகளுக்கென்று பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒரு வழிகாட்டி அமைப்பாக செயல்படுகிறது. சிட்கோவின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாதவரம் தோல் தொழிற் பேட்டையும் மற்றும் டான்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தோல் பிரிவுகளும் டால்கோவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

**தொழில் வணிக இயக்ககம்.**

எப்பொழுதும் இருந்து வந்த நடைமுறைப் பணிகளுக்கும் அப்பாற்பட்ட மிக முக்கிய வளர்ச்சி நோக்கினை தொழில் வணிக இயக்ககம் சமீப ஆண்டுகளில் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. தொழில் செயலாக்கத் திட்டங்களைத் துரிதமாக வளர்ச்சியுறச் செய்வதற்கு மாநில அரசின் ஒரு முக்கிய கருவியாக தொழில் வணிக இயக்ககம் உருவெடுத்துள்ளது. தொழில் வணிக இயக்ககம் தனது பணிகளில் எந்த அளவுக்கு வெற்றி கண்டுள்ளது என்பதனை வளர்ந்து வந்துள்ள சிறு தொழில்



களின் எண்ணிக்கையிலிருந்து காணலாம். 1977 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 18,789 ஆக இருந்த நிரந்தர பதிவுச் சான்றிதழ்கள் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை 1984-ம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 49,920 ஆகவும் 1986-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 70,981 ஆகவும் அதிகரித்துள்ளது.

இத்துறையின் பல்வேறு பிரிவுகளால் நிகழ்ந்து வரும் நடவடிக்கைகளின் முக்கிய அம்சங்களைப் பின்வரும் பத்திகள் கூறுகின்றன.

**மாவட்டத் தொழில் மையங்கள்:**

பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஏற்று நடத்துகின்ற மாவட்டத் தொழில் மையங்கள், மைய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சிக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றன. 1985-86-ம் ஆண்டில் 8,000 சிறு தொழில்களுக்கு நிரந்தரப் பதிவு சான்றிதழ்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் 1986-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 10,722 சிறு தொழில்களை மாவட்டத் தொழில் மையங்கள் பதிவு செய்துள்ளன. இதன் மூலம் சுமார் 72,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

**சுய வேலை வாய்ப்புத் திட்டம்:**

மாவட்டத் தொழில் மையங்கள் கடந்த சில ஆண்டுகளாக நிறைவேற்றிவரும் முக்கியமான திட்டங்களில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பளிக்கும் பாரதப் பிரதமரின் திட்டமும் ஒன்றாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட உதவி பின் வருமாறு:—

| ஆண்டு | இலக்கு இனங்களின் எண்ணிக்கை | சாதனை | |
|---|---|---|---|
| | | இனங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
| 1983–84 | 17,500 | 22,162 | 34,03 |
| 1984–85 | 21,700 | 22,500 | 42.49 |
| 1985–86 | 18,100 | 18,510 | 37.63 |

**நிதியுதவி :**

மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு ஏற்பட்டுள்ள வளர்ச்சியில் முக்கிய அம்சம் சிறு தொழில் துறைக்குத் தேவைப்படும் கடனுதவி வங்கிகளிடமிருந்து, இதர நிறுவனங்களிடமிருந்து தடையின்றி கிடைக்க வழி ஏற்பட்டதே ஆகும். 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்கும் 1986 பிப்ரவரி திங்களுக்கும் இடையில் 1346 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ. 5.47 கோடி கடனுதவி பெறுவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் வகை செய்துள்ளன. தேசீய சிறு தொழில் நிறுவனம் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இதே காலக் கட்டத்தில் 3128 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ. 9.50 கோடி நிதியுதவி அளித்துள்ளன.

**ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை :**

தொழில் முனைவோர், தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு தேவைப்படும் சட்ட பூர்வமான அனுமதிகளைப் பெறுவதிலும், இதர பல வசதிகளைப் பெறுவதிலுமுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் "ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை" குறித்த ஒரு அமைப்பினை மாநில அரசு அமைத்திருப்பது ஒரு முக்கிய ஏற்பாடு ஆகும். 1985-ம் ஆண்டு ஏப்ரல் முதல் 1986 பிப்ரவரி திங்கள் வரையில் 196 கூட்டங்கள் நடத்தப்பட்டு 2,080 இனங்களுக்குத் தீர்வு காணப்பட்டது.

**1986-87 ஆம் ஆண்டுத் திட்டங்கள் :**

இம்மாநிலத்தில் 14 மாவட்ட தொழில் மையங்கள் உள்ளன. ஆனால் 19 வருவாய் மாவட்டங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களின் பணிகளை கவனிக்க தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிதாக நான்கு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையம் அமைக்க மத்திய அரசு இசைவு அளித்துள்ளது. இந்த நான்கு தொழில் மையம் தோற்றுவிப்பதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் சென்னையைத் தவிர ஒவ்வொரு மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் இயங்கிவரும்.



**ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகக் கைவினைஞர் திட்டங்கள் :**

ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் சிறிய தொழில் களுக்கு முன்வரம்புத் தொகை உதவி வழங்க ரூ. 4 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் இந்திய அரசு கடனாக அளிக்கிறது. 1971-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 1 இலட்சம் மக்கள் தொகை வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துத் தொழில் அலகுகளுக்கும் இந்த உதவி அளிக்கப்படுகிறது. இக் கடன் தொகை 6 முதல் 10 ஆண்டுத் தவணைகளில் மிகக்குறைந்த வட்டி வீதத்தில் திரும்ப மீட்கப்படும். தற்பொழுது வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 6¼ சதவீதமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழில் அலகிற்கும் கிடைக்கின்ற அதிக பட்ச உதவித் தொகை ரூ. 25,000 ஆகும். இத்தொகையை முந்தைய ஆண்டுகளில் 14 மாவட்டத் தொழில் மையங்களுக்கே மத்திய அரசு வழங்கி வந்தது. தற்பொழுது 18 மாவட்டத் தொழில் மையங்கள் இம்மாநிலத்தில் இயங்க உள்ளன. இப்பதினெட்டு மாவட்டத் தொழில் மையங்களுக்கும் மத்திய அரசின் நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிற்சி வசதிகள் அளிப்பதற்கும், புதிய தொழில் நிலையங் களைத் துவக்குவதற்கு உதவியளிப்பதற்கும் கிராம கைவினைஞர் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு மற்றும் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு | செலவழித்த தொகை. | பயிற்சி பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983-84 | 7.98 | 1,227 |
| 1984-85 | 11.18 | 1,599 |
| 1985-86 | 13.71 | 2,021 |

இந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 14 இலட்சம் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிராம கைவினைஞர் இணையகம் ஒன்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழிற் பேட்டையிலும் ஆந்திர மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மாவட்டத் தொழில் மையங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், மாநில நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் கிடைக்கக்கூடிய தொகையை ஒருசேரக் கொண்டுவந்து ஒருங்கிணைந்த அணுகு முறை மேற்கொள்ளப்படுகிறது. இத் திட்டத்தைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து இம்மாநிலத்தின் சூழ்நிலைக்கேற்ப ஆராய்ந்து இம்மாநிலத்திலும் இத் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது.

**இரசாயனப் பிரிவு:**

பரிசோதனை மற்றும் தரம் கட்டுப்பாடு வசதிகள், சோதனைக் கூட ஆய்வு வசதிகளை இத்துறை வழங்குகிறது. இப்பிரிவை சேர்ந்த பல தொழில் நிறுவனங்கள் இவ்வசதியைப் பெற்று வருகிறது. இவைகள் தவிர திட்ட அறிவுறுத்தல்களும், ஆலோசனைகளும் இத்துறையில் இப்பிரிவு வழங்கி வருகிறது.

1985-86-ம் ஆண்டில் ஆர்வமுள்ள தொழில் முனைவர்களுக்கு 325 திட்டத் தொகுப்புகள் வழங்கப்பட்டன. 193 தொழில் நுட்ப ஆலோசனைகள் அளிக்கப்பட்டன. மேற்கண்ட அனைத்து செயல்களிலும் பணிகளை மேலும் வலுப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**மூலப்பொருள் உதவி:**

இத்துறை கொள்திறன் சான்றிதழ்கள் சிறு தொழில் அலகு களுக்கு அளிக்கிறது. அதன் மூலம் கிடைப்பதற்கரிய மூலப் பொருட்களை அச்சிறு தொழில்களுக்குப் பெற்றுத் தருவதில் இத்துறை முகவாமைப்பாகச் செயல்படுகிறது. இம்மாநிலத்தில் நிலக்கரி மற்றும் கல்கரியின் தேவை அதிகமாக உள்ளது. இவை களை ஏற்றிக்கொண்டு வர சரக்குப் பெட்டிகளின் ஒதுக்கீடு குறித்த இரயில்வே போக்குவரத்து உச்சவரம்பு நிர்ணயித் துள்ளது. சரக்குப் பெட்டிகளின் ஒதுக்கீடு உச்சவரம்பை



உயர்த்தும்படி இரயில்வே போக்குவரத்தைக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாண்டில் சரக்குப் பெட்டிகளின் உச்ச அளவு அபிவிருத்தி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"நிலக்கரி இந்தியா லிமிடெட்" என்ற நிறுவனத்தின் ஒத்து ழைப்புடன் சென்னைக்கருகில் நெற்குன்றத்தில், இத்துறை நிலக்கரி சேமிப்பு கிடங்கு ஒன்று வைத்துள்ளது. இது போன்ற சேமிப்புக் கிடங்குகள், மதுரை, திருச்சி மற்றும் கோயம் புத்தூரில் அமைப்பதற்கு செயற்குறிப்புகள் இருக்கின்றன.

சுமார் 5,000 சிறு தொழில் நிறுவனங்கள் மூலப் பொருள் உதவித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன. போலி தொழிற் நிறுவனங்களைக் களைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நவீன மயமாக்குதல் மற்றும் அரசு கொள்முதல் திட்டத்தில் பங்கு பெறுவதில் உதவி:**

சிறு தொழில் துறையின் நவீன மயமாக்குதல் மற்றும் தொழில் நுட்பவியல் மேம்பாடு காணுதல் ஆகியவற்றின் முக்கியத் துவத்தைக் கருத்தில் கொண்டு தொழில் வணிக இயக்ககத்தில் ஒரு நவீன மயமாக்குதல் பிரிவு ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட் டுள்ளது. ஆலோசனை, பயிற்சி நிதியுதவி முதலிய உதவி களைப் பெறும் பொருட்டு பல்வேறு அமைப்புகளின் செயல்களை மாநில அளவில் ஒன்று திரட்டி இப்பிரிவு வழங்குகிறது. சிறு தொழில் சேவை நிலையத்தின் 28 முன்னோடித் திட்ட ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு கொள்முதல் திட்டத்தின் கீழ் 401 பொருட்கள் சிறு தொழில் பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறு தொழில் நிலையங்கள், மைய மற்றும் மாநில அரசுகளின் கொள் முதல் திட்டத்தில் கலந்து கொள்வதற்கும், கொள்முதல் செயல் களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை பொருள் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுடன் கலந்து அவற்றிற்கு தீர்வு காண்ப திலும் இந்த இயக்ககத்தின் தொழில் தொடர்புப் பிரிவு உதவி யளித்து வருகிறது

**நலிந்துள்ள சிறு தொழில்களுக்கு புத்துயிர் அளித்தல்:**

நலிந்துள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், அவற்றின் மறு வாழ்வு சம்பந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசு மாநில அளவில் இரண்டு குழுக்களை அமைத்துள்ளது.

(1) நலிந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை மாநில அளவிலான நிறுவன கூட்டுக் குழு பரிசீலனை செய்து அவற்றின் மறுவாழ்வுத் திட்டத்திற்குத்தக்க நடவடிக்கைகளை பரிந்துரை செய்கிறது.

(2) மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு நலிந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு முன் வரம்புத் தொகை உதவி அளிக்க ஒப்புதலளிக்கிறது.

இதுவரையில் 44 தொழில் நிறுவனங்களுக்கும் இக்குழு ரூ. 91.17 இலட்சம் முன் வரம்புத் தொகையாக வழங்க ஒப்புதலளித்துள்ளது.

**தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:**

ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற சங்கங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு இவ்வாண்டில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள மாஞ்சூர் சங்கத்தை இரண்டாகப் பிரித்து கின்னக்கோரை என்ற இடத்தில் ஒரு புதிய கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைக்கப் பட்டுள்ளது.

1984-85-ம் ஆண்டில், தேயிலை ஏலத்தில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் அவற்றின் தேயிலைக்கு நல்ல விலையினைப் பெற முடிந்தது. ஆனால் இந்த ஆண்டு, தேயிலை விலையில் சரிவு ஏற்பட்டதினால் இவற்றிற்குச் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதி ஒதுக்கீட்டினை உயர்த்துதல், சுங்க வரியைக் குறைத்தல், உரங்களுக்கு சலுகைத் தொகை வழங்குதல், போன்ற பல்வேறு கருத்துக்களை மாநில அரசு இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. கூடலூர் வட்டம் தவிர இதர பகுதிகளில் தயாரிக்கப்படும் தேயிலை கிலோ ஒன்றுக்கு சுங்க வரியை ரூ. 1.10 லிருந்து 60 பைசாவாகவும், கூடலூர் வட்டத்தில் தயாரிக்கப்படும் தேயிலைக்குக் கிலோ ஒன்றுக்கு 40 பைசாவிலிருந்து 36 பைசாவாகவும் இந்திய அரசு குறைத்துள்ளது. நீலகிரி சிறு தேயிலை தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம், தயாரிக்கப்பட்ட தேயிலையின் (தேயிலை மற்றும் துகள்கள்) 100 கிராம், 250 கிராம் மற்றும் 500 கிராம் எடையுள்ள பொட்டலங்களை விற்கும் பணியை மேற் கொண்டுள்ளது. "இன்ட்கோ" தேயிலையின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சிறப்பங்காடிகளும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், இன்ட்கோவிடமிருந்து தேயிலையைப் பெற்று விற்பனை செய்யுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அந்நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார். நாடு முழுவதும் பொது விற்பனை முறை மற்றும் முகவர்கள் மூலம் "இன்ட்கோ" தேயிலை விற்பனை மற்றும் ஏற்றுமதிச் சந்தை இவற்றை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தென்னை நார்ப் பொருள்களுக்கு விற்பனை வசதிகள் வழங்கும் பொருட்டு, தொழிற் கூட்டுறவு கயிறு விற்பனைச் சங்கம் என்ற தலைமைச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு முழுவதும் காட்சி அறைகளைத் திறக்க உத்தேசித்துள்ளது. மேலும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு உள்ளூர்களில் கயிறு விற்பனையை அதிகரிப்பதற்காக கயிறு சங்கங்களை கயிறு மையங்களாக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள சிறு தோல் பதனிடுபவர்கள், பொது வசதி கழிவுநீர் அகற்றும் மையங்கள் அமைக்கும் நோக்கத்துடன் தொழிற் கூட்டுறவு சங்கங்களை அமைக்கத் தாங்களாகவே முன் வந்துள்ளனர். இத்துறை, செப்டம்பர் 1984-ல் ஆம்பூரில் ஒன்றும், பேரணாம்பட்டில் ஒன்றும், மே 85-ல் இராணிப்பேட்டையில் ஒன்றுமாக மூன்று தொழிற் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்துள்ளது. தொழில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் அமைக்கப்படும் பொது வசதி கழிவு நீர் அகற்றும் மையங்களுக்கான நிதி வடிவம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சிறிய தீக்குச்சி தொழில் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துவதற்காக தொடர்ந்து முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே உள்ள குன்றக்குடி பாரதி தொழில் கூட்டுறவு குளோரேட் தொழிற்சாலையை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருவில்லிபுத்தூரில் மரச் சிம்பு தொழிற்சாலையில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, ஆகஸ்ட் 1985-லிருந்து செயல்பட்டு வருகிறது. திருவில்லிபுத்தூர் பகுதியில் சிறிய அளவில் காகித தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவு அடிப்படையில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பாலிதீன் குழாய்களைத் தயாரிக்கின்றன. இவை வனத்துறை, விவசாயத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி, அமைப்புகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில், 'டாட்கோ' நிதியுதவியுடன் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒன்றுமாக மேலும் இரண்டு பாலிதீன் கூட்டுறவுச் சங்கங்களை, துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகத்திலுள்ள பாலிதீன் சாக்குகள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், ஏப்ரல் 1985-ல் உற்பத்தியைத் துவங்கிற்று.

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி :**

இம் மாநிலத்திலுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கடனுதவியை பிற மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கத் தயங்கிய சூழ்நிலையில் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி அத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 1961-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கி தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இவ்வங்கிக்கு இதுவரை அரசு ரூ. 110.00 இலட்சம் கடனாகவும் ரூ. 143.30 இலட்சம் பங்கு மூலதனமாகவும் வழங்கியுள்ளது. இவ்வாண்டில் ரூபாய் 25 இலட்சம் 1986-87-க்கு பங்கு மூலதனமாக வழங்க உத்தேசித்துள்ளது. மேலும் இந்த வங்கியிலுள்ள குறுகிய கால வைப்புத் தொகை மற்றும் நிலை வைப்புத் தொகையில் ரூ. 300 இலட்சம் வரை வைப்புத் தொகை வழங்கியோருக்கு திருப்பி வழங்கவும் மற்றும் பாரத வங்கியிடமிருந்து ரொக்கக் கடன் வசதியின்



பேரில் பெறும் கடன் தொகையை அவ்வங்கிக்குத் திருப்பி வழங்கவும் இவ்வரசு பொறுப்புறுதி வழங்கியுள்ளது. தேயிலை, தீப்பெட்டி, கயிறு, வாடகைமகிழுந்தி, தானியங்கி மூவுருளி முதலிய இம்மாதிரி இம்மாநிலத்திலுள்ள பல்வேறு விதமான தொழிற் கூட்டுறவு சங்கங்களும் இவ்வங்கியில் தம்மை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டு, இவ்வங்கியின் நிதி உதவியைப் பெற்று வருகின்றன. இவ்வங்கியின் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தால் தொடங்கவிருக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்க இவ்வங்கி சம்மதித்துள்ளது. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வங்கி 8 சதவீத வட்டி என்ற அடிப்படையில் மிகக் குறைந்த வட்டிக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.

**தொழில் வணிகத் துறையின் கீழுள்ள மின்னணுவியல் மற்றும் மின்னியல் சார்ந்த சிறு தொழில் நிறுவனங்கள்.**—தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மின்னணுவியல் மற்றும் மின்னியல் சார்ந்த தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. திறமையை அடிப்படையாகக் கொண்ட இத்தொழிலுக்கு மின்சாரம், தண்ணீர் போன்ற மிகச் சில அடிப்படை வசதிகளே தேவையாகையால் தமிழ் நாட்டில் வருங்காலத்தில் பெரிய அளவில் மிகச் சிறந்த வளர்ச்சியடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. சிறு தொழில் பிரிவில், மின்னியல் மற்றும் மின்னணுவியல் தொழில் அளிக்கவிருக்கும் வேலை வாய்ப்பை குறிப்பாகக் கவனத்திற் கொண்டு, அதனை வளர்க்க தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில், மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்கு தனி முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, மாநில தொழில் வணிக இயக்ககம், 1970 ஆம் ஆண்டு துவக்கத்தில் மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்காக மின்னணுத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு திட்டமிட்டது. கடந்த ஆண்டுகளில் இத்தொழிற்பேட்டைகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வந்துள்ளன. 1986 மார்ச் திங்கள் இறுதியில் மின்னியல் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கென்றே

ஏழு தொழிற் பேட்டைகள் இருந்தன. இத்தொழிற்பேட்டைகளில் 138 தொழிற் கூடங்களும், 293 செப்பனிட்ட மனைகளும் உள்ளன.

பரிசோதனை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்குரிய வசதிகள் பின்வருகின்ற இடங்களில் அளிக்கப்படுகின்றன :—

1. மைய மின் பரிசோதனை ஆய்வுக்கூடம், காக்களூர்.

2. மின்னணுவியல் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி நிலையம், சென்னை.

3. மின்னணுவியல் பரிசோதனை ஆய்வுக்கூடம், மதுரை.

4. பொது வசதிப் பணி நிலையம், ஓசூர்.

மின்னணுத் தொழில்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வளர்ச்சியடைந்து வருவதாலும், ஒவ்வொரு பகுதிக்கும் வசதிகள் தேவைப்படுவதாலும் அரசு பின்வருகின்ற திட்டங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது.

(அ) கோயமுத்தூரில் பொது வசதிப் பணி நிலையம் அமைத்தல்.

(ஆ) திருச்சிராப்பள்ளியில் மின்னணு பொருள் வளர்ச்சி மையம் ஏற்படுத்துதல்.

மேற்கண்ட இரு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் வசதிகளை அளிக்கத் துவங்கும்.

கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களை, சிறு தொழில் நிலையங்கள் பெறுவதற்கு உதவியளிப்பதற்காக, சென்னையில் ஒரு மூலப் பொருள் விநியோகிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் செயல்படத் துவங்கியுள்ள இந்த நிலையம் இன்னும் மூன்று மாதங்களுக்குள் முழுமையான வடிவில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருவான்மியூரிலுள்ள மின்னணுத் தகவல் களஞ்சியம், 'கம்ப்யூட்டர்' சாதனங்களுடன் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையம், மின்னியல் மற்றும் மின்னணுத் தொழில்கள் சம்பந்தமாக பொது மக்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும்.



மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கென்றே, சேலம் மற்றும் நந்தம்பாக்கம் ஒவ்வொன்றிலும் தொழிற் பேட்டை ஒன்றினை அமைப்பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இவை அமைக்கப்பட்டு வருகின்றன.

காக்களூரிலுள்ள மைய மின் ஆய்வுக்கூடம், நவீன மிக நுட்பமான மின் பரிசோதனைச் சாதனங்களுடன் நவீனப் படுத்தப்பட்டு வருகிறது.

வீட்டு உபயோக மின் சாதனங்களின் மீதான தரக் கட்டுப்பாடு, 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில், மின்னணுத் தொழில் சீராக வளர்ச்சியடைந்துள்ளது. தமிழகத்தில் 1980-ல் 224 மின்னணுத் தொழில்கள் இருந்தன ; இவை 1986-ல் 462 ஆக அதிகரித்துள்ளன. மின்னணுப் பொருள்களின் மொத்த உற்பத்தி 1980-ல் ரூ. 20.3 கோடியாயிருந்தது. 1985-ல் ரூ. 52 கோடியாக உயர்ந்துள்ளது.

1983, 1984 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் மின்னணுத் தொழில்களைத் துவங்குவதற்கென முறையே 156, 162 மற்றும் 203 உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பளிப்புகள் ஓராண்டிற்கு உரியவையாகும். இவை, தொழில் முனைவர்கள், உற்பத்தியைத் துவங்குவதற்குரிய இதர வசதிகளைப் பெறுவதற்கென மேலும் ஓராண்டுக்கு தேவையானபோது நீட்டிக்கப்படுகின்றன.

மின்னணுத் தொழில்களின் சமீப வளர்ச்சிக்கு உயர் தொழில் நுட்பவியலைக் கொண்டு அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்கள் சான்று கூறுகின்றன. அவற்றில் பின்வருகின்றவை சில எடுத்துக்காட்டுக்களாகும் :

1. "மைக்ரோ கம்ப்யூடர்ஸ்"/"பெரிபெரல் கம்ப்யூடர்ஸ்"

2. "கம்ப்யூடர் சாஃப்ட்வேர்".

3. "மைக்ரோ பிராசசர்-பேஸ்டு இண்டஸ்ட்ரியல் கன்ட்ரோல்ஸ்".

4. "மோனோக்ரோம் மற்றும் கம்ப்யூட்டருக்கான மானிடர்ஸ்".

5. கலர் டி.வி. ரிசீவர்ஸ் உடன் ரிமோட் கண்ட்ரோல்.

6. ஸ்விட்ச்டு மோட்பவர் சப்ளைஸ்.

7. லைன் டிரான்ஸ்மிட்டர்ஸ், லைன் ரிசிவர்ஸ மோடல்ஸ்.

8. அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர்ஸ், பேஷண்ட் மானிடர்ஸ், டிப்ரைபிலேட்டர்ஸ் போன்ற மருத்துவ சாதனங்கள்.

9. ஹை மோல்டேஜ்/ஹை கரண்ட் பவர் சப்ளைஸ்.

10. ரெஸிஸ்டர்ஸ், கெப்பாசிடர்ஸ் போன்ற உறுப்புகள்.

இத்துறையை மேலும் மேம்படுத்த, பின்வரும் திட்டங்களை நடப்பாண்டில் செயல்படுத்த அரசு கருதியுள்ளது:

1. கோயம்புத்தூரிலுள்ள மின் மற்றும் மின்னணுத் தனித் தொழிற்பேட்டையை விரிவுபடுத்துதல்.

2. ஓசூரிலுள்ள தனித் தொழிற்பேட்டையை விரிவு படுத்துதல்.

3. ஓசூரிலுள்ள பொது வசதிப் பணி நிலையத்தை மேம்படுத்துதல்.

4. மின் மற்றும் மின்னணுப் பிரிவிலுள்ள தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் நவீன பரிசோதனை தொழில் நுட்பங்களை அறியும் பொருட்டு அவர்களுக்கு தேசீய மற்றும் மண்டல ஆய்வுக் கூடங்களில் பயிற்சியளித்தல்.

தமிழ் நாட்டில் தொடங்கப்படும் மின்னணுவியல் தொழில்களுக்கு (மைய மற்றும் மாநில அரசுகளின் முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ் உதவி பெறாமல் இருப்பவற்றிற்கு) பின்வரும் அடிப்படையில் மானியம் அளிக்கப்படுகிறது. அதாவது (1) கட்டிடம் மற்றும் தொழிற்சாலையின் சொத்து மதிப்பில் 10 விழுக்காடு: அல்லது (2) அங்கு முறையாகப் பணி செய்யும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000 என்று கணக்கிட்டு, இவ்விரண்டில் எது குறைவோ அதனை வழங்குவது என்ற அடிப்படையில் உதவியளிக்கப்படுகிறது. இவ்வகையில் ரூ. 10 லட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.



## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவும் முக்கிய குறிக்கோளுடன் 1971 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப் பட்டது.

இந்நிறுவனத்தின் தற்போதுள்ள முக்கிய பணிகள் பின்வருமாறு:

(1) சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

(2) மூலப் பொருட்கள் விநியோகம் செய்தல்.

(3) சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

(4) மத்திய மாநில முதலீட்டு மானியம் வழங்குதல், மற்றும்

(5) சிறு தொழில்களுக்கு குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி அளித்தல்.

சிட்கோ செயலாக்கி வந்த சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்குதல் திட்டத்தை, ஆணையர் மற்றும் இயக்குநர் தொழில் வணிகத் துறையினருக்கு 1985-86 ஆம் ஆண்டில் மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது.

### சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்:

சிறு தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்கு அடிப்படை வசதிகள் மிகவும் இன்றியமையாததாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே இத்திட்டத்தை சிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் இத்திட்டத்தை சிட்கோ செயல்படுத்துகிறது. 1985-86-ல் இந்நிறுவனம் அம்பத்தூர், கப்பலூர், குறிச்சி, பேட்டை, தேனி, ராணிப்பேட்டை மற்றும் புதுக்கோட்டை முதலிய இடங்களில் ரூ. 2,65.50 இலட்சம் செலவில் 96 தொழிற்கூடங்களைக் கட்ட திட்டம் கொண்டுள்ளது.

1986-87-ல் இந்நிறுவனம் அம்பத்தூர், மறைமலை நகர், தேனி, வாலாஜா, கப்பலூர், ஆலத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருவள்ளூர் முதலிய இடங்களில் 98 தொழிற்கூடங்களைக் கட்டத் திட்டமிட்டுள்ளது. மேலும் சென்ற வருடம் 1985-86-ல் முடிக்கப் படாத பணிகளையும் நிறைவு செய்ய எண்ணம் கொண்டுள்ளது. 1986-87-க்கு தொழிற்கூடங்களை கட்டுவதற்கு ஆகும் மூலதனம் ரூ. 213.00 இலட்சமாகும்.

## 2. மூலப்பொருட்கள் விநியோகம்

சிறுதொழில்களுக்கு முக்கிய மூலப்பொருள்கள் விநியோகம் செய்வதில் இந்நிறுவனம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை செய்துள்ளது. 1985—86-ல் இந்நிறுவனம் 46,179 டன்கள் கீழ்க் கண்ட முக்கியமான மூலப்பொருட்களை விநியோகித்துள்ளது. சென்ற ஆண்டில் மொத்தம் விநியோகித்துள்ள பொருட்கள் 36,602, டன்களே ஆகும்.

| மூலப் பொருட்கள். | அளவு மெட்ரிக் டன்களில். |
|---|---|
| 1. இரும்பு மற்றும் எஃகு | 24,293 |
| 2. கல்கரி | 10,593 |
| 3. தீப்பெட்டி மெழுகு | 2,265 |
| 4. பாரபின் மெழுகு | 4,860 |
| 5. பொட்டாசியம் குளோரேட் | 448 |
| 6. துத்தநாகம் | 1,944 |
| 7. ஈயம் | 227 |
| 8. பால்ம் பேட்டி ஆசிட் | 1,549 |
| | 46,179 |

இரும்பு மற்றும் எஃகு இவற்றின் இப்போதுள்ள நிலை அடுத்த வருடமும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு வருடத்தில் 20,000 டன்கள் இரும்பு மற்றும் எஃகு, 16,000 டன்கள் கல்கரி, 2,400 டன்கள் தீப்பெட்டி மெழுகு மற்றும் 5,800 டன்கள் பாரபின் மெழுகு முதலியவை வாங்கப்பெற்று விற்பனை



செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்கரியைத் தவிர மற்ற மூலப்பொருட்களின் தேவை நிலையை பூர்த்தி செய்யப்பட முடியும் என்று இந்நிறுவனம் எதிர்பார்க்கப்படுகிறது. நாடு முழுவதும் கல்கரி கிடைப்பதில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. கோல் இந்தியா நிறுவனத்திடமோ அல்லது பாரத கோக்கிங் கோல் நிறுவனத்திடமிருந்தோ கல்கரிக்கு அதிக ஒதுக்கீடு கிடைக்க இந்நிறுவனம் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இப்பொருள் குறித்து அரசு மட்டத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டிருப்பதால் நிலைமையை சரிசெய்ய முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## 3. சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1985—86 ஆம் ஆண்டில் விற்பனை ரூ. 573.18 இலட்சமாகும். சிட்கோ மூலமாக வாங்கக்கூடிய மருந்து மற்றும் மருத்துவப்பொருட்கள் எண்ணிக்கை 233-லிருந்து 119 ஆக குறைந்து விட்டபோதிலும் கூட 1985—86 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு 1984—85 ஆம் ஆண்டில் உள்ள விற்பனையைவிட அதாவது ரூ. 45.82 இலட்சம் அதிகமாக உள்ளது. மேலும் ஒரு அதிக அளவிற்கு பல்பொடி விநியோக ஆணையை சின்கோனா துறைக்கு திருப்பப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு அளிக்கப் பட்டுள்ள 15 சதவிகித விலை முன்னுரிமை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தன்னுடைய விற்பனை உதவித் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யும் சிறுதொழில் உற்பத்தி பொருட்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 4. மத்திய மற்றும் மாநில முதலீட்டு மானியம் வழங்குதல்.

1984—85 ஆம் ஆண்டு முடிய மத்திய முதலீட்டு மான்யம் வழங்கும் முழுப்பொறுப்பையும் சிட்கோ ஏற்றிருந்தது. ஒரு வருடத்திற்கு ரூ. 200 இலட்சம் என்ற அளவில் மானியமாக சிட்கோ வழங்கியுள்ளது. இருப்பினும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் வழங்கப்பட்ட தவணைக் கடன்களைப்

1986 மே 3]

பொறுத்தவரை மத்திய முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் முகவாண்மை முறையில் செயலாக்கி வருகிறது.

அரசு ஏற்கெனவே மாநில முதலீட்டு மானிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தை மத்திய முதலீட்டு மானிய திட்டத்தின் வழி முறைகளின்படி சலவை நிலையங்கள், ஜெராக்ஸ் நிழற்பட நகல் கருவிகள் போன்ற சிறுதொழில் சேவை நிலையங்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்தப்படும்.

5. சிறுதொழில்களுக்கு குறைந்த அழுத்த மின்கட்டண மானிய உதவி அளித்தல்.

சிறுதொழில்களுக்கு மின் கட்டண மானியம் வழங்கும் திட்டம் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப் படுகிறது. 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 7.66 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. 1986—87-ல் இத்திட்டத்திற்கு ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலாபநிலை.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. 1984—85-ல் இந்நிறுவனம் ரூ. 100.11 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இதே நிலை நீடித்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்,

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1949 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதல் மாநில நிதியுதவி நிறுவனமாகும். இந்நிறுவனம் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிகபட்சம் ரூ. 60 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. இது சிறிய, சின்னஞ் சிறிய தொழில் நிறுவனங்கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்கு வதற்கு முதன்மையளிக்கிறது. இந்நிறுவனத்தின் உதவியுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்கள் மூலம் சுமார் 1,64,341 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் நிதியுதவியில் 90 சதவீதத்திற்கும்



1986 மே 3]

மேல் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் சுலபக்கடன் மற்றும் ஆரம்ப முதலீடு உதவி, போக்குவரத்து வாகனங்கள், ஜெனரேட்டர் வாங்குவதற்கு நிதியுதவி, தொழில் வல்லுநர்களுக்கும் சிறப்பு நிதியுதவி முதலியன வழங்குகிறது. அத்துடன் மத்திய மாநில மானிய உதவியும் வட்டியில்லாமல் மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு பிறகு வழங்குகிறது.

2. நிறுவனத்தின் நிகர இலாபம்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு கிடைத்த நிகர இலாபம் (வரி ஒதுக்கீட்டிற்கு பின்) பின் வருமாறு:—

| வருடம். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- |
| 1975—76 | 79.69 |
| 1976—77 | 1,10.95 |
| 1977—78 | 1,03.68 |
| 1978—79 | 1,01.79 |
| 1979—80 | 85.16 |
| 1980—81 | 2.24 |
| 1981—82 | 13.11 |
| 1982—83 | 1,61.15 |
| 1983—84 | 1,33.16 |
| 1984—85 | 1,96.54 |

1980—81-ம் ஆண்டு முதல் இந்நிறுவனம் வணிக முறையிலிருந்து (Mercantile system) "ரொக்கம்" Cash system) முறைக்கு மாற்றிக் கொண்டபடியால் இந்நிறுவனத்தின் நிகர இலாபத்தில் சரிவு ஏற்பட்டது.

3. எதிர்கால திட்டங்கள் :

1985–86 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட குறியீடும் சாதனைகளும் பின்வருமாறு :—

| | குறியீடு. | சாதனை (தோராயம்) |
| --- | --- | --- |
| | (ரூபாய் கோடியில்.) | |
| கடன் அனுமதி .. | 71.00 | 92.50 |
| கடன் வினியோகம் .. | 61.00 | 62.50 |
| கடன் வசூல் .. | 38.00 | 42.50 |

1986–87-ம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட தோராய செயல்முறைகள் பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| கடன் அனுமதி .. .. | 100 |
| கடன் வினியோகம் .. .. | 75 |
| கடன் வசூல் .. .. | 50 |

4. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் :

| வருடம். | ஒப்புதல். | வினியோகம். (ரூ. கோடியில்) | வசூல். |
|---|---|---|---|
| 1949 முதல் 1978 வரை (30 வருடங்கள்.) | 118.77 | 74.51 | |
| 1978–79 | 12.06 | 9.05 | 10.15 |
| 1979–80 | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 | 36.90 | 22.59 | 12.15 |
| 1981–82 | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 | 68.11 | 48.70 | 32.38 |
| 1985–86 | 92.50 | 62.50 | 42.50 |
| (தோராயம்) | 394.50 | 269.25 | 166.57 |

5. சிறு தொழில்களுக்கு நிதியுதவி. (ரூ. கோடியில்)

| வருடம். | மொத்த ஒப்புதல். | சிறுதொழில் களுக்கு ஒப்புதல். | மொத்தத்தில் சிறுதொழில் களுக்கு சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1949–78 | 118.77 | 33.85 | 28.5 |
| 1978–79 | 12.06 | 5.80 | 48 |
| 1979–80 | 17.19 | 8.86 | 52 |
| 1980–81 | 36.90 | 22.68 | 61 |
| 1981–82 | 52.13 | 44.44 | 85 |
| 1982–83 | 55.87 | 48.59 | 87 |
| 1983–84 | 59.74 | 53.53 | 90 |
| 1984–85 | 68.11 | 62.69 | 92 |
| 1985–86 | 92.50 | 86.24 | 93 |
| (தோராயம்) | 394.50 | 332.83 | 84.31 |





6. வேலை வாய்ப்பு :

இந்நிறுவனத்தால் உதவி பெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு—

| வருடம். | எண்ணிக்கை. |
|---|---|
| 1978–79 | 13.670 |
| 1979–80 | 19.616 |
| 1980–81 | 42.000 |
| 1981–82 | 52,000 |
| 1982–83 | 37,000 |
| 1983–84 | 24,000 |
| 1984–85 | 32,000 |
| 1985–86 | 23,157 |
| (தோராயம்) | 2,43,443 |

7. சிறப்பு திட்டங்கள்.

இந்நிறுவனம் சுலபக்கடன் திட்டம், தொழில் வல்லுநர்களுக்கு நிதியுதவி, போக்குவரத்து வாகனங்கள், ஜெனரேட்டர் வாங்குவதற்கு நிதியுதவி போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் பதிவு பெற்ற மருத்துவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட அதிகபட்ச கடன் தொகையான ரூ. 2 இலட்சம் ரூ. 15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது ஊரக மற்றும் முதல் வகுப்பு நகராட்சிகள் வரையுள்ள கிராம—புறநகர்பகுதிகளில் மருத்துவமனை கட்டுவதற்கு ரூ. 5 இலட்சம் வரையிலும் மற்றும் எலெக்ட்ரோ மெடிகல்/நவீன உபகரணங்களை வாங்குவதற்கு ரூ. 15 இலட்சம் வரையிலும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இந்நிறுவனம் கடந்த ஐந்தாண்டுகளில் சுலப கடன் திட்டத்தின் கீழ் அளித்த நிதியுதவி பின்வருமாறு:—

| வருடம். | எண்ணிக்கை. | தொகை. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1981–82 | 50 | 7 |
| 1982–83 | 59 | 24 |
| 1983–84 | 181 | 59 |
| 1984–85 | 206 | 102 |
| 1985–86 | 333 | 198 |
| (தோராயம்). | 829 | 390 |

8. மானியம்.

மத்திய மற்றும் மாநில அரசு, மாநிலத்தில் உள்ள சில தாலூகாக்களை 15 சதவீத 10 சதவீத முதலீட்டு மானியத்திற்கு தகுதியுள்ளதாக அறிவித்துள்ள இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் மத்திய மாநில மானிய உதவித் தொகையை வட்டியில்லாமல் மாநில அளவிலான குழு ஒப்புதல் அளித்த பிறகு தனது நிதியுதவி யிலிருந்து வழங்குகிறது. இவ்வாறு அளிக்கப்பட்ட மான்ய நிதியுதவித் தொகை 1—4—1985-லிருந்து 25—3—1986 வரை பின்வருமாறு:—

| | எண் | தொகை. (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|---|
| மத்திய மானியம் 15 சதவீதம் | 957 | 262.06 |
| மாநில மானியம் 10 சதவீதம் | 344 | 213.73 |
| | 1301 | 475.79 |

இந்நிறுவனம் முன்னேறத் துடிக்கும் தொழில் முனைவோர் களுக்கு நிறைவேற்றிக் கூடிய திட்டங்களைச் செயலாகக் விரைவாக நிதியுதவி அளிப்பதில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) 56 தொழில கங்களைத் தன் கட்டுப்பாட்டிற் கொண்டு, பல்வேறு வகைப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். தொடக்க காலத்தே தமிழக அரசின் தொழில் வணிகத் துறையால் தொழிற் சேவைக்காகவும் தொழிற் பயிற்சிக்காகவும் துவங்கப் பெற்ற இத் தொழிலகங்கள் பின்னர் வர்த்தக ரீதியில் இயங்கிடும் வகையில் 1—12—1965-ல் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன.

இந்நிறுவனத்தின் 56 உற்பத்தித் தொழிலகங்களினைக் கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்:—

1. கட்டுமானப் பட்டறைகள்.

2. நுண் கருவிகள் மற்றும் சார்புக் கருவிகள் தொழி லகங்கள்.

3. பொறியியல் தொழிலகங்கள்.





4. எஃகு புனைவுத் தொழிலகங்கள்.

5. வார்ப்படத் தொழிலகங்கள்.

6. மரப்பொருட் தொழிலகங்கள்.

7. தோல் பொருட் தொழிலகங்கள்.

8. பல்நோக்குச் சிறப்புத் தொழிலகங்கள்.

டான்சி நிறுவனத்தேயுள்ள பெரும்பாலான தொழிலகங்கள் அரசுத் துறைகள், இரயில்வே, மின் வாரியம், அஞ்சல் மற்றும் தந்தித்துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், இவற்றிடமிருந்து வருகின்ற பணிகளினையும் தனியார் நிறுவனங்கள் தருகின்ற குறிப்பிட்ட சில சிறப்புப் பணிகளினையும் நிறைவேற்றி வருகின்றன.

இந்நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு, இதன் தொடக்க காலத்திலிருந்து ஈண்டு தரப்பட்டுள்ளன.

| நிதியாண்டு. | உற்பத்தி. | விற்பனை: (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1965–66 | 369 | 342 |
| 1966–67 | 479 | 417 |
| 1967–68 | 493 | 419 |
| 1968–69 | 562 | 483 |
| 1969–70 | 662 | 661 |
| 1970–71 | 757 | 746 |
| 1971–72 | 818 | 828 |
| 1972–73 | 814 | 833 |
| 1973–74 | 919 | 904 |
| 1974–75 | 1022 | 969 |
| 1975–76 | 1029 | 947 |
| 1976–77 | 1062 | 1022 |
| 1977–78 | 1187 | 1121 |
| 1978–79 | 1537 | 1497 |
| 1979–80 | 1835 | 1661 |

| நிதியாண்டு. | உற்பத்தி. | விற்பனை. (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980–81 | 2065 | 2016 |
| 1981–82 | 2333 | 2339 |
| 1982–83 | 2216 | 2985 |
| 1983–84 | 2514 | 2342 |
| 1984–85 (உத்தேசமாக) | 2391 | 2392 |
| 1985–86 (உத்தேசமாக) | 2400 | 2400 |

கடந்த ஐந்தாண்டு காலமாக, டான்சி இழப்பிலேயே இயங்கிக் கொண்டு வருகின்றது. 1984-85-ம் ஆண்டிற்கான உத்தேச இழப்பு ரூ. 420.50 இலட்சங்களாகும்.

II நலிவிற்கான காரணங்கள்.

சரிவு மிக்க பேரிழப்பிற்கு அடிப்படை ஆதாரங்கள் ஆய்ந்தறியப்பட்டன. பேரிழப்பிற்கான மிகப் பெருங்காரணங்கள் கீழ்க் கண்டவாறு:—

அ. ஆயத்தீர்வைச் சுமை.

பல்வேறு வகைப்பட்ட சிறு தொழிலகங்களின் ஒருங்கிணைப்பாக டான்சி நிறுவனம் இருப்பினும், ஆயத்தீர்வை விதித்தலின் பொருட்டு, இந்நிறுவனம் ஒரே தனிப்பெரும் அமைப்பாகவே கருதப்படுகின்றது. ஆண்டொன்றுக்கு ரூ. 175.00 இலட்சங்களை ஆயத் தீர்வையாகச் செலுத்த வேண்டிய பெரும் சுமை டான்சியினை அழுத்துகின்றது. ஆனால், தனியார் துறையிலுள்ள சிறு தொழில் தொழிலகங்கள், ஒரு குறிப்பிட்ட உற்பத்தி அளவுவரை ஆயத்தீர்வையினின்றும் விலக்குப் பெற்று பயன் பெறுகின்றன. இந்நிலையில், இத்தகைய சிறு தொழில் தொழிலகங்களோடு, டான்சி போட்டியிட இயலாவண்ணமுள்ளது. ஆயினும், போதிய ஆணைகளைப் பெற வேண்டி, ஆதாயமற்ற விலைப்புள்ளிகளைக் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆ. வட்டிச் சுமை.

டான்சி நிறுவனம் தனது நடைமுறை முதலீட்டுக்கான தேவைக்காக, வங்கிக்கடன்களையே பெற்று வருகின்றது. அதிகமான வட்டி விகிதங்களிலேயே வங்கிகள் கடன் வழங்குகின்றன. சான்றாக இன்றைய வட்டி விகிதம் 17.5 விழுக்காடாகும்,



கடன் பெறுவதில் முன்னுரிமை பெறும் வகையிலும் குறைந்த (14.5 %) விகித வட்டிக்காகவும் தனியார் துறையிலுள்ள சிறு தொழில், தொழிலகங்கள் வங்கிகளால் 'முன்னுரிமை பெற்ற துறை'-யினராக வகைப்படுத்தப்பட்ட போதிலும் டான்சி நிறுவனமோ, ஒரு தனிப்பெரும் கடன்காரராகவே வங்கிகளால் கருதப்படுகின்றது. ஆண்டொன்றுக்கு ரூ. 80.00 இலட்சங்களை, வங்கிகட்குத் தர வேண்டிய வட்டித் தொகைக்காக இந்நிறுவனம் செலுத்தி வருகின்றது.

இ. பழமையான இயந்திரங்களும், ஆதாயமற்ற உற்பத்திப் பணிகளும் :

டான்சியிலுள்ள தொழில்கங்கள் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் துவங்கப்பெற்றமையால், தொழிலகங்களிலேயுள்ள இயந்திர சாதனங்களும், இயந்திரத் தளவாடங்களும் மிகப் பழமையாகவும், பெரும்பாலானவை பழுதுபட்ட நிலையில், மாற்றீடு செய்ய வேண்டிய நிலையிலும் உள்ளன. தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், பெரும்பாலான இயந்திரங்கள் வழக்கற்றுப் பயன்படுத்த வகையின்றிக் கிடக்கின்றன. டான்சியால் உற்பத்தி செய்யப்படும் வார்ப்பிரும்புக் குழாய்கள் மற்றும் அதன் சிறப்புக் குழாய்கள், கட்டுமானம் மற்றும் எஃகு புனைவுகள், எளிய பொறியியல் சாதனங்கள் போன்றவை, தற்போதைய தொழில் நுட்பத் திறமைகளின் மாற்றங்களினால், ஆதாயமற்ற உற்பத்திப் பணிகளாய் ஆகிவிட்டன. இதன் விளைவாக, பல்வேறு தொழிலகங்கள், மேற்கொண்டு சீர்படுத்த முடியாத நிலையில், மிக நலிவுற்ற தொழிலகங்களாய் அமைந்து விட்டன.

ஈ. மிகையான தொழிலாளர்களும், பணியாளர்களும்.

இந்நிறுவனத்தின் இயல்பான உற்பத்தி அளவினை அடைவதற்குத் தேவைப்படும் தொழிலாளர்களைக் காட்டிலும், 1,200 தொழிலாளர்களும், 200 பணியாளர்களும் மிகையாகவுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அரசுத் துறையினைச் சார்ந்த சிறைத்துறை. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கூட்டுறவு, தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், ஆகியவற்றிடமிருந்து வரும் கடுமையான போட்டியின் காரணமாக டான்சி நிறுவனம் தனது உற்பத்தி அளவினை உயர்த்திட இயலாத நிலையிலுள்ளது.

உ. நுண்ணிய தொழில் நுட்பத் திறமையின்மை.

புதிய பல்வகை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், சிறந்த தொழில் நுட்பத் திறமையோடு, செயற்பணிகளை செய்து முடித்திடும் பொருட்டும், தற்போதைய மாற்றங்கட்கொப்ப, தொழிலாளர்கள், தொழில் நுட்பம், விற்பனை மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் தம் திறமையை வளர்த்திடவும் உயர்த்திடவும் வேண்டியுள்ளது.

III. பரிகார நடவடிக்கைகள்.

மேற்கண்ட குறைபாடுகளைக் களைந்திடவும், தொழிலகங்களின் வளம் பெறுந்தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை ஈண்டு வருமாறு :—

அ. ஆயத்தீர்வைச் சுமை.

அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட அளவுவரை அளிக்கப்படும் சலுகை விகித ஆயத்தீர்வையினைப் பெற்று பயன்பெறும் பொருட்டு, இந்நிறுவனத்தின் தொழிலகங்களை சிறு தொழில் தொழிலகங்களாகக் கருத வேண்டி, தமிழ்நாடு அரசு வாயிலாக, மைய அரசினை இந்நிறுவனம் அணுகியது. ஆனால் மைய அரசால், இஃது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட இடர்ப்பாட்டினால், வர்ணங்கள்—அதன் சார்புப் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய வகையில், "தமிழ்நாடு வர்ணங்கள்—அதன் சார்புப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம்" என்னும் புதியதோர் நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்திய அரசின் நீண்ட கால நிதிநெறி முறைப்படியும், 1986—87 ஆம் ஆண்டுக்கான மைய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின்படியான ஆய்த்தீர்வை விதிமுறை மாற்றங்களின்படியும், இயன்றளவு ஆய்த்தீர்வைச் சலுகைகளைப் பெறுவதற்கான வழிமுறைகள் ஆராயப்படுகின்றன.

ஆ. வட்டிச்சுமை.

வங்கிகளிடமிருந்து கடன் தொகையினை எளிதாகப் பெறும் வண்ணமும், சலுகை வட்டி விகிதங்களில் பெறும் பொருட்டும் டான்சியை 'முன்னுரிமை பெற்ற துறையினராக வகைப்படுத்திட வேண்டி வங்கிகளிடமும், இந்திய ரிசர்வ் வங்கியிடமும் டான்சி-



யால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மேற்கண்ட வேண்டுகோள் இந்திய ரிசர்வ் வங்கியால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

அரசாங்கத்திற்கு கொடுக்கவேண்டிய வட்டிச் செலவை குறைத்திடும்பொருட்டு தமிழ்நாடு அரசு 31—3—1985-ம் நாளன்று நிலுவையிலுள்ள மொத்தக் கடன் தொகையான ரூ. 1360.00 இலட்சங்களில் ரூ. 360.00 இலட்சங்களை அரசின் பங்கு மூலதனமாக மாற்றியமைத்தும், மீதமுள்ள ரூ. 1000.00 இலட்சங்கட்கு முதற்கட்டமாக 1985—86-ம் ஆண்டிற்கு வட்டி விலக்கினையளித்தும், தக்க ஆணையினைப் பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக, டான்சியின் வட்டிச் சுமையில் ரூ. 118.34 இலட்சங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இ. பழமையான இயந்திரங்களும் ஆதாயமற்ற உற்பத்திப் பணிகளும்.

சிற்சில தொழிலகங்கள் ஆதாயமற்ற வகையில் இயங்கப் பெறுகின்ற காரணத்தால், அத்தகைய தொழிலகங்களின் செயல் திறனையும் வளம்பெறுந் தன்மையினையும் மேம்படுத்திட எவ்விதமான கடும் நடவடிக்கைகளை எடுத்திட்ட போதிலும் அவற்றின் நலிவுற்ற நிலைமைகளினின்றும் எந்தவித மாற்றமோ—ஏற்றமோ இனி ஏற்படப் போவதில்லை எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, இத்தகைய தொழிலகங்களை மூடுவதற்கான முடிவெடுக்கப்பட்டுள்ளது. கடுமையான—கொடுமையான பணி நீக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும், பணியினை விட்டுச் செல்கின்ற தொழிலாளர்கள் மாற்றுப் பணியினைப் பெற்று, தங்கள் நல்வாழ்வினைத் தாங்களாக விரும்பி அமைத்துக்கொள்ள வகை செய்திடவும், நிர்வாகத்தின் நல்லெண்ண அடிப்படையிலும், தானாகவே முன்வந்து பணியினை விட்டுச் செல்லும், 'தன்விருப்பப் பணி விலகல் திட்டம்' தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் கொண்டுவரப்பட்டது. மூடுவதென முடிவு செய்யப்பட்ட ஐந்து தொழிலகங்களில் பணியாற்றிய 453 தொழிலாளர்கள், இத் திட்டத்தின்கீழ் தங்கள் பணியினின்றும் நீக்கப் பெற்றுள்ளனர். இத்தொழிலகங்களில், ஏறத்தாழ அனைத்துத் தொழிலாளர்களுமே, பணியினின்றும் தாங்களாகவே நீங்கப் பெற்றுள்ளனர். தொழிற் தகராறு விதிமுறைகளின்படி

இத்தொழிலகங்களை மூடுவதற்காக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இரு தொழிலகங்களின் 'வார்ப்படப் பிரிவுகள்' மூடப்பெற்றதால், அப்பிரிவினைச் சார்ந்த அனைத்துத் தொழிலாளர்களுமே, தாங்களாகவே தன் விருப்பப் பணி விலகல் திட்டத்தின்கீழ் பணியினின்று நீங்கப் பெற்றுள்ளனர்.

டான்சியிடமிருந்து நான்கு தோல் பொருட் தொழிலகங்களை, இதற்காகவே பிரத்தியேகமாக நிறுவப்பெற்ற 'டால்கே' நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்கான ஆணையினை தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது

புதிய தயாரிப்புகளைப் பல்வகைப்படுத்தவும் உயர் தொழில் நுட்பத் தன்மையும் மதிப்பும் கொண்ட பொருட்களைத் தயாரிப்பதற்கும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பதினேழு திட்டங்களை டான்சியில் அமல்படுத்திடத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1986—87-ம் ஆண்டில், கீழ்க்கண்ட திட்டங்கள் அமல்படுத்தப்படவுள்ளது :—

1. கிண்டியிலுள்ள நுண்கருவித் தொழிலகத்தினை நவீனப் படுத்தி விரிவுபடுத்தல்.

2. இயந்திரக் கருவிகளைப் பழுதுப்பார்த்து பராமரிக்கும் தொழிலகம் அமைத்தல்.

3. சூரிய வெப்பத்தால் நீர் சூடேற்றும் சாதனங்களைத் தயாரித்தல் மற்றும் நிறுவுதல்.

4. பால் பண்ணைகட்கான சாதனங்களைத் தயாரித்தல்

பால் பண்ணைகட்கான சாதனங்களைத் தயாரித்திடக் கூடிய வாய்ப்புகளை ஆராயும் பொருட்டு இரு தொழில் நுட்ப வல்லுநர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் டான்சி தொழிலகங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

5. திருச்சியிலுள்ள டான்சி கட்டுமானத் தொழிலகத்தில், அழுத்த சக்திக்கலன்களையும், வெப்ப மாற்றுச் சாதனங்களையும் தயாரித்தல்.

இதற்காக, ஒரு தொழில் வல்லுநர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அழுத்த சக்திக் கலன்கள், வெப்ப மாற்றுச் சாதனங்களைத் தயாரித்திடும் வகையில், மேற்படி தொழிகத்தில்



ஆய்வு செய்து, ஒரு முதற்கட்ட அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளார் இதன் வரிவான திட்ட அறிக்கை காலக் கிரமத்தில் தயாரித்தளிப்பப்படவுள்ளது.

ஏனைய திட்டங்கட்கான நடவடிக்கைகள் நாளாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஈ. மிகையான தொழிலாளர்களும், பணியாளர்களும்.

டான்சியில் உள்ள ஏனைய தொழிலகங்களிலிருந்தும் 737 தொழிலாளர்கள் தன் விருப்பப் பணிவிலகல் திட்டத்தின் கீழ் தாங்களாகவே பணியை விட்டுச் சென்றுள்ளனர். இத்திட்டம் பணியாளர் பிரிவினருக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 200 பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பணியை விட்டுச் செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உ. நுண்ணிய தொழில் நுட்பத் திறமையின்மை.

தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழில் நுட்பம், விற்பனை, நிர்வாகப் பணியாளர் தம் திறமையினை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு சம்பந்தப்பட்ட துறைகளில், முன்னிலைத் தொழிலாளர்கள், கண்காணிப்புப் பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு சக்தி வாய்ந்த பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக தனித்தோ அன்றி இணைந்தோ தக்க பயிற்சியளித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய திட்டங்களினை அமல்படுத்திடும் ஒரு கட்டமாக டான்சியில் செய்முறைப் பயிற்சியளிக்கும் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் வாயிலாகவும், நடவடிக்கைகளாலும், சென்ற ஆண்டினை ஒப்பு நோக்கு மிடத்து 1985-86-ம் ஆண்டில் இழப்புத் தொகை ஏறத்தாழ ரூ. 100.00 இலட்சங்கள் குறைந்திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 1986-87-ம் ஆண்டில் ரூ. 2-200-00 இலட்ச உற்பத்தி மதிப்பினை எதிர்பார்க்கும் வகையில், மேற்கொண்டும் இழப்புத் தொகை குறைந்திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1986-87-ம் ஆண்டிற்கான இழப்புத் தொகை ஏறக்குறைய ரூ. 200.00 இலட்சங்களாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது 1984-85-ம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பில் பாதியை விடக் குறைவாகும்.

1985-86-ம் ஆண்டில் டான்சியால் செய்து முடிக்கப் பெற்ற மிக இன்றியமையாச் செயற்பணிகளில் சிற்சில கீழ்வருமாறு :—

| தொழிற்பிரிவு. | | பணி ஆணைகளின் வகை. | செய்து முடிக்கப் பெற்ற பணிகளின் மதிப்பு. (ருபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| கட்டுமானத் தொழிலகங்கள். | (அ) | ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கான காப்பறைகளும், எஃகு கோபுரங்களும். | 6.00 |
| | (ஆ) | ஆந்திர மாநிலம் தாடப்பள்ளியில் இந்தியன் எண்ணை நிறுவனத்திற்காக சேமிப்புத் தொட்டிகள். | 28.00 |
| | (இ) | தேசிய அனல் சக்தி நிறுவனம், லார்சன் & ட்யூப்ரோ நிறுவனம், இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி இவற்றிற்கான துணை மின் நிலையங்கட்காக கட்டுமானம். | 45.00 |
| | (ஈ) | நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக சுரங்கக் கிடங்குகள். | 18.00 |
| நுண்கருவிகள் தொழிலகங்கள் | (அ) | ஸ்ரீ ஹரி கோட்டாவிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்காக வானிலைக் கொம்புகட்கான கருவிகளின் தொகுப்பு. | 7.00 |
| | (ஆ) | ஆவடியிலுள்ள கனரக வாகன நிலையத்திற்காக இயந்திரக்கருவிகள் மற்றும் அழுத்தத் தகடுத் தளவாடங்கள். | 25.00 |



| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| | (இ) | பாதுகாப்புத் துறைக்காக. எரியலைணப்புக் குழாய்கட்கான பாதுகாப்புக் கருவிகள். (இப்பணியின் மொத்த மதிப்பு ரு. 48.00 இலட்சங்களாகும்). | 4.00 |
| பொறியல் தொழிலகங்கள். | (அ) | தமிழ்நாடு மின்வாரியத்திற்காக, மின் இணைப்புப் பெட்டிகள். (இப்பணியின் மொத்த மதிப்பு ரு. 76.00 இலட்சங்களாகும்). | 15.00 |
| | (ஆ) | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக திருவாரூரிலுள்ள நவீன அரிசி ஆலை கட்டுமான நிர்மாணப் பணிகள் (இப்பணியின் மதிப்பு ரு. 72.50 இலட்சங்களாகும்). | 30.00 |
| சிறப்பு நோக்கு தொழிலகங்கள். | | | |
| அ. வார்படத் தொழிலகங்கள். | | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கான வார்ப்பு இரும்புக் குழாய்கள். | 50.00 |
| ஆ. உலைக் களம். | | தமிழ்நாடு மின் வாரியத்திற்கான உருக்கு எஃகு குண்டுகள். | 55.00 |
| இ. குழாய் தொழிலகம். | | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்காக ஆழ் கிணற்றினின்றும் நீரேற்றும் (மார்க் 2) கைக் குழாய்கள். | 125.00 |
| ஈ. தோல் பொருட் தொழிலகங்கள். | | இத்தாலி நாட்டிற்கு பசு, ஆட்டுத் தோல்களை ஏற்றுமதி செய்தல் (உள்ளணிக்காக). | 5.00 |

[1986 மே 3

## தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம்.

(டான்சியின் சார்பு நிறுவனம்.)

தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம் 1977-ம் ஆண்டில் டான்சியின் சார்பு நிறுவனமாக துவங்கப் பெற்றது. "மயூரம்" மொபட்டுக்கு போதிய விற்பனை வாய்ப்புகள் இல்லாமையாலும், ஆதாயம் தரக்கூடிய வகையில் உற்பத்தியாவும், திறனும் இல்லாமையாலும் மொபட் வாகன உற்பத்தி நிறுத்தப்பட்டது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்காக நவீன அரிசி ஆலைகட்கான எந்திரத் தளவாடங்களையும் கருவிகளையும் தயாரித்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல், பொதுத் துறை மற்றும் தனியார் துறைக்காக கருவிகள், இணைப் புறுப்புக்கள் ஆகியவற்றினைத் தயாரித்தல், மற்றும் ஏனைய தொழிற் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளில் தற்போது இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

அரசு ஆணையின்படி, மொபட் நிறுவனத்தை முழுமையாகவோ அல்லது மறைமலை நகரிலுள்ள நிலம் மற்றும் கட்டிடத்தையோ விற்பனை செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு, முழுமையாக இந்நிறுவனத்தை விற்பனை செய்திட இயலாத நிலையில், மிகையான தொழிலாளர்களையும் பணியாளர்களையும், ஆட்குறைப்பு செய்து மொபட் நிறுவனத்திலுள்ள மூன்று தொழிலகங்களையும் டான்சியுடன் இணைத்திட முடிவெடுக்கப்படும். மொபட் வாகன உற்பத்தியை நிறுத்திய ஆண்டிலிருந்து, இந்நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு ஈண்டு தரப்படுகிறது :—

| ஆண்டு. | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|
| | ரூ. இலட்சங்களில் | |
| 1981-82 | 10.77 | 8.87 |
| 1982-83 | 23.15 | 27.46 |
| 1983-84 | 32.27 | 31.13 |
| 1984-85 (உத்தேசமாக) | 35.41 | 35.60 |
| 1985-86 (உத்தேசமாக) | 44.50 | 43.00 |



1986 மே 3]

## தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) தமிழ்நாட்டில் தோல் தொழிலை வளர்ச்சியுறச் செய்ய ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், 1983 ஜூன் திங்களில் அமைக்கப்பட்டது. டால்கோவின் முக்கிய குறிக்கோள்கள் தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதும், அதிகப்படியான தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் செய்வதும் மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதும் ஆகும். மேலும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் தொழில் நுட்பம், நிதி உதவி, விற்பனை வசதி ஆகிய அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைந்த முறையில் அளிப்பதுமாகும்.

**தோல் காலணி கைவினைஞர்களுக்குத் திட்டங்கள் :**

தோல் காலணி தொழிலில் ஈடுபட்டுள்ள அடிப்படை கைவினைஞர்களுக்கு விற்பனை செய்வதற்கு வாய்ப்பு அளிப்பதற்கான திட்டங்களை டால்கோ நிறுவனம் ஆரம்பித்து உள்ளது. இத்திட்டத்தினால் கைவினைஞர்களுக்குத் தொடர்ச்சியான வேலை வாய்ப்புக் கிடைப்பதுடன் அவர்களுடைய பொருளாதார நிலையும் அபிவிருத்தி அடையும்.

பள்ளி செல்லும் சிறுவர் மற்றும் சிறுமிகளுக்குத் தேவைப்படும் தோல் மூடு காலணிகளை விற்பனை செய்வதற்கான திட்டத்தையும் டால்கோ நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இதுவும் மேற்கண்ட கைவினைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்கும். இத்திட்டங்களுக்கான நிதி உதவி மத்திய தோல் அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து பெற இருப்பதால் அந்நிதி கிடைத்தபின் மேற்படி திட்டங்கள் செயல் ஆக்கப்படும்.

**1. தோல் தொழிற்பேட்டை :**

மாதவரத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கிய தோல் தொழிற்பேட்டை தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு அறிவுப் பூர்வமான வளர்ச்சி செயல்களை செயலாக்க மாற்றப்பட்டுள்ளது. அதே போன்று

[1986 மே 3

டான்சியின் கீழ் இயங்கிய வின்னமங்கலம், பெரம்பூர், பல்லாவரம் மற்றும் மாதவரம் ஆகிய ஊர்களிலுள்ள தோல் தொழிற்சாலைகள் டால்கோ நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. டால்கோவும், 14—4—1986-லிருந்து மேற்படி தோல் தொழில் பிரிவுகளை தன் நிர்வாகத்தின்கீழ் எடுத்துக் கொண்டுள்ளது.

2. கைவினைஞர்கள் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ், தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கைவினைஞர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் கிடைக்க பல்லாவரம், பெரம்பூர் ஆகிய இடங்களில் உற்பத்தி வசதி மையங்கள் அமைத்தல்.

பல்லாவரம், பெரம்பூர் மற்றும் அருந்ததிநகர் ஆகிய பகுதிகளில் வாழும் கைவினைஞர்களிடமிருந்து அவர்களது உற்பத்தி பொருட்களை நியாயமான விலையில் வாங்கி அவற்றை சென்னையில் நடக்கும் பொருட்காட்சி மூலம் விற்பனை செய்து அவர்களுக்கு தொடர் வரவு கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வித வசதி மாநிலத்தில் பிற பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.

3. மூலப் பொருள் வங்கிகள்:

டால்கோ திண்டுக்கல்லிலும், ஈரோட்டிலும் மூலப் பொருள் வங்கிகளை திறந்துள்ளது. தோலை பதனிடும் தொழிலுக்குத் தேவையான எளிதில் கிடைத்தற்கரிய மூலப் பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தோல் பதனிடும் சிறு தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் இத்தொழிலிலுள்ள சிறு தொழிலாளர்கள் இரக்கமற்ற வணிகர்கள் பிடியிலிருந்து விடுபடுவார்கள்.

பெண்களுக்கான பயிற்சி நிலையம்:

தாழ்த்தப்பட்ட, பழங்குடியைச் சார்ந்த தோல் தொழில் பெண்கைவினைஞர்களின் திறனை ஊக்குவித்து அவர்களுக்கு



1986 மே 3]

வேலை அளிக்கும் வாய்ப்பை பெருக்குவதற்காக, டால்கோ நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது. தற்பொழுது பெரம்பூர், பல்லாவரம் ஆகிய இரண்டு பகுதிகளில் மகளிர் பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பிற இடங்களில் பயிற்சி நிலையங்கள் பின்னர் தொடங்கப்படும்.

கூட்டு நிறுவனங்கள் அமைத்தல்:

தோல் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் ஆகியவற்றை மிக அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு இருப்பதால் இவற்றுக்கான திட்டங்களை கூட்டுத் துறையில் (Joint Sector) நிறுவ டால்கோ நிறுவனம் திட்டங்கள் தீட்டியுள்ளது. இதற்கான செயல் திட்டம் ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொள்ளப்படும்.

தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்:

இந்நிறுவனம், வாணியம்பாடியிலுள்ள தோல் தொழிற்சாலைகளுக்கென்று ஒரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒரு ஏஜென்சியாக செயல்படுகிறது. இத்திட்டத்தின் மதிப்பு சுமார் இரண்டு கோடி ஆகும்.

பரோடாவிலுள்ள திருவாளர்கள் பாரமவுண்ட் பொல்லூஷன் கன்ட்ரோல் என்ற நிறுவனம் இதற்கான தொழில் நுணுக்க செயல்திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இத்திட்டம் ஒரு கூட்டு நிறுவனத் திட்டமாக தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், வாணியம்பாடி டேனர்ஸ் என்வைரோ கன்ட்ரோல் லிமிடெட் என்ற பெயரில் இயங்கும். இத்திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இப்பொழுது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மிகப்பெரிய அளவில் வாணியம்பாடியிலுள்ள மாசுவினை தடுக்க உதவும். அரசு அனைத்து தோல் தொழில் அதிபரும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றுப்புற சூழல் கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ள விதிமுறைகளின்படி அமைக்க வேண்டும் என்பதில்

கவனமாக உள்ளது. தனிப்பட்ட தோல் தொழில் அதிபர்களும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு கீழ்க்கண்ட சலுகைகள் அளித்து அண்மையில் ஆணை வெளியிட்டுள்ளது.

(1) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய தொழில் நுணுக்க அறிக்கை தயாரிக்கும் மதிப்பில் 80 சதவிகிதம், அதாவது ரூ. 25,000-க்கு மிகாமல் தனிப்பட்ட தோல் தொழிலதிபர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படும்.

(2) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றும் இரு தொழில்நுட்ப நபர்களுக்கு தலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150-க்கு மிகாமல் உதவித்தொகை வழங்கப்படும்.

(3) மத்திய மாநில அரசின் அசல் உதவித் தொகையில் சேராத எந்த இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தாலும் அதற்கு மூலதனத்தில் 10 சதவிகிதம் உதவித் தொகையாக, அதாவது ரூ. 5 லட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும்.

### தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்.

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், இம்மாநிலத்தில் கைத்திறப் பொருட்களின் வளர்ச்சிக்கும், அதன் விரிவாக்கத்திற்கும் தனியானதோர் முயற்சியையும், புதிய வழி முறைகளையும் உருவாக்கி கைத்திறத் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதற்காக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்தின் கொள்கைகளில் ஒன்றின் அடிப்படையில் கைவினைஞர்களுக்கான உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருள்களை தமிழ்நாட்டிலும், மற்றும் இதர மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் சமீபகால சாதனைகள் கீழ்வருமாறு :—



**விற்பனை :**

1984-85 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை ரூபாய் 231.40 இலட்சமாகும். 1985-86 ஆம் ஆண்டிற்கான இலக்கு ரூபாய் 275 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும் இந்நிறுவனம் 1985-86 ஆம் ஆண்டிற்கான இலக்கையும் கடந்து ரூ. 291.53 இலட்சத்திற்கு விற்பனை செய்து, விற்பனையில் ஒரு புதிய சாதனையை படைத்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு விற்பனை இலக்கு ரூபாய் 320 இலட்சம் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டின் உற்பத்தி ரூபாய் 69.24 இலட்சமாகும். 1985-86 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு ரூபாய் 80 இலட்சமாகும். இந்த நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கை இந்நிறுவனம் எட்டியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி ரூ. 80.24 இலட்சமாகும். 1986-87 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி ரூ. 88 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி :**

இந்நிறுவனம் 1—11—1985 முதல் தஞ்சை ஓவியப் படம் (Thaniavur Picture Painting) வரைவதில் 6 மாத காலப் பயிற்சி திட்டம் ஒன்றை செயல்படுத்தி தற்சமயம் மாவட்ட தொழில் மையத்தின் உதவியுடன் 20 நபர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

### 1986-87 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் (1) கைவினைஞர்களுக்கான பயிற்சி மற்றும் (2) வடிவமைப்பு பிரிவை வலுப்படுத்துவது ஆகிய ஒவ்வொன்றிற்கும் ஒரு இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

**நிதிநிலை :**

1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனம் முறையே ரூ. 2.35 இலட்சம் மற்றும் 0.76 இலட்சத்தை (தோராயமாக) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்தின் இலாபம் 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 1.07 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பட்டு வளர்ச்சித் துறை.

இந்தியாவின், முசுக்கொட்டை செடி பயிரிடுதல், பட்டு வளர்ப்பு தொழில் சம்பந்தமான தேசப் படத்தில் முழுவதுமாக சேர்க்கப்பட்டுள்ள பெரிய மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. ஆனால் தமிழ் நாட்டில் கர்நாடக மாநிலத்தின் எல்லை அருகில் உள்ள சில வட்டங்களில் மட்டும் பட்டு வளர்ப்பு தொழில் மரபு வழியாக நடைபெற்றன. பட்டு வளர்ப்பின் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், இம்மாநிலத்தில் இத்தொழிலை நன்கு வளர்ச்சியடையச் செய்யவும், 1979 ஏப்ரல் மாதம் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு பட்டு வளர்ச்சித் துறை தனியாக ஏற்படுத்தப்பட்டது.

2. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆரம்பத்தில் இந்த மாநிலத்தில் முசுக்கொட்டை சாகுபடியின் கீழ் இருந்த நிலத்தின் மொத்த பரப்பளவு 16,000 ஹெக்டேர்கள் மட்டுமே. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் ஆரம்பத்தில் இதன் அளவு 26,800 ஹெக்டேர்கள். 1990 ஆம் ஆண்டிற்குள் சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தேவையான ஊக்க ஊதியம் கொடுப்பதின் மூலம் நிலத்தின் அளவை 40,000 ஹெக்டேர்களுக்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. இம்மாநிலத்தில் பட்டு வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை தடைப்படுத்தும் சிக்கல்களில் ஒன்று இம்மாநிலத்தில் போதிய அளவு நூற்பு வசதி இல்லாததாகும். இம்மாநிலத்தில் போதிய அளவு நூற்பு வசதிகள் இல்லாத காரணத்தாலும், பட்டு கூடுகள் விரைவில் அழியக்கூடிய பொருளாக இருப்பதால் இதனை அதிக நாட்களுக்கு சேமித்து வைக்க முடியாது என்பதாலும் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளில் கணிசமான அளவு கர்நாடக மாநிலத்திற்கு தொடர்ந்து கொண்டு செல்லப்படுகின்றன. கர்நாடக மாநிலத்திலுள்ள அனுபவமிக்க மற்றும் மரபு வழியாக சிறந்து விளங்குகின்ற பட்டு நூற்பாளர்களுடன் இம்மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் போட்டியிட இயலவில்லையாதலால், புதிய தொழில் முனைவோர்கள் இம்மாநிலத்தில் பட்டு நூற்பு பிரிவுகளை



துவக்குவதற்கு விருப்பமற்றவர்களாக உள்ளனர். பட்டு நூற்பு சிறு தொழிற் பிரிவுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள், உற்பத்தி செய்த பட்டிற்கு பணம் பெறுவதில் ஏற்படும் தாமதம் மற்றும் அதிக வட்டி விதத்தில் வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெற வேண்டியிருப்பது ஆகியவைகளாகும். இம்மாநிலத்தில் கச்சாப் பட்டு உற்பத்தி ஒரு ஆண்டில் 90,000 கிலோ கிராமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, பட்டு நூல் நூற்பதற்காக 450 யேனங்கள் நிறுவ உதவி செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

4. மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்கள் முக்கியமான இடங்களில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்கின்றன. ஒரு மாவட்ட பட்டு வளர்ப்பு மையமானது (1) ஒரு பட்டுக் கூடு அங்காடி (2) ஒரு நூற்பு தொழிற்சாலை (3) ஒரு பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் (4) ஒரு பட்டு வித்தகம் (சில இடங்களில் பயிற்சி மையமும் இணைந்திருக்கும்) ஆகியவற்றைக் கொண்டதாகும். இத்தகைய மையங்கள் பட்டுக் கூடுகளை விற்பனை செய்யவும் தேவையான விதைகள் வாங்கவும், தகுந்த காலத்தில் தொழில் நுட்ப உதவி பெறவும் பட்டு விவசாயிகளுக்கு பெரிதும் வழி செய்கின்றன. தற்சமயம் நான்கு பட்டு வளர்ப்பு மையங்களே உள்ளன. அவைகள் (1) வாணியம்பாடி (2) கோயமுத்தூர் (3) திண்டுக்கல் மற்றும் (4) சேலம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய மையங்களை அதிக அளவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. இரு சுழற்சியினக் கலப்பின பட்டுப் புழுவானது வீரியமிக்க பட்டுப் புழு விதைத் தயாரிக்க பயன்படுகிறது. அயற்பண்புடைய இப்புழுவினத்தை வளர்க்க தனிக் கவனம் தேவைப்படுகிறது. உள்நாட்டு இன விதைகளுக்கு தரப்படுவதுபோல் தனியாக ஒரு குறிப்பிட்ட இட ஒதுக்கீடு செய்து சிறந்த பாதுகாப்பு ஏதும் இவ்வகை புழுக்களுக்கு தற்சமயம் அளிக்கப்படவில்லை. எனவே இரு சுழற்சியின் கலப்பின பட்டு புழுவிற்காக தனி மண்டலம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கேற்ப 1986-87 ஆம் ஆண்டில் பட்டு வளர்ப்பின் கீழ் பின்வரும் கூடுதல் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :

(அ) பட்டு வளர்ப்பின் கீழ் உள்ள நிலத்தினை கூடுதலாக 2,000 ஹெக்டேர்களுக்கு (சுமார் 5,000 ஏக்கர்) விரிவாக்கம் செய்தல். இத்திட்டம் 3,000 சிறிய மற்றும் குறு விவசாயிகள் உள்ளிட்ட 5,000 பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்றும் இந்த விரிவாக்கத்தினால் ஏற்படும் தொடர்புடைய மற்ற நடவடிக்கைகளினால், கூடுதலாக மொத்தம் 25,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரிவாக்க திட்டமானது ஒவ்வொரு பட்டு வளர்ப்பு விவசாயிக்கும் ஏக்கருக்கு ரூ. 100 வீதம் (ஒரு ஹெக்டேருக்கு சுமார் ரூ. 250) முசுக்கொட்டை விதைக்குச்சி மான்யம், மாதத்திற்கு ரூ. 100 உதவித் தொகையுடன் ஒரு மாத காலப் பயிற்சி மற்றும் நவீன பட்டுப் புழு வளர்ப்புக்கான தளவாடங்கள் வழங்குவதற்காக ரூ. 400 வழங்குவதற்கு வழி செய்யும். இச்சலுகைகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்தும். 1986-87-ல் இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு ரூ. 18 இலட்சமாகும்.

(ஆ) 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 7.89 இலட்சம் செலவில் 300 புதிய யேனங்கள் மற்றும் 150 பழைய யேனங்களுக்கு நடைமுறை மூலதனத்தின் பேரிலான வட்டிக்கு ஊக்க உதவித் தொகை அளிப்பதன் மூலம் உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1986-87-ல் ரூ. 16.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் செலவில் ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, சிறு மலை, கொடைக்கானல் மலை மற்றும் கோயமுத்தூர் தாலுக்கா ஆகிய இடங்களை உள்ளடக்கிய இரு சுழற்சியின கலப்பின பட்டுப் புழு விதை மண்டலங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இக்குறிப்பிட்ட மண்டலங்களில், தரமிக்க இரு சுழற்சியின் கலப்பின விதைக் கூடுகள் தயாரிக்கும் விவசாயிகளுக்கு 1000 தரமுள்ள விதைக் கூடுகளுக்கு ரூ. 10 விதம் ஊக்கத் தொகை வழங்குவதற்கு இத்திட்டம் வழி செய்யும்.

(உ) நெய்வேலியில் ஒரு பட்டு முன்னோடி மையம் ஏற்படுத்த 20 ஏக்கர் நிலம் சமீபத்தில் வாங்கப்பட்டுள்ளது. ரூ. 5.70 இலட்சம் செலவில் இந்த மையத்தில் ஒரு நூற்பு கட்டிடம் மற்றும் இதர வசதிகளை செய்து தருவதற்கும், ஓசூர் மற்றும் ஊத்தங்கரை ஆகிய இடங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஊ) மாநில திட்டங்கள் தவிர ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பட்டு வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் நிதியாண்டில் 520 பழங்குடியினர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளில் முக்கியமான பணிகளில் செய்யப்பட்ட சாதனைகள், 1986-87 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்படவிருக்கும் குறியீடுகள் பற்றிய விவரங்கள் இணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## இணைப்பு பட்டுப்புழு வளர்ப்பு

**1984–85 மற்றும் 1985–86-ம் ஆண்டுகளில் முக்கியமான பணிகளில் செய்யப்பட்ட சாதனைகள் மற்றும் 1986–87-ம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்படவுள்ள குறியீடுகள்**

| செயல் பணி | அலகின் அளவு | சாதனை 1984–85 | சாதனை 1985–86 | குறியீடு 1986–87 (நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவை) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பட்டு வளர்ச்சித்துறை இயக்குநரகம்: | | | | |
| 1 மல்பரி நடவின் கீழ் உள்ள நிலத்தினை அதிகரித்தல் | ஹெக்டேர்கள் | | | |
| (அ) திட்டங்களின் கீழ் .. | .. | 2,000 | 2,240 | 2,000 |
| (ஆ) செயல் படச் செய்யும் திட்டத்தின் கீழ் .. | .. | .. | 2,048 | 4,000 |
| 2 பட்டு முட்டைக் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அளவை அதிகரித்தல்.. | இலட்சங்கள் (வியாதியற்ற பட்டு முட்டைத் தொகுதிகள்) | 96.00 | 130.00 | 150.00 |
| 3 பட்டுக் கூடுகளின் உற்பத்தியை அதிகரித்தல் .. .. | இலட்சம் கிலோ கிராம் | 95.00 | 100.00 | 105.00 |



| செயல் பணி | அலகின் அளவு | சாதனை 1984–85 | சாதனை 1985–86 | குறியீடு 1986–87 |
|---|---|---|---|---|
| 4 கச்சாப்பட்டின் உற்பத்தியை அதிகரித்தல்.— | இலட்சம் கிலோ கிராம் | 1.97 | 3.900 | 3.25 |
| 5 நூற்புத்திறனை மேம்படுத்துதல்.— | யேணங்களின் எண்ணிக்கை | | | |
| (அ) அரசுத்துறை | | .. | 80 | .. |
| (ஆ) கூட்டுறவுத்துறை | | | 100 | 50 சர்க்காக்கள் (X) |
| (இ) தனியார் துறை | | .. | 302 | 150 குடிசையேனங்கள் (+)<br>150 சர்க்காக்கள் (+)<br>150 குடிசையேனங்கள் (+) (செயல்படச் செய்ய உள்ள)<br>150 சர்க்காக்கள் (X) |

(X) தாராள உரிமத்துடன்

(+) பகுதி 2 திட்டத்தின்படி வட்டி மானியத்துடன்.

**தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம், காஞ்சிபுரம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கச்சாப்பட்டு நூலை கொள்முதல் செய்தல். | கிலோ கிராம்கள். | 1,05,204 | 1,14,312.365 | 1,15,000 |
| 2 கச்சாப்பட்டு நூலை விற்பனை செய்தல். | கிலோ கிராம்கள். | 1,05,124 | 1,10,728.475 | 1,15,000 |

V211, 31 'N86
N86.25.2
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் சென்னை-600 008
136484